# இளங்கதிர்

2012/2013




தமிழ்ச் சங்கம்,
பேராதனைப் பல்கலைக்கழகம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*With Best Complements From*

# Lavanya Dental Clinic



Dr. Purushothaman B.D.S., D.G.I
(Dental Surgeon & Implantologist)

Tel: 0094 21 2229053

Email: Idc_552@hotmail.com

No 553, Hospital Road, Jaffna.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இளங்கதிர்

## 41 வது இதழ் 2013

"சொல்லில் இனிது தமிழ்ச்சொல்லே – அதைத்
தொழுது படித்திடடி பாப்பா"

**இதழாசிரியர்கள்:**

திரு. இரா.அன்பரசன்

செல்வி. சு.சரணியா

**வெளியீடு:**

தமிழ்ச்சங்கம், பேராதனைப் பல்கலைக்கழகம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ்ச் சங்கக் கீதம்

புகழ் திகழ் தமிழ் மகள் புவிமீ தாளும்
பொன்னாள் வருக! வருக!
மகிழ்வுறு தமிழ்நில மாந்தர்கள் பண்பு
மலை விளக்காகவே ஒளிர்க
சகலரும் ஒருதாய் தன் பிள்ளை கள்போல்
சமத்துவமாகவே வாழ்க
தனித்துவம் காத்திட எழுக! எங்கள்
தமிழ்க் குற ஏறநெறி தழைக்க
தாயக மணிக்கொடி துலங்க
பனித்திடு மலைசூழ் பழநகர் பேரா
தனையுயர் தமிழ்க் கலை மன்றம்
வளர்க! வளர்க! வளர்க!
மானிலம் போற்றிட வளர்க!

வளம்தரு மாவலி நதிமருங் கமைந்தபே
ராதனைப் பல்கலை மன்றில்
விளைந்திடு பயிராய் விளங்கிடு சங்கம்
வீறு கொண்டிலங்கி மிளிர்க
இளம்தமிழ் மாணவர் இன்கலைக் கோட்டம்
இவ்வுல குளவரை துலங்க
ஈழமணி நாடு வுயர்க! எங்கள்
நாளைய வாழ்வும் உயர்க
நமதிறை அருண்வழி பொலிக
பாளையின் குளிர்தரு மலைசூழ் பேரா
தனைத் தமிழ்ப் பணியகம் வாழ்க!
வாழ்க! வாழ்க! வாழ்க!
பல்லாண் டுயர்வுடன் வாழ்க.

மெட்டு: "ஜன கன மன" எனும் இந்திய தேசிய கீதம்.
ஆக்கம்: சக்திதாசன் (அக்கரைச் சக்தி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ்ச் சங்கச் செயற்குழு 2012/2013

| | | |
|---|---|---|
| பெருந்தலைவர் | : | பேராசிரியர் வ. மகேஸ்வரன் |
| பெரும்பொருளாளர் | : | பேராசிரியர் இரா. சிவகணேசன் |
| கணக்காய்வாளர் | : | கலாநிதி ம. அல்பிரட் |
| | | |
| தலைவர் | : | திரு. ப. விஸ்வலிங்கம் |
| உபதலைவர் | : | திரு. தி. கேதீஸ்வரன் |
| செயலாளர் | : | திரு.ச. கோபிநாத் |
| உபசெயலாளர் | : | திரு. ச. யசிந்தன் |
| இளம்பொருளாளர் | : | திரு. முரளி துவாரகேஷ் |
| இதழாசிரியர்கள் | : | திரு. இரா. அன்பரசன் |
| | | செல்வி. சு. சரணியா |
| | | |
| செயற்குழு உறுப்பினர்கள் | : | செல்வி. செ. குகப்பிரியா |
| | | செல்வி. வே. யாழினி |
| | | செல்வி. பு. ரசிதா |
| | | செல்வி. ஆ.வே. அஸ்லினா |
| | | செல்வி. ச. சுகதா |
| | | திரு. க.லெ. மசூன் அஹமது |
| | | திரு. ரகுராஜ் |
| | | திரு. ப. நிராஜ் |
| | | செல்வி. கு. ரோபிதா |
| | | திரு. அ. சஞ்சீவன் |
| | | திரு. மு. சுதர்ஷன் |
| | | திரு. சு. சரவணதீபன் |
| | | திரு. சஞ்சீவன் |
| | | திரு. புவிதரன் |
| | | திரு. சு. சிவப்பிரியன் |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இதழாசிரியர்களின் இதயங்களிலிருந்து...

ஒரு இனத்தினை அடையாளப்படுத்தும் கலாசார விழுமியங்களை கட்டிக்காக்கும் ஒரு கருவியாக மொழி அமைந்துள்ளது. இதனை எவரும் மறுக்க முடியாது. அந்தவகையில் எமக்கான வரலாற்றில் எம்மை நிலை நிறுத்தும் சிறிய முயற்சியாக இதனைக் கொள்ளலாம் என்பதில் எவ்வித ஐயமுமில்லை.

நீண்ட ஒரு வரலாற்று பாரம்பரியத்தை கொண்ட பேராதனைப் பல்கலைக்கழகத் தமிழ்ச்சங்கம் 1926 ஆம் ஆண்டு நிறுவப்பட்டது. பேராசிரியர் கணபதிப்பிள்ளையின் பெருமுயற்சியால் 1948 ஆம் ஆண்டு இளங்கதிர் சஞ்சிகையை வெளியிட ஆரம்பித்தது. அந்தவகையில் தனது நாற்பத்தோராவது இளங்கதிரை இவ்வாண்டு வெளியிடுகின்றது. இத்தகைய பழைமையுடைய இதழின் இதழாசிரியராக இருக்கின்றோம் என்பதில் பெருமகிழ்ச்சியடைகின்றோம். வழமைப்போன்று இதழ் பல்துறைசார் விடயங்களை கட்டுரைகளாகவும், புனைவுகளாகவும் சுமந்த வண்ணம் வெளிவந்துள்ளது. ஆக்கங்கள் அரசியல், வணிகம், மெய்யியல், விஞ்ஞானம், புவியியல், சமயம் மற்றும் தமிழ்மொழி அதன் சிறப்பு ஆகியவற்றுடன் தொடர்புபட்டவையாக அமைந்துள்ளன.

நூலின் ஆக்கங்கள் நான்கு பகுதிகளாக வகுக்கப்பட்டு முதலாவது பகுதியான வரைபு ஒன்றில் விரிவுரையாளர்களின் ஆக்கங்களை உள்ளடக்கியதாக அமைந்துள்ளது. இது இன்றைய சமூக, கலை, இலக்கிய அறிவியற் பகுதியாக மலருகிறது. வரைபு இரண்டில் மாணவர்களின் பன்முகத்தன்மைக் கொண்ட ஆய்வு நோக்கு, ஆளுமைகள் என்பன கட்டுரைகளாக அமைந்துள்ளன. ஏனைய புனைவுப் பகுதிகளான சிறுகதை, கவிதை என்பன சமூகப் பிரச்சினைகள், இன்றைய சமூகத்தின் தேவை எவை என்பதனையும் குறியீடுகளாகவும், அழகியலாகவும் காட்டியுள்ளன.

ஆகவே நூலின் ஆக்கங்கள் இன்றைய காலத்தின் சமூக, அரசியல், பொருளாதாரம், பண்பாட்டு அம்சங்களை பறைசாற்றி நிற்பதோடு காலத்தின் தேவையை இலக்கிய வடிவமாக வெளிப்படுத்தியுள்ளது என நம்புகின்றோம்.

இளங்கதிர் மலர் இம்முறையும் தரமானதாகவும், காத்திரமானதாகவும் வெளிவருவதற்கு பல்கலைக்கழக கற்றல், கற்பித்தல் செயற்பாடுகளுக்கு மத்தியிலும் ஆக்கங்களைத் தந்துதவிய பல்கலைக்கழகப் பேராசிரியர்கள், விரிவுரையாளர்கள் மற்றும் மாணவர்கள் ஆகியோருக்கு இதழாசிரியர் என்ற வகையில் நன்றி கூறக் கடமைப்பட்டுள்ளோம்.

இவ் இதழ் வெளிவர பல்வேறு வகையிலும் உதவிய பெருந்தலைவர், பெரும்பொருளாளர், கணக்காய்வாளர் மற்றும் செயற்குழு உறுப்பினர்களுக்கும் எமது மனமார்ந்த நன்றிகள். சஞ்சிகையின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அச்சுப்பிரதிகளை சரிபார்ப்பதில் உதவிய தமிழ்த்துறை உதவி விரிவுரையாளர்களுக்கும் நூல் சிறந்த முறையில் வெளிவர விளம்பரங்களை தந்துதவிய வணிகர்களுக்கும் அதனை திரட்ட ஈடுபட்ட மாணவர்களுக்கும் நூலை சிறந்த முறையில் அச்சிட்டு தந்த நெத்விங் (பேராதனை) அச்சகத்தாருக்கும் எமது நன்றிகள் உரித்தாகுக.

இலக்கிய வரலாற்றில் என்றுமே நிலைத்து நிற்கக்கூடிய இவ்விதழானது அதன் நிரந்தரப் பதிப்புகளை இனிவரும் காலத்திலும் புதிய சிந்தனைகளை பதித்து புகழ்மணத்துடன் ஒளி வீசவேண்டும் என்பதே எமது அவா.

"குணம் நாடிக் குற்றம் நாடி அவற்றுள்
மிகை நாடி மிகக் கொளல்"

நன்றி.

இரா.அன்பரசன், சு. சரணியா
இதழாசிரியர்கள்,
தமிழ்ச்சங்கம், பேராதனைப் பல்கலைக்கழகம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சஞ்சிகையில் பிரசுரமாகும் ஆக்கங்களின்
கருத்துகட்கு அவற்றை எழுதிய ஆசிரியர்களே
பொறுப்புடையவர்கள்

அட்டைப்படம்: எம்.ஜே.எம். ஜெப்ரான்
உளவியல் மற்றும் மெய்யியல் விசேட துறை,
கலைப்பீடம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்த்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## Message from The Vice-Chancellor

It is with great pleasure that i send a message of greetings to the Tamil Society on the occasion of the release of their annual magazine "Illankathir".

The tamil Society has played vital role within this University in promoting literary activities and helping to promote an awareness among undergraduate about the valuable heritage for humanity that the corpus of Tamil literature represents. I am happy to note that in more recent time the Tamil Society has been working to promote mutual understanding, friendship and harmony among students from different ethnic and religious backgrounds. They are indeed, higly important activities in the inherent national context.

The Illankathir rank among the most important magazine published by students of this university in the Tamil Language for several decades, has performed a very significant function in indroducing young writers who later gained recognition as leading figures in the Tamil Literary world. It is my fervent hope that for many years to come the Tamil Society will continue carry out its work with enthusiasm and vigor.

I would to like to make use of this opportunity to please on record my appreciation of the untiring effort and dedication of the editors and the working committee in their work to ensure the puplication of this year's issue of the Illankathir on time.

Prof. Atula Senaratne
Vice - Chancellor

University of Peradeniya,
Peradeniya.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பெருந் தலைவரின் வாழ்த்துச் செய்தி

பாரம்பரியமிக்க பேராதனைப் பல்கலைக்கழகத் தமிழ்ச் சங்கம் தனது வருடாந்த இதழான இளங்கதிரை இம்முறையும் வெளியிடுவதனூடாக மீண்டும் ஓர் காலடியை எடுத்து வைக்கின்றது. இந்த நாட்டினுடைய உயர்கல்விப் பீடங்களில் மிகவும் பழைமை வாய்ந்த பேராதனைப் பல்கலைக்கழகம் வெறுமனே தொழில்வாண்மையாளர்களை மட்டும் புறவுலகத்திற்கு தரவில்லை. மாறாக மானிடவியலாளர்களையும் புலமைத்துவம் மிக்கவர்களையும் ஆராய்ச்சியாளர்களையும் கலை வல்லுனர்களையும் தந்திருக்கிறது. தாம் தாம் பயில்கின்ற துறைகளுடன் மாத்திரம் நின்றுவிடாது மாணவர்கள் தங்களுடைய தனியாள் ஆளுமைகளை பதிவு செய்வதற்கான ஓர் களமாகவும் அதனை வெளியுலகத்திற்கு தெரியப்படுத்துகின்ற களமாகவும் பேராதனைப் பல்கலைக்கழகத் தமிழ்ச் சங்கம் விளங்குகின்றது.

ஈழத்து தமிழிலக்கியம், கலைகள் முதலானவற்றின் செல்நெறிகளின் மடைமாற்றங்களையும் புதிய எல்லைகளையும் கண்டவர்கள் இப் பல்கலைகழகத்திலிருந்து வெளியேறியவர்கள் எனக் கூறலாம். கூத்து, நாடகம், நவீன அரங்கு, புனைகதை இலக்கியம், விமர்சனம் என பல துறைகளிலும் தடம் பதித்த ஆளுமைகளை தந்தது பேராதனைப் பல்கலைக்கழகம். அவர்களுக்கு கருவியாக அமைந்தது தமிழ்ச் சங்கம். அக்கருவியின் துணைக்கொண்டு அவர்கள் தங்களை வெளிப்படுத்தினார்கள், நிலைத்தார்கள்.

இத்தகைய வரலாற்றுப் பின்னனியில் இன்றும் தமிழ்ச் சங்கம் இளங்கதிர் வெளியீட்டின் ஊடாக இன்னொரு காலடியை எடுத்து வைக்கின்றது. இத்தொடர்பு அறாத மரபு நீடித்து நிற்கவேண்டும் என்பதுதான் எமது அவா. காலந்தோறும் உருவாக்கப்படுகின்ற ஆட்சிக் குழுக்கள் இந்த மரபுத் தொடர்ச்சியை வளர்த்தெடுக்கும் கருவிகளாக இயங்கவேண்டும். அவ்வாறான அஞ்சலோட்டத்தில் இயங்கிய இவ்வருடத்து ஆட்சிக்குழு உறுப்பினர்களை நான் மிகவும் பாராட்டுகின்றேன். அத்துடன் இந்த செயற்பாடுகள் குறைவின்றி நடைபெற ஒத்துழைப்பு வழங்கிய பல்கலைக்கழக நிர்வாகம், ஊழியர்கள், கல்விசார் ஊழியர்கள், மாணவர்கள், பழைய மாணவர்கள் ஆகியோருக்கும் இவ்விடத்தில் எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

இளங்கதிர் மீண்டும் புதிய காலடிகளைப் பதித்து தன் பாரம்பரியத்தை நிலைநாட்டும் என்பது என்னுடைய அசையா நம்பிக்கை.

வாழ்த்துக்களுடன்,

பேராசிரியர் வ. மகேஸ்வரன்,

பெருந் தலைவர்,

பேராதனைப் பல்கலைக்கழகம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பெரும் பொருளாளரின் வாழ்த்துச் செய்தி

பேராதனைப் பல்கலைக்கழகத் தமிழ்ச் சங்க மாணவர்களின் முயற்சியால் வெளியிடப்படும் 'இளங்கதிர்' சஞ்சிகைக்கு வாழ்த்துச் செய்தியினை எழுதுவதில் பெரிதும் உவகை கொள்கின்றேன்.

"எண்ணும் எழுத்தும் கண்ணெனத்தகும்"

"எழுத்தறிவித்தவன் இறைவனாவான்"

எம் முன்னோர் எழுதிச் சென்றுவிட்ட வாக்கியங்கள் இவை. எழுதுபவன் எழுதிக்கொண்டே இருப்பான். ஆனால் அவற்றை வாசிப்பவர்கள் எத்தனை பேர்? ஒரு மாணவன் எழுதும், வாசிக்கும் திறனைக் கொண்டிருத்தல் அவசியமானது. அதிலும் பல்கலைக்கழக மாணவர்களுக்கு இவை அத்தியாவசியமானது. நவீன தொழில்நுட்ப முறைகளும், கருவிகளும் இவ் ஆற்றல்களை மழுங்கடித்து விட்டன. எனினும் தமிழ்ச்சங்கத்தின் செயற்பாடுகள் இவ் ஆற்றல்களை வளர்க்கவும் மெருகூட்டவும் களம் அமைத்துக் கொடுக்கின்றன.

நாம் யார்? நாம் எதனைச் சாதித்துள்ளோம்? எதனைச் சாதிக்கப் போகின்றோம் என்றெல்லாம் யோசித்துப் பார்ப்பதில்லை. எம் எதிர்காலம் செழிப்பாக அமைய வேண்டுமாயின் இவற்றை நாம் எண்ணிப் பார்க்க வேண்டும். எமது சிந்தனைகள் தொலை நோக்குக் கொண்டிருத்தல் வேண்டும். இனிவரும் காலங்களில் தமிழ்ச் சங்க மாணவர்களின் நோக்கங்கள் தெளிவாக அமையவேண்டும். கூட்டு முயற்சி எம்மை பலம் பொருந்தியவனாக்கும், முயற்சி திருவினையாக்கும்.

சஞ்சிகை ஒன்றை வெளிக் கொணர்வதில் உள்ள சிரமங்கள், சிக்கல்களை நாம் நன்கறிவோம். எனினும் இளங்கதிரினை அச்சிட்டு அவையோர்க்கும், ஏனையோருக்கும் சமர்ப்பித்த முயற்சிகள் யாவற்றிற்கும் நன்றியறிதலைத் தெரிவிக்கும் கடமை எமக்குண்டு. இந்த நற்காரியத்துக்கு உதவியோர் அனைவரும் பாராட்டப்பட வேண்டியவர்கள்.

இளங்கதிர் வெளியீடும் ஏனைய நிகழ்வுகளும் இனிதே அமையவேண்டும் என வாழ்த்துகின்றேன்.

வாழ்த்துக்களுடன்,

பேராசிரியர் இ. சிவகணேசன்,

பெரும் பொருளாளர்,

மருத்துவப் பீடம்,

பேராதனைப் பல்கலைக்கழகம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தலைவரின் உள்ளத்திலிருந்து...

எமது பல்கலைக்கழகத்தின் உயிர்த்துடிப்பு மிக்க பழம் பெருஞ் சங்கங்களுள் ஒன்றாக எமது தமிழ்ச்சங்கம் விளங்குகின்றது. எமது தமிழ்ச்சங்கத்தின் வரலாற்றுப் பதிவேடாக "இளங்கதிர்" இதழ் நீண்ட காலமாக வெளிவந்து கொண்டிருக்கின்றது. அந்த வகையில் இந்த வருடமும் பிரசவிக்கும் தனது நாற்பத்தோராவது இதழிற்கு எனது வாழ்த்துச் செய்தியை தெரிவிப்பதில் மிக்க மகிழ்ச்சியடைகின்றேன்.

இந்த ஆண்டிற்கான இதழ் பல்கலைக்கழகத் தமிழ் மாணவர்களினதும், ஆசிரியர்களினதும் கலை, கலாசார, இலக்கிய மற்றும் விஞ்ஞான ஆற்றலையும், ஆர்வத்தையும் வெளிக்காட்டும் படைப்புக்களைத் தாங்கி வருகின்றது. ஈழத்து இலக்கிய, அறிவியல் இதழ்களில் தனக்கென ஒரு இடம் பிடித்திருக்கும் "இளங்கதிர்" இம்முறை உலகளாவிய ரீதியில் தனது புகழைப் பரப்புமென நம்புகின்றோம்.

இவ்வேளையில் இளங்கதிர் வெளியீட்டிற்காகவும், மாணவர்களின் புலமைப் பரிசில் திட்டத்திற்காகவும் கொழும்பு மாநகரில் இடம்பெற்ற "குறிஞ்சிச் சாரல்" நிகழ்வின் வெற்றிகளுக்கும் உறுதுணையாக நின்ற அனைவருக்கும் இந்நேரத்தில் எனது மனமார்ந்த நன்றிகள்.

எமது தமிழ்க் கலை, கலாசார மேம்பாட்டிற்காக கல்விச் செயற்பாடுகளின் மத்தியிலும் எமது தமிழ்ச்சங்க செயற்பாடுகளிற்கும் வெற்றிகளுக்கும் பாடுபட்ட எமது விரிவுரையாளர்கள், மாணவர்கள் மற்றும் அனைவரையும் நெஞ்சில் நிறுத்தி,

"தேமதுரத் தமிழோசை உலகெலாம்
பரவும் வகை செய்தல் வேண்டும்"

நன்றி.

ப. விஸ்வலிங்கம்,
தலைவர்,
தமிழ்ச்சங்கம், பேராதனைப் பல்கலைக்கழகம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## செயலாளரின் உள்ளத்திலிருந்து...

எத்திக்கும் பரவியிருக்கும் என் தமிழின் புகழ் பரப்பவும் மாணவரின் முத்தமிழ் கலைத்தாகத்துக்கு களம் அமைக்கும் முகமாகவும் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் அமைந்திருக்கும் முதுபெரும் சங்கமான தமிழ்ச் சங்கமானது தனது வருடாந்த கலை இலக்கிய இதழான இளங்கதிர் சஞ்சிகையினை இவ்வருடமும் வெளியிடுவதையிட்டு அக மகிழ்வடைகின்றேன்.

தமிழ்மொழி பேசும் மாணவர்களின் தனித்துவத்தை பறை சாற்றவும், அவர்தம் கலை, பண்பாட்டு பாரம்பரியங்களையும், இலக்கியச் செழுமையினையும் இன்ன பல தன்மைகளையும் சிறப்பாக வெளிப்படுத்தவும் நமது சங்கமானது முனைப்புடன் செயற்பட்டு வருவது யாவரும் அறிந்ததே. அதனடிப்படையில் மாணவர்களின் கலை, கலாசார, விவசாய, விஞ்ஞான, பொறியியல், பொருளாதார, அரசியல், அறிவியல், மருத்துவம், மனையியல், ஆன்மீகம் மற்றும் ஆழ்ந்த சிந்தனைகளை எழுத்துருவாக்கி உங்கள் கைகளில் இளங்கதிர் என்னும் அழகிய கலை இலக்கிய இதழாக சமர்ப்பிப்பதில் பெருமையடைகின்றோம்.

இந்த இளங்கதிர் இதழானது தமிழ் அன்னையின் தாள்களில் வாடா மலராகவும், தோள்களில் தமிழ் மணம் வீசும் மாலையாகவும் நிலைபெற்று என்றும் பெருமையடைய எனது வாழ்த்துக்கள்.

"சாகில் தமிழ் படித்துச் சாகவேண்டும் - என்
சாம்பலும் தமிழ் மணத்து வேக வேண்டும்
ஓடையிலே என் சாம்பல் ஓடும்போதும்
ஒண் தமிழே சலசலத்து ஓடவேண்டும்
பாடையிலே நான் படுத்து உறங்கும்போதும்
பைந்தமிழால் அழும் ஓசை கேட்க வேண்டும்."

நன்றி.

ச. கோபிநாத்,
செயலாளர்,
தமிழ்ச்சங்கம், பேராதனைப் பல்கலைக்கழகம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இளம் பொருளாளரின் உள்ளத்திலிருந்து...

பேராதனைப் பல்கலைக்கழகத் தமிழ்ச்சங்கமானது மிகத் தொன்மையான ஒன்றாகும். தமிழ் கலை, கலாசார, இலக்கிய விழுமியங்களை வளர்ப்பதனை தனது நோக்கமாகக் கொண்டு இயங்கி வரும் தமிழ்ச்சங்கம் பல தசாப்தங்களைத் தாண்டி தனது சேவையை தொடர்கின்றது. இவ்விசால விருட்சத்தில் நானும் ஒரு இலையாக இருப்பதில் பெருமகிழ்ச்சி அடைகின்றேன்.

பல்வேறு சோதனைகளையும் கடந்து இச்சங்கத்தினை வெற்றியின்பால் திசை திருப்பிய மதிப்பிற்குரிய ஆசிரியர்கள் உள்ளடங்கிய எமது சமீபகால செயற்குழுவுக்கு எனது நன்றிகளை தெரிவித்துக்கொள்கிறேன். தமிழ்ச்சங்கம் பல்வேறுப்பட்ட தனித்துவமான நிகழ்வுகளை இவ்வாண்டு நடாத்தியுள்ளமையை அறியத்தருவதில் பெருமையடைகின்றேன். இவற்றுள் பல ஆண்டுகளுக்கு பின்னர் மீண்டும் நடைபெற்ற "குறிஞ்சிச் சாரல்" நிகழ்வு குறிப்பிடத்தக்கதாகும். இந் நிகழ்வின் வெற்றிக்கு வழிகோலிய உலகெங்கும் வாழ் தமிழ் மக்களுக்கு என் இதயம் கனிந்த நன்றிகளையும் தெரிவித்துக்கொள்கின்றேன்.

இவ் இளங்கதிர் இதழானது தமிழ்ச்சங்கத்தினால் வெளியிடப்படும் நாற்பத்தோராவது இதழாகும். இவ்விதழ் பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் முதல் மாணவர்கள் வரையான பல்வேறு ஆர்வலர்களின் ஆக்கங்களைத் தாங்கி வருகின்றது. இவ்வாக்கங்கள் தமிழ் மற்றும் பல்துறை சார்ந்த விடயங்களை வெளிப்படுத்தி நிற்கின்றது. இதன் ஆக்கங்களையும், இவ் இதழ் வெளியீட்டிற்கான நிதி உதவிகளையும் வழங்கிய விரிவுரையாளர்கள், மாணவர்கள், வர்த்தக நிறுவனங்கள் மற்றும் சகல தமிழ் ஆர்வலர்களுக்கும் எனது நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

"தமிழ்த் தாயே உன்னை அம்மா என்று அழைத்தே எம் வாழ்வினைத் தொடங்கினோம். இனி எம் மூச்சுள்ள வரை உன் கழல் தொழுவோம்."

நன்றி.

மு. துவாரகேகஷ்,
இளம் பொருளாளர்,
தமிழ்ச்சங்கம், பேராதனைப் பல்கலைக்கழகம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொருளடக்கம்


**வாழ்த்து** **பக்கம்**

உப வேந்தரின் வாழ்த்துச் செய்தி

பெருந் தலைவரின் வாழ்த்துச் செய்தி

பெரும் பொருளாளரின் வாழ்த்துச் செய்தி

தலைவரின் உள்ளத்திலிருந்து...

செயலாளரின் உள்ளத்திலிருந்து...

இளம் பொருளாளரின் உள்ளத்திலிருந்து...

**வரைபு 1**

01. சமயங்களுக்கிடையிலான உரையாடல்: இலக்கும் விழுமியங்களும் 01
02. முரண்பாட்டு தீர்வில் ஊடகத்தின் பங்கு 06
03. பகவத்கீதையில் தத்துவச் சிந்தனைகள் 11
04. வடகிழக்கு மாகாணங்களில் பல்கலைக்கழக அனுமதியின் பின்னணி 16
05. இலத்திரனியல் அரசாங்கமும் அதன் பயன்களும் 23
06. கலை மெய்யியல் வரலாற்றில் கலாயோகி ஆனந்த குமாரசாமியின் பங்களிப்பு 27
07. இலங்கையின் ஜனாதிபதித்துவ ஆட்சிமுறை: ஒரு விமர்சனப் பார்வை 34
08. சங்ககால மருதத்திணைப் பாடல்களில் வெளிப்படும் பெண்ணின் எதிர்ப்புக்குரல் 44

**வரைபு 2**

09. பயன்தரு அந்தூரிய வளர்ப்பு 50
10. பசுமை புரட்சியின் பிரதேச ரீதியான மாற்றங்கள் - தென் ஆசியா 57
11. நாணயக்கொள்கை, அதன் வகைகள் மற்றும் நாணயக் கொள்கைக் கருவிகள் 65
12. இலங்கையில் கருக்கலைப்பு சட்டமாக்கப்படவேண்டும் 69
13. நுவரெலியா மாவட்டத் தோட்டப்புறங்களில் காணப்படும் பால்நிலைப் பாகுபாடுகள் 72
14. வாழ்க்கையில் வெற்றிப் பெற... 76
15. சனத்தொகை கட்டமைப்பில் முதியோர் 79
16. இஸ்லாமியத் தமிழிலக்கிய மரபில் கிஸ்ஸா இலக்கியங்கள் 86
17. ஒப்பீட்டு அரசியலின் வளர்ச்சி 91
18. நாமிருக்கும் நாடு நமதென்பதறிவோம் 96
19. குற்றங்களை குறைப்பதை விட வராமல் தடுப்பதே மேல் 98
20. சினிமாவும் சீரழியும் பண்பாடும் 103
21. கிரேக்ககால பிரதான ஒழுக்கவியல் அம்சங்கள் பிற்பட்டகால இமானுவேல் காண்டின் ஒழுக்கவியல் சிந்தனைக்கு ஏற்படுத்திய தாக்கம் 106


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புனைவு 1

22. துப்பாக்கிகள் எப்பொழுதும் நேர்மையானவை 114

23. பாலைவனத்தில் ஒரு தளிர் மரம் 118

24. பெண் 121

25. தாய்மை 126

புனைவு 2

26. யதார்த்தம் புரியுங்கள் 130

27. மீண்டும் ஒரு முல்லைப்பாட்டு 132

28. என் தேசம் என் மக்கள் 134

29. பிறவிப் பிழை 136

30. எங்களின் நோக்கில் உங்களின் பார்வைகள் 138

31. வருணனும் மண்மகளும் 140

32. விரக்தி 142

33. வைரமுத்துப் பாடும் பாவேந்தன் 145

34. சபிக்கப்பட்ட சனங்கள் நாங்கள் 147

35. கனவு 150

நடப்பு நிகழ்வு

சங்க நடவடிக்கைகள் 2012/2013 153

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வரைபு - 1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமயங்களுக்கிடையிலான உரையாடல்; இலக்கும் விழுமியங்களும்

எஸ். எம். தமீம்.
விரிவுரையாளர்.
அறபு இஸ்லாமிய நாகரீகத்துறை.
கலைப்பீடம்.

செப்டெம்பர் 11 தாக்குதலின் பின்னைய உலக ஒழுங்கும் அதன் பின்னணியில் அமைந்த நிகழ்வுகளும் சர்வதேச சமாதான செயன்முறையின் மிகச் சிக்கலானதொரு விவகாரமாக தற்காலத்தில் நோக்கப்படுகின்றது. இதன் பின்னணியில் நாடுகளுக்கிடையே பிராந்திய ரீதியாகவும் நாடுகளது சர்வதேச கொள்கையைப் பொறுத்தும் பிணக்குகளும், கலாசாரங்கள், சமயங்களுக்கிடையிலான மோதல்களும் அதிகரித்துள்ளன. ஐக்கிய நாடுகள் சபையின் சாசனம், சர்வதேச மனித உரிமைகள் பிரகடனம் என்பன வெளியிடப்பட்டு ஆறு தசாப்தங்களுக்கும் மேலாகிவிட்டாலும் அவை உலக ஒழுங்கை சமாதான வழியில் இட்டுச் செல்வதில் எவ்வளவு தூரம் வெற்றி கண்டுள்ளது என்பது விடை காணப்பட வேண்டிய வினாவாகும்.

இந்நிலையில், இலங்கையில் உள்நாட்டு யுத்தம் நிறைவடைந்து நான்கு வருடங்களுக்கும் மேலாகிவிட்டது. யுத்தத்தால் பாதிக்கப்பட்டவர்களது மீள்குடியேற்றம், அவர்களுக்கான நிரந்தரத் தீர்வு தொடர்பில் உள்நாட்டில் வாதப்பிரதிவாதங்கள் தலைதூக்கியுள்ளன. மறுபுறம் பெரும்பான்மையின சமூகத்தின் சில பௌத்த சமயவாதிகள் மத்தியில் ஏனைய சமயங்கள் தொடர்பான தீவிர விமர்சன சிந்தனை மேலெழுந்துள்ளது. இது சமயங்கள், சமூகங்களுக்கிடையிலான புரிந்துணர்வை வளர்ப்பதன் அவசியத்தையும் சகவாழ்வை ஊக்குவிப்பதற்கான தேவையையும் ஏற்படுத்தியுள்ளது. இவ்வாய்வுக் கட்டுரை சமயங்களுக்கிடையிலான புரிந்துணர்வையும் கலந்துரையாடலையும் ஊக்குவிக்கும் நோக்கில் இஸ்லாத்தின் வழிகாட்டல்களை மையமாகக் கொண்டு எழுதப்பட்டுள்ளது.

## 1. அறிமுகம்

உரையாடல் (Dialog), கலந்துரையாடல் (Discussion), விவாதம் (Debate) முதலான சொற்பதங்கள் பயன்பாட்டில் இருக்கின்றது. முதலிரு சொற்களை விட விவாதம் என்பது இன்று அறிவியற் கலந்துரையாடல்களில் குறைந்த அவதானத்தையே பெற்றுள்ளது.

உரையாடல் என்பது புத்தி ஜீவிகளது சமாதான, சகவாழ்விற்கான வழிமுறையாகும். தனிநபர்களிடையேயும் குழுக்களிடையேயும் விரோத சிந்தனைகளை விதைக்கும் முரண்பாட்டிற்கு எதிரான சிந்தனையே உரையாடலாகும். முரண்பாடு ஏற்படும் போது கலந்துரையாடல் இரு தரப்பினரிடையேயும் சமாதானத்தை ஏற்படுத்துவதை இலக்காகக் கொண்டுள்ளது. அறபு மொழியில் 'ஹிவார்' என்ற உரையாடலுக்குப் பயன்படுத்தப்படும் சொல்லுக்கு மொழியியல் ரீதியாக திரும்புதல் என்று பொருள்படும். அதாவது பிழையான கருத்தொன்றைக் கைவிட்டு சரியான, நியாயமான கருத்தொன்றின் பால் மீண்டு வருவதை இது குறித்து நிற்கின்றது. இரு தரப்பினரிடையே எதிர்மறையான சிந்தனைகளும் கருத்துக்களும் தோன்றும்பொழுது அதில் ஒரு குழு தமது பக்க பிழையான அணுகுமுறைகளையும் கருத்துக்களையும் கைவிட்டு, சரியான அணுகுமுறைக்குத் திரும்புவதைக் குறிக்கும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உரையாடல் அறிவோடும் விவேகத்தோடும் தொடர்பான விடயமாகும். ஒரு புத்திசாலியின் உரையாடல் சரியான வழிமுறைககளையும் உயர்ந்த நோக்கங்களையும் கொண்டிருக்கும். திருக்குர்ஆன் இது பற்றி பின்வருமாறு குறிப்பிடுகின்றது. "(நபியே!) நீர் (மனிதர்களை) விவேகத்தைக் கொண்டும், அழகான நல்லுபதேசத்தைக் கொண்டும் உமதிரட்சகனின் வழியின் பக்கம் அழைப்பீராக! அன்றியும் எது மிக அழகானதோ, அதைக் கொண்டு அவர்களுடன் நீர் விவாதம் செய்வீராக!"[1]

## 2. இலக்கும் விழுமியங்களும்

கலந்துரையாடலில் ஈடுபடும் இரு தரப்பினரும் அக்கலந்துரையாடலின் நோக்கம் பற்றித் தெளிவு பெற்றிருத்தல் அவசியமாகும். கலந்துரையாடல் ஒரு பிரச்சினைக்குத் தீர்வினைப் பெற்றுக் கொள்வதை அல்லது தெளிவினைப் பெற்றுக் கொள்வதை இலக்காகக் கொண்டு அமையலாம். இச்சமயத்தில் குறித்த நோக்கத்தினை அடைந்து கொள்ளவதை இரு தரப்பினரும் மனதில் கொள்ளல் வேண்டும். எந்தவொரு கலந்துரையாடலும் மனித விவகாரங்கள், பிரச்சினைகளை கவனத்திற்கொண்டு அமைதல் வேண்டும். அப்பொழுதே கலந்துரையாடல் அதனது பெறுமானத்தையும் முக்கியத்துவத்தையும் கொண்டிருக்கும்.

நாகரீகங்கள், சமயங்களுக்கிடையிலான கலந்துரையாடல்கள் யதார்த்தமான சிந்தனை வழிமுறையாகவும் வினைத்திறனும் வாய்ந்த தொடர்பாடலாகவும் மனித ஒத்துழைப்பிற்கான வழிமுறையாகவும் சகவாழ்வை ஊக்குவிக்கும் சாதனமாகவும் இருப்பதால் அதனைப் பயன்வாய்ந்த வகையில் அமைத்துக் கொள்ள ***சர்வதேச கலாசார அடிப்படைகள் பற்றிய பிரகடனத்தில்*** இடம்பெற்றுள்ள பின்வரும் நோக்கங்களை அடைந்து கொள்ளும் வகையில் அது அமைதல் வேண்டும்.

- அறிவுப் பரம்பல், திறன் விருத்தி, கலாசார முன்னேற்றம் என்பவற்றிற்கு பங்காற்றல்

- மனிதர்களுக்கு மத்தியில் நட்பையும் நல்லுறவையும் வளர்ப்பதும் அவர்களுக்கிடையே புரிந்துணர்வை ஏற்படுத்துவதும்,

- ஒவ்வொரு மனிதனும் அறிவைப் பெறவும் நவீன அறிவியல் வளர்ச்சியில் பங்குபெற வழியமைப்பதுடன் அதனூடாக கலாசார விருத்தியை ஏற்படுத்தல்

- உலகில் அனைத்துப் பாகங்களிலும் மனிதனது ஆன்மீக, லௌகீக நிலைமைகளை விருத்தி செய்தல்

மனிதர்களுக்கிடையே நட்புறவையும் சமாதானத்தையும் ஏற்படுத்தும் வகையில் அனைத்து விழுமியங்களையும் சிந்தனைகளையும் உருவாக்குவதும் கருத்துப் பரிமாற்றத்திலும் ஏனைய அனைத்து சமூக செயற்பாட்டிலும் பகைமைக்குரிய அனைத்துக் காரணிகளையும் இல்லாது செய்வதும் சமயங்கள், நாகரீகங்களுக்கிடையிலான கலந்துரையாடலின் பிரதான நோக்கங்களாகும்.

சமயங்கள், கலாசாரங்களுக்கிடையிலான பயனுள்ள உரையாடல் என்பது மனித சமூக விருத்திக்கும் எழுச்சிக்கும் பங்காற்றும் விடயமாகும். ஒரு கலந்துரையாடல் பயனுள்ள வகையில் அமைய பின்வரும் விழுமியங்கள் கடைப்பிடிக்கப்படல் வேண்டும்.

- *மனித கௌரவமும் பரஸ்பர கண்ணியமும்*

- *நடுநிலைமையும் நீதியும்*


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

➤ *பக்கச்சார்பின்மையும், வெறுப்பை களைதலும்*

➤ *கலந்துரையாடலின் நோக்கம் பற்றிய புரிந்துணர்வு*

மனித கௌரவம் என்பது உலகில் பிறந்துள்ள அனைவரும் சுதந்திரமாகவும் சமத்துவமாகவும் வாழும் உரிமை கொண்டவர்கள் என்பதையே குறித்து நிற்கின்றது. இக்கௌரவத்தினைப் பாதுகாப்பதும் பிறரை மரியாதையாக நடத்துவதும் ஒவ்வொரு மனிதனதும் கடமையாகும். "மனிதர்கள் அனைவரும் சுதந்திரமாகவே பிறக்கின்றனர். பின்னர் அவர்கள் சட்டங்களால் அடிமைப்படுத்தப்படுகின்றனர்" என்ற ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் பற்றிய மகுடவாசகமும் "மனித கௌரவத்தில் சமமானவர்களாக அனைவரும் ஒன்றிணைவோம்" எனும் நாகரீகங்களுக்கிடையிலான கலந்துரையாடலுக்கான ஐரோப்பிய மகுடவாசகமும் அல்குர்ஆனின் போதனைக்கு மிக நெருங்கியது. திருக்குர்ஆன் பின்வருமாறு குறிப்பிடுகின்றது. "ஆதமுடைய மக்களை நிச்சயமாக நாம் கண்ணியப்படுத்தினோம் கரையிலும் கடலிலும் நாம் அவர்களை சுமந்து செல்லும்படி செய்கிறோம். நல்லவற்றிலிருந்து நாமே அவர்களுக்கு உணவளிக்கின்றோம். நாம் படைத்தவற்றில் அநேகமானவற்றை விட (தகுதியில்) நாம் அவர்களை மிக மேன்மையாக்கி வைத்துள்ளோம்."[2] மேற்கூறப்பட்ட இவ்வசனம் இஸ்லாத்தில் மனித கௌரவம் என்பது அனைவருக்கும் பொதுவானதும் பிறக்கும்போதே அக்கௌரவம் அவர்களுக்குக் கிடைக்கப்பெறுகின்றமையையும் தெளிவுபடுத்துகின்றது.

அத்துடன், உரையாடலில் ஈடுபடும் இரு தரப்பினர் மத்தியில் பரஸ்பர கண்ணியம் அத்தியவசியமானது. இரு தரப்பாரும் அடுத்த சமயத்தவரது பண்பாடுகள், சமய, கலாசார நெறிமுறைகளை மதித்துச் செயற்படுவதே பரஸ்பர கண்ணியம் எனப்படுகின்றது. அல்குர்ஆன் பின்வருமாறு குறிப்பிடுகின்றது. "விசுவாசிகளே! அல்லாஹ்வையன்றி அவர்கள் (தமது கடவுள்களாக) அழைத்துக் கொண்டிருப்பவர்களை நீங்கள் ஏசாதீர்கள். அதனால் அவர்கள் அறியாமையின் காரணமாக விரோதத்தால் அல்லாஹ்வைத் திட்டுவார்கள்."[3] கலந்துரையாடலில் ஈடுபடும் இரு தரப்பாரும் தத்தமது சமய, பண்பாடு விழுமியங்களில் அதிக விருப்புக் கொண்டிருப்பர். எனவே ஒரு தரப்பினர் மற்றைய தரப்பினரின் விழுமியங்களைக் குறை கூறல், விமர்சித்தல் ஆகியவற்றைத் தவிர்த்து பயனுள்ள வகையில் தமது கலந்துரையாடலை அமைத்துக் கொள்வது அவசியமாகும். இல்லையெனின், கலந்துரையாடலின் உண்மையான நோக்கினை இரு தரப்பினரும் அடைந்து கொள்ளமுடியாது. இன்று தேசிய, சர்வதேச அளவில் இடம்பெறுகின்ற கலந்துரையாடல்கள் முரண்பாட்டிற்கு இட்டுச் செல்லும் விவாதங்களாக அமைகின்றதேயன்றி இவற்றிலிருந்து எதிர்பார்க்கப்படும் நோக்கங்கள் நிறைவு பெறுவதில்லை.

கலந்துரையாடலில் ஈடுபடும் இரு தரப்பினரும் நீதமாக நடந்து கொள்வதுடன் தமது தரப்பின் தவறான நியாயங்களைக் கைவிட்டு நீதத்துடன் நடந்து கொள்வது இன்றியமையாதது. அல்குர்ஆன் பின்வருமாறு குறிப்பிடுகின்றது:-

"விசுவாசங் கொண்டோரே! நீங்கள் அல்லாஹ்வுக்காக நீதியைக் கொண்டு சாட்சி கூறுபவர்களாக நிலைத்திருங்கள் எந்த சமூகத்தவரின் விரோதமும், நீங்கள் நீதமாக நடந்து கொள்ளாதிருக்க உங்களைத் தூண்டிவிட வேண்டாம் (எவ்வளவு விரோதமிருந்த போதிலும்) நீங்கள் நீதி செலுத்துங்கள் அதுதான் பயபக்திக்கு மிக நெருக்கமானதாகும்."[4] இவ்வசனம் கலந்துரையாடலில் ஈடுபடும் ஒவ்வொரு தரப்பினரும் தமது கொள்கைகள் பிழையானது என்பது உறுதியாகும் போது அவர்கள் நீதமாக நடந்து கொள்வதுடன் விட்டுக் கொடுப்புடன் செயற்பட வேண்டும் என்பதை வலியுறுத்துகின்றது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கலந்துரையாடலில் ஈடுபடும் தரப்பு அடுத்த தரப்பினர் பற்றிய முற்சாய்வான எண்ணங்களை ஆரம்பத்திலேயே வளர்த்துக் கொள்வது வரவேற்கத்தக்கதல்ல. ஏனெனில் குறித்த ஒரு சமூகத்தினர் மீது கொண்ட வெறுப்பும் பகைமையும் தமது பிழையான கொள்கைகளையும் கோரிக்கைகளையும் நியாயமானதாகவே நோக்கும் நிலைக்கு இட்டுச் செல்லும். அல்குர்ஆன் பின்வருமாறு குறிப்பிடுகின்றது:-

> "கண்ணியமான மஸ்ஜிதுக்குச் செல்லவிடாது உங்களைத் தடுத்துக் கொண்ட சமூகத்தினர் மீது (உங்களுக்கு)ள்ள பகைமை (அவர்கள் மீது) நீங்கள் வரம்பு மீறும்படி உங்களைத் தூண்டிவிடவும் வேண்டாம் இன்னும் நன்மைக்கும், பயபக்திக்கும் நீங்கள் ஒருவருக்கொருவர் உதவியாக இருங்கள் பாவத்திலும் பகைமையிலும் நீங்கள் ஒருவருக்கொருவர் உதவியாக இருக்க வேண்டாம் இன்னும், அல்லாஹ்வை நீங்கள் பயந்து கொள்ளுங்கள் நிச்சயமாக அல்லாஹ் தண்டிப்பதில் மிகக் கடினமானவன்".[5]

இவ்வசனம் நீதம் எத்தரப்பினரிடம் இருக்கின்றதோ அவர்களுக்கு உதவி செய்ய வேண்டும் என்பதையும் அநியாயத்திற்கு உதவியளிக்கக் கூடாது என்பதையும் வலியுறுத்துகின்றது.

சமயங்கள், கலாசாரங்களுக்கிடையிலான கலந்துரையாடலின் போது பின்வரும் ஒழுங்குமுறைகள் பேணப்படுவது அவசியமாகும்.

- மனிதர்களுக்கிடையேயும் சமூகங்களுக்கிடையேயும் ஒத்துழைப்பினை முடக்கும் அனைத்து காரணிகள், பிரச்சனைகளை இல்லாது செய்வதனூடாக பொதுச்சமூக நலனை அடைந்து கொள்வதை நோக்காகக் கொண்டிருத்தல் வேண்டும். இது சிக்கலான பிரச்சினைகளையும் சச்சரவுகளையும் நிதானமாகக் கையாள்வதனூடாக சாத்தியமாகின்றது. இதனூடாக கிழக்குலகிற்கும் மேற்குலகிற்கும் இடையே தனித்துவத்தை கட்டியெழுப்பவும் நாடுகளுக்கிடையே இருபக்க, பிராந்திய, சர்வதேச உறவுகளை விருத்தி செய்து, பொதுநலனுக்காக ஒத்துழைப்புடன் செயற்படும் வகையில் சர்வதேச நாடுகளை ஒரே குடும்பமாக மாற்றியமைக்கவும் முடியும்.

- சர்வதேச அளவில் மனிதர்கள், சமூகங்கள், சமயங்கள், கலாசாரங்கள் பற்றிய மனப்பதிவை சீரமைத்தல் வேண்டும். இதனூடாக கலந்துரையாடல்கள் தனிநபர்கள், சமூகங்களுக்கிடையில் இடம்பெறுதல் வேண்டுமே தவிர சமய ரீதியான பிரச்சினைகளின் பின்புலத்தில் அல்ல. ஏனெனில் குறித்த ஒரு சமூகத்தின் சமய நம்பிக்கைகளில், கலாசார விழுமியங்களில் கைவைக்காது அவற்றை மதித்துச் செயற்படுதல் வேண்டும்.

- சமயங்களுக்கிடையிலான உரையாடல் மனிதப் பொதுநலனைக் கருத்திற்கொள்வதால் அவை இரு சமயங்களுக்கும் பொதுவான, உடன்பாடான விடயங்களில் அமைய வேண்டுமே தவிர முரண்பாடான விடயங்களிலல்ல. இது பற்றி திருக்குர்ஆன் பின்வருமாறு குறிப்பிடுகின்றது. "(நபியே! அவர்களிடம்) கூறுவீராக" 'வேதத்தை உடையவர்களே! எங்களுக்கும், இன்னும் உங்களுக்குமிடையே, நாம் அல்லாஹ்வைத் தவிர வேறொன்றையும் வணங்கக்கூடாது' நாம் அவனுக்கு யாதொன்றையும் இணைவைக்கக்கூடாது நம்மில் சிலர், சிலரை அல்லாஹ்வையன்றி தெய்வங்களாக எடுத்துக் கொள்ளவும் கூடாது என்ற சமமானதொரு வார்த்தையின் பால் வாருங்கள் (இதை) ஏற்காது புறக்கணித்தால், (அவர்களிடம்) நிச்சயமாக நாங்கள் முஸ்லிம்கள் என நீங்கள் சாட்சியம் கூறுவீர்களாக எனக் கூறிவிடுங்கள்[6]

மேற்கூறப்பட்ட வசனம் யூத, கிறிஸ்தவ சமயங்களுக்கும் இஸ்லாமிய சமயத்துக்குமிடையிலான உடன்பாடான விடயங்களைப் பற்றிய கலந்துரையாடலுக்கு அழைப்புவிடுக்கின்றது. நபி முஹம்மத் (ஸல்)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர்கள் தமது காலத்தில் கிரேக்க, பாரசீக, யெமனிய, எதியோப்பிய சமூகங்களுக்கு இரு சமயங்களிலும் காணப்படும் உடன்பாடான விடயங்களிலேயே தனது அழைப்பினை விடுத்தார்கள்.

**இறுதியாக,** இலங்கையின் தற்கால சூழலில் கிறிஸ்தவ, இந்து, இஸ்லாமிய வழிபாட்டுத் தளங்களுக்கும் சிறுபான்மையினருக்கும் எதிராக கடும் விமர்சனங்கள் முன்வைக்கப்படும் சூழலில் இச்சமயங்களுக்கிடையிலான தொடரான கலந்துரையாடல்கள் நடைபெறுவது மிக முக்கியமானது. ஒரு சமயத்தவர் மற்றைய சமயத்தவரது நம்பிக்கைகளையும், விழுமியங்களையும் குறைகூறி, பிற சமயத்தவர்களது சமய அனுஷ்டானங்களில் தலையிட்டுச் செயற்படுவது இந்நாட்டில் மிக நீண்டகாலமாக கட்டியெழுப்பப்பட்ட சமய நல்லிணக்கத்திற்கும் சமூக சகவாழ்விற்கும் பாரிய ஆபத்தை ஏற்படுத்தும் விடயமாகும். இப்பிரச்சினை பல்வேறு சமய, பண்பாட்டு, அரசியல், பொருளாதாரப் பின்புலத்தைக் கொண்டுள்ளமையால் இதனை மிகச்சாதுரியமாகக் கையாளுதல் வேண்டும்.

அத்தோடு வடகிழக்கில் மாத்திரமன்றி நாட்டின் ஏனைய பகுதிகளிலும் மிக நீண்டகாலமாக நிலவி வந்த தமிழ் - முஸ்லிம் சகவாழ்வு 1980 களுக்குப் பின் இலங்கையில் ஏற்பட்ட சிவில் யுத்தம் காரணமாக பாதிக்கப்பட்டுள்ளதை எவரும் மறுக்க முடியாது. குறிப்பாக வடமாகாணத்தில் யுத்தத்திற்குப் பிந்திய மீள்குடியேற்ற சூழலில் இச்சகவாழ்வு சீர்குலைந்து காணப்படுவதை அண்மைய நிகழ்வுகள் எமக்குத் தெளிவாக எடுத்துக்காட்டுகின்றன.

எனவே, சமூகங்கள், சமயங்களுக்கிடையிலான உரையாடல் நிலையான சகவாழ்வைக் கட்டியெழுப்புவதற்கான வழிமுறையாக அமைதல் வேண்டும். இவ்வுரையாடல் இலங்கையில் பிரதான சமயங்களின் பிரதேச, சமய நிறுவனங்களினூடாகவும், அரசாங்க, அரசசார்பற்ற நிறுவனங்கள், சிவில் அமைப்புகளினூடாகவும் முன்னெடுத்துச் செல்லப்படுதல் வேண்டும். அத்தோடு, இலங்கையில் பிரதான பல்கலைக்கழகங்களின் கல்வியாளர்கள் தமது நிறுவனங்களில் இத்தகைய கலந்துரையாடல்களை ஊக்குவிக்கும் பணியை மேற்கொள்ள வேண்டும். இதற்கு பாடசாலை, பல்கலைக்கழகப் பாடத்திட்டங்களில் சமயங்கள் மற்றும் ஒப்பீட்டு சமயவியல் பற்றிய பாடப்பரப்புக்களைச் சேர்த்தல் அல்லது இருக்கும் உள்ளீடுகளை விருத்தி செய்தல் முதலான செயற்பாடுகளினூடாக முன்னெடுக்க முடியும். அத்தோடு ஒரு திணைக்களத்தில் தொழில் புரியும் இரு வேறு சமயத்தவர்கள் ஒன்றாக அமர்ந்து இத்தகைய கலந்துரையாடல்களில் ஈடுபடும் மனப்பாங்கு வளர்க்கப்படுவது எதிர்கால இலங்கைச் சமூகத்தின் இன, சமய சகவாழ்விற்கான நிலையான செயன்முறையொன்றாக அமையும். இலங்கையில் காலனித்துவ காலத்திற்கு முன்பிருந்தே மிக நீண்ட காலமாகக் கட்டியெழுப்பப்பட்டிருந்த சமய, இனச் சகவாழ்வை ஊக்குவிக்க சுயநலமற்ற கலந்துரையாடல்களில் ஒவ்வொரு சமயத்தாரும் ஈடுபடுவது காலத்தின் தேவையாகும்.

## அடிக்குறிப்புக்கள்:

[1] அல்குர்ஆன் (அந்நஹ்ல்:125)

[2] அல்குர்ஆன் (அல்இஸ்ரா:70)

[3] அல்குர்ஆன் (அல்அன்ஆம்:108)

[4] அல்குர்ஆன் (அல்மாயிதா:05)

[5] அல்குர்ஆன் (அல்மாயிதா:02)

[6] அல்குர்ஆன் (ஆலுஇம்ரான்:64)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முரண்பாட்டுத் தீர்வில் ஊடகத்தின் வகிபங்கு

*பஸ்ரியா மன்சில்,*
*உதவி விரிவுரையாளர்,*
*அரசியற் துறை,*
*கலைப்பீடம்.*

---

**மோ**தல், யுத்தம், வன்முறை, கலகம், முரண்பாடு, போன்ற அம்சங்களுடன் இன்றைய நவீன உலகு அசைந்து முன்னோக்கி செல்கின்றது. இம்முரண்பாடு என்பது மானிட சமுதாய வரலாற்றில் புதிய விடயமொன்றல்ல. மனிதனுக்கும் மனிதனுக்குமிடையிலான இடைவினைகள் பிறப்பெடுத்த காலம் தொட்டே மானுடப்பிறவிகட்கிடையான முரண்பாடுகளும் பிறப்பு கண்டுவிட்டன. உலகம் மெல்ல மெல்ல நவீனத்துவத்தின் சாயல்களைக் கையகப்படுத்திக் கொண்டு பாரம்பரியங்களைக் கையுதிர்க்கத் தொடங்கிய காலத்திலிருந்தே முரண்பாடுகள் அதிகளவில் முளைவிடத் தொடங்கி விட்டமைக்கு வரலாற்று ஏடுகள் சான்று பகிர்கின்றன. மானுடனுக்கும் மானுடனுக்குமிடையிலான முரண்பாடுகளிலிருந்து தேசங்கட்குள்ளான முரண்பாடுகள் மற்றும் தேசங்கட்கிடையிலான முரண்பாடுகள் என இவை அதிகரித்த அளவில் இடம் பெற்று வருவது கண்கூடு.

முரண்பாடு எனும் எண்ணக்கரு துல்லியமிழந்த வரையறுத்துக் கூற முடியாத ஒரு கோட்பாடாகும். பொதுவான பாவனையில் முரண்பாடானது கலகம், வன்முறை, போராட்டம், குழப்பம் போன்ற அர்த்தங்களிலும் பயன்படுத்தப்படுகின்றது. முரண்பாட்டை இரு தரப்பினருக்கு அல்லது அதற்கு மேற்பட்ட தரப்பினருக்கிடையே ஒத்த எதிர்பார்ப்புகள் அல்லது தேவைகளைத் திருப்தி செய்துகொள்ள முடியாத போது ஏற்படுகின்ற குழப்பநிலை என எளிமையாக வரைவிலக்கணப்படுத்தலாம்.

யுத்தங்களை, முரண்பாடுகளை முடிவுக்கு கொண்டு வரும் வகையிலான பாரிய முயற்சிகளும் இடம் பெற்றுக் கொண்டு வருகின்றன. முரண்பாட்டுக்கு வழிவகுக்கும் காரணிகளை இனங்கண்டு அவற்றினை அகற்றுதல் என்று பொருள்படும். முரண்பாட்டுத் தீர்த்தல் என்ற இவ்வெண்ணக்கருவுக்கும் முரண்பாட்டு எண்ணக்கருவைப்போன்றே மிக நீண்ட வரலாறு உண்டு. முரண்பாட்டில் ஈடுபடும் தரப்பினரின் வெளிப்படையான நலன்களுக்கு இடம் தரும் வழிவகைகளைத் தேடுதலினூடாக முரண்பாட்டை அகற்றுதல் என்பதே இதன் அர்த்தமாகும். முரண்பாட்டுக்குரிய காரணிகளைக் கவனத்தில் எடுத்து மோதும் குழுக்களிடையே புதிய உறவுகளைக் கட்டியெழுப்பி பின்னெப்போதும் மோதல் காரணிகள் எழாமல் முரண்பாட்டை இல்லாமல் செய்வதனை முரண்பாட்டுத் தீர்த்தல் குறித்து நிற்கின்றது.

அதிகரித்த அரசுகட்கிடையான மற்றும் அரசுக்குள்ளேயான முரண்பாடுகளால் இன்றைய நவீன உலகில் முரண்பாட்டுத் தீர்வு தொடர்பான ஆய்வுகள் முரண்பாடுகளை விளைவித்த காரணிகள் மற்றும் முரண்பாட்டை முடிவு காண்பதற்கு ஏதுவான வழிமுறைகளில் அதிக கவனம் செலுத்துகின்றன. சமாதானத்தைக் கட்டியெழுப்பல் செயன்முறை மற்றும் சமாதானத்தைக் கட்டியெழுப்பல் கற்கை தொடர்பாக பல புலமையாளர்கள், அறிஞர்கள் கவனம் செலுத்தியுள்ளனர். இச்சமாதான செயன்முறைகளில் ஊடகத்தின் வகிபங்கு மிகவும் கோடிட்டு காட்டப்படுகின்றது. நவீனகால ஊடகங்கள் உலகில் இடம் பெற்ற பல்வேறு முரண்பாடுகளின் பல்வேறு கட்டங்களில் அதனைத் தீர்ப்பதற்கான மத்தியஸ்த நடவடிக்கைகளிலும் ஈடுபட்டு அதனைத் தீர்ப்பதற்கான பாரிய வகிபங்கினை ஆற்றியுள்ளன.

அச்சு மற்றும் இலத்திரனியல் ஊடகங்கள் பலவழிகளிலும் அரசுக்குள்ளான மற்றும் அரசுகட்கிடையான முரண்பாடுகளின் பல கட்டங்களிலும் அதனைத் தீர்ப்பதற்கான தாக்ககரமான வகிபங்கினை ஆற்ற முடியும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**சமாதானத்தைக் கட்டியெழுப்பல் மற்றும் முரண்பாட்டு முகாமைத்துவத்தில் ஊடகங்களின் வகிபங்கு.**

மோதல் முகாமைத்துவம் என்பது மோதலை அகற்றும் முறைகளுக்குப் பதிலாக முரண்பட்ட தரப்பை ஒன்றிணைந்த ஓர் ஒத்துழைக்கும் செயன்முறையால் மோதலை ஆக்கம் தரும் வகையில் கையாள முற்படும் ஒன்றாகும். மோதலில் தொடர்புடைய இரு குழுக்களிடையே மேலும் மோதல் அதிகரிக்காது அல்லது பரவவிடாது ஒரு குறித்த நிலையில் இருந்து முகாமை செய்வதனைக் குறிக்கும்.

இவ்வகையில் ஊடகங்கள் மோதலில் ஈடுபடும் தரப்பினர்களின் தன்மையை அளவிடல், ஒரு தரப்பினரை மறு தரப்பினருக்காகச் சமநிலைப்படுத்தல், இரு தரப்பினரையும் சிறிது காலம் தனிமைப்படுத்தல், மோதல் தொடர்பான மாநாடுகளை நடாத்தல் போன்றவற்றை மேற்கொள்கின்றன.

தகவல் (Information) பொது மக்களின் நடத்தைகளில் மாற்றங்களைக் கொண்டு வரக்கூடிய பலமான சக்தியைக் கொண்டுள்ளது. ஊடகங்கள் உலகளவில் அறிவைப் பகிர்வதற்கான செயற்றிறன் வாய்ந்த மூலங்களாகப் பயன்படுத்தப்படுகின்றன. ஆரோக்கியமான ஜனநாயகத்தின் குறிகாட்டியாகத் திகழும் ஊடகங்களின் அடிநாதமாக கருத்து வெளிப்பாட்டுச் சுதந்திரம் விளங்குவதுடன் அடிப்படை உரிமைகட்கும், ஜனநாயகக் கட்டமைப்புக்கும் இன்றியமையாத அம்சமாகவும் காணப்படுகின்றது. கருத்துச் சுதந்திரம், தகவலறியும் உரிமை, மற்றும் பல்லினங்கள் வாழும் சமூகத்தில் பல்வேறுபட்ட அபிப்பிராயங்களை வெளிப்படுத்தல் போன்ற பிரதானமான பணிகளை ஆற்றுகின்றது.

முரண்பாடு ஏற்படுவதற்கு அச்சாணிக் காரணிகளாக அரசியல் பங்குபற்றலுக்கான வாய்ப்புகள் வழங்கப்படாமையும், தனது கருத்துக்களை வெளிப்படுத்துவதற்கான சுதந்திரம் கையுதிர்க்கப்படும் நிலையையும் குறிப்பிடலாம். சுதந்திரமானதும் இலவசமானதுமான பன்மைத்துவ ஊடகங்கள் பல வித அபிப்பிராயங்கட்கும் விவாதங்கட்குமான மேடைகளாக அமைகின்றன. இன்னொரு வகையில் மக்களுக்கிடையேயான வெறுப்புணர்வுகளையும், கசப்புகளையும் தோண்டிக்கிளறி பிரவாகமெடுக்கச் செய்யும் பணிகளையும் ஆற்றுகின்றது. எனினும் நடுநிலையான வகையில் செயற்படுகின்ற ஊடகங்கள் மாத்திரமே முரண்பாட்டுத் தீர்வில் பங்கெடுக்கலாம் என்பதை மறுப்பதற்கில்லை.

தகவல்களை அறிய வாய்ப்பேதும் கிடைக்காத நிலை முரண்பாட்டின் எந்த ஒரு கட்டத்திலும் மக்களை நம்பிக்கையற்றவர்களாகவும், அமைதியற்றவர்களாகவும் ஆக்குகின்ற ஆற்றலைக் கொண்டிருக்கின்றது. இதனால் மக்களின் தகவலறியும் உரிமையை அனுபவிக்கின்ற வாய்ப்புக்களை பெற்றுக்கொடுக்கின்ற ஊடகத்தின் வகிபங்கினை ஐக்கிய நாடுகள் சபையின் UNMP (United Nations Millennium Declaration) பின்வருமாறு குறிப்பிடுகின்றது. "தனது முக்கிய பங்கினை வகிப்பதற்காகவும், மக்களின் தகவலறியும் உரிமையைப் பேணுவதற்கும் ஊடகங்களின் சுதந்திரம் உறுதிப்படுத்தப்பட வேண்டும்."

ஊடகவியல் வெறுமனே தகவல்களைப் பகிர்ந்தளிக்கும் தொண்டினை மாத்திரம் புரிவதில்லை மாறாக வித்தியாசமான அபிப்பிராயங்களுக்கேற்ற சூழலையும் சமைத்துக் கொடுக்கின்றது. இதனூடாக முரண்பாட்டுக் கற்கைகளில் கவனம் செலுத்தி முரண்பாட்டைத் தவிர்ப்பதற்கான மூலமாகவும் விளங்குகின்றது.

பொறுப்பு வாய்ந்த ஊடகவியல், கருத்துக்களை வெளியிடுவது மட்டுமன்றி அவற்றில் உண்மைத்தன்மை, பக்கசார்பற்ற தன்மை, நம்பத்தகுந்த விடயங்களை வெளியிடும் பணிகளையும் மேற்கொள்ள வேண்டும். இதுவே பொறுப்பு வாய்ந்த ஊடகவியலுக்கான அடையாளமாகும். இப்பொறுப்பு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாய்ந்த தன்மையினை அடைய ஊடகவியலாளர்கள் தெளிவானதும் நடுநிலையானதுமான தீர்ப்புகளை மேற்கொள்ள வேண்டியுள்ளது. செய்திகளும், தகவல்களும் ஜனநாயகத்தின் உயிரோட்டத்துக்கான நாளங்கள் போன்றவையாகும். சமூகநிலையினை பகுப்பாய்வு செய்ய, வாதிட செயன்முறை ரீதியான தகவல்கள் தேவைப்படுகின்றதுடன் அதற்கான இடைவெளியை ஊடகம் நிவர்த்தி செய்கின்றது.

ஒரு முரண்பாட்டு நிலையின் போது சர்வதேச ஊடகங்கள் உலகளாவிய ரீதியில் அம்முரண்பாடு தொடர்பான கவனத்தை ஈர்க்க முடியும். வெகுசன தொடர்பு ஊடகங்கள் மக்களின் அன்றாட வாழ்வில் இன்றியமையாத அம்சமாகப் பின்னிப் பிணைந்துள்ளமையால் முரண்பாடு தொடர்பான விழிப்புணர்வுக் கருத்துக்கள் போன்றவற்றை உலகறியச் செய்யும் தொண்டை ஆற்றுகின்றது.

அணுவாயுதங்களை விட கூர்மையான தாக்கங்களைப் புரியவல்ல ஊடகங்களைப் பயன்படுத்தி முரண்பாடுகளை தீர்க்கலாம். இன்றைய உலகில் ஆயுதமேந்திய முரண்பாடுகளில் ஊடகங்களைப் பயன்படுத்தி முரண்பாடடுத் தரப்பினர் தன் பக்க நியாயங்களை முன்வைத்து உலக மக்கள் அபிப்பிராயத்தை பெற்றுக் கொள்ள முயல்கின்றனர். இதனால் பக்கச்சார்பா நடுநிலையான ஊடகங்கள் உலகப் பொது மக்களுக்கு மட்டுமன்றி முரண்பாட்டில் நேரடியாக பாதிப்படையும் தரப்பினருக்கும் இன்றியமையாதாகக் காணப்படுகின்றது. இதுவே முரண்பாடு தொடர்பான உலகக் கவனத்தைப் பெறவும், முரண்பாடு தொடர்பாக நடுநிலை வகிக்கவும், மத்தியஸ்தம் செய்யவுமான சூழலை ஏற்படுத்திக் கொடுக்கின்றது.

தேசங்கட்கிடையான முரண்பாடுகளின் போது இரண்டு தேசங்கட்கிடையான எல்லைப்பகுதியில் இயங்கும் வானொலிகள் முரண்பாட்டில் ஈடுபடும் தரப்பினருக்கும், அகதிகளுக்கும் சமாதான செய்திகளை அனுப்பி முரண்பாட்டை முடிவுக்கு கொண்டுவர துணைபுரிகின்றன.

உள்நாட்டு ஊடகமானது முரண்பாட்டுக் கட்டமைப்புகள், முரண்பாட்டுத் தரப்பு, வன்முறைக்கான காரணிகள் தொடர்பான ஆழமான அனுபவத்தையும் அறிவையும் பெற்றிருப்பதனால் அவற்றைத் தீர்க்கும் பல்வேறு கட்டங்களிலும் முரண்பாடு தொடங்கும் சூழ்நிலைகளிலும், முரண்பாடொன்று நிகழ்ந்த பின் மீண்டும் முரண்பாடு தோற்றம் பெறுவதற்கான காரணிகளை இழிவளவாக்குவதற்கும் பாரியளவில் துணை புரிகின்றன.

முரண்பாடு தொடர்பான வன்முறை நிலையையும் பதற்ற நிலையையும் அச்ச நிலையையும் குறைக்கின்ற வளங்களாக ஊடகங்கள் கருதப்படுகின்றன. முரண்பாடு தொடர்பான சாதகமான இலக்குகளின் தேவைகளையும் ஊடகங்கள் நிரூபிக்க வருகின்றன. பதற்ற நிலையைத் தணிப்பதற்கான அபார ஆற்றல் ஊடகங்களுக்கு உண்டு. நம்பத்தகுந்த தகவல்களைக் பகிர்வதனூடாகவும், தகவல்களை அதிக எண்ணிக்கையானவர்களுக்கு சென்றடையச் செய்வதன் ஊடாகவும் முரண்பாட்டை முகாமை செய்வதுடன் ஜனநாயக மூலதத்துவங்களை முன்னோக்கி நகர்த்தும் சக்தியாகவும் விளங்குகின்றது.

முரண்பாட்டின் பின்விளைவுகளின்போதும், வேற்றுமைகளை அகற்றி சமரசப்படுத்தும் நிலையின் போதும் (Reconciliation) சமூக ரீதியான அபிவிருத்தியை ஊக்குவிக்கும் பணிகளையும் புரிகின்றது. சமாதானத்தைக் கட்டியெழுப்பல் எனும் அம்சமானது முரண்பாடு தீர்த்தல் செயன்முறையில் பிரதான இடம் வகிக்கும் ஒன்றாகும். இவ்வெண்ணக்கருவில் சமாதானத்தைக் கட்டியெழுப்புதல் (Peace Building) சமாதானத்தை ஏற்படுத்தல் (Peace Making), சமாதானத்தைக் காத்தல் (Peace Keeping) போன்றன முக்கிய பங்கு வகிக்கின்றன. சமாதானத்தை ஏற்படுத்தல் என்பது மோதலின் அடிப்படையான பிரச்சினைகளை அடையாளம் கண்டு அவற்றிற்கு தீர்வினை அடைந்து கொள்ளும் ஓர் உபாயமாகும். சமாதானத்தைக் கட்டியெழுப்பல் என்பது மோதலுக்கான அடிப்படைக் காரணிகளைத் தீர்த்துக்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொள்வதுடன் சமூகத்தில் புரையோடிப் போயுள்ள அநீதிகளை இல்லாதொழித்தல், மக்களின் அடிப்படைத் தேவைகளை உத்தவராதப்படுத்தல், போன்ற பல்வேறுபட்ட அம்சங்களை உள்ளடக்கியுள்ளது.

இவ்வகையில் சமாதானத்தைக் கட்டியெழுப்பலின் அளவீடாக சமாதான ஊடகவியல் கருதப்படுகின்றது. சமாதான ஊடகவியலாளர்கள் முரண்பாட்டுக்குப் பின்னணியாக உள்ள காரணிகளை இனங்கண்டு வெளிக் கொணர்வதுடன் முரண்பாட்டுத் தரப்பினரின் உண்மையான இலக்கினையும் வெளிக் கொணர்கின்றன.

ஜனநாயக ஊடகவியலாளர்கள் முரண்பாட்டினால் உண்டான அழிவு மற்றும், இழப்பு போன்றவற்றை தனது சுயநலத்திற்காகப் பயன்படுத்த முற்படாத வேளை அதனை வெளியிடுவதன் மூலம் முரண்பாட்டினால் பாதிப்படைந்தவர்கள் நிவாரணம் பெறவும் துணை புரிகின்றனர். முரண்பாட்டு அறிக்கைகளை வெளியிடுவதன் மூலம் சமாதாதான அளவீடுகள் மற்றும் யுத்தத்திற்கெதிரான கருத்துக்கள், சமாதானத்திற்கு ஆதரவான கருத்துக்கள், வன்முறைகட்கெதிரான மனநிலையினை தோற்றுவிக்க முடிகின்றது. சமாதான ஊடகவியலின் பிரதான இலக்காக முரண்பாட்டைத் தீர்ப்பதற்கான காரணிகள், முரண்பாட்டினை முறுகல் நிலைக்கு கொண்டு செல்லும் காரணிகள் போன்றவற்றை இல்லாமல் ஆக்குவதாகக் காணப்படுகின்றது. சமாதானத்தைக் கட்டியெழுப்புவதற்கான ஊடகத்தின் வகிபங்குகளில் பல உத்திகள் கையாளப்படுகின்றன. அவையாவன:

- மோதல்- உணர்வு மற்றும் அமைதி இதழியல் (Conflict- Sensitive and Peace Journalism)
- அமைதி- பொழுது போக்கு ஊக்குவித்தல் (Peace- Promoting Entertainment Media)
- வன்முறையைத் தடுக்கும் விதிமுறை (Regulation To Prevent Incitement violence)
- அமைதியை ஊக்குவிக்கும் குடியுரிமை ஊடகம் (Peace Promoting Citizen Media)

சமாதான ஊடகவியலாளர்கள் மனித உரிமை மீறல் தொடர்பாகவும் அதிக முக்கியத்துவம் கொடுக்கின்றனர். இதன்படி ஊடகவியலாளர்கள் மனித உரிமை பாதுகாவலர்களுக்கான உதவியாளர்களாகக் கருதப்படுவதுடன் மனித உரிமை மீறல் தொடர்பான துல்லியமான தகவல்களை வெளியிடும் பணிகளையும் புரிகின்றனர். மக்களிடமிருந்து கிடைக்கப் பெறும் கருத்துக்கள், பொதுசன அபிப்பிராயத்திலிருந்து இவ்வாறான தேடல்களைப் பெற முடிவதால் ஊடகவியலாளர்கள் பல குற்றவாளிகளை இனங்கண்டுள்ளனர். இதனால் ஜனநாயக நாடுகளிலும் கூட ஊடகங்கள் மீது பல வரையறைகள் கொண்டு வரப்பட்டுள்ளன.

ஊடகங்கள் மனித உரிமை மற்றும் ஏனைய ஒழுக்க விதிகளைப் பரப்புவதனூடாகவும், மனித உரிமைகள் மீறப்படுதலால் கிடைக்கப்பெறும் தண்டனைகளை எடுத்தியம்புவதனூடாகவும் பணி புரிகின்றன. மேலும் வன்முறையைத் தூண்டுபவர்களுக்கு எதிரான மக்கள் கண்டனத்தை ஒழுங்குபடுத்தவும் சமாதான கண்காணிப்பு நடவடிக்கைகளுக்கும் துணைபுரிகின்றன. முரண்பாட்டுடன் தொடர்பான தரப்பினருக்கிடையே தொடர்பாடல் முறிந்த நிலையில் தொடர்பாடலை ஏற்படுத்தும் மூலமாகவும் ஊடகங்கள் செயற்படுகின்றன. தென்னாபிரிக்காவின் முரண்பாட்டின் போது peace cafe என்ற ஊடக நிறுவனம் முரண்பாட்டின் இரு தரப்பும் சமாதான செயன்முறைக்கு வர மறுத்த போது இரு தரப்பினரையும் வேறு வேறாக ஆய்வு செய்து அவை தொடர்பான வீடியோக்கள், ஒளிப்படங்கள் போன்றவற்றினை இரு தரப்பினருக்கும் காண்பித்தது. இதனூடாக இருதரப்பினரும் பேச்சு வார்த்தைக்கு வரத் துணை புரிந்தது.

இவ்வாறாக ஊடகவியலாளர்களும் ஊடகத்திற்கும் முரண்பாட்டை இழிவளவாக்குவதற்கான ஆற்றல் காணப்படுவதுடன் முரண்பாட்டை முடிவுக்கு கொண்டு வருவதற்கான அழுத்தங்களையும் பிரயோகிக்க முடியும். ஊடகமானது முரண்பாட்டுத் தரப்பினது தேவை, விருப்பம், இலக்கு போன்றவற்றை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இரு தரப்பினருக்கும் கற்பிப்பதால் இரு தரப்பினருக்குமிடையே சுமுகமான நிலையொன்றை உண்டுபண்ண முடியும். இதனூடே தீங்குகள், கசப்புணர்வுகள், இறுக்கமான மனநிலை, தப்பபிப்ராயம் போன்றவற்றை இழிவளவாக்கலாம். முரண்பாட்டு தீர்ப்பில் முரண்பாடு கல்வி என்பது பிரதானமானதாகக் காணப்படுகின்றது. Capital to capital என்றழைக்கப்படும் ஒளிபரப்பு 1986 இவ்வாறான பணியை அமெரிக்காவிற்கும் சோவியத் ரஷ்யாவிற்கும் இடையே மேற்கொண்டது. இரு நாடுகளதும் சட்ட வரைவாளர்களை நேரடியான நிகழ்ச்சியொன்றுக்கு வரவழைத்து பேச்சுவார்த்தை மேற்கொள்வதற்கான சூழ்நிலையை உண்டுபண்ணியது.

முரண்பாட்டுத் தரப்பு, முரண்பாட்டு தீர்வு தொடர்பான வளங்கள், வெற்றிகரமான முரண்பாட்டுத் தீர்வு தொடர்பான விடய ஆய்வு (Case Studies) போன்றவற்றைக் கற்பிக்கலாம். The Voice Of American Radio இவ்வாறான அணுகுமுறையை மேற்கொண்டது. முரண்பாட்டுத் தரப்புகட்கிடையேயான அதிகாரச் சமநிலையைப் பேண உதவுகின்றது. இவ்வாறான வகிபங்கினை ஊடகங்கள் ஆற்றினாலும் பெரும்பாலான நாடுகள் தான் சார்ந்த அபிப்பிராயத்தை கட்டமைக்க ஊடகங்களினை ஆயுதமாகப் பயன்படுத்துகின்றன. பொதுவாக அமெரிக்கா மற்றும் இஸ்ரேலின் ஊடகங்கள் இரத்தத்தைப் பானமாகவும் ஓலத்தை ஸ்ருதியாகவும் சித்தரிக்கின்றன. மேலைத்தேய மேட்டிமைகளின் உள்வீட்டு விடயங்களை ஊதிப்பெருப்பிக்கின்ற பணிகளோடு, தான் கருத்தியலை உலகறியச் செய்யும் பணிகளையுமே மேற்கொள்கின்றன. இவ்வாறான நிலைமையில் ஊடகங்கள் முரண்பாட்டை தணிக்க எத்தனியாது ஒரு பக்கம் சார்ந்து செயற்படுகின்ற நிலைமையைக் காணலாம். நடுநிலையான ஊடகங்களினூடு மட்டுமே முரண்பாட்டினைத் தீர்க்கும் மத்தியஸ்தராகச் செயற்பட முடியும் என்பது இதிலிருந்து புலப்படுகின்றது.

**உசாத்துணைகள்**


Cees .J Hamelink, 2011: *Media and Conflict: Escalating Evil*, paradigm Publishers

Hauss, Charles 2001: *International Conflict Resolution*, London: The Tower Building

Uyangoda, Jayadewa and N. Selvakumaran 2000: *"Defining Negotiation" in Conflict Resolution and Peace Studies*: an Introductory Handbook, University of Colombo: Centre for Policy Research and Analysis.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பகவத் கீதையில் தத்துவ சிந்தனைகள்

நா. வாமன்,
உதவி விரிவுரையாளர்,
தமிழ்த்துறை,
கலைப்பீடம்.

இந்து சமயத்தின் முதன்மையான நூல்களின் வரிசையிலே உபநிடதம், பிரம்மசூத்திரம் என்பவற்றோடு சமமாக வைத்துப் பேசப்படும் சிறப்புடைய நூல் பகவத் கீதை. உபநிடதங்களின் சாரமாகவே பகவத் கீதை அமைந்துள்ளது. 'உபநிடதங்களைப் பசு என வைத்துக் கொண்டால் பகவத் கீதை அதிலிருந்து பெறப்பட்ட பால்' எனக் கூறி அறிஞர்கள் இந்நூலைச் சிறப்பிப்பர். இதன் காரணமாகவே பகவத் கீதையை **'கீதோபநிஷத்'** என அழைக்கும் வழக்கமும் உருவானது.

இப்பெருமைக்குரிய பகவத் கீதை மகாபாரதத்திலே பீஷ்ம பருவத்தில் 18 அத்தியாயங்களையும் (25ஆம் அத்தியாயத்திலிருந்து 42ஆம் அத்தியாயம் வரை) 700 சுலோகங்களையும் உள்ளடக்கியதாக அமைக்கப்பட்டுள்ளது. குருஷேத்திரப் போர்க்களத்தில் பாண்டவருள் ஒருவனாகிய அர்ச்சுனன் போருக்கு குன்றிச் சோகமுற்ற சந்தர்ப்பத்தில் அவனது தேரின் சாரதியாகத் திகழ்ந்த ஸ்ரீ கிருஷ்ணன் அவனுக்கு மனத் தெளிவையும் போருக்கத்தையும் ஊட்டும் வகையில் நிகழ்த்திய உபதேசம் இது. மனித வாழ்விற்கு இன்றியமையாத மகத்தான உண்மைகளை, அர்ச்சுனனை ஒரு கருவியாக வைத்துக் கொண்டு பகவான் கிருஷ்ணர் கீதையில் உலகம் முழுவதற்கும் கூறுகின்றார். ஸ்ரீ கிருஷ்ணனாகிய பகவானின் வாய்மொழி என்ற பொருளில் இது **'பகவத் கீதை'** எனப் பெயர் பெற்றது.

பகவத் கீதை தோற்றம் பெற்ற காலப்பகுதியினைத் திட்டவட்டமாகக் கூற முடியாதுள்ளது. பல ஆண்டு காலம் வளர்ந்து விரிவு எய்தி வந்துள்ள மகாபாரதத்திலே ஒரு குறிப்பிட்ட காலப்பகுதியில் புகுத்தப்பட்ட போதனைப் பகுதி இது என்று ஆய்வாளர்கள் சிலர் கருதுகின்றனர். இதன்படி, கி.மு. 4 - கி.பி. 4 ஆம் நூற்றாண்டுகளுக்கிடையில் வளர்ந்து விரிவு எய்திய மகாபாரதத்தில் கீதை கி.மு. 2 - கி.பி. 3 ஆம் நூற்றாண்டுகட்கு இடைப்பட்ட காலப்பகுதியில் இடம்பெறத் தொடங்கியிருக்கலாம் என்பது அவர்கள் தரும் கருத்தாகும்.

ஆயினும் கீதையின் நான்காம் அத்தியாயத்திலே கிருஷ்ணர் அர்ச்சுனனுக்கு உபதேசிக்கும் பகுதியில், பகவத் கீதை அவனுக்கு முன்பே உபதேசிக்கப்பட்டிருந்த செய்தியை அறிய முடிகிறது. பகவத் கீதை என்ற இந்த யோக முறை முதலில் சூரியதேவனுக்குச் சொல்லப்பட்டதாகவும், சூரியதேவன் அதை மனுவுக்கும் மனு இஷ்வாகுவுக்கும் விளக்கியதாக அர்ச்சுனனிடம் பகவான் கூறுகிறார். இவ்விதமாக, ஒருவர் பின் ஒருவராக சீடப் பரம்பரையில் இந்த யோக முறை வந்து கொண்டிருந்தது. காலப் போக்கில் மறைந்து விட்டதால் குருஷேத்திரப் போர்க்களத்தில் அர்ச்சுனனுக்கு உபதேசிக்கப்பட்டதாகவும் அவர் கூறுகிறார். எனவே பகவத் கீதை மேலே அறிஞர்கள் குறிப்பிட்ட காலப்பகுதிக்கு முன்னரே தோற்றம் பெற்றிருக்கலாம்.

பகவத் கீதையில் ஈஸ்வரன் (கடவுள்), உலகம், ஆத்மா, கர்மா (செயல்) முதலான முக்கிய விடயங்கள் தெளிவாகவும் முழுமையாகவும் விளக்கப்பட்டுள்ளன.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கடவுட் கோட்பாடு

கீதையில் கடவுட்கொள்கை இரண்டு வகையாகக் குறிப்பிடப்படுகின்றது. ஒன்று புலனாகாதது (நிஷ்பிரபஞ்சம்) இன்னொன்று புலனாகக் கூடிய வடிவமுடையது (சப்பிரபஞ்சம்). இந்த உலகனைத்தும் பரமாத்மாவின் புலனாகாத வடிவத்தினால் சூழப்பட்டிருப்பதாக குறிப்பிடப்பட்டாலும், கீதையில் தொடக்கம் முதல் கடைசி வரை பரமாத்மா புலனாகக் கூடிய வடிவமுள்ளதாகவே வர்ணிக்கப்படுகிறது. குறிப்பாகப் பதினைந்தாம் அத்தியாயத்தில் பரமாத்மாவின் குணங்கள், மேன்மை ஆகியவை கூறப்பட்டுள்ளன. அந்தப் புலனாகும் வடிவுடைய பரமாத்மாவே கண்ணன்.

இறைவனின் இயல்பினைக் குறிப்பிடுகையில், பரமாத்மா மூல முதற்பொருள் அழியாப் பொருள் அறிபவனாகவும் அறியப்படுபவனாகவும் உள்ளவன்: அனைத்துமானவன் எல்லையற்ற வலிமையுள்ளவன் அனைத்திலும் நிறைந்திருப்பவன் அழிவற்ற பரமாத்மாவைச் சொற்களால் விளக்க முடியாது எனவும், பரமாத்மா சிந்தனைக்கு அப்பாற்பட்டவர், மாறாதவர், அசையாதவர், உறுதியானவர் எனவும் விளக்கப்படுகிறது.

மேலும், எல்லா உலகுக்கும் தோற்றுவாயாகவும், ஒடுங்கும் இடமாகவும் உள்ளவன் பரமாத்மாவே. முக்குணங்களிலிருந்து தோன்றிய அனைத்துப் பொருட்களும் பரமாத்மாவிடமிருந்து தோன்றியவையே. அகிம்சை, நடுநிலைமை, மனநிறைவு, ஈகை, புகழ்ச்சி, இகழ்ச்சி ஆகிய மனப்பாங்குகள் பரமாத்மாவிடமிருந்தே தோன்றுகின்றன எனவும் அதன் இயல்புகள் வர்ணிக்கப்படுகின்றன.

பரமாத்மாவைக் காட்டிலும் மேலானது ஒன்றுமில்லை. இவ்வுலகம் அனைத்தும் நூலில் கோர்க்கப்பட்ட மணிகள் போல பரமாத்மாவுடன் கோர்க்கப்பட்டுள்ளன. மண்ணில் மணமாகவும், நீரில் சுவையாகவும், நெருப்பில் சுடராகவும், வானில் ஒலியாகவும், சூரிய சந்திரன்களில் ஒளியாகவும், எல்லா உயிரினங்களின் உயிர்ப்பாகவும், அறிஞர்களின் அறிவாகவும், தவமாற்றுவோரின் தவமாகவும் இப்படி எல்லாமாகவும் இருப்பது பரமாத்மாவே என இறைவனின் சர்வ வியாபகத் தன்மை எடுத்துக்காட்டப்படுகிறது.

## உலகம்

உலகின் தோற்றத்திற்கு இறைவனே காரணம் என்று குறிப்பிடப்படுகிறது. பௌதிக இயற்கையின் பிரபஞ்ச விவகாரங்களில் பகவானுக்கு உயர் அதிகாரம் உண்டு. பௌதிக இயற்கை சுதந்திரமானதல்ல, முழுமுதற் கடவுளின் ஆணைகளுக்கிணங்கியே அவள் செயற்படுகிறாள். பகவான் கிருஷ்ணர் கூறுகிறார், '**மயாத் யக்ஷேண ப்ரக்ருதி: ஸூயதே ஸ – சராசரம்**'–அதாவது, 'இப்பௌதிக இயற்கை என் கண்காணிப்பின் கீழ் இயங்குகின்றது.'

## ஆன்மக் கோட்பாடு

ஆத்மாவைக் குறிக்கப் புருஷன், க்ஷேத்ரக்ஞன், ஸ்திதம் போன்ற சொற்களும் பகவத்கீதையில் கையாளப்படுகின்றன. ஆத்மா காணப்படும் பொருளோ, அறியப்படும் பொருளோ அல்ல அது காண்பது, அறிவது. புலன்களாலோ, அறிவாலோ, எண்ணத்தாலோ அதைப் பார்க்கவோ, அறியவோ, உணரவோ முடியாது. அதனால் தான் ஆத்மா புலன்கள், மனம், அறிவு ஆகிய எல்லாவற்றிற்கும் மேலானது என்று கூறப்படுகிறது.

ஆன்மாவின் இயல்புகள் பற்றிக் குறிப்பிடுகையில் ஆன்மா அழியாதது, இதற்கு அழிவை ஏற்படுத்தும் ஆற்றல் எவனுக்குமில்லை, மாறாத தன்மையுடையது, என்றுமுள்ளது, அளவுகளையெல்லாம் கடந்தது, இது பிறவாதது, இறவாதது, ஆயுதங்கள் இந்த ஆன்மாவை வெட்டமாட்டா, நெருப்பு எரிக்காது,


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீர் நனைக்காது, காற்று உலர்த்தாது, அது புலன்களுக்கு எட்டாதது, மனதுக்கும் எட்டாதது எனப் பலவாறு விளக்கப்படுகிறது.

போர்க்களத்தில் உறவினர்கள், ஆசிரியர்கள் போன்றோரை அழிக்கவேண்டியிருக்கிறதே என்று அர்ச்சுனன் மனங் கலங்கிய போது கிருஷ்ணர் கூறுகிறார்,

**ந த்வேவாஹம் ஜாது நாஸம் ந த்வம் நேமே ஜனாதிபா:**
**ந சைவ ந பவிஷ்யாம: ஸர்வே வய-மத: பரம் (1:12)**

அதாவது, "நான் ஒருபோதும் இல்லாமல் இருந்ததில்லை. அவ்வாறே நீயும் ஒருபோதும் இல்லாமல் இருந்ததில்லை. இனிமேலும் நாமும் போரிடத் திரண்டிருக்கும் இந்த அரசர்கள் யாவரும் இல்லாமல் போவோம் என்பதும் இல்லை" ஆகையினால் வில்லேந்திப் போர் செய்து உன் கடமையைச் செய் என்கிறார். மேலும், "எவன் இந்த ஆன்மாவைக் கொல்பவனாக உணர்கிறானோ, எவன் இந்த ஆன்மாவைக் கொல்லப்படுபவனாக உணர்கிறானோ, இவர்கள் இருவருமே உண்மையை அறிந்தவர்கள் அல்லர். இந்த ஆத்மா கொல்வதுமில்லை எவராலும் கொல்லப்படுவதுமில்லை" எனவும் ஆத்மா பற்றி விளக்குவதைக் காணலாம்.

## கர்மக் கோட்பாடு

இறைவழிபாடு, தவம், வேள்வி, தீர்த்தயாத்திரை, தானம் முதலிய செயல்களில் பயன் கருதாது ஈடுபடுவதே கர்மக் கோட்பாடாகும். கர்மத்தினால் உண்டாகும் பயனைத் தியாகம் செய்து பிறப்பு என்ற பந்தத்திலிருந்து விடுபடவேண்டும். கர்மத்தின் பயனைச் சார்ந்திராமல் செய்யவேண்டிய கர்மத்தைச் செய்கிறவன் யோகியாக மதிக்கப்படுவான் என்று கீதை கூறுகிறது.

பயன் கருதிச் செயலைச் செய்யாதே என்றால் ஈடுபாடின்றி, நோக்கம் எதுவுமின்றி ஏதோ செய்து முடிக்கவேண்டும் என்ற மனப்பாங்குடன் செய்தல் என்பதல்ல பொருள். இதனால் புகழ் கிடைக்குமா, சிறப்புக் கிடைக்குமா என்று எதிர்பாராமல் செய்வது தான் பயன் கருதாது செய்யும் செயலாகும்.

செயல்களை எப்படிச் செய்யவேண்டும் என்பது பற்றியும் கீதையில் கூறப்பட்டுள்ளது. சாத்திரங்களில் சொல்லப்பட்டுள்ள அவரவர்க்கான செயல்களை 'நான் செய்பவன்' என்னும் அகந்தையை ஒழித்து, பொறாமையை விடுத்து, பயன்மீது பற்றின்றி, விருப்பு வெறுப்புக்களை நீக்கி, சமநிலையில் நின்று, எதையும் சாராமல், எதையும் எதிர்பாராமல், மனத்தூய்மையுடனும், ஆர்வத்துடனும், ஈடுபாட்டுடனும், ஆத்மாக்கள் எல்லாம் ஒன்று என்றெண்ணி, தனக்கென எதையும் வைத்துக் கொள்ளாமல் செயல் புரிய வேண்டும் என்கிறது.

கர்மத்தின் பலனைத் துறத்தலால், சகல காரியங்களையும் கிருஷ்ணனுடைய திருவடிகளில் சமர்ப்பிப்பதால், அதாவது, மனம், வாக்கு, காயம் மூன்றையும் ஈசுவரனிடத்தில் ஹோமம் செய்வதால், ஆத்ம நிலை எய்தலாம் என்று குறிப்பிடப்படுகிறது.

## மறுபிறப்புக் கோட்பாடு

அருச்சுனன் எதிரணியினர் மீது அம்பு விட மறுத்தபொழுது பிறவி பற்றிய விளக்கம் கிருஷ்ணனால் கூறப்படுகிறது. சான்றோர்கள் உயிர் போனவர்களுக்காகவும் உயிர் போகாதவர்களுக்காகவும் வருந்துவதில்லை. நீயும் இருந்ததில்லை. இந்த அரசர்களும் இருந்ததில்லை. நீ ஏன் வருந்துகிறாய் என்று கூறி பிறவியின் தத்துவத்தைப் பின்வருமாறு விளக்குகிறார். "எப்படி மனிதன் நைந்துபோன ஆடைகளை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வீசியெறிந்து விட்டு, வேறு புதிய ஆடைகளை அணிந்து கொள்கிறானோ, அது போல உடலுக்குள் இருக்கும் ஆத்மாவும் நைந்துபோன உடல்களை வீசியெறிந்து விட்டு வேறு புதியனவற்றை அடைகிறது.''

தொடர்ந்து இது பற்றிக் குறிப்பிடுகையில் "உடம்பில் குடியிருக்கும் ஆத்மாவிற்கு இந்த உடலில் குழந்தைப் பருவம், இளமைப் பருவம் ஆகியன எப்படி உண்டாகின்றனவோ, அப்படியே வேறு உடம்பை அடைவதும் (இயல்பாகவே) உண்டாகிறது. தீரன் அதைக் கண்டு மயங்குவதில்லை'' எனவும் உபதேசிக்கின்றார். அதாவது, எமது உடம்பில் இளமை, முதுமை என்பன எவ்வாறு மாற்றத்தை ஏற்படுத்துகிறதோ அது போன்று மரணம் என்பது வெறும் உடம்பு மாற்றமே என்பதை இதன் மூலம் புரிந்து கொள்ள முடிகின்றது.

மேலும், ''எவ்வாறு மலர்களிலிருந்து காற்று நறுமணத்தை எடுத்துச் செல்கிறதோ அவ்வாறே ஆத்மா ஒரு உடலை அடையும்போதும், அந்த உடலை விடும்போதும் மனம் உள்ளிட்ட ஆறு புலன்களையும் எடுத்துச் செல்கிறது'' என்ற கருத்தையும் கீதை வலியுறுத்துவதைக் காணலாம்.

### வீடுபேற்றுக்கான வழிகள்

ஆன்ம விடுதலைக்கு வழிகாட்டுதலே கீதையின் நோக்கமாகும். இதற்கான வழிமுறைகளாக கர்மயோகம், ஞானயோகம், தியானயோகம், பக்தியோகம் என்பன குறிப்பிடப்படுகின்றன. இவற்றில் ஏதாவது ஒரு வழியில் முத்தியை அடையலாம்.

கர்ம யோகத்தில் சமநிலைப் புத்தியுடன், பற்றற்று பயன்கருதாது செயல்களைச் செய்வதன் மூலம் தளைகளிலிருந்து விடுபட்டுப் பரம்பொருளை அடையலாம். ஞான யோகத்தில் மனத் தூய்மையும், தெளிவும் பெற்று, மன அமைதி பெறுவதன் மூலம் பரமாத்மாவை அடையலாம். தியான யோகத்தில் அழியும் தன்மையுள்ள வெளிப் பொருட்களுடனான தொடர்பு அறுந்து பரமாத்மாவைப் பற்றிய நினைப்பாகவே இருப்பதால் அதன் மூலம் பரமாத்மாவை அடையலாம். கர்ம யோகம், ஞான யோகம், தியான யோகம் இவற்றில் எதையும் நிறைவேற்ற முடியாதவர்கள் எளிதான பக்தியோகத்தின் மூலம் விடுதலை பெற்றுப் பரமாத்மாவை அடையலாம்.

### வீடுபேறு

உலகியல் வாழ்க்கையை வாழ்ந்து கொண்டிருக்கின்ற ஜீவாத்மா அதனின்றும் விடுபட்டுச் ஸ்ரீ கிருஷ்ண பரமாத்மாவைச் சரணடைதலே வீடுபேறாகும். கீதையின் இறுதி அத்தியாயமான 'மோக்ஷசந்யாஸ யோகம்' இதனைத் தெளிவுபடுத்துகிறது. இவ்வியலின் சாராம்சமாகவும் கீதை முழுவதன் சாராம்சமாகவும் அமையும் கிருஷ்ணரது உபதேசம் வருமாறு:

**ஸர்வ தர்மான் பரித்யஜ்ய மாம் ஏகம் ஷரணம் வ்ரஜ**
**அஹம் த்வாம் ஸர்வ பாபேப் யோ மோக்ஷயிஷ்யாமி மாசுச: (18 : 66)**

''எல்லாவிதமான தருமங்களையும் துறந்து, என்னிடம் மட்டுமே சரணடைவாயாக. உன்னை எல்லாப் பாவ விளைவுகளிலிருந்தும் நான் விடுவிக்கின்றேன், பயப்படாதே.'' இவ்வாறு தன்னிடம் சரணடைபவனது பொறுப்புக்களையெல்லாம் ஏற்பதோடு, அவனது பாவங்களின் விளைவுகளிலிருந்தும் பகவான் அவனுக்கு விடுதலை அளிக்கின்றார்.

**பரமபதம்** என்ற சொல்லாலும் வீடுபேறு குறிப்பிடப்படுகின்றது. எதை அடைந்த பிறகு மறுபடியும் உலகிற்குத் திரும்பி வருவதில்லையோ அந்த நிலையே பரமபதம் எனப்படுகிறது. அதுவே பரமாத்மாவின்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேலான இடமாகும். அழியாத பிரம்மத்திற்கும், மோட்ச நிலைக்கும், ஒப்பற்ற இன்பத்திற்கும் பரமாத்மாவே உறைவிடம். எனவே பரமாத்மாவை அடைந்தவர்கள் மறுபிறவியை அடைவதில்லை.

## நிறைவுரை

கீதை உயர்ந்த ஆன்மீகத் தத்துவங்கள் பொதிந்த நூல். எளிமையான அமைப்பையும் அழகையும் கொண்டது. கருத்தாழம் மிக்கவையாகவும் உட்பொருள் பொதிந்தவையாகவும் உள்ளது. ஒருவர் வாழ்க்கை முழுவதும் படித்துப் பின்பற்றவல்ல ஒரு நூல் என்ற பெருமையினை உடையது. அதனுடைய தெளிவான இலக்கிய நடையும் சொற்களின் பயன்பாட்டிலுள்ள இசையோசையும் கீதையின் கவர்ச்சிக்கு மேலும் அழகூட்டுகிறது. கீதை இந்திய மொழிகள் அனைத்திலும் மொழியாக்கம் செய்யப்பட்டிருப்பதோடு, உலகில் உள்ள நாகரீகமடைந்த மொழிகள் பலவற்றிலும் மொழியாக்கம் செய்யப்பட்டுள்ளது. இதில் வெளிப்படுத்தப்பட்ட தத்துவ சிந்தனைகள் இந்து தத்துவத்தை அறிய விளைபவர்களுக்கு அடிப்படையாக அமைந்துள்ளன. குறிப்பாகக் கீதையில் வலியுறுத்தப்பட்ட தத்துவ சிந்தனைகள் உபநிடதக் கொள்கைகளை பின்பற்றியவையாக அமைவதுடன் பிற்காலத்தில் தோற்றம்பெற்ற மூவகை வேதாந்தங்களுக்கும் அடிப்படையாக அமைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## உசாத்துணை நூல்கள்


பக்தி வேதாந்த சுவாமி பிரபுபாதர், அ.ச. (2008),**'பகவத்கீதை – உண்மையுருவில்'**, சென்னை. பக்திவேதாந்த புத்தக அறக்கட்டளை.

**'பாரதியார் பகவத் கீதை'**, (1977), சென்னை: பூம்புகார் பிரசுரம்.

சுவாமி இராகவேசானந்தர், (1991),**'ஒவ்வொருவருக்கும் பகவத் கீதை'**, ஆர்க்காடு: அன்னை சாரதா பதிப்பகம்.

அரங்கசாமி. இரா. (2004), **பகவத் கீதை: தெளிவை நோக்கி**, சென்னை: காவ்யா.
பிரேம்நாத் பசாஸ், (2004), **இந்திய வரலாற்றில் பகவத் கீதை,** கோயம்புத்தூர்: சூலூர் வெளியீட்டகம்.
ஹிரியண்ணா,எம். (2008), **இந்திய மெய்யியல்**, கொழும்பு: குமரன் புத்தக இல்லம்.

சர்வபள்ளி இராதாகிருஷ்ணன், (1970), **கீழை மேலை நாடுகளின் மெய்ப்பொருள் இயல் வரலாறு**, (தொகுதி-1), இந்தியா: அண்ணாமலைப் பல்கலைக் கழகம்.

சுப்பிரமணியன், நா. (1993) **இந்தியச் சிந்தனை மரபு**, சென்னை: சவுத் ஏசியன் புக்ஸ்.

லக்ஸ்மணன், கி. (2002) **இந்திய தத்துவ ஞானம்**, சென்னை: பழனியப்பா பிரதர்ஸ்.

வரதராஜன், கே. (2003) **இந்திய தத்துவ தரிசனம்,**சென்னை: பாரதி புத்தகாலயம்.

ராகுல் சாங்கிருத்யாயன், (2003), **இந்துத் தத்துவ இயல்.** சென்னை: நியூ செஞ்சுரி புக் ஹவுஸ்.

தேவிபிரசாத் சட்டோபாத்யாயா, (2008), **இந்தியத் தத்துவம் - ஓர் அறிமுகம்**, சென்னை: படைப்பாளிகள் பதிப்பகம்.

சுப்பிரமணியன், நா. (2005),**ஆய்வுகள் பார்வைகள் பதிவுகள்**, தொகுதி-1, சென்னை: சவுத் விஷன்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வட-கிழக்கு மாகாணங்களில் பல்கலைக்கழக அனுமதியின் பின்னணி

ஆசிரியர் (ஆங்கிலத்தில்)

கலாநிதி ரொஷான் ராகல்,
சிரேஷ்ட விரிவுரையாளர்,
கணனிப் பொறியியற் துறை,
பொறியியற் பீடம்.

மொழிபெயர்ப்பு:

அருணன்,
விரிவுரையாளர்,
கணனிப் பொறியியற் துறை,
பொறியியற் பீடம்.

இன்று இலங்கையின் தேசியப் பல்கலைக்கழகங்களிற்கான நுழைவு என்பது மாணவர்களிடையே மிகக்கடினமான போட்டித்தன்மை வாய்ந்ததொரு விடயமாக மாற்றம்பெற்று வருகிறது. கடந்த காலத்தரவுகளின் படி உயர்தரப்பரீட்சைக்கு தோற்றும் மாணவர்களில் பாதிக்கு மேற்பட்டவர்கள் பல்கலைக்கழகங்களிற்குள் நுழையும் அடிப்படைத் தகுதியான உயர்தரப்பரீட்சையில் சித்தியை கொண்டிருப்பினும், இவர்களில் 10% மாணவர்களே பல்கலைக்கழகங்களிற்குள் நுழையும் வாய்ப்பை பெறுகின்றனர். பல்கலைக்கழக மானியங்கள் சபையின் அண்மைய புள்ளிவிபரங்களின் படி 200,000 பரீட்சார்த்திகள் தோற்றும் உயர்தரப்பரீட்சையில் 120,000 மாணவர்கள் பல்கலைக்கழக நுழைவிற்கான அடிப்படைத் தகுதிகளை கொண்டிருப்பினும் 20,000 மாணவர்கள் மட்டுமே உயர் கல்விக்காக பல்கலைக்கழகங்களிற்குள் உள்வாங்கப்படுகின்றனர்.

இது பல்கலைக்கழக நுழைவிற்கான அடிப்படை தகுதிகளை மட்டும் நிறைவு செய்தல் என்பது மாணவர்களின் தேசிய பல்கலைக்கழகங்களிற்கான அனுமதியை உறுதிசெய்யாது என்பதை தெளிவாக புலனாக்குகின்றது. இப்பின்னணியில் கடந்த இருதசாப்தங்களில் நடந்து முடிந்த போரில் மிகவும் பாதிப்புகளை எதிர்கொண்ட வடகிழக்கு மாகாணங்கள் கடந்த காலங்களில் இப்போட்டித்தன்மை வாய்ந்த பரீட்சைகளை எவ்வாறு எதிர்நோக்கினர் என்பதை ஆராய்வதே இவ் ஆய்வின் நோக்கமாகும்.

## பல்கலைக்கழக அனுமதியின் பின்னணி

இலங்கையில் உள்ள அரச உயர்கல்வி நிறுவனங்களினதும் (இவ் ஆய்வு மேற்கொள்ளப்படும் தருணத்தில் பதின்நான்கு பல்கலைக்கழகங்கள், மூன்று வளாகங்கள், ஐந்து நிறுவனங்கள்) அனுமதியானது உயர்கல்வி அமைச்சின் கீழ் இயங்கும் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவால் வகுக்கப்பட்ட கொள்கைகளின் அமைவாகவே நிகழ்கின்றது. இத்தெரிவை, ஒவ்வொரு மாணவனினதும் குறித்த கல்வியாண்டிற்கான கல்விப் பொது தராதர உயர்தரப்பரீட்சைகளின் பெறுபேறுகளே தீர்மானிக்கின்றன. இத்தெரிவிற்கு அடிப்படையாக 1) பட்டப்படிப்பிற்கு அங்கீகரிக்கப்பட்ட அனைத்து பாடங்களிலும் குறைந்த பட்சம் சாதாரண சித்தியான 'S' யையாவது கொண்டிருத்தல் 2) பொது அறிவுப்பரீட்சையில் 30% இற்கு மேற்பட்ட புள்ளியை பெற்றிருத்தல் என்ற இரு தகுதிகளையும் கொண்டிருக்க வேண்டும்

முதற் பகுதியில் குறிப்பிட்டபடி மேற்குறிப்பிட்ட அடிப்படைத் தகுதிகள் மட்டுமே ஓர் மாணவனின் பல்கலைக்கழக நுழைவிற்கு உத்தரவாதம் அளிப்பதில்லை. இத்தகுதிகளை பூர்த்தி செய்வோரில் ஒரு சிறுபகுதியினர் மட்டுமே அரச பல்கலைக்கழகங்களிற்குள் உள்வாங்கப்படுகின்றனர். இத்தொகையானது ஒப்பீட்டளவில் மிகவும் சிறிதாக இருப்பதுடன் கலை தவிர்ந்த அனைத்து பாடப்பிரிவுகளிலும் இரட்டை தகுதிமுறையிலான (திறமையடிப்படை, மாவட்ட அடிப்படை) தெரிவு முறைமையின் அடிப்படையிலேயே மாணவர் தெரிவு மேற்கொள்ளப்படுகின்றது. இதற்கு கலைசார்துறைகள் விதிவிலக்கு. கலைசார் துறைகளில் திறமையடிப்படை தெரிவு மட்டுமே இடம்பெறுகின்றது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தரப்படுத்தலினால் அறிமுகப்படுத்தப்பட்ட இரட்டை தகுதி முறை அடிப்படையிலான தெரிவில் 40% தேசிய ரீதியில் மாணவரின் நிலையடிப்படையிலிருந்தும், 55% தெரிவு 25 மாவட்டங்களினதும் சனத்தொகை விகிதாசாரத்தின் அடிப்படையிலிருந்தும், மீதம் 5% கல்வியில் பின்தங்கிய மாவட்டங்களிற்கிடையிலும் பகிரப்படுகின்றது. தற்போதைய நிலைப்படி வடக்கு கிழக்கை சேர்ந்த 8 மாவட்டங்களுடன் வேறு 8 மாவட்டங்களும் பின்தங்கிய மாவட்டங்களாக இனம்காணப்பட்டுள்ளன.

**ஆய்வின் வரையறை**

இவ்வாய்வானது வடக்கு கிழக்கு மாகாணங்களின் மாவட்டங்களை மட்டும் கருத்தில் கொண்டிருப்பினும் இவ்வாய்விற்காக கருதப்பட்ட காலங்களில் (கல்வியாண்டுகளில்), அம்மாவட்டங்களில் ஏற்பட்ட சனத்தொகை மாற்றங்கள் இங்கு கருத்தில் கொள்ளப்படவில்லை. உதாரணமாக இவ் ஆய்விற்காக தெரிவு செய்யப்பட்ட இரு தசாப்த காலப்பகுதியில், இலங்கையின் வருடாந்த சனத்தொகை வளர்ச்சிவிகிதமானது 1% த்தால் அதிகரித்திருந்த போதும் சில மாவட்டங்களின் சனத்தொகை வளர்ச்சியானது மறைப்பெறுமானத்தில் வீழ்ச்சியையே கொண்டிருந்தது. சனத்தொகை மதிப்பீட்டுத்திணைக்களத்தின் புள்ளிவிபரங்களின்படி யாழ் மாவட்டத்தின் மொத்த சனத்தொகையானது, 1981-2012 இற்கு இடைப்பட்ட காலப்பகுதியில் 730,000 இலிருந்து 580,000 ஆக வீழ்ச்சியை கண்டு -0.74% வளர்ச்சியைக் காட்டியுள்ளது.

இங்கு தரப்பட்டுள்ள வரைபுகளும் அதன் மூலம் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகளுமான தரவுகள் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவால் கடந்தகாலங்களில் வெளியிடப்பட்ட "Statistics on Higher Education in Sri Lanka" மற்றும் "Sri Lanka University Statistics" என்ற புள்ளிவிபரக்கோவைகளில் இருந்தே பெறப்பட்டன. மேற்குறிப்பிட்டபடி கடந்த இரு தசாப்தங்களில் குறிப்பிட்ட சில தெரிந்தெடுக்கப்பட்ட கல்வியாண்டுகளின் பல்கலைக்கழக அனுமதியை அடிப்படையாக கொண்டே இவ்வாய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது. இவ்வாறு தெரிந்தெடுக்கப்பட்ட ஆண்டுகளான 1992/93, 1993/94, 1994/95, 1999/00, 2000/01, 2002/03, 2002/03A, 2003/04, 2006/07, 2007/08 மற்றும் 2009/10 ஆகியன வடகிழக்கில் இடம்பெற்ற சமூக, அரசியல் மாற்றங்களையும், கல்வியில் அதன் தாக்கங்களையும் எடுத்துக்காட்டும் என்ற நம்பிக்கையுடன் தெரியப்பட்டுள்ளன. இவற்றிற்கு மேலதிகமாக இரு தசாப்தங்களிற்கும் அப்பாற்பட்ட 1985/1986 கல்வியாண்டு தரப்படுத்தலிற்கு முற்பட்ட காலத்தை ஒப்பீடும் நோக்குடன் ஏனைய கல்வியாண்டுகளுடன் சேர்க்கப்பட்டுள்ளது.

இவ்வாறு தெரிவுசெய்யப்பட்ட ஆண்டுகளை நோக்குகையில் 1990-1995 வட மாகாணத்தின் பெரும்பகுதி நாட்டின் ஏனைய பகுதிகளில் இருந்து துண்டிக்கப்பட்ட நிலையில் பொதுமக்களும் பாடசாலைகளும் பலத்த பொருளாதார நெருக்கடியின் மத்தியில் இயங்கவேண்டி இருந்த காலப்பகுதியாகும். 1995 இன் யாழ் மாவட்ட இடப்பெயர்வானது பெரும்பாலான பாடசாலைகளை தற்காலிகமாக இயங்கா நிலைக்கு இட்டுச்சென்றதுடன் அவ் இடப்பெயர்வில் வெளியேறிய பெருந்தொகை மக்களில் பலர் வவுனியா, கொழும்பு போன்ற நாட்டின் பல்வேறு பகுதிகளையும், நாட்டிலிருந்து புலம்பெயர்ந்தோர் வெளிநாடுகளையும் தங்கள் நிரந்தர வதிவிடமாக்கிகொண்டனர். இது யாழ்மாவட்டத்தின் சனத்தொகையில் பெரும் வீழ்ச்சியை ஏற்படுத்தியது. 2000ம் ஆண்டு காலப்பகுதி தென்மராட்சி வலய (யாழ் மாவட்டத்தின் ஒரு பகுதி) மக்கள் மீண்டும் ஓர் இடப்பெயர்வை சந்தித்தனர். அக்காலகட்டத்தின் அசாதாரண நிகழ்வுகள் யாழ் மாவட்டத்தில் ஊரடங்கு மற்றும் போர் பதற்ற நிலைகளை தோற்றுவித்ததோடு வடக்கு கிழக்கை பாரிய பொருளாதார நெருக்கடிக்குள் தள்ளியது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு தசாப்தகால பிரிவின் பின் 2002 அளவில் இருதரப்பு புரிந்துணர்வு சமாதன உடன்படிக்கையானது மீண்டும் வடக்கு கிழக்கை ஏனைய இலங்கையின் பகுதிகளுடன் இணைய வைத்தது. எனினும் இது 2006 இன் பின் நீடிக்கவில்லை. 2006-2009 இற்கு இடைப்பட்ட காலப்பகுதியில் வடக்கு கிழக்கு மீண்டும் பாரிய போரை எதிர்கொண்டது. இது மீண்டும் வடபகுதியை இலங்கையின் பகுதிகளில் இருந்து துண்டித்தது. 2009இற்கு பிற்பகுதி யுத்தம் நிறைவிற்கு வந்திருப்பினும் கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களில் இருந்து வெளியேறிய மக்கள் 2010 அளவில் கூட மீளக்குடியமர்த்தப்படாத நிலையே தொடர்ந்தது.


பகுதி 2 இல் குறிப்பிட்டது போல் 55%மான மாவட்ட அடிப்படைத்தெரிவும் 5%மான விசேட ஒதுக்கீடும் மாவட்டங்களின் சனத்தொகை விகிதாசாரத்திலேயே தங்கியுள்ளது. இவ்வாய்வில் சனத்தொகை மாற்றம் கருத்தில் எடுக்கப்படாததாலும் மேற்குறித்த இரு முறைகளும் மாணவரது திறமையை அளவிடுதலிற்கு சரியான அளவுகோலாக அமையாத காரணத்தாலும், இவ்வாய்வில் பல்கலைக்கழகங்களிற்கு திறமையடிப்படையில் தெரிவு செய்யப்பட்ட மாணவர்களின் எண்ணிக்கையை மட்டுமே கருத்தில் கொண்டுள்ளோம்.

**ஆய்வும் முடிவும்**

இப்பகுதி (1) மாவட்டங்களில் திறமையடிப்படையில் பல்கலைக்கழகங்களிற்கு தெரியப்படும் மாணவர்களின் எண்ணிக்கைக்கும், அதே பாடப்பிரிவில் நாடளாவிய ரீதியில் திறமையடிப்படையில் தெரிவுசெய்யப்படும் மாணவர்களிற்கும் இடையிலான விகிதத்தை அறிக்கைப்படுத்துவதுடன் (2) அத்தரவுகளை ஆராய்வதன் மூலம் அதில் காணப்படும் கோலங்களை இனம் கண்டு அதற்கான காரணங்களாக கருதக்கூடியவற்றையும் அறிக்கைப்படுத்தியுள்ளோம். இவ்வாய்வின் சுருக்கத்தை கருத்தில் கொண்டு, 4 பிரபல பாடப்பிரிவுகளாக கருதப்படும் பட்டப்படிப்புகளான கலை (கலைப்பிரிவு), பொறியியல் (பௌதீக விஞ்ஞானப்பிரிவு), முகாமைத்துவம் (வர்த்தகப்பிரிவு), மருத்துவம் (உயிரியல்பிரிவு) என்பவற்றிற்கு தெரிவாகும் மாணவர்களின் புள்ளிவிபரங்களை மட்டும் அறிக்கைப்படுத்தி உள்ளோம்.

மேலதிகமாக சுருக்கத்திற்காகவும் தெளிவாக கோலங்களை இனங்காண்பதற்காகவும் சில மாவட்டங்களை குழுக்களாக ஒன்றிணைத்து தரவுகளை (1) யாழ் மாவட்டம்,(2) கிளிநொச்சி, முல்லைத்தீவு மற்றும் மன்னார் மாவட்டங்கள், (3) வவுனியா மாவட்டம், (4)அம்பாறை மட்டக்களப்பு மற்றும் திருகோணமலை ஆகிய நான்கு பிராந்தியங்களாக வகைப்படுத்தியுள்ளோம்.

**யாழ் மாவட்டம்**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ் உபபிரிவில் யாழ் மாவட்டத்திலிருந்து திறமையடிப்படையில் தெரியப்படுபவர்களை பற்றிய தரவுகளை உற்று நோக்கின், உரு (1) வெவ்வேறு பாடத்துறைகளில் யாழ்மாவட்டத்தில் இருந்து பல்கலைக்கழகத்திற்கு திறமையடிப்படையில் உள்வாங்கப்பட்டவர்களிற்கும், நாடளாவிய ரீதியில் திறமையடிப்படையில் உள்வாங்கப்பட்டவர்களிற்கும், இடையிலான சதவிகிதம் வெவ்வேறு கல்வியாண்டுகளுடன் ஒப்பிட்டு காட்டுகின்றது. பாடத்துறைகள் இவ்வரைபுகள் கலை, பொறியியல், முகாமைத்துவம், மருத்துவம் என தலைப்புகளின் கீழ் வகைப்படுத்தப்பட்டுள்ளன.

யாழ்மாவட்டம் தேசிய நிலையில் திறமையடிப்படையிலான மாணவர் தெரிவில் செய்யும் பாரிய பங்கை உரு 1 காட்டுகிறது. தரப்படுத்தலிற்கு முற்பட்ட காலமான 1985/86 கல்வியாண்டில் மருத்துவத்திற்கும் பொறியியலிற்கும் நாடளாவிய ரீதியில் திறமையடிப்படையில் தெரிவானோரில் கால் பங்கிற்கு மேற்பட்டோர் யாழ்மாவட்டத்தில் இருந்தே தெரிவாகினர் (பொறியியல் 32.5%, மருத்துவம் 27.2%). எனினும் அதற்குப் பிற்பட்ட காலத்தில் 1985/86 இல் பெற்ற அத்தொகையை மீண்டும் ஒருபோதும் யாழ்மாவட்டம் அண்மிக்கவில்லை என்பது கவலைக்குரிய ஓர் விடயமாகும்.


இந்நிலையானது பொறியியலை விட மருத்துவத்தில் மிகவும் கவலைக்குரிய நிலைக்கு இட்டுச்சென்றுள்ளது. அத்துடன் முகாமைத்துவம், கலை போன்ற ஏனைய பாடத்துறைகளிலும் 1985/86 களில் இருந்த உள்வாங்கும் விகிதம் அதற்குப் பிற்பட்ட காலப்பகுதிகளில் பெறப்படவில்லை. இங்கு குறிப்பிடத்தக்க இன்னோர் விடயம் யாதெனில் 2002/03 காலப்பகுதியும் பிற்பட்ட காலப்பகுதியும் கலை, பொறியியல், முகாமைத்துவம் போன்ற பெரும்பாலான பாடத்துறைகளில் ஓர் சடுதியான வீழ்ச்சியை காட்டியுள்ளது. எனினும் 1985/86 களில் 27% இலிருந்த மருத்துவம் இதற்குப் பிற்பட்ட இரு தசாப்தங்களிலும் அண்ணளவாக 5% மாக வீழ்ச்சி கண்டுள்ளது.

இங்கு தரப்பட்ட வரைபுகளை உற்று நோக்கின் பகுதி 3 இல் குறிப்பிட்டவாறு யாழ் மாவட்டம் நாட்டிலிருந்து தனிமையாக்கப்பட்டு பொருளாதார தடைகளையும் ஓர் அமைதியற்ற தன்மையையும் கொண்டிருந்த காலப்பகுதிகளில் பொறியியல் மற்றும் முகாமைத்துவம் போன்ற துறைகளிற்கு திறமையடிப்படையில் உள்வாங்கப்படும் மாணவர் விகிதம் குறிப்பிடத்தக்க அளவில் ஓர் நல்ல நிலையில் இருந்துள்ளமையை காணக்கூடியதாக உள்ளது. இப்போக்கு 1999/00 மற்றும் 2000/01 போன்றகாலப்பகுதிகளிலும் காணக்கூடியதாக உள்ளது.

இருப்பினும் 2002/03, 2002/03, மற்றும் 2003/04 கல்வியாண்டுகளில் நாம் ஆய்விற்கு கருதிய பாடத்துறைகள் அனைத்துக்கும் திறமையடிப்படையில் தெரிவு செய்யப்படுவோர் விகிதம் குறிப்பிடத்தக்களவு வீழ்ச்சியைக்காட்டியுள்ளது. இங்கு வியப்புக்குரிய விடயம் யாதெனில் இக்காலப்பகுதியானது யுத்தம் ஓய்விற்கு வந்து இருதரப்புகளிற்கு இடையிலான சமாதனபேச்சுக்கள் ஆரம்பிக்கப்பட்ட ஓர் காலப்பகுதியாகும். மேலும் வியப்பை அதிகரிக்கும் ஓர் காரணியாக 2006இல் போர் மீண்டும் மூண்டபின் கலை மற்றும் பொறியியல் பிரிவுகளில் திறமையடிப்படை உள்வாங்கும் விகிதம் படிப்படியாக அதிகரிக்க தொடங்கியுள்ளன.

**கிளிநொச்சி, மன்னார், முல்லைத்தீவு மாவட்டங்கள்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




இங்கு தரப்பட்ட வரைபுகள் கிளிநொச்சி, மன்னார், முல்லைத்தீவு மாவட்டங்களிலிருந்து கலை, பொறியியல், முகாமைத்துவம், மருத்துவம் போன்ற துறைகளிற்குள் திறமையடிப்படையில் உள்வாங்கப்பட்டவர்களுக்கும் நாட்டில் மொத்தமாக திறமையடிப்படையில் உள்வாங்கப்பட்டவர்களுக்கும் சதவிகிதங்களைக் காட்டுகின்றது.

உரு (2) இல் காணப்படுகின்றவாறு இம்மாவட்டங்களில் இருந்து பொறியியல் மற்றும் மருத்துவத்திற்கு திறமையடிப்படையில் உள்வாங்கப்பட்ட மாணவர்களின் தொகை புரிந்துணர்வு ஒப்பந்தங்களால் ஏற்பட்ட சமாதான காலப்பகுதியில் (2002-2006) ஓர் முன்னேற்ற நிலையில் இருந்துள்ளது. இதற்கு A9 நெடுஞ்சாலையின் திறப்பும் அதனால் இம்மாவட்ட மாணவர்கள் யாழ்ப்பாணம், வவுனியா போன்ற பிற மாவட்டங்களின் வார இறுதி கற்றல் செயற்பாடுகளில் ஈடுபட ஏதுவாக அமைந்தமையும் ஓர் காரணமாக இருந்திருக்க கூடிய சாத்தியக்கூறுகளும் உள்ளன.

**வவுனியா மாவட்டம்**






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உரு (3) ஆனது, வவுனியா மாவட்டத்தில் இருந்து தேசிய ரீதியான திறமையடிப்படையில் தெரிவானோரின் விகிதங்களை வரைபாக்கியுள்ளது. இம்மாவட்டத்தில் தொண்ணூறு காலப்பகுதியில் ஒரு சில திறமையடிப்படையில் தெரிவானோர் இருந்திருப்பினும் யாழ் மாவட்டத்தின் இடப்பெயர்வும் அதற்குப் பிற்பட்ட காலப்பகுதியிலும் இத்தொகையானது வளர்ச்சிப் போக்கை காட்டியுள்ளது. இங்கு வவுனியாவின் சனத்தொகை வளர்ச்சிவிகிதமானது 1981, 2012 களில் எடுக்கப்பட்ட கணக்கெடுப்புகளின் படி இக்காலகட்டத்தில் நாட்டிலேயே மிகவும் உயர்வான வளர்ச்சி விகிதமான 1.94% மாக இருந்துள்ளதை நாங்கள் குறிப்பிடவேண்டிய கட்டாயம் இங்கு உள்ளது.

**அம்பாறை, மட்டக்களப்பு, திருகோணமலை**




உரு (4) ஆனது அம்பாறை, மட்டக்களப்பும் திருகோணமலை ஆகிய மூன்று மாவட்டங்களில் இருந்தும் தேசியநிலையில் திறமையடிப்படையில் தெரிவில் உள்வாங்கப்பட்ட மாணவர்களினது விகிதங்கள் துறையினடிப்படையில் தரப்பட்டுள்ளது.

**முடிவு**

இலங்கையில் பட்டப்படிப்புகளிற்காக அரச பல்கலைக்கழகங்களிற்குள் நுழைவது என்பது மிகக் கடினமான போட்டித்தன்மை நிறைந்ததொன்றாக காணப்படுகின்ற இவ்வேளையில், இவ்வாய்வு அறிக்கையில் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் இருந்து வெவ்வேறு துறைகளில் திறமையடிப்படையில் தெரிவு செய்யப்பட்ட மாணவர்களிற்கும், அதே துறைகளில் நாடளாவிய ரீதியில் திறமையடிப்படையில் மொத்தமாக தெரிவு செய்யப்பட்டோர்களிற்கும் இடையிலான விகிதத்தையும் அறிக்கைப்படுத்தியுள்ளோம். இவ் ஆய்விற்கு, தற்போது முடிவிற்கு வந்ததாக அறிவிக்கப்பட்ட போரினால் பாதிக்கப்பட்ட கல்வியாண்டுகளே உள்ளடக்கப்பட்டிருப்பினும் இக்கட்டுரையின் சுருக்கத்தை கருத்தில் கொண்டு அக்காலப்பகுதிக்கு உட்பட்ட அனைத்து தரவுகளையும் இங்கு கருத்தில் உள்ளடக்கப்படவில்லை. எனினும் எம் இயலுமைக்கு உட்பட்ட வகையில் யாழ்மாவட்டத்தின் சற்றும் எதிர்பார்த்திருக்காத வியத்தகு முடிவுகளான யுத்தம் அற்ற சமாதானம் என குறிப்பிடப்படும் காலத்தில் வீழ்ச்சியான கல்வித்தரத்தையும், போர், பொருளியல் ரீதியில் கடினத்தன்மை, அமைதியின்மை போன்றன காணப்பட்ட கசப்பான காலப்பகுதியில் முன்னேற்றகரமான கல்வித்தரத்தையும் காட்டும் போக்கை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறியக்கூடியதாக இருந்ததுள்ளது. எனவே இவ்வாய்வுகளின் படி சுதந்திரம், கட்டுப்பாடுகள் அற்றநிலை, புதிய தொழில்நுட்பங்களை அனுபவிப்பதற்கான நிலை என்ற பெயர்களில் மாணவர்களிடையே கட்டவிழ்த்து விடப்பட்ட கவனக்கலைப்பான்களே சமாதான காலப்பகுதியிலும், போரின் பிற்பட்ட காலப்பகுதியிலும் கல்வித்தர வீழ்ச்சிக்கு காரணமாக அமைந்திருக்கலாம் என்பது ஆய்வாளர்களின் நம்பிக்கை.

(இக்கட்டுரையானது Geethavani 2013 (JHC–OBA Sydney) எனும் இணையத்தளத்தில் வெளிவந்தது. அவர்களுக்கு எமது நன்றிகள்)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலத்திரனியல் அரசாங்கமும் அதன் பயன்களும்

## (E-Government and its function)

*D.உமாதேவி,*
*உதவி விரிவுரையாளர்,*
*அரசறிவியற் துறை,*
*கலைப்பீடம்.*

---

அரசாங்கத்தின் கொள்கைகளையும் கருமங்களையும் இலகுபடுத்துவதற்கும் பிரஜைகளை அரசாங்க செயற்பாட்டுக்குள் கொண்டு வருவதற்குமான சிறப்பானதொரு வழிமுறையாக இவ் இலத்திரனியல் அரசாங்கம் என்பது காணப்படுகின்றது. இலத்திரனியல் அரசாங்கத்தின் தேவையானது இன்று அனைத்து அரசுகளிலும் உணரப்பட்டு வரும் ஒன்றாகவும், தொழினுட்பத்துடன் இணைந்த வகையில் அரச துறைகளைப் பயனுறுதி மிக்கதாகவும் வினைத்திறன் மிக்கதாகவும் மாற்றியமைத்துள்ளது. பிரஜைகள் மயப்படுத்திய அரசாங்கத்தை உருவாக்குவதை நோக்கமாகக் கொண்டு இலத்தரனியல் அரசாங்க நுட்பங்கள் இன்று அரசாங்க முறைகளில் மாத்திரமின்றி அனைத்து துறைகளிலும் பின்பற்றப்பட்டு வருகின்றன. அதில் அரசாங்கம், பிரஜைகள், வியாபாரம் மற்றும் தொழிலாளர்கள் போன்ற விடயங்கள் கவனம் கொள்ளப்படுகின்றது. இவை சுருக்கமாக,

- G2C – Government to Citizen
- G2B - Government to Business
- G2E -Government to Employee
- G2G - Government to Government

என்றழைக்கப்படுகின்றது. இவற்றின் அடிப்படையில் இன்று சேவைப் பரிமாற்றம் இடம் பெறுவதனையும் காணமுடிகின்றது. இதனை உலக நாடுகளின் வரிசையில் இலங்கையும் தனது அரசாங்க செயற்பாட்டிற்குள் உள்வாங்கியுள்ளமை மிகமுக்கியமான விடயமாக அமைவதுடன் பயனுள்ள ஓர் செயற்பாடாகவும் அமைந்து வருகின்றது.

### இலத்திரனியல் அரசாங்ககொள்கையின் நோக்கங்கள்

அரசாங்க நிறுவனங்களில் முழுதளவிலான அபிவிருத்தியை அடைந்து கொள்வதற்கும் அரசாங்க சேவைகளை வழங்குவதற்கும் ஏற்ற வகையில் தகவல் தொடர்பாடல் தொழினுட்பத்தை பயன்படுத்தலுமே இக் கொள்கையின் நோக்கமாகும். இலங்கையில் உள்ள அரசாங்க நிறுவனங்களின் மேம்படுத்தப்பட்ட வினைத்திறன் பயனுறுதியூடாக ஒவ்வொரு அரசாங்க நிறுவனத்தினதும் வரவுசெலவுத் திட்டத்தை முன்னெடுத்தல், பிரஜைகள் மற்றும் ஏனைய அரசாங்க நிறுவனங்களுக்கான அரசாங்க சேவைகளின் இலகு தன்மையும் வாய்ப்பும், நல்லாட்சியை ஊக்குவித்தல், அரசாங்க ஊழியர்களிடையே தகவல் தொடர்பாடல் தொழில் திறனை விருத்திசெய்தல், நிலையான அமைப்பில் தகவல் தொடர்பாடல் தொழினுட்ப வளங்களை முகாமை செய்தல் போன்ற பல நோக்கங்களைக் கொண்டு செயற்படுகின்றது.

பொதுமக்கள் மற்றும் ஆர்வமுள்ள தரப்பினரிடம் இருந்து வரைவு ஆவணம் பற்றிய கருத்துக்கள் பெற்றுக் கொள்ளும் வகையில் ஆவணம், செய்திப் பத்திரிகைகளில் விளம்பரங்களாக பிரசுரிக்கப்பட்டது. இதனூடாக பெறப்பட்ட கருத்துக்கள் மூலம் இந்த ஆவணத்தை முழுமைப்படுத்த பயன்படுத்தப்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரசாங்க அமைப்புக்கள்,தனியார் நிறுவனங்கள், பிரஜைகள், அமைப்புக்கள் முதலியவற்றிடம் இருந்து கருத்துக்கள் பெறப்பட்டன. அனைத்து கருத்துக்களையும் ஒன்றிணைத்து ஆவணம் திருத்தப்பட்டு இலத்திரனியல் அரசாங்க கொள்கையாக முன்வைக்கப்பட்டது.

## இலங்கையில் இலத்திரனியல் அரசாங்கத்தினது செயற்பாடு

இலங்கையில் முதன் முதலாக 1983 ம் ஆண்டு தேசியக் கணனிக் கொள்கையூடாக அரசாங்க நிறுவனங்களின் தகவல் தொடர்பாடல் தொழினுட்பத்திறன் அபிவிருத்திக்கான தேவையை இலங்கை அரசாங்கம் உணர்ந்து கொண்டது. இந்த முதல் முயற்சி அப்போதைய ஜனாதிபதியான J.R ஜயவர்தனாவின் அறிவுறுத்தலுக்கு அமைய இயற்கை வளங்கள், சக்தி மற்றும் விஞ்ஞான அதிகார சபையினால் முன்னெடுக்கப்பட்டது. இலங்கை இயற்கை வளசக்தி மற்றும் விஞ்ஞான அதிகார சபையினால் நியமிக்கப்பட்ட ஒரு குழு தேசிய கணனிக் கொள்கைகளை தயாரித்தது.

2003ம் ஆண்டின் 27ம் இலக்க தகவல் தொடர்பாடல் மற்றும் தொழினுட்ப சட்டத்தின் பிரகாரம் 2003 யூலை மாதத்தில் இலங்கை தகவல் தொடர்பாடல் தொழினுட்ப முகவர் நிலையம் தாபிக்கப்பட்டது. இது அரசாங்க மற்றும் தனியார் துறைகள் இரண்டிலும் வியூகங்களையும் நிகழ்ச்சித் திட்டங்களையும் வடிவமைத்து நடைமுறைப்படுத்துவதற்கு அதிகாரம் பெற்றுக் காணப்பட்டது. 2004ம் ஆண்டு மே மாதம் அமைச்சரவை அமைச்சர்கள் **“ ஸ்ரீலங்கா அபிவிருத்திக் கருத்திட்டத்தை”** அரசாங்கத்தின் தேசிய தகவல் தொழிநுட்ப செயற்திட்டமாக கொண்டுவந்தனர்.

2002-2005 காலப்பகுதியில் ஸ்ரீலங்கா அபிவிருத்திக் கருத்திட்டம் இலங்கை சமூகத்தின் அனைத்து தரப்பினருக்கும் தகவல் தொடர்பாடல் தொழினுட்ப நன்மைகளை வழங்குவதை நோக்காகக் கொண்டுள்ளதோடு தேசத்தின் சமூக பொருளாதார அபிவிருத்தியை மேம்படுத்துவதையும் நோக்கமாகக் கொண்டுள்ளது.

2008ம் ஆண்டின் 33ம் இலக்க தகவல் தொழினுட்ப திருத்தச் சட்டத்தை தொடர்ந்து அமைச்சரவை அங்கீகாரத்தை பெறுவதற்காக சமர்ப்பிப்பதற்கான தேசிய தகவல் தொடர்பாடல் தொழினுட்ப கொள்கை சட்டத்தினை வகுப்பதற்கான சிபாரிசுகளை உள்ளக அமைச்சு மட்ட குழுவிற்கு வழங்குவதற்கான அதிகாரமும், தகவல் தொடர்பாடல் முகவர் நிலையத்திற்கு அளிக்கப்பட்டது. இக் கொள்கை 2009ம் ஆண்டு இலங்கையின் பாராளுமன்றத்தினால் ஏற்றுக் கொள்ளப்பட்டதோடு இக் கொள்கையை அமுல் நடத்துமாறு சகல அரசாங்க நிறுவனங்களுக்கும் பணிப்புரை விடுக்கப்பட்டுள்ளது

இலங்கைக்கான இலத்திரனியல் அரசாங்கக் கொள்கைகளை வகுப்பதற்கான முதல் முயற்சி 2004ம் ஆண்டு யூலை மாதத்தில் இலங்கை தகவல் தொடர்பாடல் தொழினுட்ப முகவர் நிலையத்தினால் மேற்கொள்ளப்பட்டது. இதன் முதற்படியாக தகவல் தொடர்பாடல் தொழினுட்ப குழு ஒன்று உருவாக்கப்பட்டது. இதைத் தொடர்ந்து தகவல் தொடர்பாடல் தொழிநுட்ப முகவர் நிலைய மூலக் குழுக்கள் தொழிற்பாட்டுக் குழுக்களின் பங்குதாரர்களை கொண்ட கலந்துரையாடல் ஒன்று இடம் பெற்றது.

2005 பெப்ரவரி மாதம் ஆரம்ப வரைவு முன்வைக்கப்பட்டது. இவ் ஆவணம் சீரமைக்கப்பட்டு 2005-02-10 திகதியன்று மேல் மாகாணத்தில் சுமார் 150 பிரதான புத்தாக்க உத்தியோகத்தர்களுக்கு சமர்ப்பிக்கப்பட்டது. 2008ம் ஆண்டு யூலை மாதம் 27ம் திகதி பிரதான புத்தாக்க உத்தியோகத்தர் குழு, அரச புத்துருவாக்க குழு ஆகியவற்றின் உறுப்பினர்களுக்கு சமர்ப்பிக்கப்பட்டது. பரவலான கருத்து பரிமாற்றத்திற்காக இவ் ஆவணம் www.icta.lkஎன்ற இணையத்தளத்தில் இடப்பட்டது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### இலத்திரனியல் அரசாங்க நுட்பங்களை அமுல் நடத்துவதன் பயன்கள்

இலங்கை அரசாங்கம் இவ் அரசாங்க நுட்பமுறைகளினால் பல பயன்களை அடைந்துள்ளதுடன், இலத்திரனியல் அரசாங்க நுட்பங்களை முழுமையாக அமுல்படுத்துவதன் ஊடாக பின்வரும் பயன்களை எதிர்காலத்தில் அடைந்துகொள்ள திட்டமிட்டுள்ளது. அவற்றை பின்வருமாறு வரிசைப்படுத்தலாம்.

1. **அணுகுகை :-** இணையம் மற்றும் தகவல் தொடர்பாடல் தொழிநுட்ப ஊடகங்களில் தகவல் மற்றும் பிரஜைகள் சேவைகளை பொதுமக்களின் பெரும்பகுதியினருக்கு கிடைக்கச் செய்தல். ஆதலால் வலது குறைந்த நபர்கள் மற்றும் புவிசார் ரீதியில் பல இடங்களிலும் வாழ்பவர்கள் மற்றும் பல இன, மத மொழி மக்கள் ஆகியோருக்கு வேறுபாடின்றி சேவைகளை பெறமுடியும் என எதிர்பார்க்கப்பட்டுள்ளது.
2. **வெளிப்படைத்தன்மை :-**நிறுவனத்தின் ஆணை, தொழிற்பாட்டுத் தன்மை, தீர்மானம் எடுத்தல் செயன்முறைகள் என்பனவற்றை கண்காணிப்பதற்கு பொதுமக்களை அனுமதிப்பதனூடாகவும் அவர்கள் பெறுகின்ற சேவைகளின் வகை மற்றும் தரம் என்பவற்றை தெளிவாக அறிவிப்பதனூடாகவும் தகவல் தொடர்பாடல் தொழிநுட்ப அடிப்படையிலான தீர்வுகளில் வெளிப்படைத் தன்மையை மேம்படுத்த இலத்திரனியல் அரசாங்க மாதிரியினூடாக ஊக்குவித்தல்.
3. **வினைத்திறன் :-**முடியுமானளவு குறைந்த நேரத்தில் பொதுமக்களுக்கான சேவைகளை வழங்குகின்றது. அதேநாளில் சேவை என்ற கோட்பாட்டின் கீழ் காலையில் ஒரு பிரஜையினால் கோரப்பட்ட சேவையொன்று அதே நாளில் மாலைக்கு முன்னர் அவருக்கு கிடைக்கப் பெறச் செய்ய இலங்கை அரசு முயன்று வருகின்றது.
4. **பிரஜைகள் மையப்படுத்தல் :-**தகவல் மற்றும் சேவைகளை வழங்குவதில் அரசாங்க நிறுவனங்கள், மரபுரீதியான மையப்படுத்திய அணுகுமுறைக்கு பதிலாக பிரஜைகள் மையப்படுத்திய அணுகுமுறையொன்றை தாபித்தல் வேண்டும். அவ்வாறு செய்வதற்காக அரசாங்க நிறுவனங்கள் தமது சேவைகளை பிரஜைகள் நட்புக் கொண்டதாக வழங்கக் கூடியதாக இருத்தல் வேண்டும்.
5. **இரகசியத் தன்மை, ஒருங்கிணைப்பு :-**அனைத்து அரசாங்க நிறுவனங்களும் தமது தகவல் இரகசியத் தன்மை, ஒருங்கிணைவு என்பவற்றை பாதுகாத்தல் வேண்டும். இது அரசாங்க தகவல்கள் அனுமதிக்கப்பட்ட நபர்களிடையே அல்லது நிறுவனங்களிடையே மட்டும் பரிமாற்றப்படுகின்றன என்ற உத்தரவாதத்தை பிரஜைகளுக்கு வழங்கவேண்டும்.
6. **வகை கூறும் தகைமை :-** அரசாங்க நிறுவனங்கள் பிரஜைகளுக்கு வழங்கப்படுகின்ற சேவைகளுக்கு பொறுப்பு கூறக்கூடியவர்களாக இருக்க வேண்டும். இதனூடாக அச் சேவைகளின் உபயோகத்தில் மக்களிடம் நம்பிக்கையை வளர்க்க முயற்சி செய்தல்.

மேற்கூறியவாறு பயன்களை எதிர்காலத்தில் இலங்கை மக்களுக்கு இலத்திரனியல் அரசாங்க திட்டத்தினூடாக பெற்றுக் கொடுக்க இலங்கை அரசு திட்டமிட்டுள்ளது. அத்துடன் இலத்திரனியல் அடையாள அட்டை. இலத்திரனியல் வாக்களிப்பு முறைமை மற்றும் போக்குவரத்து முறைமைகளை இலகுபடுத்த இலத்திரனியல் நுட்பங்கள் போன்ற பல செயற்பாடுகள் இன்று மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. எனவே காலத்தின் தேவைக் கருதி இலத்திரனியல் அரசாங்க நுட்பமுறைகளினூடாக மக்களை உலகமயமாக்கல் செயற்பாட்டிற்கு கொண்டு செல்லும் ஓர் செயற்பாடாக அமைகின்றது எனலாம்.

### உசாத்துணை நூல்கள்

Background and challenges of the egovernment : Asian Bank Institute – 2006.

Designing E-Government for the poor: United Nations publications – 2005.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

World Bank Report : World Bank Publcations – 2008

Jayaweera, Administrative Reform : Kala SamajaAdyanaAyathanaya, Colombo – 1996.

வசந்த.தே "இலத்திரனியல் அரசாங்கம் பற்றி ஓர் அறிமுகம்" : கொழும்பு தகவல் தொடர்பாடல் முகவர் நிலையம் - 2010.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கலை மெய்யியல் வரலாற்றில் கலாயோகி ஆனந்த குமாரசுவாமியின் பங்களிப்பு

*A.M.M. பிர்ணாஸ்,*
*உதவி விரிவுரையாளர்,*
*உளவியல் மற்றும் மெய்யியல் துறை,*
*கலைப்பீடம்.*

**P**hilosophy எனும் ஆங்கிலப் பதமானது philo, sopia எனும் இரு சொற்களினால் ஆனதாகும். இவை முறையே நேயம், அறிவு எனும் பொருள்களில் வருகின்றன. எனவே சொல் இலக்கணப்படி மெய்யியல் என்பது அறிவை நேசித்தல் (love of wisdom) எனப்பொருள்படுகின்றது. உண்மையை தேடும் உன்னத முயற்சியே மெய்யியலாகும் என சுருக்கமாகக் குறிப்பிடலாம். மனிதனது கோட்பாடுகள், சிந்தனை, மொழி என்பவற்றில் காணப்படுகின்ற சிக்கல்கள், பிரச்சினைகள் என்பவற்றைத் தீர்த்து வைப்பதே மெய்யியலின் நோக்கமாகும். தமது கருத்தை பகுத்தறிவு ரீதியாக முன்வைப்பதற்கான ஆய்வு முறையியலே இதுவாகும்.

இத்தகைய மெய்யியலின் வரலாறு அனைத்துத் துறைகளையும் உள்ளடக்கியதாக பெரும் சிந்தனையாளர்களின் சிந்தனைக் கற்களைக் கொண்டு இன்றுவரை கட்டியெழுப்பப்பட்டு வருகின்றது. இச்சிந்தனையாளர்களுக்கு அழகியல் துறையும் விதிவிலக்காக இருக்கவில்லை. அழகியல் பற்றிய ஆய்வுகளிலும் அவர்களின் சிந்தனை இழையோடியுள்ளது. இதற்கு எடுத்துக்காட்டாக கிரேக்க மெய்யியல் வரலாற்றிலே கிரேக்க மொழியில் அழகியல் பற்றிய சொல் விளக்கம் "அழகு என்பது புலக்காட்சியைக் குறிப்பிடும்" என்ற வகையில் அமைந்துள்ளது. கிரேக்க தத்துவஞானியாகிய *பிளேட்டோ* "மனிதனால் ஆக்கப்பட்டு ரசனையினை வேண்டி நிற்கின்ற நுண்கலைப் பொருட்களே கலையாகும்" எனக் குறிப்பிடுகின்ற சிந்தனையானது கிரேக்கர் காலத்திலிருந்து அழகியல் ஆய்வுகள் இடம்பெற்று வருவதையே காட்டுகின்றது.

## கலை / இரசனையியல் பற்றிய அறிமுகம்.

அழகின் இயல்பு அழகின் பெறுமானம் என்பன பற்றி ஆராயும் ஒரு மெய்யியல் பிரிவே அழகியல் ஆகும். இது விழுமியங்கள் சார்ந்த ஒரு துறையாக இனங்காணப்படுகின்றது. ஒன்றில் அழகியல் அல்லது இரசனையியலைக் குறிக்கும் Aesthetics என்ற ஆங்கிலச் சொல் உணர்ச்சி, புலன்களின் வாயிலாக உணரும் திறன் என்ற பொருளுடைய "Aiesthetikos" எனும் கிரேக்கச் சொல்லிலிருந்து தோற்றம் பெற்றுள்ளது. கலை பற்றிய மெய்யியல் ஆய்வுக்கு நீண்டகால வரலாறு இருப்பினும் 19ம் நூற்றாண்டில்தான் அழகியலைக் குறிக்கும் ஏஸ்தேற்றிக்ஸ் எனும் சொல்லானது முதன்முதலாக அலெக்சான்டர் பாம்கார்டன் (1714-1762) எனும் ஜேர்மன் மெய்யியலாளரால் ஒரு குறிப்பிட்ட துறையைக் குறிக்கும் வகையில் அறிமுகப்படுத்தப்பட்டது. இச்சொல் கலைப்பற்றிய எல்லா மெய்யியல் பிரச்சினைகளையும் உள்ளடக்குகின்றது. அதிலும் கலைப்படைப்புகளுடன் தொடர்புப்பட்ட பிரச்சினைகளை ஆய்வுக்கு எடுத்துக்கொள்கிறது என்பர்.

அழகு அல்லது கலை என்றால் என்ன? கலைப்படைப்புக்கள் எதனால் நுகரப்படுகின்றன? கலைப் படைப்புக்கள் எத்தகையதாய் இருத்தல் வேண்டும்? கலைப் படைப்புக்களிடையே பொதுப்படையானவை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்று சொல்லும் வகையில் பண்புகளேதும் உண்டா? அழகியல் தீர்ப்புக்களின் அளவு கோல்கள் யாவை? இறுதியாக ஒரு கலைப்படைப்பு நல்லதெனக்காட்டுவது, தருவது எது? இவை கலைப்படைப்புகள் பற்றி அழகியலில் எழுப்பும் பிரதான கேள்விகளாகும். இக்கேள்விகளுக்கு பதில் தரும் வகையில் கலை மெய்யியலில் பல கருத்துக்களும் கோட்பாடுகளும் முன்வைக்கப்பட்டுள்ளன.

இவ்வகையில் அழகியல் பற்றிய ஆய்வுகள் மேற்கிலும் கிழக்கிலும் மிகப் பழைமை வாய்ந்த ஓர் ஆய்வுத் துறையாக அமைந்துள்ளதை அறியலாம். மேற்கில் சோக்கிரட்டீஸ், பிளேட்டோ மற்றும் அரிஸ்டோட்டிலினது ஆய்வுகள் கலை மெய்யியலிலும் அழகியலிலும் முன்னோடியாக உள்ளன. இவ்வாறே கிழக்கு மரபிலும் இத்துறை மிகப் பழைமை வாய்ந்தது என்பதை ஆனந்தகுமாரசுவாமி மற்றும் ரவீந்திரனாத் தாகூர் போன்றவர்களின் ஆய்வறிவுகளில் இருந்தும் அறிய முடிகின்றது.

பொதுவாக கலையைப் பற்றி நாம் உரையாடும் போது கலையைப் பற்றி நாம் எதை நினைக்கின்றோம் என்பதை தெளிவாகப் புரிய வேண்டும். *மனிதன் தனது அக அநுபவத்தினை குறியீடுகள் மூலம் வெளியிடுவதே* கலை எனலாம். இக்குறியீடுகள் ஒலிகளாக இருக்கலாம். அதாவது இசை, வாய்மொழி இலக்கியம் அல்லது எழுதப்படாத அடையாளங்கள் அதிலும் குறிப்பாக வரை கோடுகளாக இருக்கலாம். அல்லது வண்ணங்களாக (ஓவியம்) இருக்கலாம். அல்லது சிற்பங்களாக இருக்கலாம். சில மெய்யியலாளர்களின் கருத்தின்படி கலை ஒரு பிரதிநிதித்துவப் பண்பைக் கொண்டுள்ள வெளிப்பாடாகும். சில நவீன மெய்யியளாளர்களின் கருத்தின்படி கலை ஒரு தூய வடிவமாகும். கலையின் அழகு என்பது அந்த தூய வடிவத்தில் தங்கியுள்ளது என்பர். இப்பின்னணியில் சில மெய்யியளாளர்களின் கருத்தை நோக்குவோம்.

**பிளேட்டோ :-** தனது "குடியரசு" எனும் நூலில் கலை என்பது ஒரு வகைக் கைவினைத்திறன் என்றார். அதாவது கலை என்பது ஒன்றை திறமையாகச் செய்வது என்றும் அது இயற்கையான விருப்பார்வத்தினால் தோற்றம் பெறுவது என்றும் கூறிய பிளேட்டோ கலை பிரதிகளின் பிரதி என்றும் வரையறுத்தார்.

**அரிஸ்டோட்டில் :-** பிளேட்டோ கலையை பிரதிகளின் பிரதி என்று கூற அரிஸ்டோட்டில் உண்மைகளின் பிரதி என்றார். கருத்துலகப் பொருட்களையே கலைஞன் படைக்கின்றான் என்பதை உண்மையின் பிரதிகள் வெளிப்படுத்துகின்றன. தோற்றப்பாட்டுலகம் சார்ந்த பௌதீகப் பொருட்களின் பிரதியை பிரதிபன்னுவதல்ல கலை, என்பதே அரிஸ்டோட்டிலின் கருத்தின் சாரமாகும்.

**ஹெகல் :-** ஆழமான ஆன்மீகத்தின் வெளிப்பாடாக கலை அமைகின்றது.

**ஆனந்தகுமாரசுவாமி:-** கலை என்பது நடைமுறை சார்ந்தது, எல்லாக் கலைகளும் வாழ்க்கையைப் பிரதிபலிக்கின்றன என்று கூறினார். அவ்வாறே உள்ளுணர்வின் வெளிப்பாடே கலை என்றார். சிறந்த கலை என்பது இயற்கையைப் பிரதிபலிப்பதல்ல என்பது அவரது கருத்தாகும்.

இவ்வாறு பல கருத்துக்கள் கலை தொடர்பாக முன்வைக்கப்பட்டுள்ளன. கலை, அழகியல் பற்றி விளங்கிக் கொள்வதில் காணப்படுகின்ற பிரச்சினைகள் காரணமாக மெய்யியல் வரலாற்றில் காலத்திற்கு காலம் கலை பற்றிய பல கொள்கைகள் தோற்றம் பெற்றுள்ளன. இவ்வகையில் கலை பற்றிய கொள்கைகளாக பின்வருவனவற்றினை அடையாளப்படுத்திக் கொள்ளலாம்.

01. கலை பற்றிய ஒழுக்கக் கொள்கை.
02. கலை பற்றிய உணர்ச்சிக் கொள்கை.
03. கலை பற்றிய புரட்சிக் கொள்கை.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

04. கலை கலைக்காகவே எனும் கொள்கை.

இவ் ஒவ்வொரு கொள்கைகளும் கலையை வேறுபட்ட வகையில் விளக்குகின்றன.

## ஆனந்தகுமாரசுவாமி வாழ்க்கைப் பின்னணியும் கலையுடனான தொடர்பும்.

ஆனந்தகுமாரசுவாமி இந்தியாவிலும் ஈழத்திலும் ஒரு தேசபக்தராகவும், ஆராய்ச்சியாளராகவும் கலை வரலாற்றாளராகவும் சிறந்த கல்வியியலாளராகவும், கீழைத்தேய கலாரசனைகளை, சிந்தனைகளை, பாரம்பரியத்தின் செழுமையினை மேற்குக்கு சரியான வகையில் அறிமுகப்படுத்திய முதல் கருத்தாளராக அறியப்படுகிறார்.

ஆனந்த குமாரசாமியின் தந்தையார் சர். முத்துகுமாரஸ்வாமி முதலியார் திருநெல்வேலி மாவட்டத்தின் தென்காசி நகரிலிருந்து இலங்கையின் கொழும்பில் குடியேறியவர். பிரிட்டிஷ் அரசால் சேர் பட்டம் கொடுக்கப்பட்ட முதல் ஆசியர் முத்துக்குமாரசுவாமி அவர்கள். 1874ல் இவர் தமிழ் நாடகமான அரிச்சந்திர நாடகத்தை ஆங்கிலத்தில் மொழிப்பெயர்த்து பிரிட்டிஷ் அரசியாரிடம் வாசித்துக் காட்டியுள்ளார். பின்னாளில் "எலிசபெத் க்ளே பீவி" என்னும் ஆங்கிலேயப் பெண்மணியை லண்டனில் சந்தித்து காதல் வயப்பட்டு அவரை மணம் புரிந்து கொண்டார். முத்துக்குமாரசுவாமி - எலிசபெத் கிளே பீவி தம்பதியருக்கு 1877ம் ஆண்டு ஆகஸ்ட் 22ம் திகதி பிறந்த ஆண் குழந்தையே ஆனந்தகுமாரசுவாமி.

ஆனந்தகுமாரசாமியை தந்தை இறந்த பின்னர் இலங்கையை விட்டுக் குடிபெயர்ந்து லண்டனுக்கு அழைத்துச் செல்கிறார் அவருடைய தாயார். முருக பக்தரான முத்துக்குமாரசுவாமியை மணந்த எலிசபெத் கிளே பீபியும் தன்னை முழுக்க ஒரு இந்துப் பெண்மணியாக அடையாளம் கண்டார். இந்து மத வாழ்க்கை நெறிகளை கடைப்பிடிக்கலானார். முருகன் வழிபாடு எலிசபெத் கிளேயின் தினசரி வழக்கமானது. ஆனந்தகுமாரசுவாமிக்கு அவருடைய தாயாரின் வழியாக இந்து மதத்தின் மீதும் இந்து மத வழிபாட்டின் மீதும் அறிமுகம் கிடைத்தது. ஆனந்த குமாரசுவாமி இளம் வயதிலேயே முருகன் வழிபாடும், சிவன் வழிபாடும் பகவத் கீதை, ராமாயணம், மகாபாரதம் போன்ற காவியங்களின் மீதும் ஈடுபாடு கொண்டிருந்தார்.

1889ல் கல்லூரி வாழ்க்கையின் போதும் ஆனந்தகுமாரசுவாமிக்கு இந்தியாவைப் பற்றிய தேடல்கள் தொடர்ந்தன. கல்லூரியின் நூலகங்கள் மற்றும் லண்டன் நகரத்தின் புகழ் வாய்ந்த நூலகங்களில் இவருடைய தேடல்கள் தீவிரமாக வளர்ந்தன. 1909ல் லண்டன் பல்கலைக்கழகத்தில் புவியியல் பட்டப்படிப்பில் சேர்ந்திருந்த போதும் இராமாயணம், மகாபாரதம், வேதங்கள், புராணங்களின் மேல் அவருடைய ஆர்வம் தொடர்ந்தது.

லண்டன் பல்கலைக்கழகத்தில் புவியியல் பாடத்தில் அவர் கலாநிதிப் பட்டம் பெற்றார். பின்னர் கலாநிதி ஆனந்தகுமாரசுவாமியாக மீண்டும் இலங்கைக்கு புவியியல் துறையில் மேலதிகாரியாக திரும்பி வந்தார். அவருடைய வாழ்க்கை, பிழைப்பு புவியியல் ஆய்வு சார்ந்ததாக இருந்தாலும் அவருடைய ஆர்வங்கள் வேறு பல திசைகளில் பயணித்தன. தன்னுடைய உத்தியோகம் நிமித்தமாக இலங்கையின் பல குகை அழிவுப்பகுதிகளை பார்வையிட்டார். புவியியல் நிபுணராக அவரது அலைச்சல்கள் பல்வேறு புராதன சரித்திரச் சின்னங்களையும் சிதைவுகளையும் அவரை எதிர்கொள்ள வைத்தன.

இலங்கையில் இருந்து அடிக்கடி இங்கிலாந்துக்கும் இந்தியாவுக்குமாகப் பிரயாணம் செய்யலானார். இந்தியாவின் தேசிய எழுச்சியின் ஆரம்பத்தையும் அவர் கண்டார். அதை மென்மேலும் தூண்டிவிடவேண்டுமானால் இந்தியர்கள் தங்களின் பாரம்பரியத்தைப் பற்றியும் கலைகளைப் பற்றியும் இலக்கியத்தைப் பற்றியும் கலாசாரத்தைப் பற்றியும் பெருமைப்பட வேண்டிய சூழ்நிலை உருவாகவேண்டும். அப்படியானால் அவற்றைப் பற்றிய தகவல்களையும் உண்மைகளையும் வெளிக்கொணர்ந்து


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரபலப்படுத்தவேண்டும். இதற்காக ஆனந்தகுமாரசுவாமி இந்திய மரபு ஓவியங்கள், சிலைகள் முதலியவற்றையெல்லாம் சேகரித்தார். 1910ஆம் ஆண்டு இதற்காகவே அவர் லண்டனில் ரோயல் இந்தியர் கழகத்தைத் தொடங்கினார்.

பாஸ்டனில் மிகவும் தீவிரமாக ஆய்வுக்கட்டுரைகளையும் நூல்களையும் வெளியிட்டுக் கொண்டிருந்த தீவிரமான காலகட்டத்தில் தன்னுடைய 80வது வயதில் 08 செப்டம்பர் 1947ல் இறையடி எய்தினார்.

## ஆனந்தகுமாரசுவாமியின் கலை பற்றிய தத்துவ விளக்கம்

அழகியல் மெய்யியல் வரலாற்றில் கலாயோகி ஆனந்தகுமாரசுவாமியின் அழகியல் ஆய்வுகள் மகத்தானதும் தனித்துவமானதுமாகும். கலை பற்றிய பல நூல்களை எழுதியுள்ள போதிலும் இவரின் 'சிவானந்த நடனம்' என்ற நூல் மிகவும் சிறப்பிடம் பெறுகின்றது. இவ்வகையில் இவர் கலை என்பது நடைமுறை சார்ந்தது, எல்லாக் கலைகளும் வாழ்க்கையைப் பிரதிபலிக்கின்றன என்றும் கூறினார். அதேவேளை உள்ளுணர்வு வெளிப்பாடே கலை என்றார். சிறந்த கலை என்பது இயற்கையைப் பிரதிபலிப்பதல்ல என்றார். இந்த வகையில் மேலைத்தேய சிந்தனையாளரான பிளேட்டோ, அரிஸ்டோட்டில், இமானுவல் காண்ட் போன்ற சிந்தனையாளர்களை விடவும் இவர் சற்று வித்தியாசமான கலை நோக்கம் கொண்டவர் எனலாம். '*கலை என்பது உள்ளுணர்வின் பிரதி விம்பம் என்றார்*'. கலைஞனின் மனதிலே உள்ளுணர்வினைக் கொடுத்தல் கலையின் கருத்துப் பரிமாற்றத்திற்கு ஒரு ஊடகமாக அமையும் என்றார்.

கலையின் நோக்கம் மனிதனை அக ரீதியாக மாற்றுவதுதான் என உளவியல் ரீதியாக விளக்கினார். உதாரணமாக கவிதை ஒரு மனிதனை மாற்றத்திற்குட்படுத்துகின்றது. அவ்வாறே சிற்பம், ஓவியம், நாடகம், நாட்டியம் என்பனவும் மனிதனில் உளவியல் ரீதியான தாக்கத்தினை ஏற்படுத்துகின்றன. அதுமட்டுமல்லாது பிளேட்டோ கூறியதுபோல உண்மை, நன்மை, அழகு என்பன கலையில் காணப்படுகின்றன என்றார். இதனையே இவர் இந்திய தத்துவவியலில் *சத், சித், அனந்தம்* எனக் காட்டினார்.

மேலும் கலையில் திறமையை வெளிப்படுத்த யோகம் அடிப்படையாக அமைகின்றது. "*கலையே யோகம், யோகமே கலை*" என்ற கோட்பாடு இந்தியாவில் இருப்பதாக எடுத்துக்காட்டுகின்றார். அத்துடன் ஒரு கலைஞன் தனது உள்ளுணர்வினை கலையாக வெளியிடுகின்றபோது அதற்கு எந்தளவு கவர்ச்சி இருக்கின்றதோ அந்தளவு இரசனைக்குட்படும் என்றார் ஆனந்தகுமாரசுவாமி.

ஆனந்தகுமாரசுவாமி கலை பற்றிய ஒரு பொதுவான அடிப்படையை எடுத்துக்காட்ட முற்பட்டார். அதாவது இவர் கலையினை இந்தியக் கலை என்றோ தேசியக் கலைகள் என்றோ பாகுபடுத்திப்பார்க்காது கலை என்பது மனித வாழ்வின் வெளிப்பாடு என்றார். கலையின் செய்தி என்ன என ஆராய்ந்த இவர் கலைக்கு ஒரு சமூகச் செய்தி உள்ளது என்றார். '*சமூகத்தினை அறவழியில் இட்டுச் செல்லும் திறமை கலைக்கு உண்டு*' என்பதே அந்த சமூகச் செய்தியாகும். இவ்வகையில் இவர் கலை கலைக்காகவே என்ற கொள்கையினை ஏற்காது கலை என்பது சமூகத்திற்காகவே என்று மெய்யியல் தளத்திலிருந்து எடுத்துரைத்தார்.

## ஆனந்த குமாரசுவாமியின் கலைப்பங்களிப்பு

ஒரு செயலை திறம்படச் செய்பவரை "யோகி" என்கிறது கீதை. அதேபோல் ஆனந்தகுமாரசுவாமி திறம்படவும், உள்ளுணர்வோடும் இந்தியக் கலைகளை விளக்கியுள்ளார் என்பதனால் இவருக்கு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"*கலாயோகி*" என்ற பெயர் ஏற்படலாயிற்று. கலைகளுடன் ஆனந்தகுமாரசாமிக்கு ஏற்பட்ட முதல் சந்திப்பு சிற்பங்களுடன் நிகழ்ந்திருக்கிறது. கலைத் தத்துவம், பண்பாடு, தனிமனிதனின் கலைத்திறன், பண்பாட்டுச் சரித்திரம், ஒரு இனத்தின் சரித்திரம், மதம், உலகளாவிய ஒரு தத்துவப்பார்வை, சமூக ஆளுமை போன்ற எத்தனையோ பல்வேறு உலகங்களை தன்னுள் அடக்கியது சிற்பக்கலை. இந்த சிற்பக்கலையின் அருகாமை ஆனந்தகுமாரசாமிக்குள் பல மாற்றங்களை உருவாக்கியுள்ளன. இது அவருடைய வாழ்க்கைப் பாதையை முற்றிலுமாக மாற்றியது என்று சொல்லலாம். அந்த பிரம்மாண்டமான கலை வடிவங்களின் பிரம்மாண்டத்தைப் பற்றி, ஆளுகையைப் பற்றி உலகத்துக்குச் சொல்ல வேண்டும் என்கின்ற வேட்கையை உருவாக்கிக் கொண்டார் ஆனந்தகுமாரசுவாமி.

தன்னுடைய மனைவியின் உதவியுடன் சுமார் நான்கைந்து வருடங்கள் அவர் இலங்கையின் புராதனக் கலைகளைப் பற்றிய ஒரு முறையான ஆய்வினை மேற்கொண்டார். தன்னுடைய மனைவியின் உதவியுடன் அவருடைய Medieval Sinhalese Art (மத்திய கால சிங்களக் கலை) என்னும் அற்புதமான நூல் பதிக்கப்பட்டது. கீழைநாடுகளை எந்த நாகரிகமும் இல்லாத, கலாச்சார மேம்பாடோ, கலை அழகோ கொண்டிராதவை என எண்ணிக் கொண்டிருந்த மேலை நாட்டினரின் தவறான பார்வையை விலக்கி கீழை நாடுகளின் அற்புதமான கலாச்சாரம், கலை பற்றிய ஒரு சரியான புரிதலை மேற்கத்திய நாடுகளுக்குத் தந்தது இந்த நூல். கீழைத்தேய இந்திய ஓவியங்களும் கலைப்படைப்புக்களும் மேன்மையான கலைப்படைப்புக்கள் என்ற அங்கீகாரத்தினை உலக அளவில் பெற்றுத்தந்தவர் ஆனந்தகுமாரசுவாமி என்றுதான் சொல்லவேண்டும்.

இந்தியக் கலைப்படைப்புக்களின் *தத்துவார்த்த அடிப்படைகளைப்* பற்றியும் அவை எமக்குள் விரிக்கும் மெய்ஞான உலகம் பற்றியும் முதன் முதலாகப் பேசியவர் ஆனந்தகுமாரசுவாமி என்பதும் குறிப்பிடத்தக்கது. இந்த ஆய்வுகளுக்காக ஆனந்தகுமாரசுவாமி ஏற்கனவே தனக்குத் தெரிந்திருந்த ஸ்பானிஷ், டட்ச், பெர்சியன், மற்றும் சிங்களம் போன்ற மொழிகளோடு பிரெஞ்சு, ஜேர்மன், லத்தீன், கிரீக், சமஸ்கிருதம், பாலி மற்றும் ஹிந்தி போன்ற மொழிகளை அவர் வலிந்து கற்றிருக்கிறார்.

1910ல் நிகழ்ந்த ஒரு நிகழ்வு அவரை மிகவும் மனப்பாதிப்புக்கு உள்ளாக்கியது. சேர். ஜோர்ஜ் பர்ட்வுட் என்னும் கலை விமர்சகர் மேலை மற்றும் கீழை நாடுகளின் கலைகளைப் பற்றிய ஒரு சொற்பொழிவு ஆற்றினார். 'கீழை நாடுகளின் கலைஞர்கள் ஓவியங்கள் மற்றும் சிற்பங்களை அழகியல் பற்றி ஒன்றும் தெரியாமல் அவைகளைப் படைத்துக் கொண்டிருக்கிறார்கள். எடுத்துக் காட்டாக புத்தரின் சிலையை எடுத்துக்கொண்டால் அது வெறும் மரத்தூளினால் உருட்டிப்போடப்பட்ட பட்டாணி உருண்டைகளாகத்தான் எனக்குக் காட்சியளிக்கின்றன' என்று பர்ட்வுட் அலட்சியமாகவும் கேவலமாகவும் இந்திய சிற்பக் கலையைப் பற்றிக் குறிப்பிட்டார். இது ஆனந்தகுமாரசாமியை மிகவும் வேதனையும் கொதிப்பும் அடைய வைத்தது. இவ்வாறான மேற்கத்திய கலை விமர்சகர்களுக்கு இந்தியக் கலைகளின் மேன்மையைப் பற்றித் தெளிவாகச் சொல்ல வேண்டும் என்று அவர் தீர்மானித்தார்.பர்ட்வுட்டின் அலட்சியமான பார்வைக்கு பதில் தரும் வண்ணம் Origin of the Buddha Image என்னும் நூலை உடனடியாக எழுதி வெளியிட்டார். இது உலகின் அனைவரின் கவனத்தையும் வெகுவாக ஈர்த்தது.

இதைத் தொடர்ந்து தன்னுடைய எழுத்துப் பணியை மிகவும் தீவிரமாகத் தொடர்ந்தார். கீழைத்தேயக் கலைகளின் மீது தொடர்ச்சியாக பல கட்டுரைகளையும் நூல்களையும் எழுதி உலகினரின் கவனத்தை இந்தியக் கலைகளின் மீது பதிய வைத்தார். அவருடைய Art and Swadeshi என்னும் நூல் பலராலும் வெகுவாகப் பாராட்டப்பட்டது. The Arts and Crafts of India and Ceylon என்னும் 250 பக்கங்கள் கொண்ட நூலை தானே விளக்க ஓவியங்கள் வரைந்து வெளியிட்டார்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1917ம் வருடம் ஆனந்தகுமாரசாமியின் வாழ்வில் மிகவும் முக்கியமான காலகட்டமாக அமைந்தது. அவர் பாஸ்டன் நுண்கலை அருங்காட்சியகத்தில் இந்திய, பாரசீக மற்றும் இஸ்லாமியக் கலைகளின் மீதான ஆய்வு இயக்குநராக நியமிக்கப்பட்டார். அங்கு அவர் சகோதரி நிவேதிதா அம்மையாரை சந்தித்தார். மார்கரெட் ஈ நோபிள் என்னும் ஐரிஷ் பெண்மணியான அவர் சுவாமி விவேகானந்தரின் சிஷ்யையாக சகோதரி நிவேதிதாவாக பெயரும் மதமும் மாறினார். சகோதரி நிவேதிதாவுடன் இணைந்து ஆனந்தகுமாரசுவாமி Myths of the Hindus and Buddhists என்னும் நூலை வெளியிட்டார்.

இந்த காலகட்டத்தில் தான் அவருடைய The Dance of Shiva, Transformation of Nature in art, Christian and oriental Philosophy of Art, History of Indian and Indonesian Art, Buddha and the Gospel of Buddhism என்னும் இன்று வரை பேசப்படும் நூல்களை வெளியிட்டார். தி டான்ஸ் ஆ.்ப் சிவாவின் தமிழ் மொழிபெயர்ப்பும் புத்தரைப் பற்றிய நூலின் தமிழ் மொழிபெயர்ப்பும் மறுபதிப்புக்கள் வெளிவந்துள்ளன.

ஆனந்தகுமாரசுவாமி எழுதிய நூல்களில் மிகவும் முக்கியமானதொன்று சிவானந்த நடனமாகும். இந்நூலில் அவர் சிவநடனத்திற்கு எழுதிய குறிப்பு மிகவும் அற்புதமானதாகும். மேலும் நடராஜர் உருவ அமைப்பு விஞ்ஞானம், சமயம், கலை என்பவற்றோடு பின்னிப் பிணைந்த ஒன்று. நடராஜர் தத்துவத்தில் புதைந்து கிடக்கும் விஞ்ஞான உண்மைகளையும், ஆனந்த இரகசியங்களையும் திருமூலர் முதலிய மெய்ஞானிகளினது பாடல்கள் மூலம் உலகத்திற்கே காட்டியவர் ஆனந்தகுமாரசுவாமி ஆவார். அவர் எழுதிய Dance Of Shiva என்ற நூல் கலை உலகத்திலே ஒரு பேரிலக்கியமாக எல்லோராலும் கருதப்பட்டு வருகிறது எனலாம்.

ஆனந்தகுமாரசுவாமியின் முழுமையான வாழ்வும் அருங்கலைகளின் மீதான ஆய்வுகளுக்காக சமர்ப்பணம் செய்யப்பட்ட ஒன்று. அவருடைய இறுதிக்காலங்களிலும் கூட அவர் கலைகளைப் பற்றிய வித்தியாசமான நோக்கில் இயங்கி வந்திருக்கிறார். அமெரிக்காவில் வாழ்ந்திருந்தாலும் அவருடைய உயிர் இந்தியாவில்தான் அலைந்து கொண்டிருந்தது என்று சொல்வார்கள். அவருடைய மனவெளி எங்கும் இந்தியா, அதன் ஓவியங்கள், நாட்டியம், நாடகம், இசை, சிற்பங்கள், இலக்கியம், மற்றும் பண்பாடு என்று ஒவ்வொரு நாடித்துடிப்பிலும் ஒலித்துக் கொண்டு இருந்தது. தெற்காசியாவின் கலாசாரத்தைப் புரிந்துகொள்ள முயலும் ஐரோப்பியர்களுக்கும் வட அமெரிக்கர்களுக்கும் குமாரசுவாமியின் எழுத்துக்கள் மிகவும் உறுதுணையாக இருந்தன. மேற்கில் அவர் ஏற்படுத்திய தாக்கம் மிகப் பெரியது. கீழைத்தேசக் கலைகளை கீழைத்தேயத்திற்கு அறிமுகப்படுத்தியது மட்டுமல்லாமல் மேலைத்தேசத்தோடும் ஒப்பிட்டு ஆராய்ந்துள்ளார். இன்னும் இவருடைய *ஒப்பியல் நோக்கும் ஒருமைப்பாட்டு உணர்வும்* அவரை சர்வதேச வாதியாகப் பரிணமிக்கச் செய்தது.

## துணை நின்றவை


அனஸ் எம்.எஸ்.எம், (2006) 'மெய்யியல் கிரேக்ககாலம் முதல் தற்காலம் வரை', குமரன் புத்தக இல்லம், கொழும்பு – 12.

அனஸ் எம்.எஸ்.எம். (2003), "மெய்யியல் அறிமுக உரைகள்" , பேராதனை பண்பாட்டு ஆய்வு வட்டம்.

அம்பிகைபாகன், (2006), "கலாயோகி ஆனந்தகுமாரசுவாமி", குமரன் புத்தக இல்லம், கொழும்பு

ஆனந்தகுமாரசுவாமி.(1980), "சிவானந்த நடனம்", தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனம் சென்னை.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இராதாகிருஷ்ணன்,ச (1970), "கீழை மேலை நாடுகளில் மெய்ப்பொருள் வரலாறு" , அண்ணாமலைப் பல்கலைக்கழகம், சென்னை.

மீனாட்சி முருகரத்தினம், (1992), "அழகியல்", யாழ் பல்கலைக்கழகம், யாழ்ப்பாணம்.

கிருஷ்ணராஜா.சோ, (2008), "அழகியல்", சேமமடு புத்தகசாலை, கொழும்பு-11

http://www.ta.wikipedia.org
http://www.google.com
http://www.tamildesam.org/



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையின் ஜனாதிபதித்துவ ஆட்சிமுறை: ஓர் விமர்சனப் பார்வை

## (Presidential system of Sri Lanka: A Critical view)

*N. சிவகுமார், B.A(Hons), M.A. (UPDN)*
*MPPG (NSU), AAL, உதவி விரிவுரையாளர்,*
*அரசறிவியற் துறை,*
*கலைப்பீடம்.*

---

### அறிமுகம்

அரசின் உண்மை நிருவாக அதிகாரங்கள் அனைத்தும் யாப்பு ரீதியாக சட்டத்துறைக்குப் புறம்பாக இருக்கும் ஒருவரிடம் வழங்கப்பட்டிருக்குமாயின், அது ஜனாதிபதி அரசாங்க முறை என அழைக்கப்படும். ஜனாதிபதித்துவ முறையில் அரசின் தலைவராகவும், அரசாங்கத்தின் தலைவராகவும், நிருவாகத்துறையின் தலைவராகவும், அமைச்சரவையின் தலைவராகவும், முப்படைகளின் தலைவராகவும் ஜனாதிபதியே காணப்படுவார். தற்கால இலங்கை அரசியலில் விவாதிக்கப்படுகின்ற விடயங்களில் பிரதானமானதொன்றாக 1978 ஆம் ஆண்டு யாப்பின் மூலம் நிலைநிறுத்தப்பட்டுள்ள நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதித்துவ முறை விளங்குகின்றது. இவ் ஆட்சி முறையினை முற்றாக நீக்க வேண்டும் என ஒரு சாராரும், தேவையான மாற்றங்களை ஏற்படுத்தினால் போதும் எனப் பிறிதொரு சாராரும், அடிப்படையில் மாற்றங்களைக் கொண்டுவர வேண்டுமென மற்றுமொரு பகுதியினரும் வாதிட்டு வருவதனை நடைமுறையில் அவதானிக்கலாம். இத்தகைய வாதங்களையும், அவற்றுக்கான காரணங்களையும் ஆராய்வதாகவே இக்கட்டுரை அமைகின்றது.

### இலங்கையில் ஜனாதிபதித்துவ ஆட்சிமுறை

இலங்கையில் 'ஜனாதிபதி' என்ற பதவி முதலில் 1972 ஆம் ஆண்டு கொண்டுவரப்பட்ட சோசலிச ஜனநாயகக் குடியரசு யாப்பின் மூலம் அறிமுகம் செய்யப்பட்டது. எனினும், இவ்யாப்பில் அறிமுகம் செய்யப்பட்ட குடியரசு ஜனாதிபதிப் பதவியானது சட்ட, நிருவாக, நீதித்துறை சார்ந்தும், அதிகாரம் கொண்ட பதவியாக அடையாளப்படுத்தப்பட்டபோதும், ஒரு நாம நிருவாகிப் பதவி என்பது குறிப்பிடத்தக்கது. இத்தகைய நிலைக்கு முற்றிலும் மாறுபட்ட வகையில், 1978ஆம் ஆண்டின் ஜனநாயக சோசலிச குடியரசு யாப்பானது, நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதிப் பதவியினைத் தாபித்துள்ளமையினைக் காணலாம்.

### நிறைவேற்று ஜனாதிபதித்துவ ஆட்சிமுறையின் உருவாக்கப் பின்னணி

இலங்கையில் பாராளுமன்ற ஆட்சிமுறையினை மாற்றியமைப்பதற்காக முதலில் 1966 இல் அழுத்தம் கொடுத்தது, ஐக்கிய தேசியக் கட்சியாகும். கட்சியினுடைய துணைத் தலைவராகக் கடமையாற்றிய ஜே.ஆர். ஜெயவர்த்தன அவர்கள், இலங்கை விஞ்ஞான முன்னேற்றச் சங்கத்தில் (Ceylon Association for the Advancement of Science) ஆற்றிய உரையில், சட்டத்துறையில் தங்கியிருக்காத நிருவாகத்துறையின் அவசியம் பற்றியும், மக்களால் நேரடியாகத் தெரிவு செய்யப்படக்கூடிய நிருவாகத்துறையின் அவசியம் பற்றியும் குறிப்பிட்டிருந்தார் (Warnapala). அத்துடன், 1978 இல் தேசியரசுப் பேரவையில் ஆற்றிய உரையிலும் ஜனாதிபதித்துவ ஆட்சிமுறையின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முக்கியத்துவத்தினை அடையாளப்படுத்தியிருந்தார். நடைமுறையில் இருந்த 1972 ஆம் ஆண்டின் அரசியல் யாப்பில், 1977 ஆண்டு ஒக்டோபர் மாதம் 20 ஆம் திகதி இரண்டாவது திருத்தத்தினைக் கொண்டு வந்ததன் அடிப்படையில், நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறை அறிமுகம் செய்யப்பட்டது. தொடர்ந்து, 1972 ஆம் ஆண்டு யாப்பினை மாற்றியமைத்ததுடன் 1978 ஆம் ஆண்டு பெப்பிரவரி 04 ஆம் திகதி இரண்டாவது குடியரசு அரசியலமைப்பும் முன்வைக்கப்பட்டது.

## 1978 ஆம் ஆண்டு யாப்பின் கீழ் ஜனாதிபதி

தற்போதைய இரண்டாம் குடியரசு யாப்பில், அத்தியாம் VII இல், குடியரசு ஜனாதிபதி தொடர்பான முக்கிய ஏற்பாடுகள் காணப்படுகின்றன. உறுப்புரை 30(1) ஆனது, இலங்கைக் குடியரசிற்கு ஜனாதிபதி ஒருவர் இருத்தல் வேண்டும் என்றும், அவரே அரசின் தலைவரும், ஆட்சித்துறையினதும் அரசாங்கத்தினதும் தலைவரும், ஆயுதம் தாங்கிய படைகளின் படைத்தலைவரும் ஆவார் என ஏற்பாடு செய்துள்ளது.

## ஜனாதிபதித் தேர்தல்

ஜனாதிபதியானவர் 06 ஆண்டுகால பதவிக்காக மக்களினால் தேர்ந்தெடுக்கப்படுவார். இலங்கை முழுவதும் ஒரு தேர்தல் தொகுதியாகக் கருதப்பட்டு நடாத்தப்படும் தேர்தலில் மக்கள் தனிமாற்றுவாக்கு முறையின் அடிப்படையில் ஜனாதிபதியினைத் தெரிவு செய்வார்கள். 1982 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 20 ஆம் திகதி இலங்கையின் வரலாற்றில் முதன் முதலாக ஜனாதிபதித் தேர்தல் இடம்பெற்றது. ஐக்கிய தேசியக் கட்சி சார்பில் போட்டியிட்ட ஜே.ஆர். ஜெயவர்த்தன 3,450,811 (52.91 வீதம்) வாக்குகளைப் பெற்றதன் மூலம், இலங்கையில் தேர்தல் மூலம் தெரிவு செய்யப்பட்ட முதலாவது ஜனாதிபதியானார் (Abeyanaike p.1).

## ஜனாதிபதி முறைமைக்கு ஆதரவான கருத்துக்கள்

இலங்கையில் காணப்படும் நிறைவேற்று அதிகாரத்துவம் மிக்க ஜனாதிபதி முறைமை தொடர்பில், பின்வரும் ஆதரவான கருத்துக்கள் காணப்படுவதனை அவதானிக்கலாம்.

- சட்டத்துறையின் கட்டுப்பாட்டிலிருந்து சுதந்திரமாகச் செயற்படவும், நிருவாகத்தை நடத்தவும் கூடியதான ஆட்சி முறையாகக் காணப்படல்.
- நிலையானதும், பலமானதுமான நிருவாகத்துறை ஒன்றைத் தாபிக்க முடிதல். அதாவது, ஆறாண்டு காலப்பகுதிக்காக தெரிவு செய்யப்படுபவரை அக்காலப்பகுதி முடிவடைவதற்குள் பதவி நீக்கம் செய்வதற்காக கடினமான வழிமுறைகள் அறிமுகம் செய்யப்பட்டுள்ளன. இதன் காரணமாக, அவரது பதவிக்காலத்தில் நிலையாக இருக்கவும், சேவை செய்யவும் கூடிய வாய்ப்புகள் காணப்படுகின்றன. மட்டுமன்றி, பாராளுமன்றம் மற்றும் அமைச்சரவை கலைகின்ற போதும் கூட, இவர் பதவியை இழப்பதில்லை.
- எதிர்ப்புகளின் மத்தியிலும் சமூகங்களின் நலன்களைக் கருத்தில் கொண்டு தீர்மானம் எடுக்கக் கூடிய வல்லமை கொண்டிருத்தல். இந்நிலைப்பாடு தேசிய ஒருமைப்பாட்டினை உருவாக்கவும் துணை புரிதல்.
- அவசர தீர்மானங்களை எடுக்கவும், தாமதம் இன்றி அவற்றை நடைமுறைப்படுத்தவும் முடியுமாயிருத்தல்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஜனாதிபதி முறைமை தொடர்பிலான வாதப்பிரதிவாதங்கள்

ஜனாதிபதி ஆட்சிமுறை தொடர்பில், பல வாதப்பிரதிவாதங்கள் காணப்படுகின்றமையினை முன்பு குறிப்பிட்டிருந்தேன். அத்தகைய வாதங்களுக்கான அடிப்படைகளை இனி நோக்குவோம்.

### சட்டவாட்சியுடன் முரண்படல்

சட்டவாட்சியின் மத்தியமயமான கருத்து, 'சட்டம் ஆட்சி செய்தல்' என்பதாகும். சட்டவாட்சியில் சட்டத்தின் முன்னால் யாவரும் சமமானவர்களாக கருதப்படுவர். இலங்கை ஜனாதிபதியானவர், அரசியலமைப்பின் உறுப்புரை 35 இன் மூலம், விடுபாட்டுரிமையினை அனுபவிப்பதற்கான ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இவ்விடுபாட்டு உரிமையானது சட்டவாட்சியின் கீழ் நியாயப்படுத்த முடியாத விடயமாகும் (Cooray 1995, p.171). அவ் விடுபாட்டுரிமையுடன் தொடர்பான அரசியலமைப்பு ஏற்பாடுகள் வருமாறு:

'எவரேனும் ஆள் சனாதிபதி என்ற பதவியை வகிக்கின்றபோது, அவரது பதவிமுறையில் அல்லது தனிப்பட்ட முறையில் அவரால் செய்யப்பட்ட அல்லது செய்யாது விடப்பட்ட எவ்விடயம் தொடர்பிலும் அவருக்கு எதிராக வழக்கு நடவடிக்கை எதுவும் தொடுக்கப்படுதல் அல்லது தொடர்ந்து நடாத்தப்படுதல் ஆகாது (Article 35(1)).

எவரேனும் ஆளுக்கெதிராக எவ்விவரணத்தினதுமான வழக்கு நடவடிக்கை எடுக்கப்படுவதற்கான காலவெல்லையை வரையறுத்துச் சட்டத்தினால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளவிடத்து, அச்சட்டத்தினால் விதிக்கப்பட்ட காலப்பரப்பு எதனையும் கணிப்பதில் அத்தகைய ஆள் சனாதிபதி என்ற பதவியை வகிக்கின்ற காலப்பரப்பு, கணக்கில் எடுத்துக்கொள்ளப்படுதல் ஆகாது' (Article 35(2)).

இச்சட்டப்பாதுகாப்பானது ஜனாதிபதித் தேர்தல் தொடர்பான வழக்குகள், மக்கள் தீர்ப்பு தொடர்பான வழக்குகள் என்பவற்றுக்குப் பொருந்தாது. இது மட்டுமன்றி, அரசியலமைப்பின் உறுப்புரை 44(2) இன் ஏற்பாடுகளுக்கமைய ஜனாதிபதிக்கு குறித்தொதுக்கப்பட்ட அல்லது ஜனாதிபதியின் பொறுப்பில் இருக்கும், ஏதேனும் விடயம் அல்லது பணி (அதாவது ஜனாதிபதி அமைச்சர் என்றவகையில் மேற்கொள்கின்ற விடயம் அல்லது பணிகள்) தொடர்பான தத்துவங்களைப் பிரயோகிப்பது தொடர்பில் மேற்கொள்ளப்படும் வழக்கு நடவடிக்கைக்கும் பொருந்தாது. மேலும் ஜனாதிபதியினால் அறிவுறுத்தப்பட்டதன் பிரகாரம், வேறொரு அதிகாரியினால் சட்டத்திற்கு முரணான செயல் செய்யப்பட்டிருப்பின், அவ்வதிகாரிக்கு சட்டப்பாதுகாப்பினையோ, இந்த விடுபாட்டினையோ கொடுக்காது. இவ்விடயம் கருனாதிலக எதிர் திசாநாயக்க, தேர்தல் ஆணையாளர் என்ற வழக்கில் எடுத்துக்காட்டப்பட்டது.

'மக்களால் தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதிகள் தனிநபர்கள் அல்ல. அவர்கள் மக்களின் பிரதிநிதிகள்' என்ற, கருத்தினடிப்படையில் சிறப்புரிமை, விடுபாட்டுரிமை வழங்கப்பட வேண்டும் என வாதிடலாம். அவ்வாறாயின், இச் சிறப்புரிமை மற்றும் விடுபாட்டுரிமைகள் மக்களால் தெரிவு செய்யப்பட்ட அனைத்துப் பிரதிநிதிகளுக்கும் சமமாக வழங்கப்பட வேண்டும். ஆனால் நடைமுறையில் அத்தன்மையினைக் காணமுடியாதுள்ளது. இவ் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதிப் பதவியினை அறிமுகம் செய்யதவர்கள் தமது நலன்சார் விடயங்களை, அப்பதவி தொடர்பாகப் புகுத்தியமையின் விளைவு சட்டவாட்சியைப் பாரியளவில் கேள்விக்குள்ளாகியுள்ளது. விஸ்வவர்ணபால (1992) அவர்கள், 'அரசியலமைப்பு ரீதியான மாற்றங்கள் நிறைவேற்று ஜனாதிபதித்துவத்தினைத் தாபிக்கும் வகையில்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பின்பற்றப்பட்டுள்ளமையானது, குறிப்பிட்டுக் கூறக் கூடியவகையில் ஜே.ஆர். ஜெயவர்த்தன அவர்களின் தனிப்பட்ட அதிகாரத்திற்கான அபிலாசைகளினையே காட்டுகின்றது' எனக் குறிப்பிட்டுள்ளமை சுட்டிக்காட்டத்தக்கது.

இங்கு சுட்டிக்காட்ட வேண்டியவிடயம் யாதெனில், இலங்கையின் பாதுகாப்பு உள்ளிட்ட, மக்களது ஆட்சித்துறைத் தத்துவம் மக்களால் தெரிவு செய்யப்படும் குடியரசு ஜனாதிபதியினால் பிரயோகிக்கப்படுதல் வேண்டும். பொதுமக்கள் நம்பிக்கைக் கோட்பாட்டின் அடிப்படையில் இத்தகைய இறைமை அதிகாரங்கள் பிரயோகிக்கப்படல் வேண்டும் என எதிர்பார்க்கப்படுகின்றது. மாறாக, பொதுமக்களது நம்பிக்கைக்கு முரணான வகையில் செயற்படுகின்றபோது, ஜனாதிபதி பதவிக்காலத்தில் செய்த அல்லது செய்யாது விட்ட விடயம் தொடர்பில், கேள்விக்குட்படுத்தும் நடைமுறை ஏற்பட்டுள்ளமையினை உயர் நீதிமன்றம் தீர்மானித்த சில வழக்குகள் மூலம் அறியலாம். உதாரணமாக, முன்னாள் ஜனாதிபதி சந்திரிக்கா பண்டாரநாயக்க அவர்களுக்கு எதிரான வழக்கினைக் குறிப்பிடலாம்.

## கடினமான பதவி நீக்க வழிமுறை

அரசியலமைப்பின் உறுப்புரை 38 ஜனாதிபதியின் பதவி வறிதாதல் தொடர்பாக ஏற்பாடு செய்துள்ளது. இவ் உறுப்புரையிலேயே குற்றப் பிரேரணை சமர்ப்பித்தல் தொடர்பாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது. அவ்வகையில் பின்வரும் அடிப்படைகளில் பாராளுமன்ற உறுப்பினரெவரும் சபாநாயகருக்கு முகவரியிட்டனுப்பும் கடிதத்தின் மூலம் குற்றப்பிரேரணையினைச் சமர்ப்பிக்கலாம்.

1. மனப்பலவீனம் அல்லது உடற் பலவீனம் காரணமாகச் சனாதிபதி அவரது பதவிக்குரிய பணிகளை நிறைவேற்றுவதற்கு நிரந்தரமாக இயலாதுள்ளார்.
2. அரசியலமைப்பை வேண்டுமென்றே மீறியுள்ளார்.
3. தேசத்துரோகம் புரிந்துள்ளார்.
4. இலஞ்சம் பெற்றுள்ளார்.
5. தமது பதவிக்குரிய அதிகாரங்களைத் துஸ்பிரயோகம் செய்தமை உள்ளடங்கிய துர்நடத்தைக்கான அல்லது ஊழலுக்கான குற்றம்
6. ஒழுக்கக்கேட்டை உட்படுத்தும், ஏதேனும் சட்டத்தின் கீழான ஏதேனும் தவறு (Article 38[(2)(a)]).

மேற்படி கொண்டுவரப்படுகின்ற குற்றப்பிரேரணையினை சபாநாயகர் ஏற்றால் அது பாராளுமன்றத்தின் நிகழ்ச்சி நிரலில் சேர்க்கப்படும். இவ்வாறு பாராளுமன்ற நிகழ்ச்சி நிரலில் சேர்க்கப்பட வேண்டுமானால் குறிப்பிட்ட தேவைப்பாடுகள் பூர்த்தி செய்யப்பட வேண்டும் என அரசியலமைப்பின் உறுப்புரை 38(2)(ஆ) ஏற்பாடு செய்கிறது. அதன் படி,

- கொண்டுவரப்படுகின்ற பிரேரணையானது பாராளுமன்ற உறுப்பினர்களின் முழு எண்ணிக்கையில் 2/3 பங்கினர்களுக்கு குறையாதவர்களால் கையொப்பமிடப்பட்டிருக்க வேண்டும். அல்லது
- பாராளுமன்ற உறுப்பினர்களின் முழு எண்ணிக்கையிலும் அரைவாசிப் பங்கினர்க்குக் குறையாதவர்களால் கையொப்பமிடப்பட்டிருந்தால் அக்குற்றச் சார்த்தல் அல்லது குற்றச் சார்த்துதல்கள் நீதிமன்றத்தினால் விசாரணை நடாத்தப்பட்டு அறிக்கை செய்ய தகுதியுடையது என சபாநாயகர் திருப்தியடைய வேண்டும். இல்லையெனில் சபாநாயகர் அதனை ஏற்கவோ அல்லது பாராளுமன்ற நிகழ்ச்சி நிரலில் இடம்பெறச் செய்யவோ முடியாது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேற்படி, தேவைப்பாடுகளுக்கு அமைவாக பாராளுமன்ற நிகழ்ச்சி நிரலில் இடப்பட்ட அப்பிரேரணை பாராளுமன்ற உறுப்பினர்களின் முழு எண்ணிக்கையில் (சமூகமளிக்காதோர் உட்பட) 2/3 பெரும்பான்மை சாதகமான வாக்கினைப் பெற வேண்டும். இக் குறிப்பிட்ட பெரும்பான்மை கிடைத்தால் குற்றச்சார்த்தல் அல்லது சார்த்தல்கள் தொடர்பாக அப்பிரேரணை உயர்நீதிமன்றத்திற்கு விசாரணைக்காகவும், அறிக்கை சமர்ப்பிக்கப்பட வேண்டியும் சபாநாயகரினால் ஆற்றுப்படுத்தப்படும் (Article 38(2)(c)).

உயர் நீதிமன்றமானது முறையான விசாரணைகளை மேற்கொண்ட பின்பு, தனது தீர்மானம் பற்றி பாராளுமன்றத்திற்கு அறிக்கை சமர்ப்பிக்கும். இங்கு கவனிக்கத்தக்கது யாதெனில், உயர் நீதிமன்றத்தினுடைய வகிபங்கானது அறிக்கை சமர்ப்பிக்கின்றதாக அமைகின்றதே தவிர இறுதித் தீர்மானம் வழங்குவதாக அல்ல. அதாவது, உயர் நீதிமன்றம் சமர்ப்பித்த அறிக்கையில் ஜனாதிபதி குற்றவாளி என தாம் கருதுவதாக தெரிவிக்கப்பட்டிருப்பின், அவ்வறிக்கையானது பாராளுமன்ற முழு உறுப்பினர்களின் எண்ணிக்கையில் (சமூகமளிக்காதோர் உட்பட) 2/3 பெரும்பான்மை சாதகமான வாக்கினைப் பெற்று நிறைவேற்றப்பட வேண்டும். அவ்வாறான பெரும்பான்மையினைப் பெற்று நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தின் மூலமே சனாதிபதியைப் பதவியில் இருந்து அகற்ற முடியும் (Article 38(2)(e)). இவ்வாறான இறுக்கமான அல்லது மிகச் சிக்கலான (Cumbersome nature) வழிமுறைகளைப் பின்பற்றி ஜனாதிபதியினைப் பதவியில் இருந்து நீக்குவது சுலபமான விடயமல்ல. இத்தகைய கடினமான வழிமுறைகள் பாராளுமன்றத்தினதும் மக்களினதும் அபிப்பிராயங்களைப் பலமிழக்கச் செய்வனவாகக் காணப்படுகின்றன (Cooray 1995, 174). இவ்வாதத்திற்கான சிறந்த சான்றாக 1991 ஆம் ஆண்டு, அப்போதைய ஜனாதிபதி ஆர். பிரேமதாச அவர்களை பதவியில் இருந்து நீக்குவதற்காக எடுக்கப்பட்ட நடவடிக்கையினையும் அதன் தோல்வியினையும் சுட்டிக்காட்டலாம்.

## முத்துறை சார்ந்தும் அதிகாரங்கள் காணப்படல்

இலங்கையின் நீதித்துறையோ, பாராளுமன்றமோ பெற்றுக்கொள்ளாத முக்கியத்துவத்தினை நிருவாகத்துறையைச் சார்ந்த ஜனாதிபதி பெறுகின்றமையினை நடைமுறையில் காணலாம். 1972 ஆம் ஆண்டு யாப்பில் அதிகார வேறாக்க கோட்பாடு குழிதோண்டிப் புதைக்கப்பட்டதாக விமர்சிக்கப்பட்டது. ஆனால், 1978 ஆம் ஆண்டு யாப்புத் தொடர்பில் அந்தளவிற்குக் காத்திரமான விமர்சனம் எழவில்லை. அதேவேளை, ஜனாதிபதிக்கு, சட்ட, நிருவாக, நீதித் துறைகளில் காணப்படுகின்ற அதிகாரங்களை மையமாக வைத்து நோக்குகின்ற போது, ஏனைய துறைகளை விட கூடுதலான அதிகாரங்களைக் கொண்டுள்ளமையினையும், ஏனைய துறைகளில் அதிகளவு தலையீடுகளைக் கொண்டுள்ளமையினையும் அவதானிக்கலாம்.

பாராளுமன்றம் தொடர்பில் ஜனாதிபதி, பின்வரும் அதிகாரங்களைக் கொண்டுள்ளார்: பாராளுமன்றத்தின் அமர்வு ஒன்றின் ஆரம்பத்தில் அரச கொள்கைக் கூற்றை வாசித்தல், பாராளுமன்றத்தின் சடங்கு முறையான இருக்கைக்குத் தலைமை தாங்குதல், பாராளுமன்றத்தைக் கூட்டுதல், கலைத்தல், ஒத்திவைத்தல், தான் விரும்பிய நேரத்தில் பாராளுமன்றத்தில் உரையாற்றுதல், அவசர கால வேளைகளில் ஒழுங்கு விதிகளை இயற்றுதல், தான் விரும்பிய சட்ட மூலங்களை மக்கள் தீர்ப்பிற்கு விடுதல்.

பாராளுமன்றத்தினைக் கலைப்பது தொடர்பில் ஜனாதிபதியின் அதிகாரங்களை நோக்குகின்ற போது, ஒரு வருடம் முடிவடைந்த பின்பு எந்தவொரு சந்தர்ப்பத்திலும், எவ்வித காரணமும் கூறாமல் பாராளுமன்றத்தினைக் கலைக்கும் அதிகாரம் உண்டு. ஆனால், ஜனாதிபதியினால் பாராளுமன்றம் கலைக்கப்பட்டதன் விளைவாகப் பொதுத் தேர்தலொன்று நடாத்தப்பட்டுள்ள விடத்து, அத்தகைய


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொதுத்தேர்தல் தேதியிலிருந்து ஓராண்டு காலம் முடிவடையும் வரை, பாராளுமன்றத்தைக் கலைக்கும் படி பாராளுமன்றம் தீர்மானத்தின் மூலம் ஜனாதிபதியை வேண்டினாலொழிய, இரண்டாம் தடவையாகவும் பாராளுமன்றத்தைக் கலைக்க முடியாது (Article 70[(1)(a)]) என்பதனைக் கவனத்தில் கொள்ள வேண்டும்.

ஜனாதிபதி முழுமையான நிறைவேற்று அதிகாரம் கொண்டவராகக் காணப்படுகின்றார். அரசின் தலைவரும், ஆட்சித்துறையினதும் அரசாங்கத்தினதும் தலைவரும், ஆயுதம் தாங்கிய முப்படைகளின் படைத்தலைவருமாவார். அவர் அமைச்சரவையின் ஓர் உறுப்பினராயிருப்பதுடன், அமைச்சரவையின் தலைவருமாவார். எனினும், அரசியலமைப்பின் ஏற்பாடுகளின் கீழ் அமைச்சரவை கலைக்கப்படுவது எப்படியிருப்பினும், ஜனாதிபதி தொடர்ந்து பதவி வகித்தல் வேண்டும் என உறுப்புரை 43[(2)] ஏற்பாடு செய்துள்ளது. பிரதம அமைச்சரையும், ஏனைய அமைச்சர்களையும் நியமிக்கும் அதிகாரம் கொண்டுள்ள ஜனாதிபதி, அவர்களைப் பதவியில் இருந்து நீக்கவும் முடியும். எந்நேரத்திலும் அவர்களுக்கான பொறுப்புக்களை ஒப்படைக்கவும், அவற்றில் மாற்றங்கள் மேற்கொள்ளவும் அதிகாரம் பெற்றுள்ளார் (Cooray 1995, p.163).

அரச தூதுவர்கள், உயர் ஆணையாளர்கள், பூரண அதிகாரம் பெற்ற அரசுப் பிரதிநிதிகள், ஏனைய இராஜதந்திர முகவர்கள் என்போரை ஏற்று அங்கீகரித்தல், நியமித்தல், பொறுப்பளித்தல், ஜனாதிபதி சட்டத்தரணிகளை நியமித்தல், போர், சமாதானம் என்பவற்றைப் பிரகடனம் செய்தல், பொதுச் சேவை ஆணைக்குழு உறுப்பினர்களை நியமித்தல் போன்ற அதிகாரங்களையும் உடையவராக ஜனாதிபதி காணப்படுகின்றார்.

நீதித்துறை சார்ந்த அதிகாரங்களையும் ஜனாதிபதி கொண்டுள்ளார். உதாரணமாக, நீதிபதிகளது நியமனம் மற்றும் நீதிமன்றத்தினால் வழங்கப்பட்ட தீர்ப்புக்களில் மாற்றம் செய்தல் போன்றவற்றை அடையாளப்படுத்தலாம். இலங்கைக் குடியரசினுள்ளே நீதிமன்றம் எதிலும் எத்தவறுக்காகவும் குற்றத்தீர்ப்பு அளிக்கப்பட்டவரான தவறாளி எவரினதும் விடயத்தில், ஜனாதிபதி கட்டற்ற ஒரு மன்னிப்பை, அல்லது சட்ட முறையான நிபந்தனைகளுக்கு அமைந்த ஒரு மன்னிப்பை வழங்கலாம் என அரசியலமைப்பின் உறுப்புரை 34 இல் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. அவ்வகையில்:

- தவறாளிக்கு வழங்கப்பட்ட ஏதேனும் தண்டனைத் தீர்ப்பை நிறைவேற்றுவதில், காலவரையற்ற அல்லது ஜனாதிபதி பொருத்தமென எண்ணக் கூடியவாறான அத்தகைய காலத்துக்கான காலந்தாழ்த்துதலை வழங்கலாம்
- தவறாளியின் மீது விதிக்கப்பட்ட தண்டனைக்குப் பதிலாகக் கடூரம் குறைந்த ஒரு தண்டனையை விதிக்கலாம்.
- தவறு தொடர்பில் விதிக்கப்பட்ட ஏதேனும் தண்டனை முழுவதையும் அல்லது அதன் ஏதேனும் பாகத்தை, அல்லது அத்தகைய தவறு தொடர்பில் வேறு விதத்தில் குடியரசுக்குச் செல்மதியான ஏதேனும் தண்டம் அல்லது பறிமுதல் முழுவதையும் அல்லது அதன் ஏதேனும் பாகத்தைத் தளர்த்தலாம்.
- 

நீதித்துறையினது முதன்மையான பணி நீதி வழங்குவதாகும். இப்பணியினை புரியும் நீதித்துறையின் தீர்ப்பில் நிறைவேற்றுத்துறையினைச் சார்ந்த ஜனாதிபதி தலையீடு செய்வதானது நீதித்துறையில் அவர் கொண்டுள்ள ஆதிக்கத்தினை வெளிக்காட்டுவதாகவே அமைந்துள்ளது. ஐக்கிய அமெரிக்க யாப்பைப் போன்று, ஜனாதிபதியின் அதிகாரங்கள் மீது காத்திரமான சமநிலைத் தடைகள் விதிக்கப்படாததனால், பல்வேறு சந்தர்ப்பங்களில் இலங்கை ஜனாதிபதி தற்றுணிவுடன் செயற்படக் கூடியதாகவுள்ளது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### அறிமுகப்படுத்தலுக்காக முன்வைத்த காரணங்கள் சரிவர அடையப்படாமை

நிறைவேற்று அதிகாரத்துவமிக்க ஜனாதிபதித்துவ முறையினை இலங்கையில் அறிமுகப்படுத்துவதற்காக முன்வைக்கப்பட்ட வாதங்களில் நாட்டின் அபிவிருத்தி, உறுதியான ஆட்சி, விரைவான தீர்மானம் எடுத்தல் என்பன சுட்டிக்காட்டப்பட்டன. ஜனாதிபதித்துவ முறை அறிமுகப்படுத்தப்பட்டு மூன்று தசாப்தங்களைத் தாண்டிச் செல்கின்றது. ஆனால், இன்றும் அபிவிருத்தியடைந்து வருகின்ற, மூன்றாம் நிலை நாடாகவே இலங்கை காணப்படுகின்றது. நாட்டில் காணப்படுகின்ற சமூகங்களிடையே ஒற்றுமையினையும், நல்லிணக்கத்தினையும் கட்டியெழுப்பும் வகையிலான ஆட்சி இடம்பெற வழிவகுக்கும் என எதிர்பார்க்கப்பட்டாலும் இன்றுவரை அது பூரணமாக எட்டப்படாத விடயமாகவுள்ளதுடன் தாக்ககரமான அரசியல் தீர்வுகள் எட்டப்படாத நிலை தொடர்கின்றது. ஏ.ஜே.வில்சன் அவர்களுடைய கருத்தின் பிரகாரம், முன்னைய ஜனாதிபதி ஜே.ஆர்.ஜெயவர்த்தன அவர்கள் நிறைவேற்று அதிகாரமுடைய ஜனாதிபதித்துவ முறையினை உருவாக்குவதில் இரண்டு காரணிகள் தாக்கம் செலுத்தியுள்ளன. அவை, உறுதியான நிறைவேற்று ஆட்சிமுறைக்கான தேடல். மற்றையது, நாட்டில் வாழும் மக்கள் குழுவினருக்கிடையே கருத்தொற்றுமையினை அல்லது கருத்திசைவுக்கான அரசியலை உருவாக்குதலும், பேணுதலும் (Wilson 1980, p.1) ஆகும்.

மேற்படி உறுதியான நிறைவேற்று நிருவாக முறை சாத்தியமாகியுள்ளமையினைக் காணலாம். ஆனால், நாட்டில் வாழ்கின்ற சகல மக்களுடைய நலன்களையும் பேணக்கூடிய, அவர்களிடையே கருத்தொற்றுமையினை ஏற்படுத்தக்கூடியவாறான ஆட்சிமுறையாக காணப்படுகின்றதா என்பதில் மாறுபட்ட கருத்துக்கள் உள்ளன. குறிப்பாக ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுகின்ற எந்த வேட்பாளரும் சிறுபான்மை மக்களுடைய போதிய ஆதரவினைப் பெறாவிட்டால் ஜனாதிபதியாக வரமுடியாத நிலை காணப்படுவதாகவும், ஆகவே வேட்பாளர்கள் சிறுபான்மையோர் நலன் பேணும் செயற்பாடுகளில் ஈடுபடக் கூடிய வாய்ப்பினை இம்முறையில் காணலாம் எனவும் வாதிடப்பட்டது. ஆனால், நடந்து முடிந்த சகல ஜனாதிபதித் தேர்தல்களிலும் இவ் நிலைப்பாடு நிரூபிக்கப்பட்டுள்ளது எனத் திட்டவட்டமாகக் கூறமுடியாது. உதாரணமாக 2005 மற்றும் 2010 ஆம் ஆண்டுகளில் இடம்பெற்ற இரண்டு ஜனாதிபதித் தேர்தல்களில் பெரும்பாலான சிறுபான்மை மக்களுடைய ஆதரவு தோல்விகளைத் தழுவிய வேட்பாளர்களுக்கு வழங்கப்பட்டிருந்தமையினை தேர்தல் முடிவுகளின் மூலம் அறியக்கூடியதாக இருந்தது.

ஆகவே 'தனியே சிறுபான்மை மக்கள் மத்தியில் பெரும்பான்மை ஆதரவினைப் பெறுகின்றவர் மாத்திரமே ஜனாதிபதியாக வரமுடியும்' என்ற கருத்தினை முன்வைக்க முடியாது. அதேவேளை முன்னணியில் உள்ள இரண்டு வேட்பாளர்கள் பெரும்பான்மை மக்களிடையே சரிசமமான பலத்தினையும், ஆதரவினையும் கொண்டிருக்கின்ற போது சிறுபான்மை மக்கள் காத்திரமான தீர்மானிக்கும் சக்தியாக செயற்படலாம் என்பதனைக் கவனத்தில் கொள்ள வேண்டும். ஆக, 'எல்லா சந்தர்ப்பங்களிலும் சிறுபான்மை மக்களது வாக்குகள் ஜனாதிபதித் தேர்தலில் தாக்ககரமான வகிபங்கினை வகிக்கும் என்பதில் நிச்சயத் தன்மை இல்லை. ஆகவே, 'நிகழலாம்' என்ற எடுகோளினை அடிப்படையாகக் கொண்டு, சிறுபான்மை சமூகங்களுடைய நலன்களில் அக்கறை கொள்ளச் செய்வதற்கான ஏற்பாடாக ஜனாதிபதிப் பதவி காணப்படுகின்றது என திட்டவட்டமாக வாதிட முடியாதுள்ளது.

### இரு வேறுபட்ட கட்சிகள் ஆட்சி அதிகாரத்தினைப் பெறுகின்றபோது முரண்பாடு

ஜனாதிபதி ஒரு கட்சியினையும் பாராளுமன்றத்தில் பெரும்பான்மையினை வேறு கட்சியும் பெறுகின்றபோது ஜனாதிபதி பாராளுமன்றம் என்பவற்றுக்கிடையே இழுபறி நிலை தோன்றும் நிலைப்பாட்டினை இவ் ஜனாதிபதித்துவ முறையில் அவதானிக்க முடிகின்றது. ஏ.ஜே.வில்சன் அவர்கள்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1980 ஆம் ஆண்டு, தான் எழுதிய 'The Gaulilst System in Asia' என்ற நூலில், எதிர்காலத்தில் ஐக்கிய தேசியக் கட்சியினைச் சாந்தவர் ஜனாதிபதியாகவும், ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியினுடைய ஆதிக்கம் பாராளுமன்றதிலும் அல்லது ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியியைச் சார்ந்தவர் ஜனாதிபதியாகவும், ஐக்கிய தேசியக் கட்சியின் ஆதிக்கம் பாராளுமன்றதிலும் காணப்படுமானால் இவ் ஜனாதிபதித்துவ முறைமையின் கீழ் ஆட்சி செய்வதில் சிக்கல்களைக் கொண்டுவரலாம் (Radhika Coomaraswamy P.31). எனக் குறிப்பிட்டிருந்தார். இக்கருத்தினுடைய யதார்த்த பூர்வத் தன்மையினை 2001 ஆம் ஆண்டில் இடம்பெற்ற ஜனாதிபதித் தேர்தலில் பொதுஜன ஐக்கிய முன்னணி சார்பாக போட்டியிட்ட சந்திரிக்கா பண்டாரநாயக்க குமாரதுங்க அவர்கள் ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்டிருந்தபோது, 2001 ஆம் ஆண்டு இடம்பெற்ற ஐந்தாவது பாராளுமன்றத் தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சி பாராளுமன்றத்தில் பெரும்பான்மையினையும் பெற்றிருந்த காலகட்டத்தில் அவதானிக்க முடிந்தமை சுட்டிக்காட்டத்தக்கது.

## ஒரே கட்சியினைச் சார்ந்தோர் ஆட்சி அதிகாரத்தினைப் பெறுதலின் விளைவு

ஒரே கட்சியினைச் சார்ந்தவர் ஜனாதிபதியாகவும், பாராளுமன்றத்தில் பெரும்பான்மையினையும் கொண்டிருக்கின்றபோது கட்சிநலன் பேண் அல்லது ஜனாதிபதியினுடைய அனைத்தான்மை ஆட்சிக்கான வாய்ப்புகள் ஏற்படலாம். ஜனாதிபதி எக்கட்சியினைச் சார்ந்தவரோ, அக்கட்சியினைச் சார்ந்தவர்கள் பாராளுமன்றத்தில் பெரும்பான்மையினைப் பெற்றிருக்கின்றபோது பிரதம மந்திரி மற்றும் ஏனைய அமைச்சர்கள் ஊடாக பாராளுமன்றத்தில் ஆதிக்கம் செலுத்தக் கூடிய தன்மை தோற்றம் பெறலாம் (Cooray 1995, P.164). சட்டமாக்கல் தொடர்பில் தலைமைத்துவப் பண்பினை வகிக்கலாம். இவ்வாறானதொரு நிலை காணப்படுகின்ற போது, சட்டத்துறை, நிர்வாகத்துறை என்பவற்றிடையே ஐக்கியமும் கூட்டுறவும் காணப்படும். இந்நிலைப்பாடுகள் அதிகார வேறாக்க கோட்பாட்டிற்கு முரணாக அமைவதுடன், சட்டவாக்கத் துறையில் நிருவாகத்துறையினைச் சார்ந்த ஜனாதிபதியினுடைய ஆதிக்கத்திற்கான வாய்புகளை மேலும் வலுப்படுத்திவிடும். மட்டுமன்றி அரசியலமைப்பில் ஜனாபதியை பதவி நீக்குவது தொடர்பில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள வழிமுறையானது மிகவும் கடினமானதாகும். இவ்வாறன நிலை காணப்படுகின்றபோது, பாராளுமன்றத்தில் ஜனாதிபதி நலன் பேண் அல்லது விசுவாசம் கொண்டவர்கள் பெரும்பான்மையாகக் காணப்பட்டால் ஜனாதிபதியினைப் பதவியில் இருந்து நீக்குவது மேலும் கடினமாவதுடன், சாத்தியமற்றதாகவும் மாறிவிடலாம்.

## 18வது சீர்திருத்தமும் ஜனாதிபதியும்

1978ஆம் ஆண்டு யாப்பின் 31ஆம் உறுப்புரையின் (2)ஆம் பந்தியின் பிரகாரம் 'ஜனாதிபதி பதவிக்கு மக்களால் இருமுறை தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள ஆளெவரும் அதன்பின்னர் அத்தகைய பதவிக்கு மக்களால் தேர்ந்தெடுக்கப்படுவதற்கு தகைமையுடையவராகார்'. அரசியலமைப்பிற்கான 18வது சீர்திருத்தமானது இவ் ஏற்பாட்டில் மாற்றம் கொண்டுவந்துள்ளது. அதாவது ஜனாதிபதியாகத் தெரிவுசெய்யப்படக்கூடிய தகைமையுடைய ஆளொருவர் எத்தனை தடவையும் அப்பதவியை வகிக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

பதினெட்டாம் திருத்தத்தின் குறிப்பிடக்கூடிய இன்னுமொரு விளைவு யாதெனில் பதினேழாம் திருத்தத்தின் மூலம் குறிப்பிட்ட பதவிகள் தொடர்பில் ஜனாதிபதிக்கு இருந்த மட்டுப்பாடுகள் நீக்கப்பட்டுள்ளமையாகும். 2001 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் நிறைவேற்றப்பட்ட அரசியலமைப்பிற்கான 17 ஆவது திருத்தச் சட்டமானது, அரசியலமைப்பு பேரவை என்ற அமைப்பினை உருவாக்க ஏற்பாடு செய்ததுடன், குறிப்பிட்ட பதவி நியமனங்கள் தொடர்பில் ஜனாதிபதி கொண்டிருந்த அதிகாரங்கள் மீது சிறிதளவு மட்டுப்பாடுகளை விதித்திருந்தது. குறிப்பாக அரசியலமைப்புப் பேரவையின் சிபாரிசுகளின்றி, கீழே


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குறிப்பிடப்படும் ஆணைக்குழுக்களின் உறுப்பினர்களையோ, தலைவர்களையோ ஜனாதிபதி நியமிக்கலாகாது. அந்த ஆணைக்குழுக்களாவன: தேர்தல்கள் ஆணைக்குழு, பகிரங்க சேவை ஆணைக்குழு, தேசிய பொலிஸ் ஆணைக்குழு, இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு, இலஞ்ச அல்லது ஊழல் குற்றச்சாட்டுகளை புலனாய்வு செய்யும் நிரந்தர ஆணைக்குழு, நிதி ஆணைக்குழு மற்றும் எல்லை நிர்ணய ஆணைக்குழு.. அரசியலமைப்புப் பேரவையின் அடுத்த பணி குறிப்பிட்ட பதவிகளுக்கான நியமனங்கள் தொடர்பாக ஜனாதிபதி முன்வைக்கும் சிபார்சுகளை அங்கீகரிப்பதாகும். அவ்வாறு பேரவையினால் அங்கீகரிக்கப்படாத வரை ஜனாதிபதி அந்நியமனங்களைச் செய்யலாகாது. அத்தகைய பதவிகளாக: பிரதம நீதியரசரும் உயர் நீதிமன்றின் நீதியரசர்களும், மேன்முறையீட்டு நீதிமன்றின் தலைவரும், நீதியரசர்களும், நீதிச்சேவை ஆணைக்குழுவின் தவிசாளர் தவிர்ந்த ஏனைய உறுப்பினர்கள், சட்டமா அதிபர், கணக்காய்வாளர் நாயகம், பொலிஸ் மா அதிபர், ஒம்புட்சுமான் மற்றும் பாராளுமன்றின் செயலாளர் நாயகம். பதினெட்டாம் திருத்தத்தின் பிரகாரம் மேலே கூறப்பட்ட பதவிகளில் பொலிஸ் தலைமையதிபதி தவிர்ந்த பதவிகளுக்கு ஆட்களை ஜனாதிபதி நியமிப்பார். இவ்வாறு நியமனங்களைச் செய்கின்றபோது பாராளுமன்றப் பேரவையின் அவதானிப்புகளை நாடுதல் வேண்டும். அதேவேளை அத்தகைய அவதானிப்புகள் ஜனாதிபதியைக் கட்டப்படுத்தாது (செல்வகுணபாலன் 2012 ப.206) என்பதனைக் கவனத்தில் கொள்ள வேண்டும்.

## முடிவுரை

இலங்கையில் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறை அறிமுகப்படுத்தப்படும் வரை உறுதியற்ற ஆட்சிமுறை இடம்பெற்றுள்ளமையினை கடந்த கால அனுபவங்களின் மூலம் அறிந்து கொள்ளலாம். பாராளுமன்ற மந்திரிசபை முறை நிலவிய காலத்தில் அடிக்கடி ஏற்பட்ட ஆட்சி மாற்றங்கள் இதற்கான ஆதாரங்களாகும். குறிப்பாக, கட்சிக்குள் ஏற்படுகின்ற பிளவுகள், கூட்டுக் கட்சியில் இருந்து ஆதரவு வழங்கிய கட்சிகள் விலகுதல் போன்ற காரணங்களினால் பாராளுமன்ற மந்திரி சபை ஆட்சிமுறை ஸ்த்திரமற்றதாக அடையாளம் காணப்பட்டது. இக்குறைபாட்டினையும் சுட்டிக்காட்டி நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி ஆட்சி முறை இலங்கையில் அறிமுகம் செய்யப்பட்டது. அவ்வகையில் இலங்கை போன்ற அபிவிருத்தி அடைந்து வருகின்ற நாடுகளிற்கு ஜனாதிபதி ஆட்சிமுறை பொருத்தமானதாகும். அதேவேளை, அரசியலமைப்பின் ஊடாக ஜனாதிபதிக்குக் கொடுக்கப்பட்டிருக்கின்ற அதிகாரங்கள் தொடர்பில் பல விமர்சனங்கள் எழுந்துள்ளமையினையும் மறுத்துவிடமுடியாது. குறிப்பாக சட்டவாட்சி, நீதித்துறைச் சுதந்திரம், தனிமனித சுதந்திரம், அதிகார வேறாக்கம் போன்றவற்றிற்கு முரணான தன்மையினை ஜனாதிபதி தொடர்பான ஏற்பாடுகள் ஏற்படுத்துகின்றன. மட்டுமன்றி ஜனாதிபதி முறைமையினை அறிமுகப்படுத்துகின்றபோது, எவ் நோக்கங்களை அடைவதற்காக அறிமுகப்படுத்தப்படுவதாகக் கூறப்பட்டதோ, அவற்றில் முக்கியமான விடயங்கள் இன்னும் முழுமையாக அடையப்படாத நிலை தொடர்கின்றமையும் குறைபாடாகச் சுட்டிக்காட்டத்தக்கதாகும்.

## உசாத்துணைப் பட்டியல்

அம்பலவாணர் சிவராஜா, இலங்கை அரசியல், குமரன் புத்தக இல்லம், கொழும்பு-சென்னை,2006.

செல்வகுணபாலன்.செ., இலங்கைச் சட்டங்கள் ஓர் அறிமுகம், குமரன் புத்தக இல்லம், கொழும்பு-சென்னை, 2012.

Abeyanaike.H.B.W., Parliament of Sri Lanka, The Associated Newspaper of Ceylon Limited, Colombo, at page 01.

Cooray, J.A.L., 1995. Constitutional and Administrative Law of Sri Lanka. Colombo: Sumathi Publishers.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Cooray, L.J.M., 2005. Constitutional Government in Sri Lanka 1796-1977. Sri Lanka: A Stamford Lake Publication.

Ruana Rajapakse, 2008. A Guide to Current Constitutional Issues in Sri Lanka. Rajagiriya, Sri Lanka: Citizens' Trust.

Radhika Coomaraswamy., 1996. Ideology and the Constitution: Essays on Constitutional Jurisprudence. Colombo: ICES.

Vijeya Niranjan Perera., 2000. Executive presidency-The Sri Lankan Dilemma: Badulla, Sri Lanka.

Wiswa warnapala., Nd. The Sri Lankan Political Scene. New Delhi: Navrang.

Wiswa Warnapala and Dias Hewagama, Recent Politics in Sri Lanka-The Presidential Election and Referendum of 1992.

Wilson. A.Jeyaratnam, 1980. The Guallist System in Asia-The Constitution of Sri Lanka 1978. Macmillan Press Ltd.

Zafrullah, H.M., 1981. Sri Lanka's Hybrid Presidential and Parliamentary System and The Separation of Powers Doctrine. Kuala Lumpur: University of Malaya Press.

The Constitution of the Democratic Socialist Republic of Sri Lanka 1978, Government Publication.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சங்ககால மருதத்திணைப் பாடல்களில் வெளிப்படும் பெண்ணின் எதிர்ப்புக்குரல்

(கலித்தொகையின் மருதத்திணைப் பாடல்களை அடிப்படையாகக் கொண்ட ஒரு நோக்கு)

*A.அஸ்கா,*
*உதவி விரிவுரையாளர்,*
*தமிழ்த்துறை*
*கலைப்பீடம்.*

சங்ககாலப் பாடல்கள் அனைத்தும் ஏதோ ஒரு வகையில் ஒரு மனித உணர்வினை சிறப்பாக வெளிப்படுத்துவனவாகவே அமைந்துள்ளன. குறிப்பாக தலைவன், தலைவி, தோழி, நற்றாய், செவிலி நிலை நின்று புலவர் அவர்தம் உணர்வுநிலையினைப் படம்போட்டு காட்டியிருப்பது குறிப்பிடத்தக்கதாகும்.

அந்தவகையில், சங்ககால அகத்திணைப் பாடல் மரபுகளில் மருதத்திணையின் ஊடல் ஒழுக்கமும், அது சார்ந்த விடயங்களும் குறிப்பிடத்தக்கனவாக அமைகின்றன. மருத நிலத்து ஆடவன் உழைத்தது போக எஞ்சிய ஓய்வு நேரங்களை ஆடல், பாடல்களில் வல்ல பரத்தையரோடு கழிக்கின்றான். இதனால் தலைவனுக்கும் தலைவிக்கும் இடையில் ஊடல் ஏற்படுகின்றது. பின்னர் தலைவனின் அன்பு மொழிகளால் ஊடல் நீங்கி கூ டல் ஏற்படுவதாக மருதத்திணைப் பாடல்கள் உணர்த்தி நிற்கின்றன.

மற்றைய அகத்திணை சார் ஒழுக்கங்களான புணர்தல், இருத்தல், இரங்கல், பிரிதல், உடன்போக்கு என்பன தலைவன், தலைவி இருவருக்கும் இன்பமும் துன்பமும் ஒருங்கே பயப்பதாய் உள்ளது. ஆனால் மருதத்திணையின் ஊடல் ஒழுக்கமானது, தலைவியையே அதிகம் வருத்துவதாக உள்ளது. அதாவது தலைவி, தலைவனின் பரத்தையர் ஒழுக்கம் காரணமாக அவன்மேல் ஊடல் கொண்டு, பின்னர் தலைவனின் அன்பு மொழிகளையும் பொய்மொழிகளையும் கேட்டு ஊடல் நீங்கி கூடல் கொண்டாலும் அவள் உளரீதியாக படும் வேதனை சொல்லற்கரியது என்றே கூறவேண்டும்.

தன் கணவன் இன்னொரு பெண்ணுடன் அன்பாக இருக்கிறான் என்ற நிலையில் தலைவியின் உள அவசங்கள் பன்முகப்பட்டதாக அமைகின்றன. அந்தவகையில் சங்ககால மருதத்திணைப் பாடல்களை நோக்கும் போது தலைவியின் உள அவசங்களின் பல்வேறுபட்ட பரிமாணங்களைக் காணலாம்.

அதாவது, தலைவன் பரத்தமையை நாடிச் செல்வதைக்கண்டு கோபம் கொள்ளுதல், தலைவன் என்ன தவறு செய்தாலும் தன் இயலாமையினால் அதனைச் சகித்துக் கொண்டு வாழவேண்டும் என்ற நிலையில் வருந்துதல், தனது அழகும் இளமையும் என்னிடம் இல்லாது போனமையால்தான் தலைவன் பரத்தமையை நாடினான் என்ற தாழ்வுச்சிக்கலால் மனம் வருந்துதல், தலைவனின் பரத்தமையை நாடும் செயலால் குடும்ப மதிப்பு குறைவது கண்டு வருந்துதல் எனப் பல வகைகளில் தலைவனின் பரத்தமை ஒழுக்கத்தால் தலைவி துன்புறுகிறாள்.

இவ்வாறாக, வறுமை, தனிமை, தாழ்வுச் சிக்கல், இயலாமை என்பவற்றின் காரணமாக தலைவியானவள் தலைவனோடு இணங்கிப் போவதாக (ஊடல் நீங்கி கூடல் கொள்வதாக) அமைந்தாலும் மறைமுகமாக அவளது கோபம், எதிர்ப்புக்குரல், தனது உரிமைக்கான போராட்டம் போன்றன மருதத்திணைப் பாடல்களில் இழையோடி நிற்பதைக் காணலாம். அதாவது, தலைவனை நம்பி அவனைக் கணவனாக ஏற்றுக் கொண்டு நம்பி வந்த தலைவிக்கு, தலைவன் தலைவியை மறந்து பரத்தையரோடு அன்பு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொள்ளும் உறவு ஏமாற்றத்தையும், கவலையையும் தரவே அது கோபமாக, எதிர்ப்பாக உருவெடுப்பதனைக் காணலாம்.

அந்தவகையில், பெண்ணின் மன அவசங்கள் எவ்வகையில் கோபமாக, எதிர்ப்புக் குரலாக மருதத்திணைப் பாடல்களின் வெளிப்படுகின்றது என்பதனை கலித்தொகையின் மருதத்திணைப் பாடல்களை மேற்கோளாகக் கொண்டு இக்கட்டுரை ஆராய்கின்றது.

காதல் கொண்டு திருமணம் செய்து கூடிவாழ்வதற்கு சமூக அங்கீகாரம் பெறும்போது, கணவன், மனைவி இருவருக்கும் ஒருவரில் ஒருவர் உரிமைப்பாடு ஏற்படுகின்றது. ஆனால் தலைவனின் முறைகேடான பரத்தமை ஒழுக்கம் தலைவிக்கு கோபத்தை உண்டாக்குகின்றது. கற்பினைக் காத்து வாழும் அவளை தலைவன் ஏமாற்றுகின்றான் என்று உணர்ந்ததும் ஏமாற்றத்தைத் தாங்காது தனது எதிர்ப்பின் கோபமாக வெளிப்படுத்துகிறாள்.

மேலும் பரத்தைமையை நாடிச் செல்லும் தலைவன் தலைவியைப் புறக்கணிக்கவே அவளுக்குள் இருந்த கவலையானது கோபமாக வெளிப்படுத்தப்படுகின்றது. அதனை அவள் மறைமுகமாகவும் நேரடியாகவும் வெளிப்படுத்துகின்றாள்.

**"வீங்குநீர் அவிழ்நீலம் பகர்பவர் வயற்கொண்ட**
**ஞாங்கர் மலர்சூழ் தந்து ஊர்புகுத்த வரிவண்டு..."**

என்ற பாடலில் தலைவி பின்வருமாறு தலைவனை நோக்கிக் கூறுகின்றாள். "என்னைப் பிரிந்து பரத்தையரோடு நீ இருக்கின்றாய். அது மட்டுமல்லாமல் துணங்கைக் கூத்தாடி மகிழ்கின்றாய். என் மனதை துன்பம் வாட்டுவதைப் பற்றியும் கவலைப்படாமல் பரத்தையரோடு நீராடி மகிழ்கின்றாய். நீ பரத்தையரோடு இருந்த மகிழ்ச்சியை நீ என்னைப் பார்க்க வந்த காலை நேரம் கெடுத்துவிட்டது" என்றவாறு கூறி "இங்கு நீ தங்கி இராதே. ஏனென்றால் நீ விரும்பும் பெண்களிடமே தேரைச் செலுத்த விரும்பும் பாகனும் குதிரைகளை அவிழ்த்துவிடாத தேரோடு நின்று நீ இங்கு அதிக நேரம் தங்கிவிட்டாய் என்று எண்ணுவான். நீ ஏறவேண்டுவதுதான்" என்ற தலைவியின் கூற்று ஏளனமாக தலைவனின் தவறை உணர்த்தி கடிந்து கொள்ளும் போக்கையும், குறிப்பால் அவளுடைய கோபத்தையும் வெளிப்படுத்தி நிற்கின்றது எனலாம்.

அதாவது, உன்னை அவசரமாக அழைத்து செல்வதற்கு பூட்டிய தேரைக்கூட அவிழ்க்காமல் அருக்கும் பாகனின் செயலை முன்னிறுத்தி, உன்னை அழைத்துச் செல்ல பாகன் ஆயத்தமாக இருக்கிறான் என்னைக் காண வந்த இந்த நேரம் இன்பமில்லாமல் உனக்குக் கழிந்துவிட்டது எனக்கூறி "விரைந்து அவளிடமே போ" என்று சொல்லில் தலைவியின் துன்பம் கோபமாக வெளிப்பட்டு நிற்பதனைக் காணமுடிகின்றது.

**"அவிழ் பனிப்பொய்கைப் புதுவது தளைவிட்ட**
**தாதுசூழ் தாமரைத் தனிமலர்ப்புறஞ்சேர்பு..."**

என்ற பாடலில், தான் அறிவில்லாதவள், மனத்திட்பம் இல்லாதவள், சொந்த விருப்பம் என்று இல்லாதவள் எனத் தவறாக எண்ண வேண்டாம் என்று தலைவனை நோக்கிக் கூறும் வார்த்தையில், தலைவி தனது உரிமையினையும், அறிவு நிலையினையும் உணர்த்தி நிற்பதனைக் காணலாம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேலும் கூறும்போது, "நீ இங்கு தங்குவதால் எமக்கு மகிழ்ச்சி இல்லை. பரத்தையர் மேல் விருப்பம் கொண்டு அதனால் மனக்குறை உடையவர் போல் தகுதி இல்லாதவற்றைச் செய்யாமல், நீ எண்ணியவற்றெல்லாம் செய்: உன்னை விரும்பிய பெண்களின் விருப்பம் நீங்கும்போது எம்மையும் நினைப்பாயாக" என்கிறாள். இங்கு, தலைவி தன் எதிர்ப்புணர்வினை சூட்சுமமாக வெளிப்படுத்துவதனைக் காணலாம். தலைவன் பரத்தையர் மேல் கொண்ட விருப்பத்தின் காரணமாக, தலைவியிடம் வஞ்சனையான மயக்கும் அன்பு மொழிகளைக் கூறி அவளை சமாளித்துவிடலாம், பொய்ச் சத்தியம் செய்து அவளை நம்ப வைத்து விடலாம் என எண்ணிச் சில வார்த்தைகளைக் கூறியபோது, தலைவி அதனை மறுத்துரைத்து மேற்கண்டவாறு தனது எதிர்ப்பினை வெளியிடுகின்றாள்.

மேலும், தலைவனோடு சேர்த்து அவனது பாகன், பாணன், தோழன் போன்றோரும் தலைவனைப் போல் பொய் கூறியதனை நினைத்து வருந்துகின்றாள். அவ்வாறு வருந்துபவள் அமைதியாக இருந்துவிடாமல், அதனை தலைவனை முன்னிறுத்தி கேட்பதானது அவளது துணிவையே காட்டுகின்றது.

அதாவது, "அவனுக்குரிய இன்பப் பெண்டிர் நீ ஒருத்திதான், வேறு யாரும் இல்லை" என தனது தேரின் மேல் சத்தியம் செய்த பாகன் இப்பொழுது வரமாட்டானா? தலைவன் தன்னிடம் சொல்லாமல் எங்கோ சென்றதனை நான் விசாரிக்க "யான் மறைக்காமல் சொல்லுகிறேன் தலைவன் குற்றமற்றவன்" என யாழ் தெய்வத்தின் மீதும் மற்றும் பல தெய்வங்களின் மீதும் பலமுறை சத்தியம் செய்த பாதணன் வர மாட்டானா? உனது பிரிவைக் கூற உன்னிடம் ஒரு தவறும் காணாமல் உன்னுடைய நல்ல குணங்களைக் கூறிப் பாராட்டிய உன் தோழன் வரமாட்டானா? என எல்லோருடைய பொய்ம்மொழிகளையும் எடுத்துக்கூறி கோபம் கொள்கின்றாள்.

எனவேதான், தன்னைக் காண வந்த தலைவனை நோக்கி "மழைக்காக ஏங்கிப் புதிதாகப் பிடித்த கதிர் வாடிக் கொண்டிருக்கும் நெற்பயிரில் ஏதோ ஒருமுறை சிறுமழை பெய்து அவ்வாட்டத்தை சிறிது போக்கியது போல ஆண்டுக்கு ஒருமுறை வரும் உன்னுடைய வரவை எப்பொழுதும் நீ வருவது போல எண்ணிக் கொள்கிறேன். நீ இப்போது அப்பரத்தையரிடம் சென்று வருக" என்று கூறுகிறாள். இதனை மேலோட்டமாக நோக்கும்போது தலைவி, தலைவனின் அன்பு வார்த்தையில் மயங்கி ஊடல் நீங்கி கூடல் கொண்டு கூறிய வார்த்தைகளானாலும், தலைவன் மீதுள்ள கோபத்தின் எதிர்ப்புக்குரலாகவே மறைமுகமாக அச்சொற்கள் அமைந்துள்ளன எனலாம். இங்கு தலைவி தன் எதிர்ப்பினை அமைதியாக வெளிப்படுத்தி நிற்பதனைக் காணலாம். அதாவது, ஆண்டுக்கொரு முறை வந்து என்னைப் பார்ப்பதிலும் பார்க்க நீ வராமல் இருப்பதே நன்று என்று கூறி தலைவன் தன் தவறை உணர்ந்து நாணம் கொள்ளும்படி செய்து விடுகிறாள்.

மேலும், பரத்தையர் நாடிச் சென்ற தலைவன் தன் உடலிலும் ஆடையிலும் வேறுபாடு காணுமாறு வந்தது கண்ட தலைவி, "இவ்வாறு வந்ததால் உனது நிலை உணர்ந்தேன். இல்லாவிட்டால் மற்ற பரத்தையர் போன்று பொய் வார்த்தைகளால் என் கோபத்தை மாற்றி நம்பச் செய்திருப்பாய் என உறுதியோடு தலைவனின் நாணும்படியான செயலைக் கூறி அவன் தவறை உணர்த்துவதானது தலைவியின் மனத்திண்மையை எடுத்துக் காட்டுகின்றது.

தலைவியின் கோபத்தின் உச்ச நிலையை பின்வரும் பாடல் விளக்கி நிற்கின்றது. தலைவன், பாணன், தலைவனை நம்பும் மகளிர் என அனைவரையும் பித்துப் பிடித்தவர்கள் என வஞ்சிக்கிறாள்.

**"... நின்புகழ் பல பாடும் பாணனும் ஏமுற்றான்**
**... மொழிதோறும் பெண்டிரும் ஏமுற்றார்**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**முன்பகல் தலைக்கூடி நண்பகல் அவள்நீத்து**
**பின்பகல் பிறர்தேடும் நெஞ்சமும் ஏமுற்றாய்''**

என்கிறாள். அதாவது ''உனது புகழையே எப்பொழுதும் சொல்லிக் கொண்டிருக்கும் பாணனும் பித்தேறினான். நஞ்சு உயிரை வாங்கும் என்று அறிந்தும் உண்பவர் போல எனக்கு தம்மிடத்தில் கருணையில்லாமல் போனதைப் பார்த்தும் நீ சொல்வதை நம்பும் மகளிரும், காலையில் ஒருத்தியைக் கூடி, உச்சிக்காலத்தில் அவளைக் கைவிட்டு பலரிடத்தில் சென்று மாலையில் சேர்ந்து வேறு சிலரைத் தேடித் திரியும் நீயும் பித்தேறினாய்'' எனக் கூறுவது எதிர்ப்பின் உச்சநிலையாக விளங்குகின்றது. அதாவது, உனக்கு பகுத்து அறியும் அறிவில்லாது போய், பித்து பிடித்திருப்பதன் காரணமாகவே, செய்யக்கூடாத இழிசெயலான பரத்தையரை நாடி நின்றதாக தலைவனை நோக்கிக் கூறி தன் கோபத்தை வெளிப்படுத்துகிறாள்.

பரத்தையரை நாடிவிட்டு வந்த தலைவனை நோக்கி, தன்மகனைத் தீண்டவேண்டாமென்று நகையாடும் வகையில் தலைவன் நாணம் கொள்ளும்படி மறுப்பதனைக் காணலாம். அதாவது, ''பரத்தையர் வீட்டில் அணிந்து கொண்ட அலங்காரத்தோடு வந்திருப்பதால் எனது மகன் அவற்றைக் கலைத்து விடுவான். எனவே என் மகனைத் தூக்கி வைத்துக் கொள்ளாதே'' என ஏளனமாக மறுக்கிறாள். இங்கு நமது மகன் என்று கூறாமல் எனது மகன் என்று கூறுவதும் தலைவன் மேல் தலைவி கொண்ட கோபத்தையே வெளிப்படுத்துகிறது. திருமணம் முடித்த தன்னையும், தாம் பெற்றெடுத்த குழந்தையையும் கருத்திற் கொள்ளாது பரத்தையருடன் கூடுதலே இன்பம் என்று சென்ற தலைவனுக்கு இவன் செயலின் தவறினை உணர்த்தி, அதன் காரணமாக தனக்கு ஏற்பட்ட துன்பத்தினையும் எடுத்துக்காட்டுவது மனங்கொள்ளத்தக்கது.

எனவேதான் தலைவனை நோக்கி, ''மகனை பொய்யாக பலமுறை கொஞ்சியவாறு என் மனைவியை விட்டுப் போகாமல், அதேநேரம் என் காதலியை விட்டுப் பிரிந்திருக்க இயலாமலும் வாயிலிலேயே நெடுநேரமாக நிற்காதே. அவளிடம் செல்'' என்று அவள் கூறுவதானது அவளின் எதிர்ப்பின் வெளிப்படையாகவே அமைந்துள்ளது.

மேலும், கோபத்தின் மிகுதியால் பரத்தையரை நாடிச் சென்ற தலைவனை ''ஏடா நினக்குத்தவறுண்டோ'' என அழைப்பதனைக் கூட காணலாம். எப்போதும் துன்பங்களையும் சோகங்களையும், ஏமாற்றங்களையும் அடக்கி வைத்துப் பொறுமையாக இருக்கும் உள்ளம், திடீரென அவற்றின் ஒட்டு மொத்த வடிவான எதிர்ப்பினை, மொழியக்கூடாத சொற்களை கொண்டு வெளிப்படுத்துவது இயல்பானதாகும். அந்தவகையில் தலைவியும் தனது நலத்தினை சிந்திக்காது தன் இன்பமே பெரிதெனக் கருதும், தன்னை பொய் மொழிகளால் ஏமாற்றும் தலைவனை ''ஏடா'' என விளித்து தன் எதிர்ப்பினை, கோபத்தினை வெளிப்படுத்துகிறாள்.

**''ஏடா! நினக்கும் தவறுண்டோ? நீங்கு பெற்றாய்**
**இமைப்பின் இதழ் மறைபு ஆங்கே கெடுதி**
**நிலைப்பாய் அறியவும் நின்நொந்து நின்னைப்**
**புலப்பார் உடையர் தவறு''**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதாவது, தலைவனை விளித்து, "அடே., உனக்கென்ன தவறு? கண்ணை இமைக்கும்போது அந்த நொடியில் பார்வை மறைவது போல் நீ என்னைக் கைவிட்டுச் சென்றாய். அத்தகைய உனக்கு என்ன தவறு? உன்னுடைய அந்தக்க் குணத்தை அறிந்தாலும் உன்னால் மனம் வருந்தி உன்னைத் திருத்தலாம் என்று கருதிக் கோபம் கொள்பவர் தான் தவறு உடையவர்" எனக் கூறுகிறாள். இங்கு பரத்தமை ஒழுக்கும் காரணமாக தன்னைப் பிரிந்து சென்ற தலைவனை திருத்திவிடலாம் என்ற நம்பிக்கையில் காத்திருக்கும் தலைவி, அது முடியாத காரியம் என்ற நிலை வந்தபோது "தானே தவறுடையவள்" என தன்னைத் தாழ்த்திக் கொண்டு தலைவனைக் கடிந்து கொள்வதானது, தலைவன் மீது கொண்ட கோபத்தின் காரணமாக எழுந்த எதிர்ப்புணர்வாகவே வெளிப்படுகின்றது எனலாம்.

எனவே, சங்ககால மருதத்திணைப் பாடல்களை நோக்கும் போது, தலைவி ஊடல் நீங்கி கூடல் கொண்டு இணங்கிப் போனாள் என்பதற்கும் மேலாக தன் உரிமைக்காக இறுதிவரை போராடியிருக்கிறாள் என்பது புலனாகின்றது. மேலும், தன்மான உணர்ச்சிக் கொண்டவளாக தன் கோபத்தினையும், எதிர்ப்பினையும் வெளிப்படுத்தி நின்றமையைக் காண முடிகின்றது. தலைவன் மேல் ஊடல் கொண்ட தலைவி, பின்னர் தலைவனின் மயக்கும் அன்பு கலந்த பொய்மொழிகளைக் கேட்டும், தோழியின் அறிவுரைகளைக் கேட்டும் குடும்பத்திற்காகவும், தன் பிள்ளைக்காகவும் ஊடல் நீங்கி கூடல் கொள்வதாக சங்ககால மருதத்திணைப் பாடல்களின் மூலம் அறிய முடியினும் அப்பாடல்களின் நேரடியாகவும் மறைமுகமாகவும் பெண்ணின் எதிர்ப்புக்குரல் ஓங்கி ஒலித்திருப்பதைக் காணக்கூடியதாகவுள்ளமை மனங்கொள்ளத்தக்கதாகும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வரைபு - 2

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பயன்தரு அந்தூரிய வளர்ப்பு

வித்யாஷினி லோகேஸ்வரன்,
விடுகை வருடம்,
விவசாயப் பீடம்.

## 1.0 அறிமுகம்

இன்றைய கால கட்டத்தில் மலர் வளர்ப்பானது பொழுதுபோக்கு அம்சம் மட்டுமல்லாது பணமீட்டும் சுயதொழில் வாய்ப்பாகவும் அமைந்துள்ளது. அந்தூரிய மலரானது மிகவும் பிரபல்யமான அயன மண்டல வெட்டு மலராகும். சாதகமான காலநிலை நிபந்தனைகள், இலகுவான வளர்ப்பு முறை மற்றும் சந்தைக் கேள்வி போன்றவற்றின் அடிப்படையில் அந்தூரிய மலர்வளர்ப்பு இலங்கையில் பரவலான முறையில் செய்கை பண்ணப்படுகின்றது. இது கொய் மலர் (Cut flower), கொய் இலை (cut foliage) மற்றும் சட்டித் தாவரம் (Pot plant) என்ற அடிப்படையில் வளர்க்கப்படுகின்றது. இருப்பினும் இலங்கையில் கொய்மலர் வகையும் சட்டித்தாவர வகையுமே பெருமளவில் பயிரிடப்படுகின்றன. ரொபிகல் சிவப்பு (Tropical red), மிடோரி (Midori), பண்டேசியா (Fantasia), ஏஞ்சல் (Angel), பிஸ்டாசே (Pistsche) போன்ற கொய்மலர் பேதங்களும் லேடிஜேன் (Ladyjane) சட்டித்தாவர பேதமும் அதிகளவில் வளர்க்கப்படுகின்றன.

## 2.0 சாதக சூழல் நிபந்தனைகள்

- வெப்பநிலை பகல் : 25-35°C, இரவு: 15°C
- சார் ஈரப்பதன் : 70%
- நிழல் : 70-80%
- ஒளிச்செறிவு : 20,000Lux

## 3.0 வளர்ப்பு ஊடகங்கள்

1) இலை உக்கல் : 2
   மாட்டெரு : 1
   மணல்மண் : ½
   ஓட்டுத்துண்டு/செங்கல் துண்டு 1½ - 2": ¼
   கரித்துண்டு : ½

2) 2 - 3" தென்னம் பொச்சி துண்டுகள் - 1
   2 - 3" ஓடு/செங்கல் துண்டுகள் - 1

3) 2 – 3" தென்னம் பொச்சி துண்டுகள் மாத்திரம்

இவை மூன்று மாதத்திற்கொரு தடவை மாற்றீடு செய்யப்படல் வேண்டும். களி, பிளாஸ்திக்கு அல்லது சீமெந்தாலான சாடியின் அடியில் நீர் வடிந்து செல்லும் வண்ணம் துவாரமிட்டு, துவாரத்தை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மூடாதபடி ஓடு அல்லது செங்கல் துண்டால் ஒரு படை நிரப்பி அதன் மேலே உலர்ந்த இலை சருகிட்டு பின் தயார்நிலையில் உள்ள வளர்ப்பூடகம் நிரப்பப்பட்டு வளர்ப்புச்சாடி தயார் செய்யப்படும்.

## 4.0 வளர்ப்பு முறைகள்


அந்தூரியமானது வர்த்தக ரீதியில் சாடிமுறை வளர்ப்பு (Pot culture), மேடைமுறை வளர்ப்பு (Cultivation in bed) மற்றும் பீலி முறை வளர்ப்பு (Gutter cultivation) போன்ற முறைகளில் வளர்க்கப்படுகின்றது. சாடி முறையில் ஒரு சாடியில் ஒரு தாவரம் வீதம் நாட்டப்பட்டு தனித்தனியாக பராமரிக்கப்படும் துளிப்பான் நீர்ப்பாசன முறையே பெரும்பாலும் அமுல்படுத்தப்படும்.

மேடைமுறை வளர்ப்பானது 0.1mm தடிப்பான பொலித்தீனால் எல்லைப்படுத்தப்பட்டு ஒரு வடிகான் குழாயையும் கொண்டிருக்கும். இங்கு வடிகான் குழாய் அதிகப்படியான நீரை வெளியேற்ற உதவும் மேடையின் எல்லைகள் உறுதியான திரவியங்களால் வலுவூட்டப்பட்டிருக்கும். பொதுவாக மேடையானது 1.2m-1.4m அகலமுடையதாகவும் நீளம் வசதிக்கேற்பவும் அமைக்கப்படும். மேலும் மேடை 0.03% சாய்வுடையதாக நிர்மாணிக்கப்படும். தாவரங்கள் 45cm இடைவெளியில் இரண்டு தாவரம்/குழி வீதம் நடப்படும்.




உரு 1: மேடைமுறை வளர்ப்பு உ குு.வெ.முக தோற்றம்

பொலிஸ்டயரீனினாலான பீலிமுறை வளர்ப்பானது இலங்கையில் புதிதாக அறிமுகம் செய்யப்பட்ட வளர்ப்பு முறையாகும். இதில் 'V' மற்றும் 'W' வடிவமான பீலிகள் பயன்படுத்தப்படுகின்றன. இங்கும் பீலிகள் பொலித்தீனால் எல்லைப்படுத்தப்பட்டு வளர்ப்பு ஊடகத்தால் நிரப்பப்பட்டு அடியில் வடிகான் குழாய் பொருத்தப்பட்டு பயன்படுத்தப்படும். 'V' வடிவ பீலியில் தாவரங்கள் இரு வரிசையிலும் 'W' வடிவ பீலியில் தாவரங்கள் ஒரு வரிசையிலும் நடப்படுகின்றன.




உரு 2: "V" , "W" வடிவ பீலி-கு.வெ.முக தோற்றம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 5.0 இனப்பெருக்கம்

அந்தூரியமானது பதிய முறையில் தண்டுத் துண்டங்கள், உறிஞ்சிகள், இழைய வளர்ப்பு மற்றும் இலிங்கமுறை வித்துக்கள் மூலமாக விருத்தி செய்யப்படுகின்றது. இலிங்கமில் முறையில் உருவாக்கப்படும் மகட்தாவரங்கள் தாய்த் தாவர பண்பை ஒத்ததாகவும் இலிங்கமுறையில் உருவாக்கப்படும் மகட்தாவரங்கள் தாய்த்தாவரத்திலிருந்து வேறுபட்ட பண்பை காண்பிப்பதால் வர்த்தக ரீதியான வளர்ப்பு இலிங்கமில் முறைகளையே சார்ந்துள்ளது. இருப்பினும் இலிங்கமுறை இனப்பெருக்கமானது மாறல்களுடன் கூடிய பல்லின சந்ததியை தோற்றுவிப்பதால் சாதகமான இயல்புகள் தெரிவு செய்யப்பட்டு புதிய பேதங்கள் உருவாக்கப்படும்.

## 5.1 இலிங்கமில் முறை இனப்பெருக்கம்

நன்கு முதிர்ச்சியடைந்த தாய்த்தாவரத்தின் அடிப்பகுதித் தண்டை சிறுசிறு துண்டுகளாக வெட்டுவதன் மூலம் தண்டுத்துண்டங்கள் பெறப்படுகின்றன. இங்கு ஒவ்வொரு தண்டுத்துண்டமும் குறைந்தது ஒரு உறங்குநிலை அரும்பையேனும் கொண்டிருத்தல் அவசியமாகும்.

இத்துண்டங்கள் பொருத்தமான பங்கசு நாசினியால் பரிகரிக்கப்பட்டு மணல்மண், இலை உக்கல் 1:1 என்ற விகிதத்தில் கொண்ட வளர்ப்பூடகத்தில் பகுதியாக புதைக்கப்பட்டு நிழலானதும் குளிர்மையானதுமான இடத்தில் ஒருசில வாரங்களுக்கு பேணப்படும். புதிய அரும்பு மற்றும் வேர் உருவாதலை தொடர்ந்து துண்டங்கள் வேறு சாடிக்கு மாற்றப்பட்டு பின் நடுகை செய்யப்படும்.

உறிஞ்சிகளும் நடுகைக்குரிய சிறந்த மூலப்பொருளாகும். இருப்பினும் ஒரு தாவரத்திலிருந்து வருடமொன்றில் 2-3 உறிஞ்சிகளையே பெற முடியும். மேற்கூறிய முறைகள் மூலம் சொற்ப அளவு நடுகை நாற்றுக்களையே பெற முடிவதால் வர்த்தக ரீதியிலான பண்ணைகள் தமக்கான நாற்றுத் தேவையை இழைய வளர்ப்பு தொழில்நுட்பத்தின் மூலம் பூர்த்தி செய்கின்றன. இழைய வளர்ப்பு மூலம் மிகவும் சிறியதொரு தாய்த்தாவர இழையத்திலிருந்து மிகக் குறுகிய காலத்தில் பெரும் எண்ணிக்கையான தாய்த்தாவரத்தின் இயல்பை ஒத்த நுண்ணங்கி தாக்கமற்ற மகட்தாவரங்கள் பிறப்பிக்கப்படுகின்றன.

## 5.2 இலிங்கமுறை இனப்பெருக்கம்

இலிங்கமுறை தாவர கலப்புப்பிறப்பாக்கம் புதிய அந்தூரிய பேதங்களை உருவாக்கப் பயன்படுத்தப்படுகின்றது. பெற்றோர் தாவரங்கள் அவற்றின் சாதகமான புறத்தோற்ற அமைப்புக்களான நிறம், மடல் வடிவம், மடலளவு, விளைச்சல் மற்றும் உயிரியல், உயிரியல் அல்லாத காரணிகளுக்கான எதிர்ப்புத்திறன் போன்றவற்றினடிப்படையில் தெரிவு செய்யப்படும்.

### 5.2.1 மகரந்த சேர்க்கை

அந்தூரிய மலர் தாவரவியல் அடிப்படையில் ஒரு பூந்துணர் ஆகும். பெருந்தொகையான சிறிய பூக்கள் மடல் மஞ்சரியில் ஒழுங்குபடுத்தப்பட்டிருப்பதுடன் நிறமான இதயவுருவான மடலால் சூழப்பட்டு காணப்படும். இவை இரண்டும் ஒன்று சேர்ந்தே அந்தூரிய மலரென பொதுவாக அழைக்கப்படுகிறது.

அந்தூரிய மலர் மஞ்சரியின் பூக்கள் இருபாற்பூக்களாகும். அதாவது ஆணகமும் பெண்ணகமும் ஒரே பூவில் அமைந்துள்ளது. ஆயினும் ஆணக முதிர்வும் பெண்ணக முதிர்வும் காலத்தால் தனிமைப்படுத்தப்பட்டுள்ளது. மலர் விரிந்து ஏறத்தாழ 7 நாட்களின் பின் மடல் மஞ்சரி சொரசொரப்பானதும் ஒட்டும் தன்மையானதுமான மேற்பரப்பாக மாறும். இது பூக்களின் பெண்ணக குறி முதிர்வதனாலேயாகும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெண்ணக முதிர்வானது மடல் மஞ்சரியின் அடியிலிருந்து ஆரம்பித்து நுனியை நோக்கி அபிவிருத்தியடையும்.

மடல் விரிந்து 14-21 நாட்கள் அல்லது பெண்ணக முதிர்வின் பின் 7-10 நாட்களின் பின் ஆணகம் முதிர்ச்சியடைந்து மகரந்த துகள்களை உற்பத்தி செய்ய ஆரம்பிக்கும். இச்செயற்பாடு வெண்ணிற துகள்களால் சூழப்பட்ட மடல் மஞ்சரியாக வெளிக்காட்டப்படும். இம்மகரந்த துகள்கள் உலர் தூரிகை மூலம் கண்ணாடி தட்டில் சேகரிக்கப்படும்.

பெண்ணகம் முதிர்வடைந்த தாய்த்தாவரம் தெரிவு செய்யப்பட்டு குறியானது பொருத்தமான ஆண்தாவர மகரந்தம் மூலம் செயற்கையான முறையில் மகரந்தச் சேர்க்கை செய்யப்படும். மகரந்தச் சேர்க்கையானது காலை நேரங்களில் தொடர்ச்சியாக மூன்று தினங்களுக்கு செய்யப்படல் வேண்டும். ஒவ்வொருமுறை மகரந்தச் சேர்க்கை செய்த பின்னும் மலரானது பொலித்தீன் தாளால் முழுமையாக சுற்றிக்கட்டப்படும். தாய்த்தாவர பேதம், ஆண் தாவர பேதம் மற்றும் மகரந்தச் சேர்க்கை செய்த திகதி அடங்கலான சிட்டையொன்று இணைக்கப்படல் அத்தியாவசியமாகும்.

### 5.2.2 விதை நாற்று உருவாக்கம்

மகரந்தச் சேர்க்கை வெற்றிகரமெனில் மடல் மஞ்சரி மேற்பரப்பில் பச்சைநிற குண்டூசிமுனை போன்ற சிறிய வெளிநீட்டங்கள் உருவாதலை அவதானிக்க முடியும். இவை 5-6 மாதங்களின் பின் ஓரளவு பெரிய மஞ்சள் அல்லது சிவப்பு நிறக் கனிகளாக விருத்தியடையும். ஒவ்வொரு கனியும் ஒன்று அல்லது இரண்டு விதைகளை ஜெலி போன்ற சளியத்தில் புதைந்துள்ளவாறு கொண்டிருக்கும். பூரண விருத்தியடைந்த கனிகள் சேகரிக்கப்பட்டு நீரில் வைத்து விரல்களால் நசிப்பதன் மூலம் விதைகள் வேறாக்கப்படும். ஜெலி போன்ற சளியம் வித்து முளைத்தலை நிரோதிக்கும் இரசாயனத்தைக் கொண்டிருப்பதால் அது நீரால் பலமுறை அலசப்பட்டு இறுதியில் கிருமிநாசினியாலும் பரிகரிக்கப்பட்டு தயார்நிலையில் உள்ள சாடியில் விதைக்கப்படும்.

வித்து முளைத்தலுக்கான சாடியானது அகன்ற வாயுடையதாகவும் ஆழம் குறைந்ததாகவும் அடியில் துவாரமுடையதாகவும் தெரிவு செய்யப்படும். அடியில் ஓட்டுத் துண்டுகளும் மேலே இலைச்சருகுகளும் அதன் மேலே வளர்ப்பூடகமும் இறுதியில் 1/2" ஓட்டுத்துண்டுகளும் நிரப்பப்படும். வித்துகள் இந்த ஓட்டுத்துண்டங்களின் மேலே தூவப்பட்டு பின் ஒளி உட்புகவிடு கண்ணாடி ஒன்றினால் சாடியின் வாய்ப்பகுதி மூடப்படும். பின் சாடியானது நீர் நிரம்பிய தட்டொன்றின் மேலே வைக்கப்படும். இங்கு நீரானது மயிர்த்துளை எழுகை மூலமாக சாடியைச் சென்றடைகின்றது.

விதை நாற்றுக்கள் இரண்டு இலைகளை விருத்தி செய்தவுடன் சாடியானது நீர்த்தட்டிலிருந்து அகற்றப்பட்டு சாதாரண முறையில் பூவாளி மூலம் நீரூற்றப்படும். 4-5 மாதங்கள் பூர்த்தியானதும் விதை நாற்றுக்கள் தனித்தனியான பைகளில் அல்லது சாடியில் நாட்டப்படும்.

இலிங்க முறையில் விருத்தி செய்யப்பட்ட நாற்றுக்கள் அவை பூக்கும் காலம் வரை தொடர்ச்சியாக பரிசோதிக்கப்பட்டு விரும்பத்தக்க இயல்புகள் கொண்ட நாற்றுக்கள் தெரிவு செய்யப்பட்டு புதிய பேதமாக சந்தையில் பிரகடனப்படுத்தப்படும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 6.0 நீர்ப்பாசனம்

காலை நேர நீர்ப்பாசனம் நோய்த்தொற்றுகளை குறைப்பதால் பெரிதும் விரும்பத்தக்கது. பூவாளி,தூறல் முறை (Sprinkler) அல்லது துளிப்பான் முறை (Drip irrigation) மூலம் நீர்ப்பாசனம் மேற்கொள்ளப்படலாம். வர்த்தக ரீதியான வளர்ப்புகள் பெரும்பாலும் தன்னியக்க முறைகளையே பின்பற்றுகின்றன.

## 7.0 உரப் பாவனை/ha

### 7.1 பதிய அவத்தை (Vegetative growth stage)

N: P: K=20:20:20

| | |
|---|---|
| அமோனியம் சல்பேற்று | ($NH_4SO_4$) = 10kg |
| மும்மை சுப்பர் பொஸ்பேற்று | (TSP; $P_2O_5$) = 4kg |
| மியுரியேற் ஒவ் பொட்டாசியம் | (MOP;$K_2O$) = 3kg |

½ தேக்கரண்டி/தாவரம்/வாரம் வீதம் உரம் இடப்படும்.

### 7.2 பூக்கும் அவத்தை (Reproductive growth stage)

N: P: K=7:16:19

| | |
|---|---|
| அமோனியம் சல்பேற்று | ($NH_4SO_4$) = 3kg |
| மும்மை சுப்பர் பொஸ்பேற்று | (TSP; $P_2O_5$) = 1.5kg |
| மியுரியேற் ஒவ் பொட்டாசியம் | (MOP;$K_2O$) = 3kg |

½ தேக்கரண்டி/தாவரம்/வாரம் வீதம் உரம் இடப்படும்.

## 8.0 பூச்சி பீடை, நோய்க்கட்டுப்பாடு

அந்தூரியம் திரிப்ஸ் பூச்சிகள் (Thrips) தாவரத்தின் இளம் பகுதிகளிலிருந்த சாற்றை உறிஞ்சி சேதம் விளைவிக்கின்றன. இதன் காரணமாக வெள்ளை நிற கோடுகள் போன்ற பிரதேசங்களை புதிதாக திறந்துள்ள இலைகளிலும் மலர்களிலும் அவதானிக்க முடியும். சுகாதாரமான சூழல் நிபந்தனைகளை பேணுவதுடன் வளர்ப்பு ஊடகத்தை அடிக்கடி கலத்தல் மூலமாகவும் மற்றும் இமிடோகுளோபிரிட் (Imidocloprid), காபோசல்வன் (Carbosalfan), டைமிதோவேற் (Dimethoate) போன்ற பீடைநாசினிகளை விசிறுவதன் மூலமாகவும் நோய்த்தாக்கம் கட்டுப்படுத்தப்படுகின்றது.

அந்தூரியம் சிற்றுண்ணி (Mites) என்பது மிகவும் சிறிய சிவப்பு நிறப் பூச்சியாகும். இவை இலைகளின் கீழ்ப்பரப்பில் தாவரச்சாற்றை உறிஞ்சி பாதிப்பை ஏற்படுத்துகின்றன. பூக்களையும் தாக்கவல்லவை. சேத அறிகுறிகளாக வெளிறிய மற்றும் சுருளடைந்த இலைகள், இளம் பழுப்பு நிற ஒழுங்கற்ற படலங்களுடன் கூடிய மலர்கள் இனங்காணப்படும். மாரி காலத்தை விட கோடை காலத்திலேயே ஒப்பீட்டளவில் அதிக சேதம் அவதானிக்கப்படுகிறது. பீடைத்தாக்கமானது சூழல்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெப்பநிலையைக் குறைப்பதன் மூலம் கட்டுப்படுத்தப்படுகின்றது. சேதம் அதிகமெனில் தகுந்த மைற் நாசினி (Miticide) பயன்படுத்தலாம்.

அந்தூரிய பக்ரீரியா வாடல் நோய் சாந்தோமொனாஸ் பக்ரீரியாவால் உண்டாக்கப்படுகின்றது. நீரூற்றும் உபகரணங்கள் மற்றும் தாவர நாற்றுக்கள் மூலமாக நோய் பரம்பலடைகிறது. இலைகள் மஞ்சள் நிறமடைந்து பின் அம்மஞ்சள் நிற பிரதேசங்கள் உலர்வடைந்து பழுப்பு நிறமாகின்றன. சேதம் இலை விளிம்புப்பகுதியில் ஆரம்பித்து உள்நோக்கி பரம்பலடைகிறது. இறுதியில் முழுத்தாவரமும் முற்றாக உலர்வடைந்து இறக்கும் நிலையை அடையும். பூரண சுகாதார நிலைமைகளைப் பேணுவதன் மூலமாகவும் தாக்கத்திற்குள்ளான தாவரங்களை பிடுங்கி எரிப்பதன் மூலமாகவும் பாலனம் செய்யமுடியும். பாதிப்பு அதிகமெனில் தகுந்த பக்ரீரியநாசினி பாவனை உகந்தது.

அந்தூரிய வேரழுகல் பங்கசு மூலம் ஏற்படுகின்றது. நோய் நிலைமை நீர் தேங்கவல்ல மற்றும் குறை காற்றோட்டமான வளர்ப்பு ஊடகங்களால் வீரியமாகிறது. மேற்கூறிய சந்தர்ப்பங்களை ஒழிப்பதன் மூலமும் கப்டான் (Captan), திராம் (Thiram), மெடாலக்சில் (Metalaxil) போன்ற பங்கசுநாசினிகளை விசிறுவதன் மூலமும் நோய் நிலைமை கட்டுப்படுத்தப்படும்.

## 9.0 மலர் அறுவடை

நடப்பட்ட நாற்றின் அடிப்படையில் இழைய வளர்ப்பு மூலம் பெறப்பட்ட தாவரம் 7-8 மாதங்களிலும் உறுஞ்சி மூலம் பெறப்பட்ட தாவரம் 6-9 மாதங்களிலும் விதை மூலம் பெறப்பட்ட தாவரம் 15-18 மாதங்களிலும் பூக்கும் அவத்தையை அடையும். அந்தூரியம் வருடம் பூராகவும் பூக்கும் இயல்பைக் கொண்டிருந்தாலும் மாரி காலத்திலேயே அதிகளவிலான மலர்களை தோற்றுவிக்கின்றன. ஒவ்வொரு இலை அச்சிலும் ஒவ்வொரு மலர் பிறப்பிக்கப்படுகின்றது. இலை, மலர், இலை என்றவாறு அந்தூரிய தாவர வளர்ச்சியும் விருத்தியும் அமைந்துள்ளது.

மடல் விரிந்து 8-12 நாட்களின் பின் அந்தூரிய மலரானது அறுவடை செய்யும் முதிர்ச்சியை எய்துகின்றது. அநேகமாக இது புதிய இலை தோன்றலுடன் ஒத்திசைகிறது. அறுவடை செய்யும் போது பெண்ணக முதிர்வு பகுதியாகவோ அல்லது முழுமையாகவோ இருப்பதுடன் ஆணக முதிர்வு அனுமதிக்கப்படுவதில்லை. சிறந்த நாற்றுகள் 7-10 மலர்களை ஆண்டொன்றிற்கும் சாதாரண நாற்றுகள் அண்ணளவாக 6 மலர்களை வருடமொன்றிற்கு விளைச்சலாக தரும். காலைப்பொழுதே மலர் அறுவடைக்கு மிகவும் உகந்தது. அறுவடை செய்தவுடன் மலர்கள் உடனடியாக நீரில் இடப்பட்டு பொதி செய்யும் இடத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

சந்தை நிலவரத்தினடிப்படையில் தகுந்த பொதி செய்யும் முறை தீர்மானிக்கப்படும். மலரின் வெட்டப்பட்ட முனையானது ஈரமாக்கப்பட்ட பருத்திப் பஞ்சு, மலர் இடமாற்ற ஜெல் (Flower transport gel) போன்ற தகுந்த திரவியத்தால் பரிகரிக்கப்பட்டு மலரின் மடலானது ஒளி ஊடுபுகவிடு பொலித்தீன் அல்லது ரிசுத்தாளினால் சுற்றப்படும். இது தவிர தேவையின் அடிப்படையில் மலர்கள் பொருத்தமான வாடல் நிரோதி இரசாயனங்களால் பரிகரிக்கப்படும் தனியான பூக்கள் நெளிவுள்ள காட்போட் (Corrugated card board) பெட்டிகளில் படைகளாக அடுக்கப்பட்டு 12-16$^{0}$C குளிர்நிலையில் களஞ்சியப்படுத்தப்பட்டு சந்தைப்படுத்தப்படும். மலரானது அறுவடை செய்த இடத்திலிருந்து விற்பனை செய்யும் இடம் வரை 12-16$^{0}$C வெப்பநிலையில் பேணப்படல் சிறந்தது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கையை பொறுத்தவரையில் அந்தூரிய செய்கை மற்றும் அறுவடையில் அதிகம் பாதிப்பு ஏற்படாத போதிலும் அறுவடைக்கு பின்னரான இழப்புகள் பெருமளவில் தாக்கத்தை ஏற்படுத்துகின்றன. இது மலர்களை சரியான முதிர்ச்சி நிலையில் அறுவடை செய்தல், அறுவடையின் பின்னரான சிறந்த பரிகரிப்பு முறைகள், சிறந்த பொதியிடல் முறைகள் மற்றும் துண்டிக்கப்படாத 12-16$^{o}$C குளிர்ச்சங்கிலி (Unbroken cold chain) பேணல் போன்றவற்றை பின்பற்றுவதன் மூலம் சீர்படுத்த முடியும். அத்துடன் அறுவடைக்குப் பின்னரான தரம் பேணுதலுக்கான ஆய்வுகள் முன்னெடுக்கப்பட்டு இலங்கை நிலைமைகளுக்கேற்ற தீர்வுகள் கண்டறியப்படுதல் காலத்தின் தேவையாகும்.

**உசாத்துணை:**

www.eduframe.net/OUSLEASYNOW/Text/Horticulture.pdf accessed on May 17, 2013
www.botanicalgardens.gov.il/images/pdef/anthurium.pdf accessed on May 17, 2013
www.jenny-flower.com/modules/articles/article.php?1d=20 accessed on May 15, 2013



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பசுமை புரட்சியின் பிரதேச ரீதியான மாற்றங்கள் - தென் ஆசியா

*M.H. ரஹ்ணா பாத்திமா.*
*விடுகைவருடம்,*
*புவியியல் விசேட துறை,*
*கலைப்பீடம்.*

## பசுமை புரட்சி ஓர் அறிமுகம்

1950 களின் இறுதிப்பகுதியில் அமெரிக்காவின் Rockefeller Foundation, Ford Foundation ஆகியவற்றின் உதவியுடன் மெக்சிகோவில் ஆரம்பிக்கப்பட்டது. பின்னர் அமெரிக்கா, இந்தியா போன்ற அரசுகளும் நடைமுறைப்படுத்தின. ஐக்கிய அமெரிக்காவின் உதவி ஸ்தாபனங்களின் உதவியுடன் அதன் உத்தியோத்தர் Sir. William Gro முதன் முதலில் முன்வைத்தார். வளரச்சியடைந்த நாடுகளில் 1950-1970 காலப்பகுதியிலும் 1967 களில் காலனித்துவ நாடுகளிலும் அறிமுகமாகியது. அவ்வகையில் சடுதியான மாற்றம் புரட்சியாக மாறுகின்றது அல்லது செயற்பாட்டில் மாற்றம் ஏற்படுகின்றது. எனவே விவசாயத்தில் ஏற்படும் திடீர் மாற்றம் உயர்ந்த விளைச்சலை எதிர்ப்பார்த்து சிறந்த தொழில்நுட்ப, நவீன இயந்திரங்கள், புதிய விதையினங்கள், மற்றும் சிறந்த நீர்ப்பாசனம் என்பனவற்றைப் பெற்று விவசாயத்தில புரட்சிகரமான மாற்றங்களை ஏற்படுத்துவது பசுமைப் புரட்சியாக காணப்படுகிறது. இன்னும் "பசுமை புரட்சி என்பது வேளாண்மைத்துறையில் காணப்படும் பழைய உற்பத்தி முறைகளை மாற்றி அறிவியலையும் தொழில் நுட்பத்தையும் உள்ளடக்கி அதன் மூலம் விளைச்சலைப் பெருக்குதல்" (ம.வர்ணகுலசிங்கம்).

இவ்வாறு பசுமை புரட்சியை தோற்றுவித்த தந்தையாக Norman Boriaag காணப்படுகிறார். அவ்வகையில் 1940 களில் அறிமுகப்படுத்தப்பட்ட பயிர்செய்கை நுட்பங்கள் வேளாண்மை உற்பத்தியை பன்மடங்காகப் பெருக்கியதுடன் பிரதேச ரீதியாக பல்வேறு மாற்றங்களையும் ஏற்படுத்தியது. அவ்வகையிலே வேளாண்மைத் தொழில்நுட்பமும் அதனால் நிகழ்ந்த சமூக, பொருளாதார அரசியல் மாற்றங்களும் பசுமைப் புரட்சி எனப்படுகிறது. இந்தியா போன்ற பல மூன்றாம் நிலை நாடுகள் பட்டினிச்சாவை எதிர்நோக்கிய அக்காலகட்டத்தில் பசுமை புரட்சி கொண்டு வந்த மாற்றங்கள் பயனளித்தன. பல குறைபாடுகளுடன் இப்புரட்சி காணப்படுகின்ற போதிலும் சூழலியல், சமூக, பொருளாதார, அரசியல் மற்றும் கலாசார தளங்களில் நிகழ்ந்த ஒரு முக்கியமான புரட்சியாக காணப்படுகிறது. உதாரணமாக:- இந்தியா- கோதுமை-83%, அரிசி-47%, பங்களாதேஷ்- அரிசி-27%, பாகிஸ்தான்- கோதுமை போன்ற நாடுகள் பயன்பெற்றன.

## பசுமை புரட்சியின் பிரதான நடவடிக்கைகள்

**01. உயர் வகை விதையினங்கள் அறிமுகப்படுத்துதல் :-** பசுமை புரட்சியின் பிரதான நோக்கமாக உற்பத்தியைப் பெருக்குவதாகும். அதனை நோக்கமாகக் கொண்டே அறுவடைகளை அள்ளித்தரும் நோக்கில் புதிய விதையினங்கள் சிறந்த வகையில் அறிமுகப்படுத்தப்பட்டன. உதாரணமாக:- நெல்- IR-8, IR-5, Jaya, Jaya, IER, ஹம்ஸா-534, சோனா-35, கோதுமை- சோனாலிகா-308, பூசா வைசாக்கி, கரும்பு- KO-148, KO66-11, பருத்தி- J-34, சோளம்- விஜய், CSH, 5308, H-B1, H-104, சபின், பஸ்கா போன்ற ஒவ்வொரு பயிர்ச்செய்கை நடவடிக்கைகளிலும் அதிக விளைச்சலைத்தரும் புதிய விதையினங்கள் அறிமுகப்படுத்தப்பட்டன.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**02. புதிய கருவிகள் மற்றும் இயந்திர தொழில் நுட்பப் பாவனையை அதிகரித்தல் :-** முற்பட்ட காலங்களில் பயன்படுத்தப்பட்ட கால்நடைகளுக்குப் பதிலாக முற்றுமுழுதாக வேளாண்மையில் புதிய கருவிகளும், இயந்திர தொழில் நுட்ப முறைகளையும் பயன்படுத்தும் முறை அறிமுகப்படுத்தப்பட்டது. மனித வலு குறைக்கப்பட்டு இயந்திரமயமாக்கம் பரவியது. நிலம் பண்படுத்தல் முதல் சந்தைபடுத்தல் வரை இயந்திரமயமாக்கப்பட்டது. உதாரணமாக:- அறுவடை இயந்திரங்கள், கரும்பு சாறு எடுக்கும் இயந்திரங்கள், விதையினங்கள் பயிரிடும் மற்றும் நீர்ப் பாய்ச்சும் இயந்திரங்கள் என்பன அறிமுகப்படுத்தப்பட்டன.

**03. செயற்கை இரசாயன உரவகை பாவனை மற்றும் பூச்சி கொள்ளிகளின் அறிமுகம்:-** விவசாய விளை நிலங்களை மேம்படுத்தவும் இழந்த வளத்தினை மீளப்பெறவும் மற்றும் அதிகரித்த விளைச்சலைப் பெறவும் பொட்டாசியம், நைதரசன், சோடியம் கலந்த இரசாயன உரவகைகள் கண்டுபிடிக்கப்பட்டன. அத்தோடு களைகளை அகற்றவும், பூச்சிகளை அழிப்பதற்கும், விவசாயப்பயிர்களின் துரித வளர்ச்சிக்கும் உற்பத்தி அதிகரிப்பதற்கும் இவை பயன்படுத்தப்பட்டன. இதனடிப்படையில் 1950-1959 காலப் பகுதியில் நைதரசன் பரமனைட் ஆண்டுக்கு 16% உம் பொசுபரசு 17% உம் பொசுபேற்று 29% ஆகவும் அதிகரித்தமையும் குறிப்பிடத்தக்கது. 1966 ல் 13.6 இலட்சம் தொன்னாக காணப்பட்ட உரப்பாவனை 1981ல் 50 இலட்சம் தொன்னாக இந்தியாவில் அதிகரித்தமையானது பசுமை பரட்சியால் ஏற்பட்ட பாரிய மாற்றமாகும்.

**04. சிறந்த நீர்பாசனத்திட்டம்:-** பசுமை புரட்சியின் மூலம் சிறப்பான முறையில் நீர்ப்பாசனத்திட்டங்கள், நீர்ப்பாசன நடவடிக்கைகள் முன்வைக்கப்பட்டன. நீர்ப்பாசனமானது இயந்திரமயமாக்கப்பட்டு தொழில்நுட்ப முறையில் மேற்கொள்ளப்பட்டது. குழாய்களின் மூலம் நீர்ப்பாய்ச்சும் திட்டம் கொண்டுவரப்பட்டது. மாரி, கோடை காலங்களில் நீர்ப்பாசன நடவடிக்கைகள் மூலம் தொடர்ந்தும் பயிர்ச்செய்கை மேற்கொள்ளப்பட்டது. இவை பொதுவாக 3 முறைகளில் மேற்கொள்ளப்பட்டது. கால்வாய், ஏரி, கிணறு, குழாய் மூலமான நீர்ப்பாசனம் என்றவாறு நீர்பாசனத்திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வேளாண்மையில் புரட்சி ஏற்பட்டது.

**05. கடன் உதவிகள் மானியங்கள் வழங்கள்:-** அரச திட்டங்கள்,கூட்டுறவு நிறுவனங்கள், வட்டார வளர்ச்சி, வங்கிக் கடன் உதவிகள், ஊக்குவிப்பு வசதிகள். மானிட அரசுக்கடன்கள், வேளாண்மை அறிவியல் நிலையம், விவசாய தொழில்நுட்ப முகாம், தன்னார்வத்தொண்டு நிறுவனங்கள் என்பன விவசாயிகளோடு இணைந்து விவசாய உற்பத்திகளை அதிகரிக்க முன்வந்தன. கடன் வழங்குவதற்காக சில விவசாயப்பகுதிகள் அரசுடன் இணைக்கப்பட்டன. நல்லின விதைகளைக் கொள்வனவு செய்யவும், இரசாயன பசளை, இயந்திரங்கள். நீர்ப்பாசன வழங்கள் திட்டங்கள் என்பவற்றுக்கு நீண்ட குறுகிய கால கடன் திட்டங்கள் வழங்கப்பட்டதோடு மானியப் பொருட்கள், விழிப்புணர்வுத்திட்டங்கள் என்பனவும் பசுமை புரட்சி ஏற்பட்ட காலத்தில் மேற்கொள்ளப்பட்டு தற்போதும் நடைமுறையிலுள்ளன.

**06. சேமிப்பும் விற்பனையும்:-** பசுமை புரட்சியின் காரணமாக விவசாய உற்பத்திகள் பெருகின. இதனால் விற்பனை செய்யப்பட்டதோடு சேமித்தும் வைக்கப்பட்டன. விவசாயிகளுக்கு நியாய விலையில் கொள்வனவு செய்யவும் மற்றும் விற்பனை செய்யவும் வாய்ப்புக்கள் கிட்டின. இதனோடு இணைந்த போக்குவரத்து, சந்தைப்படுத்தல் வசதிகள் விருத்திசெய்யப்பட்டன. சேமித்து பதப்படுத்தி வைக்கும் தொழில் நுட்ப முன்றேற்றங்களும் ஏற்றுமதி, இறக்குமதி வர்த்தகமும் வளர்ச்சியடைந்தன.

**07. பசுமை முக்கோணம்:-** இப்புரட்சியின் காரணமாக ஆண்டுக்கு 3-4 தடவைகள் பயிரிடப்பட்டு உற்பத்திகள் பெருகின. உதாரணமாக:- சோனாரா-64, சாராபதி, சோனாலிகா, NP830 முதலிய கோதுமை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விதையினம் குறுகிய காலத்தில் அறுவடை செய்யக்கூடியவாய்ப்புள்ளன. மார்ச்-ஏப்ரல் மாதங்களில் விதைத்தால் செப்டம்பரில் அறுவடைச் செய்யக்கூடிய வகையிலும் 65-70 நாட்களில் முதிர்வடைவனவாயும் காணப்படும். குறுகிய கால விவசாய உற்பத்திகள் மூலம் பசுமை முக்கோணம் என்பனவும் உருவாக்கப்பட்டன. இவ்வாறு வேளாண்மையில் புரட்சி ஏற்பட்டு பிரதேச ரீதியாகவும் பல்வேறு மாற்றங்கள் ஏற்படுத்தப்பட்டன.

## தென்னாசியாவில் பசுமை புரட்சி

பௌதீக பண்பாட்டினடிப்படையில் உலகமானது பல பிராந்தியங்களாக பிரிக்கப்பட்டுள்ளது. அதனடிப்படையில் தென்னாசியப் பிராந்தியமானது 8 அரசுகளைக் கொண்டு வடக்கே இமய மலையையும் அதனோடிணைந்த மலைத் தொடர்களையும் எல்லைச் சுவர்களாகக் கொண்டு இந்து சமுத்திரத்தின் தெற்காகவும் ஆசியாவின் ஏனைய பிரதேசங்களிலிருந்து பௌதீக பண்பாட்டடிப்படையில் ஒரு தனிப் புவியியற் பிரதேசமாக அடையாளம் காணப்பட்டு தனக்குள்ளே ஒற்றுமை வேற்றுமைகளைக் கொண்டுள்ளது. வட அகலக்கோடு $3^0$-$37^0$ க்கும் $58^0$-$95^0$ வரையான கிழக்கு நெடுங்கோட்டிற்கும் இடையில் பரந்து காணப்படுகிறது. இந்தியா, இலங்கை, பாகிஸ்தான், வங்களாதேசம், பூட்டான், நேபாளம், ஆப்கானிஸ்தான், மாலைதீவு ஆகிய 8 நாடுகள் உள்ளடக்கப்பட்டுள்ளன. தென்னாசியப் பிராந்தியமானது நதிக்கரை நாகரிகங்களையும் பல கலாசாரங்களையும் கொண்ட சனத்தொகை அடர்த்தி கூடிய 5141240$km^2$ பரப்பினைக் கொண்ட ஒரு தனிப்பட்ட பிராந்தியமாக காணப்படுகின்றது.

## தென்னாசிய நாடுகளின் நில அளவு $km^2$ (2010)

| நாடுகள் | நிலப்பரப்பு ($km^2$) | நிலப்பரப்பு (%) |
|---|---|---|
| இந்தியா | 3287590 | 64% |
| பாகிஸ்தான் | 803940 | 15% |
| வங்களாதேசம் | 144000 | 3% |
| நேபாளம் | 140800 | 3% |
| இலங்கை | 65610 | 1% |
| பூட்டான் | 47000 | 1% |
| மாலைதீவு | 300 | 0.0058% |
| ஆப்கானிஸ்தான் | 652000 | 13% |
| **மொத்தம்** | **5141240** | **100%** |

அட்டவணை-1 மூலம்-The World fact book central intelligent agency 2010

1940 களில் தென் ஆசியாவில் இப்புரட்சி தோற்றம் பெற்றது. பஞ்சாபில் ஏற்பட்ட பஞ்சத்தினை போக்கும் முகமாக இந்தியாவில் தோற்றம் பெற்று ஏனைய தென்னாசிய நாடுகளிற்கும் விரிவடைந்து விவசாயத்துறையில் ஏற்பட்ட பாரிய புரட்சியினால் பரப்பியல் ரீதியான மாற்றங்களை ஏற்படுத்தியது.

## இந்தியாவும் பசுமை புரட்சியும்

1943களில் பிரித்தானிய ஆட்சிக்காலத்தில் இந்தியாவில் ஏற்பட்ட பஞ்சத்தினாலே இன்றைய பங்களாதேசம் 4 வருட காலம் தொடர்ச்சியாக பாதிக்கப்பட்டது.

மூன்றாம் நிலை நாடாக காணப்பட்ட இந்தியாவில் பட்டினிச்சாவினை எதிர் நோக்கிய அன்றைய காலக்கட்டத்தில் பசுமை புரட்சி முன் நிறுத்திய பயிர்செய்கை முறைகள் பயனளித்தன. இதை நடைமுறைப்படுத்தவதில் சாமிநாதன் முன்னின்றார்.

இந்தியா சுதந்திரம் பெற்றதன் பின்னர் அதன் உணவு உற்பத்தியானது மிகவும் கவலைக்குரிய விடயமாகக் காணப்பட்டது. விவசாயிகள் கடன்சுமையிலும் அவர்களின் குறைந்தளவிலான நிலங்களும் அவை துண்டாடப்பட்டும் சிதறியும் காணப்பட்டன. வானத்தைப் பார்த்து விவசாயம் செய்தமையால் மழை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


இல்லாத காலங்களில் உணவு உற்பத்தி குறைந்தது. இதனால் இந்தியாவில் பசுமைப் புரட்சிக்கு அடிப்படையாகவும் அவசியமாகவும் அமைந்த காரணிகள் எனும் போது,

- இந்தியாவில் அதிகரித்து வரும் மக்கள் தொகைக்கு ஏற்ப உணவு உற்பத்திகள் காணப்படாமையால் ஏற்பட்ட சவால்கள்.
- உள்நாட்டில் விவசாய நடவடிக்கையில் எதிர் நோக்கிய பல்வேறு பிரச்சினைகள்.
- பழைமை முறை விவசாயம்.
- நவீனத்துவ உள்ளீடுகளிற்கு ஏற்ப அதிகரித்த எதிர்பார்ப்புக்கள்.

இன்னும் 1943களில் ஏற்பட்ட பஞ்சத்தினால் 4மில்லியன் மக்கள் இறந்தனர். இதனால் உணவுப் பற்றாக்குறையைப் போக்கும் முறையாக விவசாயத்துறையில் ஏற்பட்ட மாற்றம் பசுமை புரட்சியாக 1977களில் உருவாகியது. அதனடிப்படையில் இந்தியாவில் பல நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

1. தீவிர விவசாய மாவட்டத்திட்டம்:-(Intensive Agricultural District Programme-IADP).
2. அமோக விளைச்சல் தரும் பயிர் வகைகள்( High Yielding Varieties Programme-HYVP).
3. பாசனத்திட்டங்கள் மற்றும் தண்ணீர் மேலாண்மை (Water Supply & Irrigation Technique).
4. செயற்கை உர உற்பத்தி, உரப்பாவனை பசளைகளின் அதிகரிப்பு (Increased use of fertilizers).
5. பூச்சிக்கொள்ளிகள் மற்றும் இரசாயன பீடைகள் (Pesticide & chemicals).
6. தேசிய விவசாயக் கொள்கை- 2000.

**1. தீவிர விவசாய மாவட்டத்திட்டம்:-** தீவிர மாவட்ட வேளாண்மைத்திட்டம் என்ற பெயரில் ஆரம்பிக்கப்பட்ட திட்டம் 2 வருடங்களில் பசுமை புரட்சிக்கு வழி கோலியது. அமெரிக்க "போர்ட்" நிறுவனத்தின் உதவியுடன் 7 மாவட்டங்களில் மேற்கொள்ளப்பட்டது. அவை- பஞ்சாப், ஹரியானா, ராஜஸ்தான், குஜாராத், உத்தர பிரதேசம், மகாராஷ்ரம், தமிழ் நாடு.



படம்-1 மூலம்-
(Online)Available@:<http://www.harpercollege.edu/mhealy/geg101i/renata/saslecture.htm4-4-

**2. அமோக விளைச்சல் தரும் பயிர் வகைகள்:-**

நவீன ரக விதையினங்கள் குறுகிய காலத்தினைக் கொண்டு வருடத்திற்கு 2-3 போகங்களிற்கு அறுவடை செய்யக்கூடிய வகையில் அறிமுகப்படுத்தப்பட்டது. அவ்வகையில்- S308, B18, கல்யாணி, சோனா227, சோனாலிக்கா போன்ற நவீன கோதுமை விதைகளும் விஜய், வச்ரா, ரீ-1, போன்ற சோள வகைகளும் IR20, ஜோனா,351 போன்ற நெல் விதைகளும் 50-34 பருத்தியும் ,CO-1148,CO67-11 போன்ற கரும்பு விதைகளும் அறிமுகப்படுத்தப்பட்டன.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3. **பாசனத்திட்டங்கள் மற்றும் தண்ணீர் மேலாண்மை-** 5 ஆண்டுத் திட்டங்களினால் அதிகளவு நிதி நீர் பாசனத்திற்காக ஒதுக்கப்பட்டது. இதனால் அதிகளவு நிலங்கள் பயிர்ச்செய்கையின் கீழ் கொண்டுவரப்பட்டது. இது விவசாயத்துறையில ஓர் புரட்சியை ஏற்படுத்தியது. 1966ல் 1.89 மில்லியனாக இருந்த விளைநிலம் 1981ல் 9.29 மில்லியன் ஏக்கராக வளர்ச்சியடைந்தது. அதாவது நீர்பாசனத்தின் கீழ் 1966ல் 10.22 இலட்சம் ஏக்கரும் 1981ல் 32.80 இலட்சம் ஏக்கரும் கொண்டு வரப்பட்டன. குழாய், ஆறு, ஏரி, கிணறு மூலமும் தொழில்நுட்ப இயந்திரங்கள் மூலமும் மாரி கோடை காலங்களிற்கு ஏற்ற வகையில் பயிரிடுவதற்கு வசதியாக நீர்பாசனத் திட்டமானது மேற்கொள்ளப்பட்டு இந்திய மாநிலங்களில் மாற்றங்களை விவசாயத்துறையில் ஏற்படுத்தியது.

4. **செயற்கை உர உற்பத்தி, உரப்பாவனை பசளைகளின் அதிகரிப்பு மற்றும் தொழில்நுட்பம்-** K,N,Na கலந்த இரசாயன உரவகைகள் கண்டுபிடிக்கப்பட்டன. 1966ல் 15 இலட்சம் தொன்னாக காணப்பட்ட உரப்பாவனை 1981ல் 50 இலட்சம் தொன்னாக மாற்றமடைந்தது. இன்னும் பீடை நாசினிகளும் அறிமுகப்படுத்தப்பட்டன. அத்தோடு அறுவடை முதல் விற்பனை வரை இயந்திரமயமாக்கப்பட்டன.

5. **தேசிய விவசாயக்கொள்கை-** இந்தியாவில் தொடர்ச்சியாக நடைமுறைப்படுத்தப்பட்டு வந்த 5 ஆண்டுத் திட்டங்களில் விவசாயத்துறைக்கு அளிக்கப்பட்டு வந்த முன்னுரிமையும், சலுகைகளும், நிலச்சீர்திருத்த நடவடிக்கைகளும் இந்நாட்டில் பசுமை புரட்சி ஏற்படுவதற்கு அடிப்படையாக அமைந்தது. உத்தரவாத விலைத்திட்டத்துடன் கூடிய புதிய சந்தை வசதிகள் அரசினால் ஏற்படுத்தி கொடுக்கப்பட்டன. அவ்வகையில் தெற்காசிய நாடுகளில் பருத்தி, கோதுமை, சோளம், நெல், கரும்பு போன்றவற்றிலே பசுமை புரட்சி ஏற்பட்டது. மெக்சிகோவிலுள்ள CIMMYT ஆராய்ச்சி நிலையத்திலிருந்து இறக்குமதியான 18000 டொன் லெர்மா ரோஜா 64-கி, செனொரா 64, ஆகிய ரகங்களை 4 இலட்சம் ஹெக்டேயரில் பயிரிட்டு கோதுமையில் பசுமை புரட்சியைத் தொடக்கி வைத்தது. குட்டை ரக கோதுமையை பயிரிட்டு அறிமுகப்படுத்தியது. பஞ்சாபில் மட்டும் 1965-66ல் 33.89 இலட்சம் இருந்த உணவு உற்பத்தி 1985-86ற்குள் 172.21 இலட்சம் டொன்னாக உயர்ந்தது. ஹரியானாவில் 19.85 லட்சம் டொன்னிலிருந்து 81.47இலட்சம் டொன்னாக ஆக உயர்ந்தது. அதே போல 17000 நாட்டு நெல் ரகங்களைக் கொண்டு 9% உயர் விளைச்சலைக் கொடுத்ததோடு 8% குறுகிய கால அறுவடையிலும் 237 வாசனை ரகங்களும் காணப்பட்டன. உதாரணமாக- bd-810, td2(bd-45),bd504 cr1014,bd21,bd24, bd1353, Dorka Dekri, பால்கோவா என்பன அறிமுகப்படுத்தப்பட்டன.

### பசுமை புரட்சியினால் இலங்கையில் ஏற்பட்ட மாற்றங்கள்

இலங்கை ஒரு விவசாய நாடாக காணப்படுகின்றது. மொத்த நிலப்பரப்பில் 31% த்தில் பயிர்ச்செய்கை செய்யப்படுகிறது. ஆரம்ப காலங்களில் சுயதேவை அடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட விவசாய முறையானது பசுமை புரட்சிக்குப் பின்னரே வர்த்தக முறையிலும் மேற்கொள்ளப்பட்டது. 1970க்குப் பின்னரே இலங்கை விவசாயத்தில் மாற்றங்கள் ஏற்பட்டன. அவ்வகையில் நெல், சோளம், கரும்பு, மரக்கறிவகை போன்றவற்றில் அதன் தாக்கம் காணப்படுகிறது. இந்தியாவில் அறிமுகப்படுத்தப்பட்ட IR8, IR5, IER B3 போன்ற வகை நெல்லினங்கள் இலங்கையிலும் பயன்படுத்தப்பட்டன. 1970களில் 574328 ஹெக்டேயர் நெல் வயல்கள் இருந்தன. அது 1991ல் 732609 ஹெக்டேயர்களாக அதிகரித்தது. இதன் தாக்கத்தினை அதிகமாக பொலனறுவை, குருநாகல், அநுராதபுரம், அம்பாறை, மட்டக்களப்பு போன்ற மாவட்டங்களில் காணலாம். பசுமைப் புரட்சியினால் இலங்கையில் ஏற்பட்ட மாற்றம் எனும் போது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- ➢ சீராக்கப்பட்ட புதிய விதையினங்கள் அறிமுகம். (H4, IR8, BG11, BG348, BG346, BG 903 நெல் வகை).
- ➢ இரசாயன பசளைகள், பீடை நாசினிகள் அறிமுகம்.
- ➢ பசுமை முக்கோணம்.
- ➢ நீர்ப்பாசன முகாமை, விருத்தி.
- ➢ தொழில்நுட்ப இயந்திரப்பாவனை விருத்தி.
- ➢ காப்புறுதி கடன் வசதிகள்.
- ➢ உத்தரவாத விலைத்திட்டம்.

## ஏனைய தென்னாசிய நாடுகளில் பசுமை புரட்சி

பாகிஸ்தானில் மொத்த நிலப்பரப்பில் 27.87% நிலம் விவசாயத்திற்காகப் பயன்படுத்தப்படுகிறது. இந்தியாவில் ஏற்பட்ட பசுமை புரட்சியின் மாற்றங்கள் பாகிஸ்தானிலும் ஏற்பட்டன. இங்கு பசுமை புரட்சி என்பது கோதுமை புரட்சியையே குறிக்கின்றது. 1967ல் 4 மில்லியன் டொன் ஆக காணப்பட்ட கோதுமை 1977ல் 9மில்லியன் டொன் ஆக மாறியது. சனத்தொகை அதிகரிப்பிற்கேற்ப உற்பத்தியிலும் மாற்றம் ஏற்பட்டது. குறுகிய காலத்தில் விளைச்சலைத் தரும் பெருமளவான விதையினங்கள் அறிமுகப்படுத்தப்பட்டன. Norman Borlug & Dr. Suda Ahamed Qureshi இருவரும் இணைந்து பாகிஸ்தானிய விவசாயிகளுக்கு அமெரிக்காவில் தொழிற்பயிற்சி அளித்தமையும் பசுமை புரட்சியினாலே. இன்னும் ருளுயுஜீ ஆனது பசளை உற்பத்தி மற்றும் ஏற்றுமதிக் கொள்கைகள், விலைத்தீர்மானங்கள் என்பனவற்றிற்கும் உதவியது. அரசு Policy Package ஒன்றையும் உருவாக்கியது.

தென்னாசியாவிலே அதிகளவான நிலங்கள் சாகுபடியின் கீழ் காணப்படுவது பங்களாதேசிலாகும். மொத்த நிலத்தில் 62.11% பயிர்ச்செய்கை செய்யப்படுகிறது. 34440km$^2$ நீர்ப்பாய்ச்சலுக்குபடுத்தப்படுகிறது. கங்கைச் சமவெளி தாழ் நிலமாக காணப்படுகின்றமையால் நெற்பயிர்ச்செய்கையே அதிகளவில் மேற்கொள்ளப்படுகிறது. நெல் உற்பத்தி வருடத்திற்கு 3 தடவை மேற்கொள்ளப்படுகிறது. இரசாயன பசளைப் பாவனை, கிராமிய இணைப்புக்களுடைய விருத்திகள் என்பன ஏற்பட்டமையால் 2000ல் 35.8 மில்லியன் டொன் உற்பத்தி செய்யப்பட்டது. 2003ல் 13000 டொன் ஆக வளர்ச்சி கண்டது. பூட்டானில் 3.09% மான நிலமே விவசாயத்திற்கு பயன்படுகிறது. நேபாளத்தில் 21.68% நிலமும் மாலைத்தீவில் 13.33% நிலத்திலும் பயிர்ச்செய்கை மேற்கொள்ளப்படுகிறது. இவ்வாறாக தென்னாசிய நாடுகளில் பசுமை புரட்சியினால் கொண்டுவரப்பட்ட நடவடிக்கைகளினால் அந்நாடுகளில் விவசாய உற்பத்திகள் அதிகரிக்கப்பட்டு பிரதேச, சூழலியல், சமூக, பொருளாதார, கலாசார மாற்றங்களை சாதகமாகவும், பாதகமாகவும் இட்டுச்சென்றது.





படம்-1.1மூலம்-

(Online)Available@:<**http://geography.about.com/ad/global/problems/issues/a/green revolution.html.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




இவ்வாறாக பசுமை புரட்சியானது பல்வேறு பாதகங்களை ஏற்படுத்தியது. அவ்வகையில் பசுமை புரட்சி ஏற்படுத்திய பாதகமான விளைவுகளை கட்டுப்படுத்த சில கட்டுப்பாடுகள், விழிப்புணர்வு அறிவூட்டல்கள், அரச திட்டங்கள், கொள்கைகள் அறிமுகப்படுத்துவதன் மூலம் இந்நாடுகளில் பாதகமான விளைவுகளைக் கட்டுப்படுத்தலாம். இவ்வாறாக பசுமை புரட்சியானது பிரதேச ரீதியாக பல்வேறு மாற்றங்களை ஏற்படுத்தியது.

**உசாத்துணை நூற்பட்டியல்**

Ashak.K.Dutt and M.Margart.heib, (1987) ***Atlas of South Asia***: west view press: Boulder and London.

Gamini Herath H.M, 1981, ***The Green Revolution in Rice the role of the Risk Factor with Special Reference to SriLanka***. University of California.

Smith .T.B. Wanmali S,***Understanding Green Revolution:*** Again Change and Development Planning in South Asia. Cambridge; Cambridge University Press.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Tomlison B.R,1996.*The Economy of Modern India*, 1860-1970, The Cambridge History of India.

குணராசா.க, (2006) ***சுற்றுச்சூழலியல்***, லங்கா புத்தக சாலை:கொழும்பு.

வர்ணகுலசிங்கம்.ம, (2008) ***தென்னாசியப் புவியியல்***, கிழக்குப்பல்கலைக் கழகம்:இலங்கை.

சூசைப்பிள்ளை என்டனி நோபட், (2007) ***சூழற் புவியியல் ஓர் அறிமுகம்***, குமரன் புத்தக இல்லம்: கொழும்பு-12.

http://geography.about.com/ad/global/problems/issues/a/green revolution.html. 6-4-2013,7.30 pm.

http://www.harpercollege.edu/mhealy/geg101i/renata/saslecture.htm 4-4-2013.1.55pm.

http://www.thesundayleader.lk/2011/09/18/the-1960%E2%80%99s-%E2%80%9Cgreen-revolution%E2%80%9D-and-its-impact-on-rice-production-in-sri-lanka/4-4-2013,1.15pm.

The World fact book central intelligent agency 2010.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாணயக் கொள்கை, அதன் வகைகள் மற்றும் நாணயக் கொள்கைக் கருவிகள்

த. இந்துஜா.
விடுகை வருடம்,
பொருளியல் விசேட துறை,
கலைப் பீடம்.

## அறிமுகம்

**நா**ணயக் கொள்கை என்பது ஒரு அரசாங்கத்தினால், குறிப்பாக மத்திய வங்கியினால் நிறை தொழில் மட்டம், பொது விலை மட்ட உறுதி, பொருளாதார வளர்ச்சி, சென்மதி நிலுவைச் சமநிலை ஆகிய பேரினப் பொருளாதார கொள்கைகளை அடைந்து கொள்வதற்காக ஒரு பொருளாதாரத்தின் மொத்த பணநிரம்பலை ஒழுங்குபடுத்துவது ஆகும். பொருளாதாரத்தின் தேவையினைப் பொருத்து பணநிரம்பலை அதிகரிக்கவோ அல்லது குறைக்கவோ முடியும். பொருளாதாரத்திலுள் நேரடியாக அல்லது மறைமுகமாக திறந்த சந்தை தொழிற்பாடுகளின் ஊடாக வட்டி வீதங்களை மாற்றியமைத்து நாணயக் கொள்கையினால் பொருளாதாரத் தொழிற்பாடுகளில் தலையிட முடிகின்றது.

நாணயக் கொள்கையைப் பொதுவாக விரிவுத் தாக்க நாணயக் கொள்கை மற்றும் சுருக்கத் தாக்க நாணயக்கொள்கை என்ற வகையில் நடைமுறைப்படுத்த முடியும். விரிவுத் தாக்க நாணயக் கொள்கை என்பது பொருளாதாரத்தின் மொத்த பணநிரம்பலை அதிகரிக்கச் செய்வதாகும். ஒரு மத்திய வங்கியானது பகிரங்கச் சந்தையில் ஆவணங்களை கொள்வனவு செய்வதன் மூலமோ அல்லது வங்கி வீதத்தினைக் குறைப்பதன் மூலமோ அல்லது இரண்டையுமே இணைத்து கையாள்வதன் மூலமாகவோ அப்பொருளாதாரத்தின் பணநிரம்பலை கணிசமாக அதிகரிக்குமாயின் அது பணச் சந்தையில் கணிசமான வீழ்ச்சியினை ஏற்படுத்தி அதன் மூலம் தனியார் முதலீடுகளை கணிசமாக அதிகரிக்கச் செய்ய முடியும். இது பொருட் சந்தையில் மொத்த வெளியீட்டினதும் தேசிய வருமான மட்டங்களினதும் அதிகரிப்புகளுக்கு வகை செய்யும். இவ்வாறு தேசிய வருமானத்தில் ஏற்படும் அதிகரிப்பு பணச் சந்தையில் பணத்திற்கான கேள்வியில் அதிகரிப்பினை ஏற்படுத்துகின்ற பொழுது அதன் விளைவாக அங்கு சமநிலை வட்டி வீதம் அதிகரிப்பிற்கு இட்டுச் செல்லும். வட்டி வீதத்தின் அதிகரிப்பு மீண்டும் பொருட் சந்தையில் தனியார் முதலீடுகளில் ஒரு வீழ்ச்சியினை ஏற்படுத்தி அதன் மூலம் தேசிய வருமான மட்டத்திலும் ஒரு வீழ்ச்சி ஏற்படுவதற்கு வழி வகுக்கின்றது.

சுருக்கத் தாக்க நாணயக் கொள்கை என்பது பொருளாதாரத்தின் மொத்த பணநிரம்பலை குறைவடையச் செய்வதாகும். ஒரு மத்திய வங்கி பகிரங்கச் சந்தையில் ஆவணங்களை விற்பனை செய்வதன் மூலமோ அல்லது வங்கி வீதத்தினை அதிகரிப்பதன் மூலமோ அல்லது இரண்டையும் இணைத்து கையாள்வதன் மூலமோ அப்பொருளாதாரத்தின் பணநிரம்பலை வீழ்ச்சியடையச் செய்யும். இதன் மூலம் வட்டி வீதங்கள் அதிகரிக்கப்படினும், பணவீக்க ரீதியிலான ஒரு அழுத்தம் ஏற்படாத வகையில் பொருளாதாரத் தொழிற்பாடுகளை வழிப்படுத்துவதற்கு முயற்சி எடுக்கப்படும். நாணயக் கொள்கையானது அரச கடன் பெறுகைகள், அரச செலவுகள் மற்றும் வரி அறவிடுதல்கள் ஆகிய விடயங்களை உள்ளடக்கிய அரச நிதிக் கொள்கையிலிருந்து வேறுபட்டதாகும்.

பொருளாதாரத்தின் வட்டி வீதங்கள் நாணயக் கொள்கையுடன் எப்போதும் பிணைந்திருக்கும். வட்டி வீதம் என்பது பணத்தின் விலையாகும். வேறு விதத்தில் கூறுவதாயின் பணத்தைப் பெறுகின்றபோது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செலுத்த வேண்டிய விலையை வட்டி வீதம் எனக் குறிப்பிடுகிறோம். பணம் வெளியிடுகின்ற ஏகபோக உரிமை மத்திய வங்கிக்கு ஒப்படைக்கப்பட்டுள்ளதால் பொருளாதாரத்தின் பண மட்டத்தினை மாற்றுகின்ற ஆற்றலையும், அதனூடாகப் பொருளாதார நோக்கங்களை நிறைவேற்றிக் கொள்ளும் பொருட்டு வட்டி வீதங்களில் தாக்கத்தை ஏற்படுத்தக்கூடிய ஆற்றலையும் மத்திய வங்கி கொண்டுள்ளது. நாணயக் கொள்கையினைத் தயாரிக்கின்ற போது குறுங் கால வட்டி வீதம், நீண்ட கால வட்டி வீதம், பொருளாதாரத்தில் நாணயச் சுற்றோட்டத்தின் வேகம், செலாவணி வீதம், பொருளாதாரத்தில் நிலவுகின்ற கடன் சுமையின் அளவு, முறிகள் மற்றும் பங்குகள், அரசுக்கு எதிரான தனியார் துறையின் சேமிப்பும் செலவுகளும், பாரிய அளவிலான சர்வதேச நிதிப் போக்குக்கள், நிதிப் பிறப்பாக்கங்கள் போன்றவற்றை கவனத்திற் கொள்ளப்படுகின்றது.

அபிவிருத்தியடைந்துவரும் நாடுகள் தமது நாணயக் கொள்கையை வினைத்திறனுடன் கையாள்வதற்கு பல சவால்களை எதிர் நோக்குகின்றன. மிக அதிக அரச கடன் சந்தையொன்று நிலவுகின்றமை அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகள் எதிர்நோக்குகின்ற பிரதான சவாலாகும். நாணயத்திற்கான கேள்வியை எதிர்வு கூறுகின்ற நிலைமைகள், நாணயத்தளத்தை வேகமாக விரிவடையச் செய்கின்ற போது உருவாகின்ற பணவீக்க ரீதியிலான அழுத்தங்கள் போன்ற விடயங்களில் உள்ள சிக்கல் தன்மைகளினால் இது மேலும் பிரச்சினையாக உள்ளது.

## பல்வேறுபட்ட நாணயக் கொள்கைகள்

அனைத்து விதமான நாணயக் கொள்கைகளும் அதன் பொருளாதாரத்தினுள் சுற்றோட்டத்திலுள்ள தள நாணயக் தொகையை அதிகரிக்கச் செய்வதில் அல்லது குறைவடையச் செய்வதிலேயே தொடர்புபடுகின்றன. மேற்படி செயற்பாடானது தள நாணய வகையின் திரவத் தன்மையை மாற்றுகின்ற திறந்த சந்தைத் தொழிற்பாடு என அழைக்கப்படுகின்றது. ஒவ்வொரு நாடும் கடைப்பிடிக்கின்ற நாணயக் கொள்கைகள் ஆக்கப்படுகின்றபோது அவர்களது இலக்கிடப்பட்ட சந்தை மாறிகளும் மாற்றமடையும்.

### 1) பணவீக்கத்தை இலக்காகக் கொண்ட நாணயக் கொள்கை

மேற்படி நோக்கத்தை இலக்காகக் கொண்டுள்ள நாணயக் கொள்கையில், நுகர்வோர் விலைச் சுட்டெண் போன்ற விசேடமான அளவீடுகளின் கீழ் மிகச் சிறந்ததொரு மட்டத்தில் பணவீக்கத்தைப் பேணிவருதலே முக்கியமான முயற்சியாகும்.

### 2) விலை மட்டத்தினை இலக்காகக் கொண்ட நாணயக் கொள்கை

விலை மட்டத்தினை இலக்காகக் கொண்ட நாணயக் கொள்கையும் பணவீக்கத்தை இலக்காகக் கொண்ட நாணயக் கொள்கையும் அநேகமாக சமமானதாகும். இந் நாணயக் கொள்கையினுள் ஓர் ஆண்டினுள் நிலவுகின்ற நுகர்வோர் விலைச் சுட்டெண்ணை அதனைத் தொடர்ந்து வருகின்ற ஆண்டுகளிலும் ஒட்டுமொத்தமாக மாற்றமடையாது வைத்திருக்க எடுக்கப்படும் முயற்சியின் காரணத்தாலேயே இது வித்தியாசமானதாக உள்ளது. 2004 ஆம் ஆண்டில் இருந்து எந்தவொரு நாடும் இந் நாணயக் கொள்கையைக் கடைப்பிடிப்பதில்லை.

### 3) ஒட்டு மொத்தமான நிதித் தளத்தையும் இலக்காகக் கொண்ட நாணயக் கொள்கை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1980 ஆம் ஆண்டுகளில் சில நாடுகள் பண நிரம்பலில் தொடர்ச்சியாக ஏற்படுகின்ற வளர்ச்சியை நாணயக் கொள்கையைத் தயாரிக்கின்ற போது அடிப்படையாகக் கொண்டன. மேற்படி அணுகுமுறை பின்னர் பல்வேறு வகையிலான நாணயங்கள் பயன்படுத்தப்பட்டதன் மூலம் மிகவும் தெளிவான கொள்கையொன்றைத் தயாரிப்பதற்கு முயற்சியெடுக்கப்பட்டது. அமெரிக்காவில் இவ்வாறு நாணயக் கொள்கை அமைக்கப்பட்ட போதிலும் பின்னர் அது கைவிடப்பட்டது. இவ்வணுகுமுறையின் போது நாணய நிரம்பலேயன்றி விலை மட்டம் கவனத்திற் கொள்ளப்படவில்லை.

### 4) நிலையான செலாவணி வீதத்தை இலக்காகக் கொண்ட நாணயக் கொள்கை

நிலையான வெளிநாட்டுச் செலாவணி வீதத்தைப் பேணிவருதல் இக்கொள்கையின் அடிப்படையாக உள்ளது. இலக்காகக் கொள்ளப்பட்ட வெளிநாட்டுச் செலாவணித் தொகையொன்றினை வைத்திருக்கும் பொருட்டு மத்திய வங்கியினால் வெளிநாட்டுச் செலாவணியை கொள்வனவு செய்தல் அல்லது விற்பனை செய்தல் நடைபெற்றது. சீனா நீண்ட காலமாக இக்கொள்கையினைக் கடைப்பிடித்ததோடு, ஐக்கிய அமெரிக்க டொலருக்கு ஒப்பீட்டளவில் யுவான் நாணய அலகு நிருவகிக்கப்பட்டது.

### 5) கலப்பு நாணயக் கொள்கை

இயல்பிலேயே கலப்பு நாணயக் கொள்கை பணவீக்கத்தை இலக்காகக் கொண்ட நாணயக் கொள்கைக்குச் சமமாகும். எவ்வாறாயினும் கலப்பு நாணயக் கொள்கையில் பொருளாதாரத்தின் விலை மட்டம் தொடர்பிலும் அதேபோன்று பொருளாதார வளர்ச்சி, தொழிலின்மை மற்றும் வட்டி வீதங்கள் ஆகிய ஏனைய முக்கியமான பொருளாதார மாறிகள் தொடர்பிலும் கவனம் செலுத்தப்படும். தற்போது ஐக்கிய அமெரிக்கா கலப்பு நாணயக் கொள்கையினைக் கடைப்பிடிக்கின்றது. ஆயினும் அவுஸ்திரேலியா, கனடா, யூரோ பிராந்தியம், நியூசிலாந்து, ஐக்கிய இராச்சியம் ஆகிய பெரும்பாலான அபிவிருத்தியடைந்த நாடுகள் பணவீக்கத்தை இலக்காகக் கொண்ட நாணயக் கொள்கையையே கடைப்பிடிக்கின்றன.

## நாணயக் கொள்கைக் கருவிகள்

### 1. நாணயத் தளம்

நாணயத் தளத்தின் அளவினை மாற்றுவதன் மூலம் நாணயக் கொள்கையை அமுலாக்க முடிகின்றது. இது நேரடியாகவே பொருளாதாரத்தினுள் சுற்றோட்டத்திலுள்ள மொத்த நாணயத் தொகையை மாற்றமடையச் செய்கின்றது. மத்திய வங்கிக்கு நாணயத் தளத்தை மாற்றும் பொருட்டு திறந்த சந்தைத் தொழிற்பாடுகளைப் பயன்படுத்துகின்றது. மத்திய வங்கி அரச பிணையங்களை விற்பனை செய்தல் மற்றும் கொள்வனவு செய்வதன் ஊடாக பொருளாதாரத்தில் உள்ள பணத்தை உள்ளீர்த்துக்கொள்கின்றது அல்லது விரிவடையச் செய்கின்றது. இச்செயற்பாட்டின் ஊடாக அந்நாட்டின் நாணயத் தளம் மாற்றமடையும்.

### 2. ஒதுக்குத் தேவைகள்

ஒரு நாட்டின் நிதியாளுகை நிறுவனம் அந்நாட்டின் வர்த்தக வங்கிகளை ஒழுங்காக நிருவகிக்கின்றது. மேற்படி வர்த்தக வங்கிகள் தமது சொத்துக்களின் மூலம் மத்திய வங்கியில் ஒதுக்கமொன்றாகப் பேணிவரவேண்டிய தொகையை மாற்றுவதன் ஊடாக நாணயக் கொள்கையினை அமுலாக்கலாம். ஒதுக்குத் தேவையாக வர்த்தக வங்கியினால் தமது சொத்துக்களின் மூலம் மத்திய வங்கியில் ஒதுக்கமாகப் பேணிவரவேண்டிய தொகை சிறியதொரு தொகையாக இருப்பின், எஞ்சிய


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சொத்துக்களை திரவத் தன்மை குறைந்த சொத்துக்களில் முதலீடு செய்யலாம். இவ்விதம் கடன் வழங்கக் கூடிய நிதியத் தொகை வளர்ச்சியடைதல் பண நிரம்பலின் மாற்றமொன்றாகச் செயற்படும்.

### 3. நேர்மாற்று மீள்கொள்வனவு அல்லது மீள்கொள்வனவு கருமபீடம்

வங்கிகள் அல்லது ஏனைய நிதி நிறுவனங்களுக்கு கடன் வழங்குவதற்கான அதிகாரம் மத்திய வங்கிக்கு உள்ளது. அத்தகைய கடன் வழங்கப்படுவதன் ஊடாக பொருளாதாரத்திற்கு மேலதிகத் திரவத் தன்மை வழங்கப்படுவதோடு, மேலதிகத் திரவத் தன்மை பொருளாதாரத்தினுள் இருப்பின் அதனை மத்திய வங்கியினால் நேரடியாக பண நிரம்பலின் தொகையை மாற்ற முடிகின்றது.

### 4. வட்டி வீதம்

பெயரளவிலான வட்டி வீதத்தை அதிகரிப்பதன் மூலம் பொருளாதாரத்தினுள் பண நிரம்பலை மறைமுகமாகக் குறைக்கலாம். பல்வேறு நாடுகளிலும் நிதியாளுகை நிறுவனங்கள் பல்வேறு மட்டங்களில் வட்டி வீதங்களை நிருவகிக்கின்றன. மேற்படி நிதியாளுகை நிறுவனங்களின் கட்டுப்பாட்டின் கீழ் வட்டி வீதங்களை அதிகரிப்பதன் மூலம் பண நிரம்பலைக் குறைப்பதற்கு அவர்களால் முடியும். உயர் வட்டி வீதங்கள் சேமிப்பை ஊக்குவிப்பதோடு கடன் பெறுதலை குறைவடையச் செய்வதன் காரணத்தினாலேயே அவ்வாறு நடைபெறுகின்றது.

### 5. திறந்த சந்தைத் தொழிற்பாடுகள்

மத்திய வங்கி தமக்குரிய பிணையங்கள், தொகையினைப் பயன்படுத்தி குறுகிய கால ரீதியில் மீள்கொள்வனவு அல்லது நேர்மாற்று மீள்கொள்வனவு ஏலத்தின் ஊடாக நாணயச் சந்தையில் நிலவுகின்ற திரவத் தன்மையை அதிகரிக்க அல்லது குறைவடையச் செய்கின்றது. அதே போன்று நீண்ட கால ரீதியில் பிணையங்களை விற்பனை செய்வதன் அல்லது கொள்வனவு செய்வதன் ஊடாகவும் திரவத் தன்மையை குறைப்பதற்கு அல்லது மேம்படுவத்துவதற்கு மத்திய வங்கி தலையீடு செய்கின்றது.

இன்றுள்ள நிதிக் கொள்கைகள் பண்டைய காலத்திலிருந்து படிப்படியாக வளர்ச்சியடைந்து நிலைநாட்டப்பட்டவையாயுள்ளதோடு நிதிக் கொள்கைக் கருவிகளைப் பயன்படுத்தி ஒட்டு மொத்தமான நாணயத் தளத்தை குறைப்பதற்கு அல்லது அதிகரிப்பதற்கு ஒரு நாட்டின் மத்திய வங்கிக்கு அதிகாரமுள்ளது. பெரும்பாலும் இதன்பொருட்டு மிகவும் இலகுவாகவும் அதிகளவிலும் பயன்படுத்தப்படுகின்ற நாணயக் கொள்கைக் கருவியாக திறந்த சந்தைத் தொழிற்பாடுகள் விளங்குகின்றன.

**சான்றாதாரங்கள்**


இலங்கை மத்திய வங்கியின் சமூக, பொருளாதார இருமாத சஞ்சிகை – 2008.

இலங்கை மத்திய வங்கி ஆண்டறிக்கை – 2004. பக். 193.

இலங்கை மத்திய வங்கி ஆண்டறிக்கை – 2003. பக். 58-60.

இலங்கை மத்திய வங்கி ஆண்டறிக்கை – 2004. பக். 182.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையில் கருக்கலைப்புச் சட்டமாக்கப்பட வேண்டும்

ச.ரகுராஜ்.
விடுகை வருடம்.
மருத்துவப் பீடம்.

கருக்கலைப்பு என்பது பிள்ளைப் பிரசவத்தின் முன்பு, கருப்பையிலுள்ள பிரசவப்பொருட்கள் வெளியேறுதல். இலங்கையில் 28 கிழமைகளின் முன்பு நடைபெறின், இது வைத்திய ரீதியானதாகவும், 28 கிழமைகளின் பின்பு குறைப்பிரசவம் எனவும் அழைக்கப்படும். இன்றைய காலத்தில் பாதுகாப்பற்ற கருக்கலைப்பு முறைகளினால், தாய்மார்களின் இறப்பும், அதன் மூலமான பின் விளைவுகளும், பல்வேறு தாக்கங்களை ஏற்படுத்துகின்றன. பெண்கள் கருக்கலைப்பை நாடிச் செல்வதற்கான காரணங்களாக, தேவையற்ற மகப்பேறு, பாலியல் பலாத்காரத்தினால் தாய்மையடைதல், உளவியல், உடலியல், தொடர்பான தாய்மார்களின் பிரச்சனைகள், குழந்தைகளின் பிறப்பியல் குறைபாடுகள், குடும்ப வறுமை நிலை, திருமணத்திற்குப் புறம்பான தொடர்புகள், திருமணத்திற்கு முன் தாய்மையடைதல் எனப் பலவற்றைக் குறிப்பிடலாம். இவ்வாறு இலங்கையில் அண்ணளவாக கணக்கெடுப்பின்படி, 1500 தாய்மார்கள் ஒவ்வொரு நாளும் கருக்கலைப்பை நாடுவதுடன், அவர்களில் 80%ஆனோர் 35 வயதிலும் கூடியவர்கள். ஒவ்வொரு வருடமும் 400,000 குழந்தைப் பிறப்புடைய எம்நாட்டில், 300,000 கருக்கலைப்புகள் வருடாந்தம் நடைபெறுகின்றன.

சாதாரணமாக 10-15% ஆன சாதாரண பிரசவங்கள் சுயமாகவே கருக்கலைவு அடைகின்றன. இவற்றின் பிரதான காரணங்களில் ஒன்றாக குழந்தையின் பிறப்பியல் குறைபாடுகளையும், மற்றும் தாயின் உடலியல் நோய்கள், கருப்பையின் கட்டமைப்புக் குறைபாடுகள், ஓமோன்களின் குறைபாடுகள், நீர்ப்பை தொடர்பான குறைபாடுகள் எனக் குறிப்பிடலாம். பெரும்பாலும் இவை முதல் 2-3 மாதங்களில் அதிகமாகவே நடைபெறுகின்றன. இலங்கையில் சட்டமாக்கப்பட்ட வைத்திய ரீதியான கருக்கலைப்பு எனப்படுவது, அம்மாவின் உயிர் குழந்தையின் பிரசவத்தினால் இறப்பை ஏற்படுத்தும் அபாயபட்சத்தில் கருக்கலைப்பைச் சட்டரீதியாகச் செயற்படுத்த முடியும். இதைத்தவிர சகல கருக்கலைப்புகளும் சட்டத்திற்குப் புறம்பான, தண்டனைக்குரிய குற்றமாகக் கருதப்படும். இவ்வாறு நடைபெறும் கருக்கலைப்பு மூலம் வருடத்திற்கு 70,000 பெண்கள் உலகளாவிய ரீதியில் இறக்கின்றனர். அவற்றில் 92%ஆனவை பாதுகாப்பற்றவை. 55%ஆனவை அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளிலேயே இடம்பெறுகின்றன.

பெண்கள் இவ்வாறு கருக்கலைப்பைச் செய்வதற்காக வைத்தியர்களை, சட்ட அங்கீகாரமற்ற வைத்தியர்களை, பாரம்பரிய கருக்கலைப்புச் செய்பவர்கள், எனப் பலதரப்பட்டவர்களை நாடிச் செல்கின்றனர். இவ்வைத்தியர்கள் பெரும்பாலும் கருக்கலைப்பு முறைகளைப் பெண்ணின் விருப்பத்துடன் தெரிவு செய்வதில்லை. அத்துடன் பெரும்பாலும் பெண்கள் காதலனுடன் அல்லது நெருங்கிய நண்பர்களுடனேயே அவ்விடங்களை நாடுகின்றனர். அத்துடன் கருக்கலைப்பு நடைபெறும் இடம் வைத்தியப் பொறிமுறைச் சாதனங்கள் அற்றோ அல்லது வைத்திய வசதிகள் குறைவாகவும் உடனடியாக ஏற்படும் வைத்தியச் சவால்களை எதிர்கொள்ளும் திறனும், அதற்குரிய சாதனங்களும் அவர்களிடம் இருப்பதில்லை. இதைவிட, ஏற்படும் பக்க விளைவுகளின் போது வைத்தியசாலைகளை நாடுமாறு அவ்வைத்தியர்கள் அறிவுரை வழங்குவதும் இல்லை.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அத்துடன் தம்மை வெளிக் கொணராதவாறு அவ் நோயாளிகளைப் பயப்படுத்தி கருக்கலைப்பை மேற்கொள்வதுடன் ஏதாவது வைத்தியச் சிக்கல்கள் ஏற்பட்டு பெண்கள் உயிரிழப்பின் அவ்விடத்திலிருந்து உடனடியாகத் தப்பியோடுவதுடன், அதற்கேற்றவாறாக கருக்கலைப்பு இடங்களையும் வடிவமைக்கின்றனர். இவ்வாறு மேற்கொள்ளக் காரணம் தன்மேல் ஏற்படும் சட்டச் சிக்கல்களிலிருந்து விடுபடவேயாகும். இவர்கள் கடைப்பிடிக்கும் கருக்கலைப்பு முறைகளாக, வைத்திய உபகரணங்கள் மூலம் கருச்சிதைவு, வெற்றிட உறிஞ்சி மூலம் கருத்தங்கல் பொருட்களை அகற்றுதல், ஊசி மூலம் உறிஞ்சியகற்றல், மருந்துப் பொருட்களையும், நச்சுப் பொருட்களையும் பயன்படுத்தி கருவை அழித்தல், இரசாயனப் பொருட்களைப் பிரத்தியேகமாகப் பயன்படுத்தல் ,கடுமையான உடற்பயிற்சிகள் (கயிறடித்தல், துள்ளுதல், குதிரைஓட்டம், துவிச்சக்கரவண்டி ஓடுதல்), வயிற்றின் மீது கடுமையாகத் தாக்குதல், வயிற்றின் நீர்ப்பையினுள் உயர் பிரசாரண திரவியங்களை உட்புகுத்தல், சுடுநீரில் குளித்தல் என்பனவற்றைக் குறிப்பிடலாம்.

கருக்கலைப்பினால் ஏற்படும் தாய்மார்களுக்கான பின்விளைவுகள் பலவாகும். இவற்றில் உடனடியாக ஏற்படும் விளைவுகளாக எதிர்பாரா மரணம், அதைவிட ஒரு சில மணித்தியாலங்களில் குருதிப்பெருக்கு மூலம் மரணமும், குறிப்பிட்டகாலத்தின் பின்பு நுண்ணங்கித்தொற்று, மலட்டுத் தன்மை, சிறுநீரகப் பிரச்சனைகள் எனப் பல பாதிப்புகள் உருவாகலாம். இவ்வாறான பலவிளைவுகள் 1996 ஆம் ஆண்டு தென்னாப்பிரிக்காவில் சட்டமாக்கப்பட்ட கருக்கலைப்பு மூலம் தவிர்க்கப்பட்டது ஒரு சிறந்த எடுத்துக்காட்டாகும்

கருக்கலைப்பு சட்டமாக்கப்பட்டு, இலங்கையில் இலவச வைத்தியசாலைகளில் சகலவசதிகளுடனும் கருக்கலைப்பு செய்வதனால் பல நன்மைகள் ஏற்படும். பாரிய விளைவுகளைக் கொண்ட இளம்பராய மகப்பேறுகளைத் தடுக்கமுடியும். குழந்தைகள் பலர் அநாதரவற்று, கவனிப்பாரற்று பல்வேறு இன்னல்களை எதிர்நோக்கும் கவலைக்குரிய வேண்டாத மகப்பேறுகளின் எண்ணிக்கை குறைக்கப்படும். அத்துடன் தாய்மார்களின் கருக்கலைப்பு மூலம் ஏற்படும் உடனடி இறப்பு, பாதிப்புகள் என்பன தகுந்த முறையில் வைத்திய நுட்பத்துடன் வெற்றிகரமாக எதிர் கொண்டு அவற்றைத் தவிர்க்கமுடியும். மற்றும் நாட்டிலுள்ள குறைபாடுகளுடன் கூடிய குழந்தைகளின் எண்ணிக்கை குறைக்கப்படுவதன் மூலம் நாட்டின் தொழிலாளர் வர்க்கமும், நாட்டின் வைத்தியச் செலவும் குறைக்கபடும். பாலியல் சித்திரவதை மூலம் தாய்மையடையும் ஒருபெண், குறிப்பாக பல்வேறு ஆண்களால் பாலியல் பலாத்காரம் செய்யப்பட்டு தாய்மை அடைவதால், யார் தந்தை மற்றும், அவ்மகப் பேற்றினால் ஏற்படும் தற்கொலை சம்பந்தமான எண்ணங்கள், முடிவுகள் என்பன முற்றாக ஒழிக்கப்பட்டு அப்பெண்ணிற்குத் தகுந்த மனத்தைரியத்தை வழங்குவதன் மூலம், சிறந்த எதிர்காலத்தை அமைக்கமுடியும். இதைவிட, பல்வேறு சிசுக் குறைகள் மூலம் குழந்தை பிறந்ததும், உயிர்வாழ முடியாத நிலையை உடைய சிசுக்களை, முன்கூட்டியே கண்டறியுமிடத்து, அதற்கு எதுவும் செய்யமுடியாத நிலையில் அவ் மகப்பேற்றைத் தொடர வேண்டியதாயின் சுமை, மனவேதனை என்பன தவிர்க்கப்பட்டு உடனடியாக அடுத்த மகப்பேற்றிற்கு தயாராக, கருக்கலைப்பு ஒரு சிறந்த செயற்பாடாகும். பருவக் கவர்ச்சியால் தாய்மையடைந்த ஒரு பெண்,தன் வாழ்க்கையில் ஏற்பட்ட தவறிலிருந்து தன்னைமீட்டு, புதுவாழ்க்கையைத் தொடர ஒரு சிறந்த முறையாகும். அத்துடன் வேண்டாத ஒருமகப் பேற்றினால் அச்சிசுவின் எதிர்கால வாழ்வினைக் கேள்விக்குறியாக்குவது தவிர்க்கப்பட கருக்கலைப்பு உதவுகின்றது. இன்றும் வைத்தியசாலைகளில், பாலியல் பலாத்காரத்தின் பின்பு உடனடியாகப் பெண் வைத்தியசாலையை நாடின் கருக்கலைப்பு உடனடியாக மேற்கொள்ளப்படுகின்றது. ஆனால் பல்வேறு காரணங்களினால் அவர்கள் வைத்தியசாலைகளை உடனடியாக நாடுவதில்லை.

இவ்வாறு பல நன்மைகள் இருப்பினும் கருக்கலைப்பினால் தீமைகளும் இருக்கத்தான் செய்கின்றன. குறிப்பாக ஏதாவது ஒருவகையில் கர்ப்பம் தரித்த பெண் கருக்கலைப்பை இலகுவாக நாடமுடியும். அத்துடன், எந்தவித முன் பாதுகாப்பற்ற முறையில் பாலியல் உறவுகளில் ஈடுபடும் ஆண், பெண்களின்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொகை அதிகரிப்பதுடன், பெண்களிற்கான கருக்கலைப்பை எப்போதும் அணுகமுடியும் என்பது ஒரு பொருட்டாகி அது சமூக சீரழிவிற்கு ஒரு அடித்தளத்தை ஏற்படுத்திவிடும். இதைவிட சட்டவியல் ரீதியில் இன்றுள்ள கருக்கலைப்பிற்கான தண்டனைகள், அதாவது பெண்ணிற்கு வழங்கப்படும் 3,7,10 வருட சிறைத்தண்டனை மற்றும் தண்டப்பணம் என்பன அறவிட்டு, கருக்கலைப்பைக் குற்றமாக்கும் நடைமுறைகள் நிறுத்தப்பட்டு, அவர்களை நிரபராதியாக்கும் தன்மை ஏற்படும். அத்துடன் பாலியல் பலாத்காரங்களைச் செய்த ஆண்கள் இப்பாலியல் சிக்கல்களிலிருந்து இலகுவாக மீண்டு தமக்குரிய தண்டனைகளிலிருந்து தப்ப, ஒருசட்டத்தின் துவாரமாகக் கருக்கலைப்பு அமைந்துவிடும்.

எனினும் ஒட்டுமொத்தமாக நோக்கில் பல்வேறு விழிப்புணர்வுத் திட்டங்கள் மூலம் கருக்கலைப்பைச் சட்டமாக்குவதால், உதாரணமாக கணவன் மனைவியின் மனப்பூர்வமான சம்மதக் கடிதத்துடன், அல்லது பெற்றோர், பாதுகாவலரின் வேண்டுகோளிற்கிணங்கவோ அல்லது பாலியல் பலாத்காரம் உறுதிப்படுத்தப்படுமிடத்து, என தீர ஆராய்ந்து தகுந்த வைத்திய நடைமுறை மூலம் பாதுகாப்பாக கருக்கலைப்பை ஒரு சமூகச் சீராக்கும் சமூக விழிப்புணர்வுத் திட்டமாக செயற்படுத்துவதன் மூலம் பிற்போக்கான செயற்பாடுகளிலிருந்து சமூகத்தை மீட்டு எட்டமுடியாத அளவிற்கு நாட்டின் அபிவிருத்திக்கு வழி செய்யலாம் என்றால் அது மிகையாகாது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நுவரெலியா மாவட்டத் தோட்டப்புறங்களில் காணப்படும் பால்நிலைப் பாகுபாடுகள்

த. கஜேந்திரகுமார்.
விடுகை வருடம்,
சமூகவியல் விசேட துறை,
கலைப்பீடம்.

சர்வதேச ரீதியில் இன்று பேசப்படும் முக்கிய கருப்பொருள்களுள் ஒன்றாக பால் (Sex) மற்றும் பால்நிலை (Gender) காணப்படுகின்றது. பொதுவாக நாம் காணும் பௌதீக ஆண், பெண் வேறுபாடுகள் பால் எனும் கட்டமைப்புக்குள்ளும், பால் சார்ந்த சமூகக்கட்டமைப்புக்கள், சிந்தனை சார் தொகுப்புக்கள் பால்நிலை என்ற கட்டமைப்புக்குள்ளும் உள்ளடக்கப்படும். உதாரணமாக, ஒரு குழந்தை பிறப்பின் போது ஆணாக அல்லது பெண்ணாகப் பிறப்பது அதன் பாலாகும் (Sex). ஆணாகப் பிறந்த குழந்தையொன்று தைரியமானவனாக, வலிமையுடையவனாக இருக்கவேண்டுமெனவும், பெண்ணாகப் பிறந்த குழந்தையொன்று அடக்க ஒடுக்கமாக, மென்மையானவளாக இருக்க வேண்டுமெனவும் எதிர்பார்க்கும் சமூகக் கருத்தானது பால்நிலை (Gender) என அடையாளப்படுத்தப்படுகின்றது. பால் உலகம் முழுவதற்கும் பொதுவானதாகும். ஆனால் பால்நிலை சமூகத்திற்கு சமூகம், நாட்டுக்கு நாடு வேறுபடும். உலகில் எங்கு பிறந்திருந்தாலும் ஆண், பெண் எனும் இரு பிரிவுகள் பொதுவானதாகும். ஆனால் குறித்த ஆண் அல்லது பெண் வாழவேண்டிய முறைகள், ஒழுக்காறுகள், விதிகள் என்பன சமூக முறைகளுக்கேற்ப வேறுபடும் எனலாம்.

சர்வதேச ரீதியில் இன்றைய காலகட்டம் பல்வேறு வாய்ப்புகளை மக்களுக்கு வழங்கி வருகின்றது. அவ்வாய்ப்புகள் எவ்வித பாரபட்சமும் அற்ற நிலையிலேயே வழங்கப்படவேண்டும். எனினும் தொழில், ஊதியம், பொறுப்பு, நிறைவேற்று அதிகாரம் என்பன குறித்த ஓர் தரப்பினரிடையே அல்லது, ஆண் வர்க்கத்தினரிடையே பகிரப்பட்டு காணப்படுவது குறிப்பிடத்தக்கது. எனினும், பல்வேறு விதமான அடிப்படை சேவைகளை இருபாலாரும் இணைந்து வழங்கவேண்டிய தேவை இருப்பதை உணர்ந்த மேலைத்தேய நாடுகள் தமது அரசியல் பொருளாதாரம், விஞ்ஞானம், நவீனத்துவம் முதலிய முக்கிய துறைகளில் பால்நிலை சமத்துவத்தை ஏற்படுத்துவதை மிலேனியம் குறிக்கோளாக செயற்படுத்தி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. அந்தவகையில் பால்நிலை தொடர்பான செயன்முறைகள், பால்நிலைப் பாகுபாடுகள், அவற்றின் தற்கால நிலைமை போன்றன தோட்டத் தொழிலாளர்கள் அதிகமாக வாழும் நுவரெலியா மாவட்டத்தில் எவ்வாறு காணப்படுகின்றன என்பவை தொடர்பான ஒரு நோக்கினையே இக்கட்டுரை முன் வைக்கின்றது.

முதலில் பால்நிலைப் பாகுபாடு என்பதால் கருதப்படுவதானது, நபர் ஒருவர் ஆண் அல்லது பெண் என்ற காரணத்தினால் குறித்தவொரு செயற்பாட்டில் ஈடுபடுவதற்கு, அவருக்கு உரிய தகைமைகள் காணப்பட்ட போதிலும் சந்தர்ப்பங்களை வழங்குவதை தவிர்த்தல், எதிர்த்தல் போன்ற நடவடிக்கைகளாகும். இலங்கைப் பெருந்தோட்ட வரலாற்றில் தமிழகத்திலிருந்து கூலிகளாக அழைத்து வரப்பட்ட தமிழர்கள் அதிகமாக வாழும் மாவட்டம் நுவரெலியா மாவட்டமாகும். ஆரம்ப காலத்தில் காணப்பட்ட சமூகக் கட்டமைப்புகள் சார்ந்த செயற்பாடுகள் ஆணாதிக்கத்தை ஏற்றுக்கொண்ட சமூகமாகப் பரிணமித்திருந்ததைக் காணமுடியும். திருமணம், கல்வி, வாழும் உரிமை, தீர்மானங்களை எடுக்கும் உரிமை, குடும்பத் தலைமை போன்ற விடயங்கள் வீட்டின் ஆண் உறுப்பினர்களை மையப்படுத்தியதாகவே அமைந்திருந்தது. இதற்கு மிக முக்கியக் காரணம் தந்தை வழிக் குடும்பமுறை (Petrilocal) அல்லது ஆணாதிக்க முறையை வலியுறுத்திக்காட்டும் சமூகக் கட்டமைப்பாகும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1796 தொடக்கம் 1947 வரையான காலப்பகுதியானது பெருந்தோட்டப்பகுதியில் மட்டுமின்றி முழு இலங்கையிலும் பிரிட்டிஷ் ஆதிக்கமே மேலோங்கிக் காணப்பட்டது. பெருந்தோட்டத் துறையின் அறிமுகத்தோடு உருவான இந்தியத் தமிழர்களின் குடியேற்றத்தோடு ஆணாதிக்கவாதமும் இம்மக்களின் வாழ்வியலோடு ஒன்றிக் காணப்பட்டது. இதற்குப் பிரதான காரணம் தென்னிந்தியாவில் புழக்கத்தில் காணப்பட்ட தந்தை வழிக் குடும்ப முறையாகும். பெரியகங்காணி முறையானது ஆண்களுக்கு பிரதான பாத்திரத்தை வழங்குவதாக அமைந்தது. இதன் தொடர்ச்சியாக கலாசார ரீதியாகவும் பெண்கள் அடக்கப்பட்ட நிலையிலேயே காணப்பட்டார்கள். உதாரணமாக குடும்பத்தில் அதி முக்கிய தீர்மானங்கள், பிள்ளைகளின் திருமண விடயங்கள் முதலிய பிரதான நடவடிக்கைகள் ஆண்கள் மூலமாகவே முன்னெடுக்கப்பட்டன. இக்கோட்பாட்டினை உடைத்தெறியவும், பெண்களுக்கு சம உரிமையை வலியுறுத்தவும் உருவான வலிமைமிக்க பெண்மணியாக திருமதி. இலட்சுமியம்மாள் நடேசய்யர் காணப்பட்டார் கோ.நடேசய்யரால் எழுதப்பெற்ற பல்வேறு விடுதலைசார் பாடல்கள் தோட்டப்புறப் பெண்கள் மத்தியில் இலட்சுமியம்மாவினால் இசைக்கப்பட்டன. இவரால் பாடப்பட்ட கம்பீரமான பாடல்கள், மலையக மக்களை குறிப்பாக பெண்களை உத்வேகப்படுத்துவதாக அமைந்தன. அவரது பாடல்களில் குறிப்பிடத்தக்க ஒன்றாக,

> "பாய்க் கப்பல் ஏறியே வந்தோம்- அந்தநாள்
> பலபேர் உயிரினை இடை வழியில் தந்தோம்
> தாய் நாடென்று எண்ணியிருந்தோம்- இவர்கள்
> தகாத செயல் கண்டு மனம் மிக நொந்தோம்!"

என்பதனைக் கூற முடியும். இவ்வாறு முற்போக்கு நாயகிகள் சிலர் தோற்றம் பெற்றபோதிலும் ஆணாதிக்கம் அதிகமாகக் காணப்படும் சமூகமாகவே நுவரெலியா மாவட்டப் பெருந்தோட்ட சமூகம் காணப்படுகின்றது.

சுதந்திரத்துக்குப் பிற்பட்ட காலப்பகுதியில் பல்வேறு விதமான மாற்றங்கள் ஏற்பட்ட போதிலும் பெண்களுக்கான சமத்துவ உரிமை மறுக்கப்பட்ட ஒன்றாகவே காணப்படுகின்றது. தற்போதைய காலகட்டத்தில் பால்நிலைப் பாகுபாடு தொழில், ஊதியம், பாலுணர்வுகள், கல்வி, கலாசாரம், சமயம் எனப் பல்வேறு கோணங்களில் தற்போதும் காணப்படுகின்றது. பின்வரும் வகையில் அவற்றை நாம் காண இயலும்.

பெண்கள் பெருந்தோட்டத்துறையில் அதிகமான பங்களிப்பினை செலுத்துவோராகக் காணப்படுகின்றனர். அவர்கள் கொழுந்து பறித்தல் தொடக்கம் தேயிலை உற்பத்தி சார்ந்த பல்வேறு தொழில்களில் ஈடுபடுகின்றனர் (அண்மையில் தேசிய ரீதியில் அதிகமான கொழுந்துகளைப் பறித்தமைக்காக (10,140 கிலோகிராம்) சந்தனமாதா எனும் பெண்மணி கௌரவிக்கப்பட்டார்). சாதாரணமாக காலை 07.30 மணியளவில் தொழிலுக்கு வரவேண்டும் என நிர்ப்பந்திக்கப்படும் இவர்கள் மாலை நான்கு மணிவரை தொழிலில் ஈடுபடுத்தப்படுகின்றனர். இடையில் ஒரு மணிநேர இடைவேளை மதிய உணவிற்காக வழங்கப்படுகின்றது. ஒருநாளுக்கு குறைந்த பட்சம் 21 கிலோ தேயிலை பறிக்கவேண்டும் என்ற நிபந்தனையும் காணப்படுகின்றது. குறித்த அளவினைப் பறிக்கத் தவறும் பட்சத்தில் சம்பளத்தில் வெட்டு விழும் நிலையும் காணப்படுகின்றது. ஞாயிற்றுக்கிழமைகள் ஓய்வு நாளாகக் காணப்பட்டபோதிலும் அன்றைய தினம் ஒன்றரை நாள் சம்பளமாக அறிவிக்கப்பட்டிருப்பதால் பெண்கள் தொழிலுக்கு செல்வதில் ஆர்வம் காட்டுபவர்களாக உள்ளனர். எனினும் ஆண் தொழிலாளர்கள் காலை 08 மணிக்கு வேலைக்குச் சென்று பகல் 2.30 மணியளவில் தமது தொழில்களை முடித்துக் கொள்கின்றனர். அவர்களில் 70%மானோர்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாலைப் பொழுதை ஓய்வு நேரமாகவே கழிக்கின்றனர். இந்நிலைமை பெருந்தோட்டங்களில் தொழில் முறையடிப்படையில் பால்நிலைப் பாகுபாடு புரையோடியிருப்பதை வெளிச்சம் போட்டுக் காட்டுகின்றது.

அத்தோடு உழைப்புக்கேற்ற ஊதியம் கிடைக்கப் பெற்றாலும் அதனைப் பெறுவதும், நிர்வகிப்பதும் குடும்பத்தில் உள்ள ஆண் உறுப்பினர்களேயாவர். தமது உழைப்பின் பிரதிபலன்களை முழுமையாக நுகர முடியாத நிலைமை பெருந்தோட்டப் பெண்களிடம் காணப்படுகின்றது. பண்டிகை நாட்களில் மட்டும் மேலதிகமாகக் கிடைக்கும் சலுகைகளைக் கூட குடும்பத்திற்காக அர்ப்பணிக்கும் நிலைமை இங்கு காணப்படுகின்றது. உதாரணமாக பண்டிகைக்காலக் கொள்வனவுகளில் குடும்ப ஆண் உறுப்பினர்களதும் குழந்தைகளினதும் தேவைகளே முன்னிறுத்தப்படுவதுடன், பெண்களுக்கான வாய்ப்புகளை இரண்டாம் பட்சமாக நோக்கும் தன்மை ஆண்களிடம் மட்டுமின்றி பெண்களிடமும் வேரூன்றியிருப்பதைக் காணமுடியும்.

அவ்வாறே கல்வி நிலையும் இங்கு மட்டுப்படுத்தப்பட்ட ஒன்றாகவே காணப்பட்டு வந்தது. எனினும் இன்றைய நவீன காலத்தின் முக்கியத்துவத்தை கருத்திற் கொண்டு கல்வி புகட்டும் படிமுறைகள் சிறப்பாகவே பேணப்படுகின்றன. எனினும் சில பெற்றோர் பெண் குழந்தைகள் பூப்படைந்த பின்னர் பாடசாலைக்கு அனுப்பாத நிலை இன்றும் தொடர்கின்றது. ஆண்களின் கல்வி ஸ்திரமானது என்றும், பெண்களது கல்வி பயனற்றது என்றும், பெண்கள் சமையலறை, வீடு பராமரிப்பு என்பவற்றிற்கு தேவையானவற்றை மட்டுமே கற்க வேண்டும் என்ற எண்ணம் சில பெற்றோரிடமும், முதியோர்களிடமும் காணப்படுவது குறிப்பிடத்தக்கது. அதைப்போலவே பெண்கள் தமது உணவு விடயங்களிலும் கட்டாயமாக நிர்ப்பந்தங்களை ஏற்றுக் கொள்ளவேண்டிய நிலைமை காணப்படுகின்றது. பெரும்பாலும் ஆண் உறுப்பினர்கள் உணவு உண்ட பின் பெண்கள் உணவு உட்கொள்ளவேண்டும் எனும் பண்புகள் இன்றும் சில குடும்பங்களில் காணப்படுகின்றது. சிறப்பாக. இறைச்சி, மீன் மற்றும் வேறு விஷேடமான உணவு வகைகள் தயாரிக்கப்படும் போது, அவை ஆண் உறுப்பினர்களுக்கே முதலில் வழங்கப்படுகின்றது. இதற்காக அவர்கள் வைத்திருக்கும் காரணம் ஆண்கள் கடின உழைப்பாளிகள் என்பதாகும். எனினும் தோட்டப்புறங்களில் பெண்களுக்கான வேலைப்பளு குறைந்ததொன்றல்ல. அது மட்டுமின்றி சில உணவு வகைகளை உண்பதற்கு பெண்கள் தடுக்கப்படும் நிகழ்வுகளும் காணப்படுகின்றன.

பொதுவாகவே, திருமணம் முதலிய சமூகம் சார்ந்த கலாசார நிகழ்வுகளில் மிக முக்கியப் பொறுப்புக்களை ஆண்களே வகிக்கக்கூடிய நிலை காணப்படுகின்றது. நிதி நிர்வாகம் உள்ளிட்ட தெரிவுகள் ஆண்களாலேயே நிறைவேற்றப்படவேண்டும் என்ற அலிபி பெருந்தோட்டத் தொழிலாளர் சமூகத்தில் காணப்படுகின்றது. மிகச் சொற்ப அளவிலான பொறுப்புக்கள் (நகை, அலங்காரம்) மாத்திரமே பெண்கள் வசம் கையளிக்கும் நிலைமை இன்றைய நாட்களிலும் காணக்கூடிதாயுள்ளது.

கோயில், தேவாலய உற்சவங்களுக்குச் செல்லும் போது வரையறுக்கப்பட்ட உடைகள் பெண்களுக்கு விதந்துரைக்கப்படுகின்றன. ஆயினும் ஆண்களுக்கு விதிக்கப்பட்ட வேட்டி, சட்டை முறைகள் சரியான முறையில் பின்பற்றப்படுகின்றனவா என்பது கேள்விக்குறியாகக் காணப்படுகின்றது. பால்நிலைப் பாகுபாட்டில் அடிக்கோடிட்டுக் காட்டப்படவேண்டிய ஒன்றாக பாலுணர்ச்சி வெளிப்படுத்தல்கள் காணப்படுகின்றன. உதாரணமாக கணவனது இச்சைக்கு எந்நேரமும் உடன்பட வேண்டிய கட்டாயம் மனைவிக்கு உண்டு. தனது உடல் வருத்தம், மன உளைச்சல்கள், விருப்பு வெறுப்புகளைக் கருதாமல் கணவனை திருப்திப்படுத்த வேண்டும் என்ற நிலைமை இங்கு வலியுறுத்தப்படுகின்றது. இதேவேளை பாலுணர்வு தொடர்பான தனது கருத்துக்களையும், உணர்ச்சி வெளிப்பாடுகளையும் கணவனிடம் கூட வெளிப்படையாக தெரியப்படுத்த முடியாத நிலைமை காணப்படுவதற்கு பால்நிலை சமத்துவமற்ற நிலை நிலவுவதே காரணமாகும். தத்தமது தாம்பத்திய நிகழ்வுகள் தொடர்பாக கணவனிடம் கலந்துரையாட முடியாத நிலை மலையகப் பெண்களிடம் பரவலாகக் காணப்படுகின்றது. இக்கட்டுரையை வாசிக்கும் திருமணம் முடித்த ஆண்களில் எத்தனை பேர் தங்கள் மனைவியிடத்தில் உறவுநிலை பற்றி மனந்திறந்து


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பேசியுள்ளார்கள் என எண்ணிப் பார்க்குமிடத்தில் எமது சமூகத்தில், கற்றவர்களிடம் கூட பால்நிலை சமத்துவம் பற்றிய விழிப்புணர்வு மிகக் குறைந்தளவிலேயே காணப்படுகின்றது என்பது புலப்படும்.

உடல் வலியினைக் குறைப்பதாகக் கூறிக்கொண்டு ஆண்கள் சிலர் தினமும் மதுபானப் பாவனையைப் பின்பற்றுவோராகக் காணப்படுகின்றனர். இந்த வலியானது தினமும் ஏழு மணித்தியாலங்கள் தொழில், வீட்டுவேலைகள், குழந்தைப் பராமரிப்பு, உணவுத் தயாரிப்பு என்பவற்றை கட்டாய செயற்பாடுகளாகக் கொள்ளும் பெண்களுக்கு இல்லையா என்ற கேள்வி எழும் வேளையில் ஆணாதிக்கவாதிகளின் பதில் மௌனமாகவே இருக்கின்றது. ஆகவே, ஆண்கள் குறைந்தளவிலான தொழில் செய்து ஆதிக்கம் செய்வோராகவும் பெண்கள் வாய் மூடி மௌனிகளாகவும் காணப்படுவதைக் காணலாம். மேலும் பெருந்தோட்டத்துறையில் ஈடுபடும் பெண்களை மேற்பார்வை செய்யும் கங்காணிகள் ஆண்களாக காணப்படுதல் தொழிற்றுறையில் காணப்படும் பாரிய பால்நிலை சமத்துவமின்மை எனக் கூறலாம். பெண் தொழிலாளிகளின் பிரச்சினைகள், பௌதீக, மானசீக சவால்களை மனம்விட்டுப் பேசுவதற்கான வாய்ப்புகள் இவ்வேளையில் அற்றுப்போவதைக் காணலாம்.

அத்தோடு பெருந்தோட்டப்புறங்களில் காணப்படும் வன்முறைகளில் 90%மானவை பெண்களுக்கு எதிரானவையே ஆகும். இந்நிலையும் இச்சமூகத்தில் பால்நிலை சமத்துவம் பேணப்படாத நிலையையே சுட்டிக்காட்டுகின்றது. மொத்தத்தில், இன்றைய நவீனயுகம் பால்நிலை சமத்துவத்தை உருவாக்க பல்வேறு பொருத்தனைகள், சட்டங்கள், நடைமுறைகளை ஏற்படுத்தி விழிப்புணர்வை ஏற்படுத்தினாலும் நுவரெலியா மாவட்ட பெருந்தோட்டப்புறங்களில இன்றும் பால்நிலை பாகுபாடு பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தல் மிகச் சொற்ப அளவிலேயே காணப்படுகின்றது. பொருளாதாரம், வர்த்தகம், தொழிற்றுறைகளில் சமவாய்ப்புகளை ஏற்படுத்தல், தாய்வழிக் குடும்ப முறையினை வலுப்படுத்தல் முதலிய செயற்பாடுகளை மேற்கொள்வதன் மூலம் இச்சமூகத்தில் காணப்படும் பால்நிலை ஏற்றத்தாழ்வை கணிசமான அளவில் குறைக்க முடியும் எனலாம். இவற்றிற்கெல்லாம் மேலாக, பெண்கள் தமக்கு கிடைக்கும் வாய்ப்புகளை எவ்வித தயக்கமும் இன்றி சிறந்த முறையில் பயன்படுத்துவதன் மூலம் இன்னோரன்ன நன்மைகளைப் பெற்றுக் கொள்வதுடன், பால்நிலை சமத்துவத்தை நிலை நாட்டுவதற்கு சிறந்ததோர் அடித்தளத்தினை இட முடியும் என்பது துணிவு.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்க்கையில் வெற்றி பெற..

வி. நிஷாந்தினி
மூன்றாம் வருடம்,
விவசாயப் பீடம்.

உலகமாகிய பெருங்கடலில் உங்களுடைய வாழ்க்கை ஒரு கப்பலைப் போன்றது. நீங்களே அக்கப்பலை ஓட்டும் மாலுமிகள். எந்த இடத்திற்குப் போய்ச் சேர வேண்டுமென்ற எண்ணமில்லாது கப்பலைக் கண்மூடித்தனமாக ஓட்டும் மாலுமிகள், கப்பலைப் பாறைகளில் மோதி கப்பலோடு தங்களையும் நாசப்படுத்திக் கொள்கின்றனர். அது போன்றே, இலட்சியமில்லாத வாழ்க்கையும் ஆகிவிடுகிறது. எனவே இலட்சியத்தை அடைய அவன் செய்ய வேண்டியது அவனுடைய இதயத்தைப் பற்றியும், அதன் ஆற்றலைப் பற்றியும், அந்த ஆற்றலை எவ்வாறு பண்படுத்துவது, அதனை எவ்வாறு பயன்படுத்துவது, அதனை எவ்வாறு அடக்கி ஆள்வது என்பதைப் பற்றியும் தெரிந்து கொள்ள வேண்டும்.

வாழ்க்கையில் வெற்றி பெற விரும்பும் ஒருவன் இறைவனையும், இரண்டாவது தன்னையும் நம்பி தளரா முயற்சியுடன் தைரியமாக முன் செல்ல வேண்டும். மனமே எல்லாவித வெற்றிகளையும் அளிக்கும் அமுத சுரப்பி.

மனிதனின் வாழ்வைப் பாழாக்கும் பிணிகளில் கவலை, சினம், தன்னம்பிக்கையின்மை, முயற்சியின்மை ஆகியன சிலவாகும். சிலர் தன்னிடம் 'அது இல்லையே', 'இது இல்லையே' என்று எப்போதும் கவலைப்படுவர். தங்களுடைய வாழ்க்கையில் நடந்த துன்பங்களை மட்டுமே சிந்தித்துக் கவலைப்பட்டுக் கொண்டு இருப்பர். துன்ப எண்ணங்கள் நுழைந்து, உங்கள் மகிழ்ச்சியை குன்ற செய்து, மனச்சோர்வை உண்டுபண்ணுமாயின், வாழ்க்கையில் நிகழ்ந்த பெருமைபடத்தக்க, மகிழ்ச்சிகரமான நிகழ்ச்சிகளை நினைத்துப் பார்த்து உங்களை நீங்களே ஊக்கப்படுத்திக் கொள்ள வேண்டும். அப்பொழுது நீங்கள் உங்கள் கவலையிலிருந்து விடுபட முடியும். இருள் செறிந்த இடத்தில் விளக்கொன்றைக் கொண்டு சென்றால் எவ்வாறு இருள் வெருண்டோடுகின்றதோ, அதே போன்று இன்பமான, ஆர்வமிக்க, நல்ல எண்ணங்களை எண்ணும் போது கவலை இருந்த இடம் தெரியாமல் மறைந்து விடும்.

சினம் மனிதனுடைய நல்வாழ்விற்கு ஊறுவிளைவிக்க கூடிய ஒன்றாகும். சினத்தால் எத்தனையோ பேர் தங்களின் வாழ்வையே பாழ்படுத்திச் சிறையையே தங்களின் வாழ்வின் இருப்பிடமாக ஆக்கிக் கொண்டுள்ளார்கள். ஆண்டாண்டு காலமாக பாடுபட்டுக் கட்டப்படும் வாழ்க்கைக் கட்டிடம், சினம் என்ற பூகம்பம் வந்ததும் ஒரு நொடி நேரத்தில் துகள்துகளாகிறது. அப்பொழுது மனிதன், தான் என்ன நினைக்கின்றோம், என்ன செய்கின்றோம், என்ன பேசுகிறோம் என்பதை அறியாது, எண்ணாததை எண்ணி, பேசாததைப் பேசி, செய்யாததைச் செய்து, தனக்கே தான் அழிவையும், இழிவையும், வெறுப்பையும், பகையையும் விலைக்கு வாங்கிக் கொள்கிறான். ஆதலினால் சினத்திலிருந்து விடுபட, தன்னை தான் அடக்கி ஆள வேண்டும். சினம் ஏற்படின் பேசாமல் மௌனம் காப்பது சிறந்தது. மேலும் அவ்விடத்திலிருந்து மௌனமாய் விலகிச் செல்வதும் சிறந்தது. இவற்றையெல்லாம் விட நாம் எல்லோரிடமும் அன்பு செலுத்துவோமாயின், நாம் எப்பொழுதுமே சினம் கொள்ள மாட்டோம்.

வாழ்க்கையில் வெற்றி பெற விரும்பும் ஒவ்வொருவருக்கும் தன்னம்பிக்கை மிகவும் இன்றியமையாததாகும். "தன்னம்பிக்கை இல்லாதவனின் வாழ்க்கை காலால் நடப்பதற்குப் பதிலாக


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தலையால் நடப்பதையொக்கும்" என்று இடித்துரைக்கிறார் அறிஞர் 'எமர்ஸன்'. எச்செயல் ஆற்றினும் முதலில் தங்களை நம்ப வேண்டும். 'தன்னால் முடியும்' என்ற எண்ணம் எப்போதும் மனத்தில் இருந்தால் மட்டுமே எச்செயலையும் திறம்பட செய்ய முடியும்.

ஒவ்வொரு மனிதனும் வாழ்க்கையில் வெற்றி பெற வேண்டும் என்றே விரும்புகிறான். ஆனால் அவ்வெற்றியை, அதீத ஆசையுடனும், அடங்காத் தாகத்துடனும் பார்ப்பவர்களே வெற்றி பெறுவர். அதற்கு விடாமுயற்சியுடன் போராட வேண்டும். சிலர் முயற்சி செய்வர். ஆனால் அது, அதீத ஆசையுடன் கூடிய முயற்சியாக இருக்காது. இதுவே அவர்கள் முயற்சி செய்தும் தோல்வியைத் தழுவுவதற்கான காரணமாகும்.

எனவே உங்களிடம் இல்லாத ஒரு தன்மையை, அது தன்னம்பிக்கையாக இருக்கட்டும் அல்லது வேறு எந்த நல்ல பண்பாக இருக்கட்டும் அதை உங்களுக்குள்ளே உண்டு பண்ண விரும்புபவர்களாயின், முதலில் அத்தன்மை உங்களிடம் இருப்பது போன்று எண்ணி, உங்கள் மனக்கண்ணால் அதனைத் திரும்பத் திரும்பப் பார்த்து வர வேண்டும். அத்தன்மையின் காரணமாகவே செயலாற்றி வருவதாகவும், அது உங்களுடைய நீங்காப் பண்புகளில் ஒன்றாக இருப்பதாகவும் உணர வேண்டும். அதனை முழு மனத்துடன் நம்பவும், விரும்பவும் வேண்டும். இவ்வாறு செய்தால் உங்களிடம் இல்லாத தன்மையை உண்டு பண்ணிக் கொள்ளலாம். ஆனால் அத்தன்மையை திடீரென எய்திவிட முடியாது. இதற்கு பொறுமையும், விடா முயற்சியும், அறுதியும் தேவை. இவ்வாறு செய்வின் பயன் எய்வது உறுதி.

ஒருவன் வளமான வாழ்வு வாழ விரும்பின் அவன் வளமான எண்ணங்களை சிந்திக்க வேண்டும். நம் ஆன்மா எதை விரும்புகிறதோ, எதை விரும்பித் தன் கண்களால் ஆசையுடன் நோக்குகிறதோ, அப்பொருள் நம்மை முன் பின்னாக ஒருநாள் வந்தடைந்தே தீரும். எனவே

"எண்ணிய எண்ணாங்கு எய்துப எண்ணியார்
திண்ணிய ராகப் பெறின்"

என்ற வள்ளுவர் குறளுக்கிணங்க, நம் எண்ணம் திண்ணியதாக இருத்தல் வேண்டும். வெறுமனே வெற்றி பெற வேண்டும் என்ற ஆசை மட்டும் இருந்தால் போதாது. ஆர்வமிக்க மனநிலையுடன் கூடிய ஆசையாக இருத்தல் வேண்டும். அந்த எண்ணம் உள்மனத்தைத் தொட வேண்டும். சிலர் வெறுமனே 'இப்படி ஆக வேண்டும்' என்று ஆசைப்படுவர். ஆனால் அவ்வெண்ணம் அவர்கள் உள்மனத்தை தொட்டிராது. அதனால் தான் அவர்கள் ஆசைப்பட்டதை அடைய முடியாதவர்களாய் இருக்கின்றனர். எந்த எண்ணம் உள்மனத்தைத் தொடுகிறதோ, எந்த எண்ணம் உள்மனத்தைத் தன்பால் கவர்ந்து நிற்கிறதோ, எந்த எண்ணத்தை உள்மனம் முற்றிலும் நம்பித் திரும்பத் திரும்ப எண்ணுகிறதோ, அந்த எண்ணமே உருப்பெறும். வெளிமனத்தால் மட்டும் எண்ணப்படும் எண்ணங்களால், அவை எத்தனை கோடித் தடவைகள் திரும்பத் திரும்ப எண்ணப்பட்டாலும் ஒரு செயலும் உருவாகாது. எனவே உள் மனத்திற்கு உங்களுடைய எண்ணங்களை அனுப்புவதற்கு, முதலாவது என்ன செய்ய விரும்புகிறீர்களோ, யாராக வாழ விரும்புகிறீர்களோ அதனை உங்கள் மனக்கண் முன்னே பார்க்க வேண்டும். உங்களுடைய ஆசையை எவ்வளவு எளிய மொழியில், வன்மையான சொற்களில் எழுத இயலுமோ அவ்வளவு எளிமையாகவும், வன்மையாகவும் ஒரு காகிதத்தில் எழுத வேண்டும். இரண்டாவது அதனை எப்பொழுது பெற்று விட விரும்புகிறீர்கள் என்று எழுத வேண்டும்.

மூன்றாவது அதனைப் பெறுவதற்கு என்னென்ன முயற்சித் திட்டங்களைச் செயல்படுத்த வேண்டும் என்பது பற்றியும் தெளிவாக எழுத வேண்டும். எழுதியதோடு மட்டுமல்லாது அத்திட்டத்தை உருவாக்கும் வேலையில் தயாரோ, தயாரில்லையோ அடுத்த கணமே ஈடுபட்டு விட வேண்டும். உங்களுடைய சிந்தனைகள் அனைத்தையும் ஒருங்கு சேர்த்துச் செலுத்தி, எண்ண ஆலோசனைகளை உள் மனத்திற்கு அனுப்புவதற்கு, இரவில் தூங்கச் செல்லும் முன்னும், அதிகாலை தூக்கத்திலிருந்து எழுந்த பின்னும், பத்து


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிமிடம் ஒதுக்க வேண்டும். ஒரு தனி இடத்தைத் தேர்ந்தெடுத்து, அங்குச் சென்று அமைதியாக நீட்டி நிமிர்ந்துப் படுத்து, கண்களை மூடிக்கொண்டு அடைய விரும்பும் இலட்சியத்தையும், அதற்காக எடுக்கவிருக்கும் முயற்சிகளையும், மேற்கொள்ள விரும்பும் திட்டங்களையும், காலக்கெடுவையும் வாயால் சப்தமிட்டுக் கூற வேண்டும். அப்பொழுது உங்களுடைய ஆசையும், நம்பிக்கையும், உணர்ச்சியும் மிகைத்து நிற்கும். உங்களுடைய எண்ணங்களை வாயால் சப்தமிட்டு உரைக்கும் போது அது வெகுவிரைவில் உள்மனத்திற்குள் பதிந்துவிடும். திரும்பத் திரும்ப அதனை கூறும் போது உங்களுடைய உடல் முழுவதும் ஒருவித ஆற்றல் நிறைந்திருப்பது போன்ற உணர்வு வரும். இவ்வாறு செய்யின் விருப்பம் உள்மனத்தை அடைவது நிச்சயம்.

எண்ணம் காந்த ஆற்றல் உள்ளது. ஒருவனுடைய எண்ணமானது தனக்கு உகந்த மனிதர்கள், பொருள்கள் சூழ்நிலைகள் ஆகியவற்றை தன்பால் இழுத்து நிற்கும் ஆற்றல் பெற்றது. எனவே உங்கள் எண்ணமும் விடாமுயற்சியுடன் தொடர்ந்தால் அது நிறைவேறுவது திண்ணம். எனவே விடாமுயற்சியுடனும், தன்னம்பிக்கையுடனும், உற்சாகத்துடனும் செயலில் ஈடுபட்டால் இமயத்தை தொடுவது இயலாத ஒரு விடயமல்ல. முயற்சி செய்து பாருங்களேன்!


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சனத்தொகை கட்டமைப்பில் முதியோர் (Aging People in Population Structure)

துவாரகா சிவலிங்கம்.
விடுகை வருடம்.
புவியியல் விசேட துறை.
கலைப் பீடம்.

## 1. அறிமுகம்

நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கும், எதிர்காலத் திட்டமிடலிற்கும், இயற்கை வளங்களை தகுந்த முறைப்படி மாற்றியமைத்து பயன்படுத்துவதற்கும் வினைத்திறனுடைய மனித சமூகம் இன்றியமையாததாகும். வயதடிப்படையிலான சனத்தொகைக் கட்டமைப்பில் இத்தகைய மனித குடித்தொகையினர் சிறுவர் (1-14வயது), இளையோர் (15-60வயது), முதியோர் (60வயதிற்கு மேல்) என மூன்று பிரிவாக நோக்கப்படுகின்றனர். முதியோர், தமது இளமைக்காலத்தில் தொழிற்படையில் பங்களித்துவிட்டு இளையோரில் தங்கியிருப்பவர்களாக உள்ளதுடன் சனத்தொகைக் கட்டமைப்பில் இவர்களின் பங்களிப்பு அண்மைக்காலமாக அதிகரித்து வருகின்றது. இந்தவகையில் உலகின் குடித்தொகை மாற்றப்போக்கில் முதுமையும் அதனுடன் இணைந்த பண்புகளும் சமூக, பொருளாதார, அரசியல் ரீதியில் முக்கியம் பெற்று வருவதனை அவதானிக்க முடிகின்றது. அத்துடன் முதியோர் தொகை அதிகரிப்பானது பிரதேசம், நாட்டிற்கு நாடு இடரீதியாக வேறுபட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

சனத்தொகை உயர் பிறப்பு, இறப்பு வீதம் எனும் நிலையிலிருந்து தாழ் பிறப்பு, இறப்பு நிலையாக மாற்றமடைவதால் முதியோராதலில் தொடர்ச்சியான அதிகரிப்பு ஏற்பட்டு வருகின்றமை ஐக்கிய நாடுகள் சபையின் வயதடைதல் நிகழ்ச்சித்திட்ட அறிக்கை மூலம் அறியக்கூடியதாக உள்ளது. இவ் அதிகரிப்பானது ஆயுள் எதிர்பார்ப்பிலும் அதிகரிப்பை ஏற்படுத்தி உள்ளதுடன், அரசின் அபிவிருத்தி, திட்டமிடல் போன்ற நடவடிக்கைகளிற்கு சவாலாகவும் விளங்குகின்றது. அதுமட்டுமன்றி மாறிவரும் உலக ஒழுங்கிற்கேற்ப ஒவ்வொரு சமூகமும் தம்மை அதனுடன் இணைத்து வாழத்தலைப்படுவதால் முதியோர், சமூக, பொருளாார, உளவியல்சார் பிரச்சினைகளிற்கு முகங்கொடுக்கவேண்டிய நிலைக்குத்தள்ளப்பட்டுள்ளனர்.

## 2. முதியோர் என்போர் யார்?

யார் முதியோர் என்பதை வரையறுப்பதில் பல்துறைசார் நிபுணர்களும் தமது நோக்கில் பல்வேறுபட்ட கருத்துக்களை முன்வைத்துள்ளனர். இருந்தபோதிலும் உலக நாடுகளில் பொதுவாக 60 வயதிற்கு மேற்பட்டோரை முதியோராக கருதுதல் ஏற்றுக் கொள்ளப்பட்டதாக உள்ளது (குகபாலன்,கா 2008). ஆனபோதும் சமூகவியலாளர்கள், மருத்துவவியலாளர்கள் "முதுமை" என்ற சொல்லிற்கு கூறிய விளக்கங்கள் பின்வருமாறு அமைந்துள்ளன.

- "மனித வாழ்க்கைப் பயணத்தில் வரும் இறுதி வளர்ச்சிப் படிநிலையே முதுமையாகும். அது ஒரு நோய் அல்ல. முதிர்வு, அனுபவ விருத்தி நிலையாகும்."
- "ஒருவரின் உடலிலுள்ள கலங்களிலும் தொகுதிகளிலும் மாற்றங்களேற்பட்டு அவரது தொழிற்பாடுகளில் (உடல், மூளை) படிப்படியான தேய்வு ஏற்படுகின்ற நிலையே முதுமை"
- "முதுமை எய்துதல் என்பது இயற்கையின் நியதியாகும். அதாவது முதிர்வடையும் நிலையினை யாராலும் கட்டுப்படுத்த முடியாது."


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

➢ "முதுமை என்பது வாழ்வுக்கால முதிர்வைக் குறிப்பதாகும்."

## 3. முதியோர் பற்றி அறிஞர் சிலரின் கருத்துக்கள்

முதியோர் எனும் பதத்தை வரையறுப்பதில் சிக்கலானதாக உள்ளதுடன் ஒவ்வொரு துறைசார் அறிஞர்களும் தமது நோக்கிற்கேற்ப இதனை வரைவிலக்கணப்படுத்திச் சென்றுள்ளனர். அந்தவகையில் குறிப்பிட்ட சில அறிஞரின் கருத்துக்களை இங்கு நோக்கலாம்.

1. *"வயதால் முதுமையடைதல் மற்றும் உடல் ரீதியாக தளர்ச்சியுற்ற நிலையினை அடைதல் ஆகியவற்றை கொண்டோரை முதியோராகக் கொள்ளமுடியும்."*

   - சீன அறிஞர் வின்ஜியாஸ்

2. *"கிராமிய மக்கள் தமக்கு பேரப்பிள்ளை எப்போது பிறக்கின்றனரோ அப்போதே தாம் முதுமை அடைந்துவிட்டதாக கருதுகின்றனர்."*

   -இந்திய அறிஞர் அகர்வால்

3. *"விவசாயத்தில் ஈடுபாடு கொண்டமக்கள், அக்கடமைகளை பிள்ளைகள் பொறுப்பேற்றுகொள்ளும்போது தாம் முதுமையடைந்து விட்டதாக கருதுகின்றனர்."*

   -பி.ஆர் திருவேதி

4. *"இந்தியாவின் வறுமையானது முதுமையிலும் இளைப்பாறவிடுவதில்லை. அவர்கள் தமது இளைப்பாறும் காலத்தை கடவுளிடம் ஒப்படைத்து விட்டதாக கருதுகின்றனர்."*

   -பேராசிரியர் ஏ. ரமேஸ்

## 4. முதியோரின் பண்புகள்

முதியோரின் பண்புகள் நாடுகளின் பொருளாதார, சமூக, பண்பாடு, உயிர்க்கூற்றியலிற்கு ஏற்ப வேறுபட்ட தன்மைகளைக் கொண்டுள்ளன. வயது, தோற்றம், இயலுமை, நோய்த்தாக்கம் போன்றவற்றின் அடிப்படையில் முதியோரின் பண்புகள் எவ்வாறுள்ளன என்பதைக் கூறலாம். வயதடிப்படையில் பொதுவாக 60 வயதிற்கு மேற்பட்டோரை முதியோர் என்றாலும் விருத்தியடைந்த, விருத்தியடைந்துவரும் நாட்டு சனத்தொகையின் வேறுபட்ட பண்புகள் இதில் மாற்றத்தை ஏற்படுத்தியுள்ளன. ஆயுள் எதிர்பார்ப்பு விருத்தியடைந்துவரும் நாடுகளில் குறுகியதாகவும், விருத்தியடைந்த நாடுகளில் அதிகமாகவும் காணப்படுகின்றது. ஆபிரிக்க நாடுகளில் சராசரி ஆயுள் எதிர்பார்ப்பு 50 வயதிற்கு குறைவாக உள்ள அதேநேரம், விருத்தியடைந்த நாடுகளில் 75-80 வயதாக காணப்படுகின்றது.

முதுமைப் பண்புகளில் உடலில் (தோற்றம்) ஏற்படும் மாற்றங்களையும் கூறமுடியும். மனித வாழ்வில் காற்பங்குகாலம் வளர்ச்சி நிலையைக் கொண்டதாகவும், மிகுதிக்காலம் படிப்படியாக முதுமை நிலையினை அடைந்துவரும் காலம் எனவும் கொள்ளப்படுகின்றது. ஆனாலும் சிலர் 40-45 வயதிலே முதுமைப்பண்பினை அடைவதையும், இன்னும் சிலர் 60-65 வயதிலும் கூட இளமைப்பண்புடன் வாழ்வதையும் காணமுடிகின்றது. எனவே தோற்றம், வயது என்பதைக் காட்டிலும் ஆரோக்கியம், மனநிலை, வாழ்வியல் முறை, தகைமை போன்றவற்றில் குறிப்பிடக்கூடிய பண்புகளைக் கொண்டுள்ளதால் அதன் மூலம் முதியோரை அடையாளப்படுத்துவது சிறந்தது. குறிப்பாக தலைமயிர் நரைத்தல், முகம், தோல் போன்றவற்றில் சுருக்கம் ஏற்படுதல், தோலின் கீழுள்ள கொழுப்பு குறைவடைதல், கூனல் ஏற்படல் போன்றன முதுமைக்குரிய பண்புகளாக மருத்துவர்கள், சமூகவியலாளர்களால் சுட்டிக்காட்டப்படுகின்றது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதனைவிட உடலின் தசைகளும் உள்ளுறுப்புக்களும் நலிவடைந்து 65-70 வயதுகளில் இளமையில் காணப்பட்ட இடையை விட 60-70 சதவீதமாக குறைவடைதலும் முதுமைப்பண்பாக கருதக்கூடியது எனவும் அவர்கள் கூறுகின்றனர். முதுமைக்காலத்தில் தொழில் மற்றும் உறவுகளிலிருந்து அன்னியப்படுத்தப்படும் போதும் மனஅழுத்தத்திற்கு உள்ளாவதாக கூறப்படுகின்றது. ஆனபோதிலும் இளம் முதியோர் (65-74 வயது) சமூகத்திற்கு செயலாற்றக்கூடியவர்களாக இருப்பதுடன் 80 வயதின் பின்னரே செயற்றிறன் குறைவடைவதாக உலக சுகாதார அமைப்பு குறிப்பிடுகின்றது.

## 5. முதியோரின் முக்கியத்துவம்

இளமையில் இறப்பினை வெற்றிகொண்டால் முதியோராதலென்பது எவராலும் தவிர்க்க முடியாத ஒன்றாகி விடுகின்றது. இத்தகைய முதியோரின் முக்கியத்துவம் சர்வதேச ரீதியில் உணரப்பட்டு வருகின்ற நிலையில் அவர் தம் சிறப்பினையும் பாதுகாப்பினையும் கருத்தில்கொண்டு ஐக்கியநாடுகள் சபையின் பரிந்துரைக்கமைய ஒக்ரோபர் 1 ஆம் திகதி "சர்வதேச முதியோர் தினமாக" உலக நாடெங்கிலும் கொண்டாடப்பட்டு வருகின்றது. முதியோர் சமூகம் வளமுள்ள, பகுத்தறிவுடைய சமூகமாகும். அதாவது அவர்களின் அறிவு, அனுபவம் என்பன இளைய தலைமுறையினரிற்கும் அடுத்துவரக்கூடிய சந்ததியினரிற்கும் மிகவும் பெறுமதியானதாகவும் பயனுள்ளதாகவும் அமையும் என்பது யாராலும் மறுக்கமுடியாத உண்மையாகும்.

ஒரு நாகரிகத்தின் சிறப்பானது முதியோரிற்கு சமூகம் கொடுக்கின்ற அந்தஸ்திலும் ஆதரவிலுமே தீர்மானிக்கப்படுவதனை வரலாற்றில் காணமுடிகின்றது. குறிப்பாக சங்கத்தமிழ் இலக்கியங்களில் முதியோரின் முக்கியத்துவம் கூறப்பட்டுள்ளது. அச்சமூகங்களில் வயது வந்தவர்கள் மரியாதைக்குரியவர்களாக மதிக்கப்பட்டுள்ளதுடன் அவர்களின் அனுபவம், ஆற்றல் என்பன இளைஞரை ஊக்கப்படுத்தவும் நல்வழிப்படுத்தவும் அவசியமானவையாக கருதப்பட்டன. பொதுவாக முதியோரே குடும்ப உறவுகளை வலுப்படுத்துபவர்களாகவும் வழிகாட்டிகளாகவும் சமூக, பண்பாட்டுப் பாரம்பரியங்களை பரம்பரைக்கு கடத்துபவர்களாகவும் (சொல், செயல்மூலம்), கூட்டுக்குடும்ப உறவுகளைக் கட்டிக்காப்பவர்களாகவும் விளங்குகின்றனர். உலக சுகாதார நிறுவனத்தின் கருத்தின்படி 65-74 வயதிற்கும் இடைப்பட்ட இளம் முதியோர் சமூகத்தில் செயற்றிறனுடன் செயலாற்றக்கூடியவர்கள் என்பதை அறிய முடிகின்றது. இத்தகைய அனுபவசாலிகளின் பங்களிப்பானது குடும்பம், சமூகம், தேசம் போன்றவற்றிற்கு அவசியமானது. இதனால் இவர்கள் சமூகத்தில் சிறப்பிடம் பெறுகின்றனர்.

## 6. உலகளாவிய ரீதியில் முதியோரின் வகைப்பாடு

சர்வதேச நிறுவனங்கள் முதியோரை வகைப்படுத்தி அவர்களின் பண்புகளை இனங்காண முயல்வதுடன் அவர்களிற்கான நலத்திட்டங்களையும் செயற்படுத்திவருகின்றன. இந்தவகையில் உலக சுகாதார நிறுவனம் (WHO) முதியோரை இளம் முதியோர் (65-74 வயது), முதியோர் (80 வயதிற்கு மேல்) என இருவகைப்படுத்தியுள்ளது. இளம் முதியோரின் உளத்திறன் முன்னைய நிலையை விட 3% மட்டுமே குறைகின்ற அதேநேரம் 80 வயதின் பின் 30%குறைந்துவிடும் எனவும் அறிக்கைகள் குறிப்பிடுகின்றன. மேலும் ஐக்கிய நாடுகள் சபையின் கிளை நிறுவனங்கள் 60 வயதிற்கு மேற்பட்டோரை முதியோர் எனக் கூறுகின்றபோதும் நாட்டிற்கு நாடு இந்நிலை வேறுபடுவதால் பொதுவில் பின்வருமாறு 4 வகைப்படுத்தியுள்ளது.

1. வயதில் மூத்தோர் (60-40 வயது)
2. இளைய முதியோர் (65-69 வயது)
3. நடுத்தர முதியோர் (70-79 வயது)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

4. மிகவும் முதுமை அடைந்தோர் (80 வயதிற்கு மேல்)

## 7. உலகில் முதியோர்

உலகளாவிய ரீதியில் மேற்கொள்ளப்படும் குடித்தொகைக் கணிப்புகளின்படி புலனாகும் முதியோர் தொகை அதிகரிப்பானது விருத்தியடைந்த, விருத்தியடைந்துவரும் நாடுகளிடையே வேறுபட்டுள்ளது. வளர்ந்த நாடுகளில் தொடர்ந்தும் முதியோர் தொகை அதிகரித்து வருகின்ற போதும் கடந்த 30 வருடங்களாக வளர்முக நாடுகளிலும் இதனை அவதானிக்க முடிகிறது. இந்நிலை தொடருமாக இருந்தால் 2025 இல் 72 சதவீதமான முதியோர் வளர்முக நாடுகளில் வாழ்வர் எனக் கூறப்பட்டுள்ளது. ஆசியாக்கண்டத்தைப் பொறுத்தவரை சீனாவிலே அரைப்பங்கு முதியோர் வாழ்வர் என எதிர்பார்க்கப்படுகின்றது. ஐக்கியநாடுகள் சபை அறிக்கையின்படி இன்றைய நிலையில் 10:1 ஆக உள்ள முதியோரின் விகிதாசாரம் 2050 இல் 5:1 ஆகவும், 2150 இல் 3:1 ஆகவும் இருக்குமென எதிர்வு கூறப்பட்டுள்ளது. உலக முதியோரில் 51%நகரில் வாழும் அதேவேளை 2025இல் 62%ஆக அதிகரிக்கலாம். அத்துடன் 74% விருத்திபெற்ற நாட்டிலும், 37%விருத்தியடைந்து வரும் நாட்டிலும் நகரவாசிகளாக இருப்பரென எதிர்வு கூறப்பட்டுள்ளது.

## 8. விருத்தியடைந்த நாடுகளில் முதியோர்

விருத்தியடைந்த நாட்டு முதியோர் முதுமையடைந்துள்ள போதும் அந்நாடுகளின் சமூக, பொருளாதார, பண்பாட்டுக் காரணிகளின் சிறப்பான தன்மையினால் ஆரோக்கியமானவர்களாகவும், சிறந்த பாதுகாப்பினை உடையவர்களாகவும் உள்ளனர். மருத்துவ, சுகாதார சேவைகளின் சிறந்த விரிவாக்கம், குடியிருப்புகளின் சுற்றுச்சூழல் பராமரிப்பும் பாதுகாப்பும், வேலைவாய்ப்பில் உத்தரவாதம் காணப்படுகின்றமை, தொழிலற்றவர்க்கு அரசு பாதுகாப்பு வழங்குகின்றமை, முதுமைக்கால ஓய்வூதியத்திட்டம், முதியோர் பராமரிப்பு தொடர்பில் அரசு காட்டிவரும் அக்கறை, முதியோர் தொடர்பான மருத்துவர்களை உருவாக்குவதில் மருத்துவத்துறை கண்டுள்ள வெற்றி என்பன முதியோரிற்கு சாதகமாக அமைந்துள்ளன (குகபாலன்,கா. 2007).

பொதுவாக விருத்தியடைந்த நாட்டு சனத்தொகையில் முதியோரின் பங்கு (60 வயதுக்கு மேற்பட்டோர்) 5:1 (2005) என்பதாக இருந்தது. இந்நிலை 2150 ஆம் ஆண்டில் 3:1 ஆகக் காணப்படும் என எதிர்வு கூறப்பட்டுள்ளது. ஐக்கிய அமெரிக்கா, யப்பான், ஐக்கிய இராச்சியம் போன்ற நாடுகளில் முதியோர் தொகை வேகமாக அதிகரித்து வருகின்றது. ஐக்கிய அமெரிக்காவில் 1940 இன் பின்னரான தசாப்த காலத்தில் "Baby Boom" காணப்பட்டதால் 1980களில் வயது வந்தோர் தொகை அதிகரித்தது. இது 2000-2010 காலப்பகுதியில் முதியோர் தொகை அதிகரிப்பில் பாரிய செல்வாக்கைச் செலுத்தியிருந்தது. ஐக்கிய இராச்சியத்திலும் கடந்த 5 தசாப்தங்களில் 60 வயதிற்கு மேற்பட்டோர் 16% இலிருந்து 21% ஆக அதிகரித்துள்ளனர்.

மேற்குலகைப் பொறுத்தவரை முதியோர் பராமரிப்பு மருத்துவ அடிப்படையில் வளர்ச்சி பெற்றுள்ளதுடன், பயிற்சி பெற்றவர்கள் மூலமாக சிகிச்சை நிலையங்களில் பராமரிப்பதும் விருத்தியடைந்துள்ளது. ஐக்கிய அமெரிக்காவில் குறைந்தது 100 படுக்கைகள் கொண்ட 16000 சிகிச்சை நிலையங்கள் (Nursing Home) உள்ளன. இந்நாடுகளின் அரச, தனியார் துறையினர் உழைக்கும் காலத்திலே அவர்களிற்கான ஓய்வூதியக் கழிவினைப் பெற்றுக்கொண்டு ஓய்வு பெற்றபின் ஓய்வூதியமாகவும், மருத்துவ, சுகாதார சேவைகள், போக்குவரத்து என்பவற்றிற்கும் செலவிடுவதுடன் குடும்பத்தால் பராமரிக்க முடியாதவர்களை சமூக சேவை மையங்கள் அமைத்து பராமரித்தும் வருகினர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விருத்தியடைந்த நாட்டு முதியோரின் வயதெல்லை அதிகரிப்பினால் அவர்கள் தொழில் செய்யக்கூடிய காலம் அதிகரித்துள்ளது. இது வயதடைந்தவரின் அடிப்படைப் பிரச்சினைகள் பலவற்றிற்கு தீர்வாவதுடன், சமூகப் பாதுகாப்பினையும் வழங்குகின்றது. உதாரணமாக 1978 ஆம் ஆண்டு அமெரிக்க ஜனாதிபதி ஜிம்மிகாட்டர் சட்டத்தில் கையெழுத்திட்டதால் அரச, தனியார் துறையில் தொழிலாற்றும் வயதெல்லை 65 இலிருந்து 70 ஆக அதிகரிப்பதற்கும், அரச ஊழியரிற்கு எந்தவகையான ஓய்வூதியமும் வழங்கலாம் எனும் நிலையும் உருவாகியது. விருத்தியடைந்த ஆசிய நாடாகிய யப்பானில் ஆயுள் எதிர்பார்ப்பு ஆண்களிற்கு 77 ஆகவும், பெண்களிற்கு 84 ஆகவும் காணப்படுகின்றது. 2000 ஆம் ஆண்டு மதிப்பீட்டின்படி 23.2 வீதத்தினர் 60 வயதிற்கும் மேற்பட்டோராக காணப்பட்டனர். 2050 இல் இந்நிலைமை 33% ஆகக் காணப்படும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

## 9. இலங்கையில் முதியோர்

இலங்கை விருத்தியடைந்த நாடாகக் காணப்படுகின்றபோதும் விருத்திபெற்ற நாடுகளிற்கு நிகரான குடித்தொகைப் பண்புகளைக் கொண்டுள்ளமை சிறப்பானதாகும். தென்னாசிய நாடுகளின் முதியோர் தொகையில் இலங்கை தொடர்ந்தும் அதிகரித்த போக்கினையே காட்டுகின்றது. இதற்கு அரசின் சமூக நலத் திட்டங்கள், இலவசக்கல்வி, மருத்துவ, சுகாதார சேவைகளின் விருத்தி, பெண்களின் கல்வித்தரம், வேலைசெய்யும் அளவு அதிகரித்தமை, முதியோர் பராமரிப்பு தொடர்பில் அரச, தனியார் நிறுவனங்கள் காட்டிவரும் கரிசனை, ஓய்வூதியத்திட்டம் என்பன காரணங்களாகும். இந்தவகையில் 60வயதிற்கு மேற்பட்டோரின் பங்கானது 1971- 6.3%, 2001-9.2%ஆக அதிகரித்ததுடன் 2031இல் 20.7%ஆக உயருமென எதிர்பார்க்கப்படுகின்றது. 2011 மதிப்பீட்டின்படி ஆயுட்காலம் ஆணிற்கு 75 வயதாகவும் பெண்ணிற்கு 79 வயதாகவும் உயர்வடைந்துள்ளது. இலங்கையில் தங்கி வாழ்வோரில் சிறுவரின் பங்களிப்பு குறைவடைந்து செல்வதுடன் முதியோரின் பங்களிப்பு அதிகரித்துச் செல்லும் போக்கினைக் காட்டுகின்றது.

**தங்கிவாழ்வோரில் முதியோர் தொகை (1946-2041)**

| ஆண்டு | 1946 | 1971 | 1981 | 2001 | 2021 | 2041 |
|---|---|---|---|---|---|---|
| சதவீதம் | 9.4 | 11.5 | 11.3 | 15.4 | 28.3 | 47.9 |

மூலம்- 1946-1981,census Reports,2001-2041,DeSilva 1997, Projected Population.

## 10. முதியோர் எதிர்கொள்ளும் சவால்கள்

மனித சமுதாயம் விலங்கினங்களிலே விருத்தி பெற்ற சமுதாயமாக இருந்தாலும் கூட சுயநலம், சுயமுன்னேற்றம் என்பவற்றிற்கு முக்கியத்துவம் கொடுத்து வந்துள்ளது, வருகின்றது. இந்நிலையில் தங்கிவாழும் நிலையடைந்த முதியோர் தகுந்த பாதுகாப்பும், பராமரிப்புமின்றி பல பொருளாதார, சமூக, உளவியல்சார் சவால்களிற்கு முகங்கொடுக்க வேண்டியவர்கள் ஆகியுள்ளனர். இந்தவகையில் அருகில் உறவினர், நண்பர் ஒருவரின் துணைக்கான ஏக்கம், குடும்ப உறுப்பினர் தொழிலிற்காக பிரிந்துள்ள நிலையில் பராமரிப்பு தொடர்பான நெருக்கடி, சிறிய வீட்டிற்குள் அடைபட்டிருக்கும் நிலை, குடும்ப வன்முறை, வாழ்க்கைச் செலவிற்கு ஓய்வூதியம் போதாமை, நோய்த்தாக்கம், வாழ்க்கைத் துணையிழப்பு, இளைய சமூகத்தால் ஒதுக்கப்படல், தனித்து விடப்படல் போன்ற பல சவால்களை அவர்கள் எதிர்கொள்கின்றனர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 11. உலகளாவிய ரீதியில் முன்னெடுக்கப்படும் முதியோர் நலத்திட்டங்கள்

முதியோர் தொடர்பான சவால்களை எதிர்கொள்ளும் பொருட்டு ஐக்கியநாடுகள் சபை உட்பட்ட சர்வதேச நிறுவனங்கள், தேசிய, உள்ளூர் அரச, அரசசார்பற்ற நிறுவனங்கள் திட்டமிட்டு செயற்படவேண்டிய நிலைக்குத்தள்ளப்பட்டுள்ளன. விருத்தியடைந்த நாடுகளில் முதியோர் இல்லங்கள், பகல் நேர பராமரிப்பு நிலையங்கள், பொழுதுபோக்கு வசதிகள் ஏற்படுத்திக்கொடுத்தல், மின்சாரம், தொலைபேசி, நீர் விநியோகம் போன்றன இலவசமாகவோ, மானியமாகவோ வழங்குதல், நெரிசலற்ற நேரங்களில் இலவசமான அல்லது குறைந்த கட்டண போக்குவரத்து சேவை, வாகனம் நிறுத்தவும் எடுத்துச்செல்லவும் சிறப்பு பாதை ஒழுங்குகள், பொதுநிகழ்வுகள், கண்காட்சிகளில் சலுகைகள் போன்ற திட்டங்கள் நடைமுறையிலுள்ளன.

இலங்கையைப் பொறுத்தவரை முதியோர் உரிமைச்சட்டத்தின் கீழ் தேசிய முதியோர் சபை உருவாக்கப்பட்டமை, இச்சபையின் ஊடாக அரச சார்பற்ற நிறுவனங்களை இணைத்த 5000 கிராம விழிப்புணர்ச்சித் திட்டம், 65 வயதிற்கு மேற்பட்டோரை சிரேஸ்ட பிரஜைகளாகக் கருதி அடையாள அட்டை வழங்கல், முதியோர் பராமரிப்பு சபையூடாக மாதாந்த கொடுப்பனவு வழங்கல், முதியோர் இல்லங்கள் அமைத்து பராமரித்தல் (கைதடி, வன்னேரிக்குளம்), தனியார் துறையினரால் Day Care Centre முதியோர் இல்லத்தில் பாதுகாக்கப்படுதல், முதியோர் சபையால் தேசிய கொள்கைகள், செயற்பாட்டுத்திட்டங்கள் முன்னெடுக்கப்படுதல், அரசமருந்து விற்பனை நிலையத்தில் 5%கழிவு வழங்க ஏற்பாடு செய்தல் என்பன முதியோர் நலம் தொடர்பாக இலங்கையில் முன்னெடுக்கப்பட்டு வரும் செயற்பாடுகளாகும்.

## 12. முடிவுரை

உலகளாவிய ரீதியில் அதிகரித்து வரும் முதியோர் தொகையானது சனத்தொகைக் கட்டமைப்பிலும், சமூக குறிகாட்டிகளிலும் பல மாற்றங்களை ஏற்படுத்தியுள்ளது. இதனால் பல நன்மைகள் ஏற்பட்டுள்ளபோதும் விருத்தியடைந்த நாடுகளிற்கு கூட இது சவாலாக உள்ளமையை யாராலும் மறுக்கமுடியாது. இலங்கையும் இதற்கு விதிவிலக்கானதல்ல. எனவேதான் முதியோர் தொடர்பில் ஏற்படும் சவாலை எதிர்கொள்ள உள்ளூர், தேசிய, சர்வதேச ரீதியில் கொள்கைகள் உருவாக்கப்பட்டு பல திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. ஆனபோதும் ஒவ்வொருவரும் முதியோரின் பெறுமதியினை உணர்ந்து, மதிப்பளித்து, அவர்களுடன் இணைந்து செயற்பட்டால் மாத்திரமே நாட்டின் சமூக, பொருளாதார, அரசியல் நிலைகளில் முன்னேற்றம் காணமுடியும்.

**உசாத்துணை நூல்கள்**


Attarchand 1987, *Poverty and Underdevelopment*, Gian Publishing House, New Delhi.

Borland, Marie(ed) 1976, *Violence in the family*, Manchteester University Press, Manchester.

Peris, GH2006, *Challenges of theNew Millenium: SriLanka*, Kandy Books, Peradeniya.

1946-1981: census Reports, 2001-2041, DeSilva 1997, Projected Population.

அமிர்தலிங்கம்,கோ. 2008,*இலங்கைப்பொருளாதாரம்,* பூபாலசிங்கம் புத்தகசாலை, கொழும்பு.

குகபாலன், கா. 2008,சுதந்திரத்தின் பின்னர் இலங்கையின் குடித்தொகைப் பண்புகளில் ஏற்பட்டுவரும் மாற்றங்கள்,*யாழ்ப்பாணப் புவியியலாளன்,* யாழ்ப்பாணம்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குகபாலன்,கா. 2007,குடித்தொகை வையதடைதல்,*யாழ்ப்பாணப்புவியியலாளன்,* யாழ்ப்பாணம்.

மூக்கையா,மா.செ. 2005,*இலங்கையின் வளங்களும் பயன்பாடுகளும்,* நியூசெஞ்சுரி புக்ஹவுஸ் லிமிரெட்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இஸ்லாமியத் தமிழிலக்கிய மரபில் கிஸ்ஸா இலக்கியங்கள்

*எம்.என். அஸ்லினா.*
*விடுகை வருடம்,*
*தமிழ் விசேட துறை,*
*கலைப்பீடம்.*

---

**த**மிழ் பேசும் முஸ்லிம்கள் தமிழிலக்கிய மரபினைப் பின்பற்றி ஏராளமான இலக்கியங்களைப் படைத்துள்ளனர். இவ்வாறான இலக்கியங்களைப் படைத்தது மட்டுமன்றி சில புதுவகை இலக்கிய வடிவங்களையும் அறிமுகப்படுத்தினர். அதற்குக் காரணம் தமிழ் பேசும் இஸ்லாமியர்களுக்கு இயற்கையாகவே காணப்பட்ட அரபு, பாரசீகம் போன்றவற்றிலுள்ள ஈடுபாடும் அறிவுமாகும். இவ்வாறாக இஸ்லாமியத் தமிழறிஞர்களால் தமிழுக்கு அறிமுகப்படுத்தப்பட்ட புதுவகை சிற்றிலக்கிய வடிவங்கள் எட்டு காணப்படுகின்றன. அவையாவன;

1. **மஸலா**
2. **நாமா**
3. **கிஸ்ஸா**
4. **முனாஜாத்து**
5. **படைப்போர்**
6. **திருமண வாழ்த்து**
7. **நொண்டி நாடகம்**

இவற்றுள் **கிஸ்ஸா** இலக்கியங்கள் தொடர்பாக நோக்குவோம்.

'கஸஸ்' என்கிற அறபுச் சொல்லினடியாகப் பிறந்தது 'கிஸ்ஸா' எனும் சொல். இச்சொல்லுக்கு கதை கேட்டல் என்பது பொருளாகும். அறபு நாட்டு இஸ்லாமியர்கள் தங்கள் ஓய்வு நேரங்களை ஒன்றுகூடிக் கதை சொல்வதில் கழித்தனர். அக்கதைகள் கேட்போருக்கு மகிழ்ச்சியூட்டுவதோடு அறிவை வளர்ப்பனவாகவும் அமைந்தன. அதுமட்டுமன்றி அவை இஸ்லாமியப் போதனைகளை அடிப்படையாகக் கொண்டும் அமைந்திருந்தமை அறபு மக்களை பெரிதும் கவர்ந்து ஈர்த்தன. இதன் விளைவாக கிஸ்ஸா இலக்கிய வகை அறபு இலக்கியத்தில் தோன்றியது. இதனைப் பின்பற்றி தமிழிலும் கிஸ்ஸா இலக்கியங்கள் தோன்றின.

அறேபிய மக்களை தன் பால் ஈர்த்தது போன்றே தமிழில் உருவான கிஸ்ஸா இலக்கியங்களும் மக்களிடையே குறிப்பாக இஸ்லாமியர்களிடையே மிகுந்த செல்வாக்குப் பெற்ற இலக்கிய வகையாக நிலைபெற்று வளர்ந்து, தமிழையும் இஸ்லாத்தையும் வளர்த்தன, வளப்படுத்தின. மசலா இலக்கியங்களையும் விட மக்களிடையே மிக அதிக அளவில் செல்வாக்குப் பெற்றனவாக இக் கிஸ்ஸா இலக்கியங்கள் விளங்குகின்றன. இதற்குக் காரணம், தமிழிலுள்ள கிஸ்ஸா இலக்கியங்களில் பெரும்பாலானவை இஸ்லாமிய வரலாற்றுப் போக்கில் பளிச்சிடும் முக்கிய சம்பவங்களை அடிப்படையாகக் கொண்டு எழுந்துள்ளன. ஏனையவை வரலாற்று தொடர்பற்று ஆதாரமற்ற சம்பவங்களை அடிப்படையாகக் கொண்டு எழுதப்பட்டிருந்த போதிலும், அவை ஏதேனும் ஒருவகையில் இஸ்லாமிய நெறியின் அடிப்படையில், அல்லது தீன்நெறிக்கு விளக்கம் தரும் வகையில் சம்பவங்களையோ பாத்திரப்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படைப்புக்களையோ கொண்டு அமைந்துள்ளன. இவ்வாறு தமிழில் எழுதப்பட்டுள்ள கிஸ்ஸா இலக்கியங்கள் இருபத்தைந்துக்கு மேல் இருப்பதாக கூறப்படுகிறது.

வரலாற்று அடிப்படையில் எழுந்த கிஸ்ஸா இலக்கியப் படைப்புக்கள் நபிமார்கள், வலிமார்கள் வரலாற்றை முழுமையாகக் கூறவில்லையெனினும், அவர்தம் வாழ்வில் நடைபெற்ற முக்கிய நிகழ்ச்சிகளை அடித்தளமாகக் கொண்டு எழுந்துள்ளன. இவை இஸ்லாமிய நெறிகளை அவர்தம் வாழ்க்கை வழியே விரித்துரைப்பனவாக அமைந்துள்ளன. இவ்வகையில் தமிழில் சுமார் பதினெட்டு இலக்கியங்கள் இயற்றப்பட்டுள்ளனவாக ஆராய்ச்சியாளர்களால் கணிக்கப்பட்டுள்ளது. இவற்றைத் தவிர்த்து மீதமுள்ள கிஸ்ஸா இலக்கியங்கள் மார்க்க ஞானத்தைப் புகட்டுவனவாக அமைந்துள்ளன.

அவ்வகையில் தமிழ் மொழியில் எழுந்துள்ள கிஸ்ஸா இலக்கியங்களாக் *யூசுப் நபி கிஸ்ஸா, சைத்துன் கிஸ்ஸா, முகம்மது அனிபு கிஸ்ஸா, சுல்தான் இப்றாகிமுடைய கிஸ்ஸா, ஐயூப் நாயவுடைய கிஸ்ஸா, கூழ்ஊன் (றலி) கிஸ்ஸா, காலியாருக்கும் கள்ளனுக்கும் நடந்த கிஸ்ஸா, அலி (றலி) கிஸ்ஸா, குலேபகாவலி கிஸ்ஸா, பீவிமரியமுடைய கிஸ்ஸா, தமீமுல் அன்சாரி அவர்களின் கிஸ்ஸா, கயன் கள்ளன் கிஸ்ஸா, அபூகஷஹ்மா கிஸ்ஸா, விறகு வெட்டியார் கிஸ்ஸா, காலி கோரி கிஸ்ஸா, இஸ்வத்து நாச்சியார் கிஸ்ஸா, சுல்தான் சிக்கந்தர் துல்கர்னைன் கிஸ்ஸா, நமுறூது கிஸ்ஸா, ஷாத்து கிஸ்ஸா, மான் ஈமான் கொண்ட கிஸ்ஸா* என்பன அமைகின்றன.

இவற்றுள் கேஷக் லெப்பை எழுதிய சைத்தூன் கிஸ்ஸாவும் யூசுப் நபி கிஸ்ஸா, முகம்மது அனிபு கிஸ்ஸா ஆகியவையும் மட்டுமே செய்யுள் வடிவில் பாடப்பட்டவைகளாகும். அப்துல் காதர் எழுதிய சைத்தூன் கிஸ்ஸா செய்யுளும் உரைநடையும் கலந்ததாகும். வாலை பாவாசாகிபு இயற்றிய குலேபகவாலி கிஸ்ஸா சிறிதளவு செய்யுளும் பெரிதளவு உரைநடையும் பெற்றதாய் அமைகின்றது. முந்தைய கிஸ்ஸாக்கள் பெரும்பாலும் உரைநடை வடிவில் அமைந்துள்ளன.

அதேநேரம் பெண்ணின் பெயர்களைத் தலைப்பாகக் கொண்ட கிஸ்ஸாக்களையும் காணமுடிகிறது. சைத்துன் கிஸ்ஸா, பீவிமரியமுடைய கிஸ்ஸா, இஸ்வத்து நாச்சியார் கிஸ்ஸா ஆகியவை பெண்ணின் பெருமை பேசும் கிஸ்ஸாக்களாக இடம் பெறுகின்றன. சில கிஸ்ஸாக்கள் பொதுவான கதையமைப்பில் இஸ்லாமிய நெறிகளை இணைத்து அறிவு புகட்டும் வகையிலும் உள்ளன.

## யூசுப் நபி கிஸ்ஸா

யூசுப் நபியின் வரலாற்றுச் சம்பவங்களை விரித்துரைக்கும் **'யூசுப் நபி கிஸ்ஸா'** மக்களிடையே புகழ் பெற்றதாக விளங்குவதோடு இலக்கிய தரமிக்க படைப்பாகவும் கருதப்படுகின்றது. மாதுறு சாகிபுப் புலவரால் இயற்றப்பட்ட இந்நூல் செய்யுள் நடையில் அமைந்துள்ளது. இஸ்லாமிய மரபுப்படியும் திருமறையாம் திருக்குர்ஆன் படியும் முதல் மனிதர் ஆதம் தொடங்கி, இறுதி இறைத்தூதர் நபிகள் நாயகம் வரை உலக மக்களுக்கு வழிகாட்ட இறைவன் ஒரு இலட்சத்து இருபத்திநான்காயிரம் நபிமார்களை உலகுக்கு அனுப்பியுள்ளான். அவர்களுள் யஃகூப் நபியின் மகனாகப் பிறந்தவர் யூசுப் நபி. அவரது வரலாற்றைக் கதைப் போக்கில் கூறுவதே யூசுப் நபி கிஸ்ஸா.

தமிழ் பேசும் பெருமக்களிடையே மிகப் பிரபலமாகப் பயிலப்பட்டு, அவர்களுடைய செல்வாக்குப் பெற்றுத் திகழும் யூசுப் நபி கிஸ்ஸா மிகவும் எளிய நடையில் அன்றாட வாழ்வில் பயிலப்படும் சாதாரண சொற்களைக் கொண்டு உருவாக்கப்பட்டுள்ளது. இதற்குச் சான்றாக நாலின் காப்புச் செய்யுளைக் கூறலாம். விருத்தப்பாவில் அமைந்துள்ள பாடல்;

"அருளுண்டாம் கிருபையுண்டாம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆண்டவனுதவி யுண்டாம்
பொருளுண்டாம் இன்பமுண்டாம்!"

என மிக எளிய நடையில், அதே சமயத்தில் இலக்கியத்தரம் குறையா வண்ணம் எடுத்தியம்புகிறார்.

யூ..கூ.ப் நபியின் புதல்வர்களுள் ஒருவரான யூசுப் நபியை உடன் பிறந்தோர் அழிக்க முயல்வதும், அவர்களிடமிருந்து தப்பிய யூசுப் நபி எகிப்து சென்று இன்னல்கள் பலவடைந்து சுலைஹா என்ற மணமான பெண்ணால் காதலிக்கப் பெற்றதும், அது நேர்மையற்றது என்று உடன்படாது யூசுப் நபி சிறைப்பட்டதும், பின்னர் கனவுப் பயன் உரைக்கும் ஆற்றலால் சிறை மீண்டதும், இறுதியில் முறைப்படி சுலைஹாவை மணந்து அரசேற்றதுமான கதையினை யூசுப் நபி கிஸ்ஸா எடுத்தியம்புகிறது. இறைவழி வழுவா அற வாழ்வு வாழ்ந்த யூசுப் நபியின் வாழ்வை விளக்கும் யூசுப் நபி கிஸ்ஸா சிறந்த, நீதி புகட்டும் படைப்பாகத் திகழ்கிறது. இந்நூல் விருத்தப்பாவால் ஆனதெனினும் தொங்கல் என வழங்கும் செய்யுள் அமைப்பையும் உட்கொண்டதாகத் திகழ்கிறது.

## சைத்தூன் கிஸ்ஸா

தமிழ் பேசும் முஸ்லிம் மக்களிடையே யூசுப் நபி கிஸ்ஸாவுக்கு அடுத்தபடியாக மிகுந்த செல்வாக்குப் பெற்றுத் திகழும் மற்றொரு கிஸ்ஸா பேட்டை ஆம்பூரைச் சேர்ந்த அப்துல் காதர் சாஹிப் இயற்றிய சைத்தூன் கிஸ்ஸாவாகும். செய்யுளும் உரைநடையும் கலந்து இயற்றப்பட்டுள்ள இக்கிஸ்ஸா இலக்கியம் சாதாரண தமிழறிவுள்ளவர்களாலும் எளிதில் புரிந்து கொள்ளக்கூடியதாய் அமைந்துள்ளது. இக்கிஸ்ஸா வரலாற்று தொடர்பற்று ஆதாரமற்ற சம்பவங்களைக் கொண்டு படைக்கப்பட்டதொரு படைப்பாகும்.

முஹம்மது ஹனீபா என்பவர் அறிவாற்றல் மிக்கவர் வீர நெஞ்சினர். அவரும் அவரது நண்பர்கள் நால்வரும் ஒரு நாள் வேட்டைக்குச் சென்றனர். இவர் வேட்டையாடிய காடு சைத்தூன் எனும் மங்கைக்குச் சொந்தமானதாகும். அந்நியர்கள் தன் காட்டினுள் அனுமதியின்றி வேட்டையாடுவதைக் கண்டு வெகுண்டெழுந்து அவர்களுடன் வெஞ்சமர் புரிந்தாள். சண்டையில் ஹனீபா மயக்கமுற்றார். ஏனையவர்கள் தோல்வியைத் தழுவவே, சைத்தூன் அவர்களை கையகப்படுத்தி தன் இருப்பிடம் கொண்டு போனாள்.

ஹனீபின் நண்பர்களை வெற்றி கொண்ட சைத்தூன் வெற்றிப் பெருமிதத்தால் உந்தப்பட்டவளாக மதீனா சென்று வெற்றிவாகை சூட விரும்பிச் சென்றாள். இதனையறிந்த ஹனீபா சைத்தூனுடன் போரிட்டு வெற்றி பெற்றார். சைத்தூன் இஸ்லாம் நெறியைப் பின்பற்றி முஹம்மது ஹனீபாவை கணவனாக ஏற்றுக் கொள்கிறாள். இவர்களால் வேறு பல மன்னர்களும் வீரர்களும் வீராங்கனைகளும் இஸ்லாத்தின் மேன்மையையும் உன்னதத்தையும் உணர்ந்து, இஸ்லாத்தோடு இணைந்தனர் என்பது இந்நூல் தரும் செய்திகளாகும்.

ஒரு பெண்மணியைப் பாட்டுடைத் தலைவியாகக் கொண்டு படைக்கப்பட்டுள்ள இக்கிஸ்ஸாவிலக்கியம் புரிந்து கொள்வதற்கு எளியநடையில் அமைந்துள்ளது. மேலும் ஓசையிட்டு படித்து மகிழ்வதற்கேற்ற சந்தத்தில் பாடலின் சொல்லாட்சிகளும் இனிமையாக அமைந்துள்ளன. அதேசமயத்தில், கதை நிகழ்ச்சிகளை மனக்கண்முன் கொணர்ந்து, அங்கு நடைபெறும் காட்சிகளை நேரில் கண்டு மகிழுமாறு செய்து விடுகிறார் ஆசிரியர். குதிரைகள் குளம்பொலி கிளம்பி விரைந்து செல்வதனை வர்ணிக்கும் பொழுது,

"செந்தாள் பறந்து தூசி எழும்பிட
சூரர்கள் கண்டார்கள்..."

என ஓசை நயம் ததும்ப எளிமையாகவும் தெளிவாகவும் கூறி இன்புறுகிறார்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆசிரியர் பாட்டுடைத் தலைவியாகிய சைத்தூனை வீரத்திருவுருவாகக் காட்டியுள்ளார்.

"கொக்குக் குளத்தில் ராஜாளி போல்
குதித்தாள் சைத்தூனும்
ஆட்டுக்குளம்பில் புளியைப் போல்
புகுந்தாள் சைத்தூனும்"

என்றெல்லாம் வர்ணிப்பதன் மூலம் போர்க்களக் காட்சிகளையே மனக்கண்முன் கொண்டு வந்து நிறுத்துவதோடு சைத்தூனின் வீரத்தையும் அழகுறப் புலப்படுத்தியிருக்கிறார் ஆசிரியர். அதேநேரம் பொருத்தமான இடங்களில் இஸ்லாமியப் பண்பு நெறிகளையும் எடுத்துக்கூறியுள்ளார். இவ்வாறாக இக்கிஸ்ஸா இலக்கியம் வாசகர்களைக் கவரும் வண்ணம் மிக எளிய நடையில் படைக்கப்பட்டுள்ளது.

## மான் ஈமான் கொண்ட கிஸ்ஸா

மற்ற எல்லாக் கிஸ்ஸாக்களும் மாந்தரை மையமாகக் கொண்டு பாடியிருக்கும் போது, இக்கிஸ்ஸா மட்டுமே விலங்கான மானை மையமாகக் கொண்டு முஹம்மது நபியின் மாண்பினைச் சிறப்பித்துக் கூறுவதாக அமைந்துள்ளது. இதன் ஆசிரியர் கோட்டாறு வா.மு. முஹம்மது யூசுப் லெப்பை ஆவார். இக்கிஸ்ஸா கி.பி.1916 ஆம் ஆண்டு பதிப்பிக்கப்பட்டது.

## காளியாருக்கும் கள்ளனுக்கும் நடந்த கிஸ்ஸா

மான் ஈமான் கொண்ட கிஸ்ஸா இலக்கியத்தைப் போன்றே இவ்விலக்கியமும் கதை நிகழ்ச்சிகளைக் கொண்டு, இஸ்லாமிய நீதிக் கருத்துக்களைக் கூறும் உரைநடைக் கிஸ்ஸா இலக்கியமாகும்.

இஸ்லாமிய மார்க்க மேதை ஒருவருக்கும், அவரது பொருளைப் பறிக்க நினைத்த கள்ளன் ஒருவனுக்கும் நிகழ்ந்த உரையாடலைக் காளியாருக்கும் நடந்த கிஸ்ஸா விபரிக்கிறது. மார்க்க மேதை, கள்ளனைப் பார்த்து இஸ்லாமியர்களைத் துன்பப்படுத்துபவன் சைத்தான் எனக் கூற, கள்ளன் அதற்கு ஆம் நான் சைத்தான் தான். ஏனெனில் இஸ்லாமியப் பகைவர்களைத் துன்பப்படுத்துவதற்கே இறைவன் சைத்தானை அனுப்பியிருப்பதாக குர்ஆன் கூறுகிறது. நான் சைத்தான் என்றால் நீ மார்க்க மேதை இல்லை இஸ்லாமியர் அல்லாதவர் எனக்கூறும் வகையில் இருவருக்கும் வாதம் நடக்கும் முறையில் இஸ்லாமியப் போதனைகள் இவ்விலக்கியத்தில் கூறப்பட்டுள்ளன. இந்நூலை அறபியிலிருந்து தமிழாக்கம் செய்து எழுதியவர் அப்துல்லா லெப்பை ஆவார்.

## கபன் கள்ளன் கிஸ்ஸா

இக்கிஸ்ஸா மாறுபட்ட கதையம்சத்தைக் கொண்டுள்ளது. இறந்தவர்களைப் போர்த்தி அடக்கம் செய்யும் புத்தாடைக்குக் கபன் என்று அழைப்பர். இவ்விலக்கியத்தில் இடம் பெறும் கள்வன், இறந்தவர்கள் மீது போர்த்தப்பட்ட கபனைத் திருடுவதில் ஈடுபட்டிருந்ததையும், ஒரு நாள் கபன் திருடச் செல்கையில், கபன் போர்த்தப்பட்டிருந்த பெண் பிணத்தின் அழகில் ஈர்க்கப்பட்டு வெறிகொண்டு முறையற்ற செயலில் ஈடுபட முனையும் போது, அப்பெண் உயிர் பெற்று அறிவுரை கூறியதனால் அவன் திருந்துவதையும் புதுமைப் போக்கில் கூறுவதே இதன் கதையாகும். இக்கிஸ்ஸாவை இயற்றிவர் அப்துல் ரஜாக் என்பவராவார்.

## விறகு வெட்டியார் கிஸ்ஸா


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இக்கிஸ்ஸா இலக்கியத்தை எழுதியதும் கபன் கள்ளன் கிஸ்ஸாவை எழுதிய அப்துல் ரஜாக் என்பவரே. இவ்விலக்கியத்தில் விறகு வெட்டியாரின் வறுமையும் பின்னர் அவ்விறகு வெட்டியார் செல்வம் பெற்ற விபரமும் கூறப்பட்டுள்ளது. இறைவன் மீது நம்பிக்கை வைத்து அவரைப் போற்றி வாழ்த்துபவர்கள் நன்மை அடைவார்கள் என்பதையும், நம்பாது வெறுத்தவர்கள் தீங்கடைவார்கள் என்பதையும் காட்டும் வகையில் நீதிப் போதனைக் கதையாக இது அமைகிறது.

## காலிகோரி கிஸ்ஸா

கறுத்தவள், சிவத்தவள் ஆகிய காலிக்கும் கோரிக்கும் யார் நிறம் சிறப்பு என வாக்குவாதம் நடப்பதையும், இஸ்லாமியப் பெரியார் கறுப்பு நிறமே இறைவனுக்கு உகந்தது என்று மையை எழுதுகோலில் தொட்டு எழுதித் தீர்ப்பளிக்கும் விதத்தை விபரிப்பதே காலிகோரி கிஸ்ஸாவாகும். இவ்விலக்கியத்தையும் அப்துல் ரஜாக் என்பவரே இயற்றியுள்ளார்.

## குலோபகாவலி கிஸ்ஸா

புராணக் கதையமைப்பில் இஸ்லாமிய நெறிகளை ஆங்காங்கே உணர்த்துவதே குலோபகாவலி கிஸ்ஸா இலக்கியமாகும். நீண்ட கதையமைப்பையும் அவற்றோடு நீதியையும் கலந்து கூறுவதாக இக்கிஸ்ஸா அமைகிறது.இவ்விலக்கியத்தைப் படைத்தவர் பேட்டை ஆமூர் வாலை பாவா சாயபு ஆவார். உரைநடை வடிவில் அமைந்த மற்றைய கிஸ்ஸா இலக்கியங்களிலிருந்தும் இக்கிஸ்ஸா இலக்கியம் நயமிக்கதாக விளங்குகிறது. இக்கிஸ்ஸா முதலாவது கதை, இரண்டாவது கதை, என இருபத்தாறு பிரிவுகளைக் கொண்டுள்ளது. ஒவ்வொரு கதைப்பிரிவும் ஒவ்வொரு கதை நிகழ்ச்சியினைக் கூறுகிறது.

காதல், தத்துவம், இலக்கிய நயம், கதை எல்லாம் பெற்று சமய நெறிகளும் இடம்பெறுவதாக குலோபகாவலி கிஸ்ஸா திகழ்கிறது.

அப்துல் வஹாப் எழுதிய *இயூப் நாயனுடைய கிஸ்ஸா*, முஹம்மது இப்றாஹீம், முஹம்மது இஸ்மாயீல், ஷாஹுல் ஹமீது, மொஹய்தீன் பிச்சை ஆகிய புலவர்கள் எழுதிய *ஷம்ஊன்கிஸ்ஸா*, *ஷம்ஹ'ன் (றழி)* என்னும் பெயர்களில் வழங்கும் நான்கு கிஸ்ஸாக்களும் அப்துல் ரஜாக் எழுதிய *அபூசுஷஹ்மா கிஸ்ஸாவும்* அப்துல் காதர் சாஹிபு எழுதிய *தமீமுல் அன்சாரிகிஸ்ஸாவும்* முன்னோர்களால் கோர்வை செய்யப்பட்ட *சிக்கந்தர் துல்கர்னைன் கிஸ்ஸா*, *நமுறாது கிஸ்ஸா*, *ஹுத்து கிஸ்ஸா* ஆகியவைகள் நபிமார்களின் வரலாற்றையும், இஸ்லாமியப் பெரியார்களின் வரலாற்றையும் சிறப்பித்துக் கூறுவனவாக அமைகின்றன.

கிஸ்ஸா இலக்கியத்தைப் பொறுத்தமட்டில் இஸ்லாமிய நெறிகள் நேர்முகப் பிரச்சாரமாகக் கூறாமல், கதை வாயிலாக வெளிப்படுத்தப்படுகின்றன.

சமய நீதிகளையும் இஸ்லாமியப் பெரியார்களின் வாழ்க்கையில் நிகழ்ந்த சிறப்புமிக்க நிகழ்ச்சிகளையும் உணர்த்தும் நோக்கத்தோடு இக்கிஸ்ஸா இலக்கியங்கள் இயற்றப்பட்டுள்ளன.

காப்பு, கடவுள் வாழ்த்து, அவையடக்கம், இஸ்லாமிய வரலாற்று நிகழ்ச்சிகளைக் கதைவடிவில் விருத்தம், கண்ணிகள், உரைநடை ஆகியவற்றில் இயற்றுதல், எல்லோரையும் வாழ்த்தி நூலை முடித்தல் ஆகியவை கிஸ்ஸா இலக்கியத்தின் பொதுவடிவமைப்புக் கூறுகளாகக் கூறலாம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒப்பீட்டு அரசியலின் வளர்ச்சி

சு. உமாமகேஸ்வரன்,
விடுகை வருடம்,
அரசியல் விசேட கற்கை,
கலைப்பீடம்.

---

## 01. ஒப்பீட்டு அரசியல் அறிமுகம்

ஒப்பீட்டு அரசியல் (comparative politics) என்பதற்கு அரசியல் அறிஞர்கள் பல வகையிலான வரைவிலக்கணங்களை முன்வைத்துள்ளனர். காலத்திற்கு காலம் இவ்வரைவிலக்கணங்கள் புதிய பல விடயங்களை சேர்த்து முன்வைக்கப்பட்டுக் கொண்டே இருக்கின்றன. அவ்வகையில் இலகுவாக ஒப்பீட்டு அரசியலுக்கு பொருள் கூறுவோமாயின் ஒரு நாட்டு அரசியலை அல்லது அதன் உள்நாட்டு நிறுவன அமைப்புகளை (சட்டத்துறை, நிர்வாகத்துறை, நீதித்துறை, பொதுத்துறை) என்பவற்றையும் மனித நடத்தைகள் மற்றும் அரசியலோடு தொடர்புடைய அனைத்து விடயங்களையும் ஒப்பிட்டு ஆய்வு செய்தல். இவ் ஆய்வு பரந்ததாகவும் அதே நேரம் தேவைக்கேற்ப குறுகியதாகவும் அமையலாம். இதுவே ஒப்பீட்டு அரசியல் எனலாம்.

மனிதர்களிடையே முரண்பாடு எப்போது தோன்றியதோ அப்போதே ஒப்பிடும் பண்பும் தோற்றம் பெற்றதாகக் கூறப்படுகிறது. ஒப்பீட்டு அரசியலின் தோற்றம் என நோக்கும்போது அரசறிவியலின் தாயகமான கிரேக்கமே இதற்கும் தாயாகும். இங்கு பிளேட்டோ "இலட்சிய அரசு" தொடர்பான சிந்தனைகளை முன்வைக்க சில அரசுகளை ஒப்பிட்டுள்ளார் எனக் கூறப்படுகின்றது. அவரைத் தொடர்ந்து அரிஸ்டோட்டில் தனது "அரசியல்" (The Politics) எனும் நூலை வெளியிட 158 அரசுகளை ஒப்பிட்டுள்ளார். எனவே புராதன கிரேக்க காலம் தொட்டு ஒப்பீட்டு அரசியலுக்கான சில அம்சங்கள் கடைப்பிடிக்கப்பட்டு வந்துள்ளதை காணமுடிகின்றது. இதனைத் தொடர்ந்து விவிலியத்தில் எகிப்திய, பீரேசிலிய நாடுகளின் மக்கள் ஒப்பிட்டு பார்த்தார்கள் எனக் கூறப்படுகின்றது. 18ஆம் நூற்றாண்டில் மொன்டஸ்கியு (The spirit of law) "சட்டத்தின் உயிர்" எனும் நூலின் மூலமாக வலுவேறாக்கச் சிந்தனையை முன்வைக்க ஒப்பீட்டு நுட்பங்களை கடைப்பிடித்துள்ளமையை கண்டுகொள்ள முடிகின்றது. "அலெக்ஸ் டொக்வில்" தான் எழுதிய நூலில் ஒப்பீட்டுக் கருத்துக்கள் சிலவற்றினை முன்வைத்துள்ளார்.

இவ்வாறாக ஒப்பீட்டு அரசியல் கற்கை நெறியானது கிரேக்க காலம் தொட்டு வளர்ச்சியடைந்து வந்திருந்தாலும் 1920ஆம் ஆண்டுகளின் பின்னரேயே அது ஒரு கற்கை நெறி என்ற அடிப்படையில் நோக்கப்பட்டதெனலாம். இருப்பினும் இதன் திடகாத்திரமான வளர்ச்சி என நோக்கும் போது 2ஆம் உலக மகாயுத்தத்தின் பின்னரேயே ஆரம்பித்தது எனலாம்.

## 02. இரண்டாம் உலகப் போருக்கு முன்னரான ஒப்பீட்டு அரசியல் கற்கை நெறியின் நிலை

இரண்டாம் உலகப் போருக்கு முன்னர் ஒப்பிட்டு அரசியலானது மிகவும் குறுகியதாகவே காணப்பட்டது எனலாம். அதாவது அமெரிக்காவின் சில பல்கலைக்கழகங்களில் வெளிநாட்டு அரசியல் பற்றிய கற்கை நெறிகளாக இருந்தன. இங்கும் ஐரோப்பிய புத்திஜீவிகளே இவ்வகையான ஒப்பீட்டு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆய்வுகளை மேற்கொண்டதாக கூறப்படுகின்றது. குறிப்பாக பிரிட்டிஸ் பொலிடிக்ஸ், பிரெஞ்ச் பொலிடிக்ஸ் போன்ற வெளிநாட்டு கற்கை நெறிகள் ஒப்பீட்டு அரசியலில் இடம்பெற்றன. இரண்டாம் உலகப் போருக்கு முன்னரான ஒப்பீட்டு அரசியலின் நிலையினை பின்வரும் அடிப்படையில் இலகுவாக நோக்குவதன் மூலம் தெளிவாக விளங்கிக் கொள்ளலாம்.

- மட்டுப்படுத்தப்பட்ட ஒப்பீட்டு ஆய்வாக இருந்தமை
- ஆய்வுப் பிரதேசம் குறுகியதாக இருந்தமை
- ஒப்பீட்டு ஆய்வுகள் சிறு குழுக்களாலேயே மேற்கொள்ளப்பட்டன.
- காலனித்துவ ஆட்சி நிலவியமை
- மரபு ரீதியான அணுகுமுறைகளின் பயன்பாடு
- சர்வதேச தொடர்புகள் குறைவாக இருந்தமை

எனவே இரண்டாம் உலகப்போருக்கு முன்னர் ஒப்பீட்டு அரசியலின் வளர்ச்சியானது மட்டுப்படுத்தப்பட்ட வகையிலும், ஆய்வுகள் மிக குறுகிய பிரதேசத்தினை உள்ளடக்கியதாகவும், பரந்தளவிலான ஆய்வுகளாக மேற்கொள்ளப்படாமலும் ஒரு தனித்துவமான இயல்பினை அல்லது நிறுவனத்தினை அடிப்படையாகக் கொண்டதாகவும் சிலரால் அல்லது தனிப்பட்டக் குழுவினரால் மரபுரீதியான அணுகுமுறைகளை கையாண்ட வகையிலுமே வளர்ச்சியடைந்து வந்துள்ளது. மேலும் இரண்டாம் உலகப்போருக்குப் பின்னரே ஒப்பீட்டு அரசியல் துரித கதியில் ஒரு சிறப்பான வளர்ச்சியினை எய்தியது. இவ்வாறான வளர்ச்சியில் இரண்டாம் உலகப்போர் ஆழமான தாக்கத்தினை ஏற்படுத்தியுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

## 03. ஒப்பீட்டு அரசியலின் வளர்ச்சியில் தாக்கத்தினை ஏற்படுத்திய காரணிகள்

இரண்டாம் உலகப் போரின் பின்னர் பல்வேறு விளைவுகள் உலகில் ஏற்பட்டன. அவ்வகையில் ஒப்பீட்டு அரசியல் கற்கைப் பரப்பினை விரிவாக்கியதுடன் அக்கற்கையின் முக்கியத்துவம் உணரப்பட்ட நிலையும் உலகில் தோற்றம் பெறலாயின. அவ்வாறான தாக்கத்தினை ஏற்படுத்திய காரணிகளாவன.

### 1. உலகப் போரினால் ஏற்பட்ட சேதம்

உலகப் போரினால் பல்வேறு உயிர்கள், உடைமைகள் அழிக்கப்பட்டதுடன் அவ்வாறான சேதம் மீண்டும் உலகில் ஏற்படக்கூடாது என்ற வகையில் அக்காலத்தில் நாஸிஸ நாடுகளாக செயற்பட்ட இத்தாலி, ஜேர்மனி, ஜப்பான் போன்ற நாடுகளின் ஆட்சியினை மாற்றும் வகையில் ஜனநாயக அரசுகளாகவும் உலக சமாதானத்தினை ஏற்படுத்தும் வகையில் ஒப்பீட்டு ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டன. USA இல் ஒப்பீட்டு ஆய்வுகள் அதிகரித்தன. அதேபோல மேற்கு ஐரோப்பிய நாடுகளும் ஒப்பீட்டு ஆய்வுகளை தொடங்கின இத்தன்மை உலகம் முழுவதுமாக விரிவடையத் தொடங்கியது. மேலும் இரண்டாம் உலகப்போரினால் ஏற்பட்ட அழிவுகள் மற்றும் பயங்கரவாத அனுபவங்கள் தொடரில் 2ம் உலக மகாயுத்தத்திற்கு முன்னரான ஒப்பீட்டாய்வாளர்களான லொய்வென்டெயின், ப்ரெய்ட்ரிச், பிரான்ஸ்ரியூமன், ஹன்னாஹ் அரென், ஹேர்மன், பைனர் போன்றோர் ஒப்பீட்டு கருத்துக்களை வெளியிட்டனர். 2ஆம் உலகப்போரின் பின்னரே சமாதானத்தினை மற்றும் ஏனைய அபிவிருத்திகளைக் கொண்டு சர்வதேச ஸ்தாபனங்களும் தோற்றம் பெறலாயின.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 2. புதிய அரசுகளின் தோற்றம்

உலகப்போரின் பின்னர் காலனித்துவத்தின் கீழ் இருந்த அரசுகள் விடுவிக்கப்பட்டு சுதந்திர தேசிய அரசுகளாக்கப்பட்டன. அவ்வரசுகளின் ஆட்சி செயற்பாடுகள் எவ்வாறு இருக்க வேண்டும் என்பது தொடர்பில் ஒப்பீட்டு ரீதியான அபிவிருத்திக் கொள்கைகள், பொது நடவடிக்கைகள், சமூக, நீதி, ஜனநாயக வளர்ச்சி பல்வேறுப்பட்ட சமூக, மத, இன மக்களின் ஒருமைப்பாடு என்பவற்றின் வளர்ச்சியை தீர்மானிக்க வல்லரசு நாடுகளின் அரசியல் முறைகளை ஒப்பிட்டு பின்பற்றலாயின. இத்தன்மை ஒப்பீட்டு அரசியல் கற்கையில் ஆழமான தாக்கத்தினை ஏற்படுத்தியது. எடுத்துக்காட்டாக, மேற்கு ஐரோப்பிய நாடுகளில் குடியாட்சி முறை அரசாங்கம் நிறுவப்பட்டது. நெதர்லாந்து, பெல்ஜியம், நோர்வே, டென்மார்க், மேற்கு ஜேர்மனி, ஹாலந்து ஆகிய நாடுகளில் ஐக்கிய இராச்சியம், பிரான்ஸ், அமெரிக்கா, போன்ற நாடுகளில் செல்வாக்கு வளர்ந்தமையினைக் காணலாம்.

## 3. பொருளாதார வளர்ச்சி

2ஆம் உலகப்போருக்கு முன்னர் பொருளாதார வளர்ச்சி தனிப்பட்ட நாடுகளுக்கு இடையில் வெவ்வேறுப்பட்ட வளர்ச்சியினைக் கொண்டிருந்தாலும் உலகப்போரின் பின்னர் சர்வதேச நிறுவனங்கள் அரசியல் ஒத்துழைப்பையும், பொருளாதார வளர்ச்சியினையும் மையமாக கொண்டே மேற்கொண்டன எனலாம். அவ்வகையில் அவை தனது பொருளாதார வளர்ச்சியினை அதிகரிக்கவும் முன்னேற்றம் அடையவும் பொருளாதார விடயங்களை ஒப்பீட்டு ஆய்வுக்கு உட்படுத்தின. அத்துடன் 2ஆம் உலகப் போருக்கு முன் அதிகமான செலவுகளை செய்து ஒப்பீட்டு ஆய்வுகளை மேற்கொள்ளாத நிலை இருந்தது. இந்நிலை இரண்டாம் உலகப் போருக்கு பின்னர் மாற்றமடைந்தது எனலாம். அவ்வகையில் 1952ம் ஆண்டு பல்கலைக்கழகங்களுக்கு இடையிலான ஒப்பீட்டு அரசியல் பற்றிய ஆய்வுகளை நடத்தின. அவற்றிற்காக அமைப்புகளும் உருவாகின. இதில் சாமுவேல் பீர், எயுரி, எக்ஸ்டின் (ஹாவாட்) கார்ல்டியூட்ச் (MIT) க்னெத் தொம்ஸன், ரிட்சட் நொக்ஸ் (சிக்காகோ) ரொபட் வாட் (மிச்சிகன்) மற்றும் ஜோர்ஜ் பிளாங்டன், ரோய் மாகிடின் என்போர் ஈடுபட்டமைக் குறிப்பிடத்தக்கது. இவர்கள் உறுதியான விமர்சனங்களையும், பழைய சட்டத்திட்ட முறைமைகளையும், மத்திய ஐரோப்பாவின் ஒப்பீட்டு அரசியல் கல்வியையும், பொருளாதார நிலைகளையும் ஆய்வு செய்தனர்.

## 4. ஆய்வுப் பரப்பு விரிவாகியமை

2ம் உலகப்போருக்கு பின்னர் ஒப்பீட்டு அரசியலின் ஆய்வுப் பரப்பு விரிவாகியது. முன்னர் ஐரோப்பாவுடனேயே சுருங்கி இருந்தது. ஆனால் இத்தன்மை மாற்றமடைந்து ஒப்பீட்டு அரசாங்கத்துக்கும், சர்வதேச அரசியலுக்கும் இடையே எழுந்த செயற்கையான வேறுபாடும் அகற்றப்பட்டதெனலாம். மேலும் தேசிய அரசியல் முறைமைகளின் இயல்புகள், முறைப்படியமைந்த பகுப்பாய்வுகள், விஞ்ஞான நுட்பங்களுடன் பணிக்குழுவாட்சி, சட்டசபைகள், அரசியல் கட்சிகள், நலன்பேண் குழுக்கள், பொதுசன அபிப்பிராயம், வெளிநாட்டுக் கொள்கைகள் என்பனவும் இவற்றுடன் மேலும் பல விடயங்கள் காலத்தின் தேவைக்கு ஏற்ப ஆய்வுகளுக்கு உட்படுத்தப்பட்டன எனலாம். மேலும் சர்வசன வாக்குரிமையின் அறிமுகம் ஒப்பீட்டு அரசியல் கற்கையில் பாரிய பங்களிப்பினை செய்ததுடன் பெண்ணியம் தொடர்பான விடயங்களும் மற்றும் பால்நிலை சமத்துவம் சம்பந்தமாகவும் ஆய்வுகள் மேற்கொள்வதற்கு காரணமாகின. இவையனைத்தும் 2ம் உலகப் போரின் பின்னரே சிறப்பான வளர்ச்சியினை பெற்றன. இத்தன்மையானது ஒப்பீட்டு அரசியலின் வளர்ச்சியில் ஆழமான தாக்கத்தினை ஏற்படுத்தியது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 5. தேசிய வாதம், ஏகாதிபத்தியம், காலனித்துவம்

தேசியவாதம் இன்றைய உலகின் அதிகார சக்திகளில் ஒன்றாகவே இருந்து வருகின்றது. காலனித்துவத்தில் இருந்து விடுபடவும் உதவியிருக்கின்றது. இத்தேசியவாத சிந்தனை உலக வரலாற்றில் ஏற்கனவே பிரான்சின் மேன்மைக்கும், புகழுக்கும் காரணமாக அமைந்த சார்ல்ஸ் டி கோலினால் (Charls Degaulle) பிரயோகிக்கப்பட்ட மூலங்களிலிருந்தே பெறப்பட்டதாகும். இத்தன்மை தற்காலத்தில் உலக நாடுகளில் ஒப்பீட்டு ஆய்வுகளுக்கு உட்படுத்தப்பட்டுள்ளது.

ஏகாதிபத்தியத்திலிருந்து விடுபட்ட புதிய அரசுகள் சர்வதேசத்தில் செயற்பட வந்துள்ளது. எனினும் அவை வல்லரசு நாடுகளின் பொருளாதார ஏகாதிபத்தியத்தில் தங்கி இருக்கின்றன என்றும் நவ காலனித்தவத்தின் கீழ் செல்வதாகவும் ஒப்பீட்டு ஆய்வுகள் தெரிவிக்கின்றன. இருப்பினும் தேசிய வாதத்தின் தோற்றத்தின் பின் ஏகாதிபத்தியம், காலனித்துவம் என்பன 2ம் உலகப் போரின் பின்னர் தகர்த்தெறியப்பட்டதுடன் வல்லரசு நாடுகள் வறுமை இன்றி ஜனநாயகத்துடன் வாழ வேண்டும் என்ற வகையிலும் சர்வாதிகாரம் ஒழிக்கப்பட்டு சமாதான ஆட்சி நிலவ வேண்டும் என்ற வகையில் ஒப்பீட்டாய்வாளர்கள் கருத்துக்களை முன்வைத்துள்ளனர்.

## 6. கருத்தியல்கள்

2ம் உலகப் போருக்கு பின்னர் உலகில் பல புதிய அரசுகள் தோற்றம் பெற்றன. அத்துடன் அவ்வரசுகள் எவ்வகையான ஆட்சியினை பின்பற்றுவது என்பது தொடர்பில் சில கருத்தியல்களின் செல்வாக்கிற்கு உட்பட்டன. அத்துடன் இக்கருத்தியல்கள் நடைமுறையில் இருந்த சில அரசுகளின் அரசியல் நிலையினையும் மாற்றியமைக்கும் அளவிற்கு முக்கியத்துவமிக்கனவாக விளங்கின எனலாம். அக்கருத்தியல்களாவன இத்தாலி, ஜேர்மனில் நிலவிய நாசிஸம் மற்றும் USSRஇல் நடைமுறைக்கு வந்த கம்யூனிசிய கருத்தியல் மற்றும் தாராண்மைவாதம் என்பனவே அவையாகும். 1945-1990 வரையான காலப்பகுதியில் கம்யூனிசத்தின் சவால் நிலவியது. இவை தொடர்பில் ஒப்பீட்டு ஆய்வுகள் இடம்பெறலாயின. எனவே 2ம் உலகப் போரின் பின்னர் தோற்றம் பெற்ற இக்கருத்தியல்களும் ஒப்பீட்டு அரசியலின் வளர்ச்சியில் ஆழமான தாக்கத்தினை ஏற்படுத்தியது எனலாம்.

## 7. பனிப்போர்

2ம் உலகப் போரின் பின் உலகில் இரு துருவ அரசியல் நிலவியது. இதனால் சகல பிரதான அரசுகளும் ஏதோவொரு முகாமில் சேர்ந்து செயற்பட வேண்டிய நிலை இருந்தது. அதாவது அமெரிக்காவை தலைமையாகக் கொண்டு முதலாளித்துவமும், ரஷ்யாவை தலைமையாகக் கொண்டு பொதுவுடைமையும் கடைப்பிடிக்கப்பட்டது. இவ்விரு துருவங்களுக்கும் இடையில் பனிப்போர் 30 வருட காலமாக நிலவியது. இங்கு உலக அரசுகள் எந்த முகாமில் இணைவது தொடர்பாக ஒப்பீட்டு ரீதியான ஆய்வுகளை மேற்கொண்டன. எனவே இவ்வாறான தன்மையில் அதாவது பனிப்போர் என்ற வகையில் 2ம் உலகப் போர் ஒப்பீட்டு அரசியல் கற்கையில் ஆழமான தாக்கத்தினை ஏற்படுத்தியது.

## 8. புதிய அணுகுமுறைகளின் பிரவேசம்

2ம் உலகப் போருக்குப் பின்னர் ஒப்பீட்டு அரசியல் ஆய்வில் புதிய அணுகுமுறைகளின் பயன்பாடு அதிகரித்தது. ஆரம்பத்தில் மரபு ரீதியான அணுகுமுறைகளே பயன்படுத்தப்பட்டன. டோக்விலி என்பவரால் விவரண பகுப்பாய்வு அணுகுமுறை பயன்படுத்தப்பட்டது. மேலும் நவீனத்துவ அணுகுமுறை 1960களின் இறுதிகட்டப் பகுதியில் சவால்களை எதிர்கொள்ள, அபிவிருத்திக் கோட்பாடு பயன்பாட்டிற்கு வருகின்றது. இதுவும் சில குறைபாடுகளை உடையதாகவே உள்ளது. இவற்றினைத் தொடர்ந்து ஒப்பீட்டு அரசியலில்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சில முக்கிய புதிய அணுகுமுறைகள் தற்காலத்தில் பயன்பாட்டில் உள்ளன. அவற்றின் பிரயோகங்களினால் ஒப்பீட்டு அரசியல் பெருமளவு வளர்ச்சி கண்டது அவையாவன:

- நிறுவன அணுகுமுறை
- நடத்தைவாத அணுகுமுறை
- முறைமைப் பகுப்பாய்வு அணுகுமுறை
- கட்டமைப்புத் தொழிற்பாடு அணுகுமுறை
- அரசியல் கலாச்சாரம் (Political Culture)
- அரசியல் நவீனத்தவம் (Political Modernization)
- அரசியல் அபிவிருத்தி (Political Development)
- அரசியல் தொடர்பாடல் (Political Communication)
- அரசியல் உயர்குழாம் (political elite)
- பால்நிலை அரசியல் (Gender Politics)

## முடிவுரை

ஒப்பீட்டு அரசியல் கற்கையானது கிரேக்க காலம் தொடக்கம் தற்காலம் வரை வளர்ச்சி கண்டு வந்துள்ளது. காலத்திற்கு காலம் புதிய பரிணாமங்கள் உருவாக்கப்படுகின்றன. இருப்பினும் 2ம் உலகமகா யுத்தம் மற்றும் அதன் தாக்கம் அதன் பின்னர் ஒப்பீட்டு அரசியலில் ஏற்பட்ட மாற்றம் என்பன குறிப்பிடக்கூடியவையாகும். 2ம் உலகப்போரின் பின்னர் ஒப்பீட்டு அரசியலில் பயன்பாட்டுக்கு வந்த அணுகுமுறைகள் பல விடயங்கள் தொடர்பில் ஒப்பீட்டு ஆய்வுகளை மேற்கொண்டதுடன் ஒரு துரித வளர்ச்சிப் போக்கினையும் ஏற்படுத்தியது அதன்படியே தற்காலத்தில் தனியானதொரு கற்கைநெறியாக ஒப்பீட்டு அரசியல் வளர்ச்சியடைந்துள்ளது.

## உசாத்துணை நூல்பட்டியல்


அம்பலவாணர் சிவராசா. (2000).***"அரசறிவியல் மூலத்தத்துவங்கள்"*** கொழும்பு : குமரன் புத்தக இல்லம்.

அம்பலவாணர் சிவராசா. அமிர்தின், வெ. சிவயோகலிங்கம், வே. (2004).***"ஒப்பீட்டு அரசியல்"*** கொழும்பு:குமரன் புத்தக இல்லம்.

சர்ஜுன். ஏ. ரிபான்.ஏ.எம். (2011).***"சமகால அரசியல்எண்ணக்கருக்கள்"*** சாந்தி இல்ல வெளியீட்டகம்.

யோதிலிங்கம் .சி.அ. (2011).“ஒப்பியல் அரசாங்கம்” கொழும்பு : குமரன் புத்தக இல்லம்.

Manojkumar, (2004) ***"Comparative Politics and Political Analysis"*** New Delhi: Anoma publication.

Nichlasheng, (2003), "**public administration and public affairs,** "Prentice hall





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாமிருக்கும் நாடு நமதென்பதறிவோம்

சு.லோகப்பிரகாசன்.
விடுகை வருடம்.
விவசாயப்பீடம்.

மனிதர்களாகிய நாம் ஒரு தேச எல்லைக்குள் வாழ நிர்ணயிக்கப்பட்டவர்கள், நிர்பந்திக்கப்பட்டவர்கள். எனவேதான் "அரிஸ்டோடில்" என்ற ஞானி "மனிதன் என்பவன் பிறக்கும் போதே அரசு என்ற சங்கத்தில் பிணைக்கப்பட்டிருக்கிறான்"என்று கூறியுள்ளார். தமக்குரியது என்று கருதுகின்ற எந்த ஒரு பொருளையும், தமது என உரிமைக் கொண்டாடுவது மனித இயற்கை. அதுபோலவே,"எனது நாடு எனக்குரியது"என்று ஒரு மனிதன் எண்ணுவது மனித இயல்பு மட்டுமல்ல, மனித தன்மையும் கூட.

"ஒருமனிதன் தன் தேசத்தை உயிர்போல் நேசிக்கின்றான் என்றால் அவன் தன் இனத்தை, தன் மொழியை, தன் மதத்தை, தன் உற்றாரை, அதற்கும் அப்பால் தன்னுடன் வாழ்கின்ற சகமனிதனை நேசிக்கின்றான்" என்றுபொருள். எனவேதான் அன்று அந்நியர் ஆட்சிக்கு அடிமையாய் கிடந்த தனது இந்தியா விடுதலை பெற்றுவிடவேண்டுமென்று துடித்த பாரதி இந்தியா விடுதலை பெற்றுவிட்டதாகவே கற்பனை செய்து கொண்டு,

"ஆடுவோமே பள்ளு பாடுவோமே ஆனந்த
சுதந்திரம் அடைந்து விட்டோமே"

என்று தொடங்கி

நாமிருக்கும் நாடு நமதென்பதறிந்தோம் - அது
நமக்கே உரிமையாய் என்பதறிந்தோம்"

என்று உணர்ச்சித் ததும்ப கூறினார். இதையே ஒரு ஆங்கில அறிஞர் "ஒரு தேசத்தை நேசிக்கின்றவன் தன் தாயை நேசிக்கின்றான்" என்று கூறினார்.

அன்று அந்நியர் ஆட்சியிலே, அடிமைப்பட்டுக் கிடந்த நாம் சுதந்திரத்தை மறந்து, உரிமைகளை இழந்து, மதுவில் மூழ்கிய வண்டினைப் போல மயக்கத்தில் கிடந்தோம். அந்நியர் எமது வளங்களை, வருமானங்களை, உழைப்பைச் சுரண்டிச் சென்றனர். நாம் வறுமையில் வீழ்ந்தோம். அவ்வேளை துயருறும் ஈழ அன்னையின் துயர் துடைக்க விடிந்தது அன்றோர் காலைப்பொழுது. அந்நாளே 1948ம் ஆண்டு மாசித் திங்கள் 4ம் நாள். அன்று அன்னையின் முகம் மலர, அவள் புதல்வர்களின் கட்டுக்கள் அறுக்கப்பட்டன. ஆனால் அக்கதை முடிந்து இன்று ஐம்பத்தொரு ஆண்டுகள் உருண்டோடி மறைந்துவிட்டன. அத்துடன் எம் சுதந்திரம் முடிந்ததா? இல்லை, தொடர்கின்றது தொடர்கதையாக. இன்று நாம் சாதி, மதம், இனம், மொழி, பிரதேசம் என்ற பேதங்களில் மூழ்கி, எம் சகோதர மனிதர்களுடன் சண்டையிட்டோம், சண்டையிடுகின்றோம். அந்நியர் ஆட்சியிலே எதை எதை இழந்தோமோ, அதைவிட இன்று மனித உயிர்களையே இழக்கின்றோம். இதற்குக் காரணம் ஒரு நாட்டின் பிரசையாகிய நாம், நாமிருக்கும் நாடு நமதென்பதை அறியாத பேதமை. நாமே இதற்குக் காரணம். ஒற்றுமை குலைகின்ற நாடு அழிகின்றது. எனவேதான் அன்றுபாரதி,


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"ஜாதி மதங்களை பாரோம் - உயர
ஜென்மம் இத்தேசத்தில் எய்தினராயின்
வேதியராயினும் ஒன்றே—அன்றி
வேறு குலத்தினராயினும் ஒன்றே
முப்பது கோடியும் வாழ்வோம் - வீழில்
முப்பது கோடி முழுமையும் வீழ்வோம்"

என்று பாடினார். இது இந்தியாவிற்கு மட்டுமல்ல, இலங்கைக்கும் பொருந்துமென்றே கூறவேண்டும். வள்ளுவர், நாட்டை ஒருவன் நேசிக்கவே நாடு நமக்கு வளம் தரும் என்ற பொருளுடன்,

"நாடென்ப நாடாவளத்தன நாடாவோ
நாடு வளந்தரும் நாடு"

என்றார்

நாம் இன்று ஜனநாயக மக்கள். எமது நாடு, எமது மக்கள், எமது வளம், எமது பூமி என்ற உரிமை எமக்குண்டு. எமது நாட்டிலே உள்ள ஆற்றை, களனியை, குளத்தைப் போற்றி, காட்டை வளர்த்து, மழை பெருக்கி, வளம் உய்யவேண்டியது எமது பொறுப்பு. "செய்யும் தொழிலே தெய்வம்" எனக் கருதி எத்தொழிலையும் செய்து, நாட்டை முன்னேற்ற பாடுபடவேண்டும். நாமெல்லோரும் இந்நாட்டு பிரஜைகள். இது எமது நாடு என்று எண்ணி செயல்பட்டால் இலங்கை மாதா எமக்கு வேண்டியதை அள்ளித் தருவாள்.

இன்று எமது நாட்டின் மூளைசாலிகளின் வெளியேற்றம், அபிவிருத்திக்குத் தடையாக உள்ளமை கண்கூடு. நாம் கற்ற கல்வியை, எமது நாட்டின் அபிவிருத்திக்குப் பயன்படுத்தவேண்டும். இலங்கை சின்னஞ்சிறு நாடு என்பதை நினைத்து, காடுகள் புகுத்தி, பலகளனிகள் செய்வோம். அந்நிய நாட்டவரில் இருந்து வாழ்வதை மறப்போம். இலங்கை எமது நாடென எண்ணி, இனப் பேதம் நீங்கி, மதப் பெயரால் வரும் மதத்துவேசத்தை ஒழித்து, மதிவழியே நடந்து, மனிதகுலத்தைக் காப்போம்.

இதனை மனதில் கொண்டு நாமிருக்கும் நாடு நமதென்பதறிந்து

"நல்லெழில் பொலிசிரணி
நலங்கள் யாவும் நிறைவான் மணிலங்கா
ஞாலம் புகழ் வளவயல் நதிமலை மலர்
நறுஞ்சோலை கொள் லங்கா"

எனப் பாடி எமது நாட்டைப் போற்றுவோம்.

வாழ்க எம் மக்கள்! வளர்க எம் நாடு!


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குற்றங்களை குறைப்பதை விட வராமல் தடுப்பதே மேல்

ஏ. ஜீ. எப். பஸீனா
விடுகை வருடம்,
புவியியல் விசேட துறை,
கலைப்பீடம்.

**ச**மூகக் கண்ணோட்டத்தில் குற்றம் என்றால் குறித்த சட்ட வரையறைகளுக்கு அல்லது உடன்பாடுகளுக்கு கட்டுப்பட்டு நடக்க வேண்டிய ஒருவர் அவற்றை மீறுவதாகும். இதனை இன்னுமொரு வகையில் குறிப்பிடுவதாயின் தனிமனிதனோ அல்லது ஒரு குழுவோ பிறருக்குப் பாதகம் ஏற்படுத்தக்கூடிய காரியங்களைச் செய்வது அல்லது செய்யுமாறு தூண்டுவதாகும். பல்வேறு விதமான குற்றச் செயல்களும், வன்செயல்களும் இன்று சமூகத்தில் தோன்றியுள்ளமையை அவதானிக்கக்கூடியதாக உள்ளது. இது சமூகத்தில் பெருமளவு பாதக விளைவை ஏற்படுத்தக்கூடிய ஒரு நிலையாகும் என்பது மறுக்க முடியாத ஒன்றாகும்.

நாங்கள் வாழ்வது பயங்கரக் குற்றச் செயல்கள் மிகுந்த சமுதாயத்திலாயின் தெளிவாகவே அது எங்கள் உயிர் வாழ்விற்கான உரிமையை எந்தவொரு வேளையிலும் அச்சுறுத்தலுக்கு உள்ளாக்கக்கூடிய ஒரு சூழலாகும். வேறு வார்த்தையில் கூறுவதாயின் ஏனையோரின் உயிர் வாழ்வதற்கான உரிமை குற்றச் செயலினர்களால் நிர்ணயிக்கப்படும் ஒரு சமூகமாகும். இவ்வாறான ஒரு சூழலில் எப்பொழுதும் ஐயத்திற்கும் பீதிக்கும் மத்தியில் வாழ நேரிடும். அது ஏனையவர்களுக்கு ஏற்பட்ட பல்வேறு இடையூறுகள் தமக்கும் ஏற்பட வாய்ப்புள்ளது என்ற உணர்வினால் எப்பொழுதும் உள்ளம் தூண்டப்படுவதன் காரணத்தினாலும் இது மனிதனது உளச் சுதந்திரத்திற்கு தடங்களை ஏற்படுத்தும்.

அடுத்து மனிதனது பொருளாதார சுதந்திரத்திற்கு அச்சுறுத்தலாக இக்குற்றங்கள் அமையும். தமது உழைப்பை ஈடுபடுத்தி யாதேனும் பொருளாதார பலமொன்றைக் கட்டியெழுப்புவதற்கு சமூகத்தில் அங்கம் வகிக்கும் அனைவருக்கும் உரிமையுள்ளது. எனினும் திருடர்களும் கொள்ளைக்காரர்களும் நிறைந்த ஒரு சூழலில் வாழ்வதாயின் பெரிதும் பிரயாசைப்பட்டு கட்டியெழுப்பப்பட்ட பொருளாதார பலத்திற்கு எந்தவொரு வேளையிலும் அத்தகையவர்களால் அச்சுறுத்தலொன்று ஏற்படலாம்.

இன்னும் இக்குற்றச் செயல்களினால் மனிதனது உரிமைகள் யாவும் மட்டுப்படுத்தப் பட்டவையாக இருக்கும். அதாவது குற்றச் செயலினர்கள் சட்டத்தில் ஆதிக்கம் செலுத்தும் ஒரு சமூகத்தில் வாழ்வதாயின் மனிதர்களது அரசியல் உரிமைகள், மனித உரிமைகள், கருத்து வெளியீட்டு ஆற்றல், சுருங்கக் கூறின் சிந்தனைச் சுதந்திரம் அந்த சமூகத்தின் மத்தியில் மட்டுப்படுத்தப்படும். உதாரணமாக அத்தகைய ஒரு சூழலில் அரசியல்வாதிகள் வாக்குப்பலத்தை முறியடித்து காடையர் கும்பல்களின் பலத்தால் பதவிக்கு வரலாம். அதற்கு எதிராக துணிவுடன் எழுந்து நிற்பதற்கு எந்தவிதத்திலும் அவர்களிடமிருந்து வாய்ப்புக்கிட்டாது.

இன்னும் முன்னேற்றத்திற்குப் பதிலாக சீரழிவை நோக்கி சமூகம் பயணிக்கும். அதாவது நமது வாழ்வு பற்றிய அச்சத்துடனும் பீதியுடனும் மக்கள் வாழ நேரிடுகின்றதும், சகல உரிமைகளும் மட்டுப்படுத்தப்படுகின்றதும் அவர்களின் பொருளாதார வளர்ச்சியின் மீது அச்சுறுத்தலொன்று ஏற்படுத்தப்பட்டுள்ளதுமான ஒரு சமூகத்தின் முன்னேற்றம் குறித்து எவ்விதத்திலும் எதிர்பார்ப்பொன்றை ஏற்படுத்திக் கொள்ளமுடியாது. அத்தகைய ஒரு சமூகம் முன்னேற்றத்தை நோக்கிப் பயணிப்பதற்குப் பதிலாக பின்னடைவை நோக்கியே பயணிக்கும். இவ்வாறு குற்றச் செயல்களினால் பல்வேறு வித விளைவுகள்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏற்பட இடமுண்டு. இவ்வாறான குற்றங்கள் நிகழாத ஒழுங்கான சமூகமொன்று உதயமாக வேண்டுமானால், குற்றங்களைக் குறைப்பதை விட குற்றங்களைத் தடுப்பதே சிறந்த வழியாகும். இக்குற்றங்களைத் தடுப்பதற்கு முன் குற்றங்களைச் செய்வதற்கு தூண்டும் காரணிகளை அறிந்திருத்தல் அவசியமாகும். அதன் பின்பே குற்றங்களைத் தடுக்க இலகுவாக அமையும்.

மனிதர்களை குற்றச் செயலினர்களாக மாற்றுவதில் முக்கிய பங்களிப்பாற்றுவது அவர்கள் வாழும் சமூகச் சூழலாகும். ஓர் அப்பாவிப் பிள்ளையைக் கூட படுபாதக குற்றவாளியாக ஊட்டி வளர்ப்பதற்குக் கொடுக்கப்படுகின்றது. பெற்றோர், உறவினர், நண்பர்கள் அல்லது அயலவர்கள் அடங்கலாக சகலரும் அதில் உட்படுவர். ஒரு மனிதனின் முழு ஆளுமை விருத்திக்காக சிறுபராயத்தில் பெற்றோரின் அன்பும் பராமரிப்பும் கிட்டுவது கட்டாயமாகவே அவசியமாகின்றது. சிறுபராயத்தில் பெற்றோரின் அன்பை இழப்பது அவனது உள விருத்தியின் தனிப்பட்ட விருத்தியின் மீதும் தெளிவாகவே தாக்கம் செலுத்தும்.

விவாகரத்துச் செய்தல் போன்ற காரணங்களால் பெற்றோர் ஒருவரை விட்டு ஒருவர் பிரியும் போது பிள்ளைகள் தாய் அல்லது தந்தையின் தனிப்பட்ட பொறுப்பில் விடப்படுகின்றனர். பிள்ளைகளுக்கு பெருமளவுக்கு உரிய அன்பும் பாதுகாப்பும் இத்தகைய பிள்ளைகளுக்கு கிடைக்காமல் செல்கின்றது. வெளியாரின் பொறுப்பில் இருக்கும் போது அவர்களுக்கு சில வேளைகளில் பல்வேறு இம்சைகளையும், துன்புறுத்தல்களையும் சந்திக்க நேரிடுகின்றது. பாதுகாப்பற்ற சூழலில் வாழும் அவர்கள் துஷ்பிரயோகங்களுக்கு உள்ளாகும் சந்தர்ப்பங்களையும் அவதானிக்க முடிகின்றது. இன்னும் உள்நாட்டுப் போர் காரணமாக ஏராளமான குழந்தைகள் தமது தாய் தந்தையரை இழந்துள்ளனர். அவர்களுள் சில பிள்ளைகள் உறவினரின் பாதுகாவலில் அன்றேல் அகதி முகாம்களில் வாழ்கின்றனர். அத்தகைய பிள்ளைகள சில வீட்டு வேளைகளில் ஈடுபடுத்துவதற்காக விலைக்கு விற்கப்பட்ட சந்தர்ப்பங்களும் ஆயுதக் குழுக்களால் கடத்திச் செல்லப்பட்ட சந்தர்ப்பங்களும் உள்ளன. அத்தகைய துன்பந்தரும் ஒரு நிலைமையின் கீழ் வளரும் ஒரு பிள்ளை வன்செயலுக்கு சார்பான ஒருவனாகவன்றி அமைதியான ஒரு பிரஜையாக உருவாவதற்கான வாய்ப்புக்கள் மிகச் சொற்பமானவையே.

இன்னும் வீட்டுப் பணிப்பெண்களாக வெளிநாடு செல்லும் சில பெண்கள் பிள்ளைகளைப் பெற்றெடுத்த திருமணமான குடும்பப் பெண்களாவர். இங்கு தாயின் பரிமாரிப்பினை இழந்த அந்தப் பிள்ளைகள் தந்தையின் அல்லது வேறு உறவினர்களின் பாதுகாவலில் இருக்கின்றனர். தாயின் பராமரிப்பு மிகவும் வேண்டப்படும் ஒரு கட்டத்தில் தாய் வெளிநாடு செல்வதால் அந்தப் பிள்ளைகளுக்கு உரிய வழிகாட்டலின்றி அவர்களின் கல்வி நிலை பாழ்படுவதும் பல்வேறு துர்நடத்தை சார்ந்த செயல்களின்பால் தூண்டப்படுவதும் காரணமாக இறுதியில் பல்வேறு வன்செயல்களின்பால் அவர்கள் ஈர்க்கப்படுவது சர்வசாதாரணமான ஒரு நிகழ்வாக மாறியுள்ளது. இன்னுமொரு காரணியாக ஆன்மீகத்தை மாறிகல்வியைப் புறந்தள்ளலைக் குறிப்பிடலாம். எனினும் இன்றைய கல்வி முறையில் பாடத்துடன் ஒன்றிய அறிவைப் பெற்றுக் கொடுப்பதற்கே முக்கிய இடம் அளிக்கப்படுகின்றது. எனினும் ஒரு முழு மனிதனை உருவாக்குவதாயின் இந்த இரு துறைகள் சார்ந்த அறிவும் கல்வியினூடாகப் பெற்றுக் கொடுக்கப்பட வேண்டும் என்பதை அறிஞர்கள் உள்ளிட்ட பெரும்பாலானோர் இன்று உணரத்தலைப்பட்டுள்ளனர்.

இன்னும் சமூக ஏற்றத்தாழ்வுகளின் அழுத்தத்திற்கு அல்லது துன்புறுத்தலுக்கு உள்ளாவதும் குற்றச் செயலுக்கான காரணியாகும். மனித சமூகத்தில் வளங்களின் பகிர்வு எப்பொழுதும் நியாயமானதாக அமைவதில்லை. அங்கு சில குழுக்கள் வறுமையின் அழுத்தத்திற்கு உள்ளாவதற்கான வாய்ப்புள்ளது. மறுபக்கம் சமூகத்தில் இனம், சாதி அடிப்படையிலும் பல்வேறு பிரிவினைகள் வேரூன்றி இருப்பதை அவதானிக்க முடிகின்றது. இங்கு சில மக்கள் குழுக்கள் அத்தகைய பிரிவினையின் விளைவாக அழுத்தத்திற்கு, நெருக்குதலுக்கு அல்லது அநீதிக்கு உள்ளாகும் வாய்ப்புள்ளது. அவ்வாறே சட்டம் உரிய வகையில் செயற்படுத்தப்படாமையும் மக்கள் அநீதிக்கு உள்ளாவதற்கான மற்றுமொரு சந்தர்ப்பமாகும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வாறாக வறுமை நிலை, இனரீதியான அல்லது சாதி அடிப்படையிலான நெருக்குதல்கள், அழுத்தங்கள், சட்டத்தை அமுல்படுத்தும் போது அநீதி இழைக்கப்படல், பாலியல் ரீதியிலான துன்புறுத்தல்கள் முதலிய பல்வேறு காரணங்களால் அதன் மூலம் துன்புறுத்தலுக்கு உள்ளாகும் தரப்பினருக்கு முழுதும் அளாவிய சமூகத்தின் மீதும் குரோத உணர்வொன்று அன்றேல் காழ்ப்புணர்வொன்று ஏற்படலாம். அது பெருமளவு வன்செயலாக வெடிக்கும் சந்தர்ப்பங்களையும் தம்மால் பரவலாகக் காணமுடிகின்றது.

குற்றச் செயல்கள் சார்பான ஆட்களுடன் பழகுவதன் காரணமாக ஏனையோர் குற்றச் செயலினராக மாறும் சந்தர்ப்பத்தினையும் காணக்கூடியதாக உள்ளது. இதற்கு சிறந்த உதாரணம் சிறையிடப்பட்டவர்களிலிருந்தே கிடைக்கின்றது. சிறுதவறுகளுக்காக சிறையிடப்பட்ட ஆட்கள் அங்கு கொடூர குற்றச் செயல்களைப் புரிந்தமைக்காக தண்டனைகளை அனுபவித்து வருபவர்களுடன் நட்பு கொள்வதற்கான வாய்ப்புக்கிட்டுகின்றது. இது குற்றச் செயல்களை மேற்கொள்ளும் விதம், அவற்றினூடாக பணம் ஈட்டும் விதம் தொடர்பாகக் கற்றுக் கொள்ள புதியவர்களுக்கு ஒரு வாய்ப்புக்கிட்டுகின்றது. அதேபோல் பல்வேறு குற்றச் செயல்களுடன் தொடர்புபட்ட அனுபவங்களைக் கொண்ட எனினும் சட்டத்தின் முன் குற்றவாளிகளாக நிறுத்தப்படாத ஆட்கள் சமூகத்தில் அதிகமுள்ளனர். அத்தகைய ஆட்களுடன் பழகுவோர் சில வேளைகளில் தாமாகவே குற்றச் செயல்களின் பங்காளராக மாறும் சந்தர்ப்பங்களும் உள்ளன. குறிப்பாக, போதைப்பொருள் வியாபாரத்துடன் தொடர்புபட்ட குற்றச் செயல்களில் ஈடுபடும் இளைஞர்களை தம் பக்கம் கவர்ந்திழுப்பதற்காக முதலில் சிகரட், மதுபானம் போன்றவற்றை இலவசமாகவே வழங்குவர். பின்பு படிப்படியாக அவர்கள் "ஹெரோயீன்" போன்ற போதையூட்டிகளைப் பாவிக்கத் தூண்டப்படுகின்றனர். அவற்றுக்கு அடிமையான பின் அந்த இளைஞர்கள் போதைப் பொருள் கடத்தல் முதலிய குற்றச் செயல்களுக்காகப் பயன்படுத்தப்படுகின்றனர்.

அடுத்து யாதேனும் ஒரு தவறு நீண்ட காலமாக சமூகத்தில் வேரூன்றிய பின் அதனைத் தவறாகக் காண்பதற்குப் பதிலாக படிப்படியாக அதனை சர்வசாதாரணமான ஒன்றாக நினைப்பதற்கு மனிதர்கள் தூண்டப்படுகின்றனர். அத்தகைய ஒரு நிலைக்கு தள்ளப்பட்ட ஒரு சமூகத்தினை அத்தகைய நிலைமையிலிருந்து மீட்டெடுப்பது மிகக் கடினமாகும்.

இன்னும் குற்றச செயல்களும் அவற்றை மேற்கொள்ளும் விதமும் பற்றி ஊடகங்கள் வாயிலாக அறிவூட்டுவதும் குற்றச் செயல்கள் அதிகரிப்பதற்கான ஓர் காரணமாகும். தற்காலத்தில் தயாரிக்கப்படும் பெரும்பாலான திரைப்படங்களிலும் தொலைக்காட்சித் தொடர்களிலும் கொலை, கொள்ளை, பாலியல் துன்புறுத்தல் உள்ளிட்ட சமூக விரோத செயல்கள் பற்றிய காட்சிகள் உள்ளடக்கப்படுகின்றன. அத்தோடு கணனி விளையாட்டுக்களும் அண்மைக் காலத்தில் பெரிதும் பிரபல்யம் அடைந்துள்ளன. பெரும்பாலும் துப்பாக்கிகள், வெடிக்கும் போர்க்கருவிகள் மூலம் எதிரிகளைக் கொன்று குவிப்பது போன்ற துன்புறுத்தும் செயல்களை இத்தகைய விளையாட்டுக்களில் முதன்மைப்படுத்துகின்றனர். அத்தோடு கொலைகள், பிற குற்றச் செயல்கள் பற்றி விபரிக்கும் தொடர்கதைகள் பெரும்பாலும் செய்தித்தாள்களில் பிரசுரமாகின்றன. இதுவும் மக்கள் அபிப்பிராயத்தினுள் குற்றச் செயல்களின் கலாசாரத்தினை வளர்ப்பதாகும். துர்நடத்தைகளை வருமானமீட்டும் மார்க்கமாகக் கொண்ட சமூகப்படிநிலை ஒன்று தோற்றம் பெற்றுள்ளமையும் குற்றச் செயல்கள் அதிகரிப்பதற்கான காரணியாகும். இவ்வாறு பல்வேறுபட்ட காரணிகள் குற்றச் செயல்கள் அதிகரிக்க துணையாயுள்ளன. இக்குற்றங்களை குறைப்பதை விட அதனை தடுப்பதே சிறந்த வழியாகும். அதற்காக நாம் தனிநபர்களாகவும், சமூகத் தலைவர்களாகவும் அரச நிறுவனங்களாகவும் சிவில் சமூக அமைப்புக்களாகவும் பாரியதொரு பணியை ஆற்ற வேண்டியுள்ளது.

ஒவ்வொரு தனிநபரையும் கொண்டதாக சமூகம் ஒருங்கமைந்துள்ளதால், சமூகத்தில் இடம்பெறும் குற்றச் செயல்களைத் தடுத்து நிறுத்துவது தொடர்பிலும் ஒவ்வொரு தனிநபருக்கும் சம அளவான பொறுப்புண்டு. அமைதிகரமான ஒரு சூழலில் மகிழ்ச்சிகரமான வாழ்வைக் கழிப்பது உலகில் வாழும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒவ்வொரு மனிதனதும் ஒரே எதிர்பார்ப்பாகும். குற்றச் செயல் என்பதை அதன் சொல்லர்த்தத்தில் நோக்கின் நியாயமான சட்டத்தின் கீழ் கடும் தண்டனை அளிக்கக் கூடிய செயல் எனலாம். சட்டம் என்பது ஆளொருவர் சிறப்பாக வாழ்வதற்காக காண்பிக்கப்படும் ஒரு வழிகாட்டல் எனக் குறிப்பிடலாம். சமூகத்தில் குற்றச் செயல்களை தடுத்து நிறுத்துவதற்கெனில் முதலில் நாம் ஒவ்வொருவரும் மனசாட்சியின் சட்டத்திற்கு மதிப்பளிப்பது முக்கியமானதாகும்.

குற்றச் செயல்களால் பாதிக்கப்பட்டோர் மீது பரிவு காட்டுவதற்கும் துரிதமாக உதவுவதற்குமான முக்கிய ஒரு சமூகப் பொறுப்பு நம்மீது உள்ளது. அத்தகைய ஒரு உதவி அவ்வாறு பாதிக்கப்பட்ட ஒருவருக்கு வழங்கப்படும் உளரீதியான நிவாரணம் போன்ற எளிய ஒன்றை விட சில வேளைகளில் சிரமமானதாக அமையலாம். குறிப்பாக துஷ்பிரயோகத்திற்கு உள்ளான சிறுவர்கள், பாலியல் துன்புறுத்தல்களுக்கு உள்ளான பெண்கள் போன்றோர் மீது சிறப்பாக ஏற்புடையதாகும். இனவாத முறுகல்கள் போன்ற வன்செயல்கள் காரணமாக பாதிக்கப்பட்ட தரப்பினருக்கும் அவ்வாறே ஏனையோரின் உதவி கிட்டுவது அவசியமாகும். அத்தகைய ஒரு சம்பவத்தின் பின்னர் பெருமளவுக்கு அவர்கள் பெரும் பீதியுடன் இருப்பர். ஆகையால் முதலில் அவர்களின் அச்சத்தினைப் போக்குவதற்காக நடவடிக்கை மேற்கொள்வது முக்கியமானதாகும். குற்றச் செயலொன்று இடம்பெறும் வேளையில் அது குறித்து பொலிசு அடங்கலாக தொடர்புபட்ட நிறுவனங்களுக்கு அறியக்கொடுப்பதற்கு பெரும்பாலான சந்தர்ப்பங்களில் மக்கள் முற்படுவதில்லை. தமது சமூகப் பொறுப்பை தட்டிக்கழித்து நழுவிச் செல்லும் போக்கு என அதனைக் கூறலாம். குற்றச் செயலொன்றுடன் சம்பந்தப்பட்ட சந்தேக நபர்கள், வாகனங்கள் முதலிய குறித்த திருத்தமான தகவல்களை அறிந்து வைத்திருந்த போதிலும் அத்தகைய தகவல்களை பகிரங்கப்படுத்துவதன் மூலம் தமக்கு இடையூறுகள் ஏற்படலாம் என்ற எண்ணம் காரணமாக தொடர்புபட்ட அதிகாரிகளுக்கு அது குறித்து அறியக் கொடுக்க அவர்கள் முற்படுவதில்லை. இது குற்றச் செயலால் பாதிக்கப்பட்டவருக்கு நியாயம் கிட்டச் செய்வதற்கும் பெருமளவு தடங்கலாக அமையும். இதனால் குற்றவாளிகள் இலகுவாக சட்டத்தின் பிடியிலிருந்து தப்பிச் செல்வதற்கான வாய்ப்புக்கள் அதிகம் உள்ளன. அது குற்றச் செயலால் பாதிக்கப்பட்டவரின் தரப்பிலிருந்த நோக்கும் போது பாரதூரமான ஒரு அநீதியாக இருப்பதுடன் மாத்திரமின்றி மற்றும் பல குற்றச் செயல்களில் ஈடுபடுவதற்கும் தவறாளிகளுக்கு கிடைக்கும் ஊக்குவிப்பாகவும் அமையும் ஆதலால் குற்றச் செயலொன்று இடம் பெற்றவுடன் துரிதமாக அதிகாரிகளுக்கு அறியக் கொடுத்தல் மக்களாகிய எமது கடமையாகும்.

குற்றச் செயல்களைத் தடுத்து நிறுத்தி சமூகத்தை சீரான பாதையில் இட்டுச் செல்வதற்கான பாரிய ஒரு பொறுப்பு தலைவர்களுக்கு உண்டு. இங்கு அரசியல்வாதிகள், சமூகத் தலைவர்கள், மதத்தலைவர்கள் போன்ற தரப்பினர் தலைவர்களாகக் கருதப்படுகின்றனர். அவர்கள் வழங்கும் முன்மாதிரி ஏனையோர் எப்பொழுதும் அவர்களைப் பின்பற்றி ஒழுகுவதற்கு தூண்டுகோளாக அமைவதால் அது முக்கியத்துவம் பெறுகின்றது. ஏதோ ஒரு விதத்தில் மேற்போன்ற தரப்பினர் வன்செயல்களில் அன்றேல் துன்புறுத்தல்களில் ஈடுபடுபவர்களாயின் அவர்களைப் பின்பற்றுவோரும் அவற்றில் ஈடுபடுவர். குறிப்பாக சமுகத்திலிருந்து வன்செயலை இல்லாதொழிப்பதற்கான மிகப் பெரும் சாத்தியம் அரசியல் தலைவர்கள் வசம் உள்ளது. மறுபக்கம் வன்செயலை வெறுத்தொதுக்கும் அரசியல்வாதிகள் நிலைத்திருப்பதுடன் மக்களால் கவரப்படுவர். அமைதியான முறையில் செயற்படுவதன் ஊடாகவும் தமது நோக்கங்களை மிகவும் வெற்றிகரமாக எய்த முடியும் என பாரிய சனசமூக அமைப்புக்களை வழி நடாத்திய மகாத்மாகாந்தி போன்ற தலைவர்கள் எமக்கு தெளிவாக சுட்டிக் காட்டியுள்ளனர். பொலிஸ் பொது மக்களுக்கு மிகவும் நெருங்கி நட்புறவான ஒரு நிறுவனமாக இருத்தல் குற்றச் செயல்களை இல்லாமல் தடுக்க ஒரு முறையாகும். இதன் மூலம் குற்றச் செயல்கள் குறித்த தகவல்களைத் துரிதமாகப் பெற்றுக் கொள்ளக்கூடியதாக அமையும் என்பதால் அவர்களின் கடமையை சிறப்பாக ஆற்றுவதற்கு மிகவும் வசதியாக அமையும். அத்தோடு குற்றச் செயல்களின்பால் ஈர்க்கப்படுவதற்கான சாத்தியம் அதிகமாகவுள்ள ஆட்கள், குற்றச் செயல்கள்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இடம்பெறக்கூடிய சந்தர்ப்பங்கள் ஆகியன குறித்த அதிக கவனம் செலுத்துதல் பொதுமக்களின் இன்னொரு கடமையாகும்.

குற்றச் செயல்களைத் தடுப்பது பொதுமக்களின் கடமை என்பது போலவே சிவில் அமைப்புக்களினதும் கடமையாகும். இதில் குற்றச் செயல்களையும், வன்செயல்களையும் தடுத்து நிறுத்துவதற்கு ஓர் அமைப்பாக ஒன்றிணைதல் கடமையாகும். வன் செயல்கள் இனவாத மோதல்களின் போது குறித்த பரப்பு அல்லது மக்கள் குழுவைப் பிரதிநிதிப்படுத்துவதும் மக்கள் அபிப்பிராயம் மீது தாக்கத்தினை ஏற்படுத்தக்கூடிய மதத்தலைவர்கள், பிரபுக்கள் முதலியோர் ஒன்றிணைந்து செயலாற்றுவது மிக முக்கியமானதாகும்.

சில வேளைகளில் சட்டம் குறித்தும் அதன் நிவாரணம் பெற்றுக் கொள்ளும் விதம் குறித்தும் மக்கள் மத்தியில் நிலவும் புரிந்துணர்வின்மை காரணமாக அது குறித்தும் அவற்றுக்கான பின்புலத்தினை அமைத்துக் கொடுக்கும் காரணிகளைக் குறித்தும் குற்றச் செயல்கள் சிவில் சட்டம் ஆகியன மூலம் நிவாரணம் பெற்றுக் கொள்ளும் விதம் குறித்தும் அவர்கள் மத்தியில் விழிப்பூட்டலொன்று ஏற்படுத்துவது சிவில் அமைப்புக்களால் ஆற்றப்பட வேண்டிய மற்றுமொரு முக்கிய பணியாகும். அவ்வாறே குற்றச் செயல்களை தடுத்து நிறுத்துவதற்காக சமூகத்திற்கும் முக்கிய பொறுப்புள்ளது என்பதை அவர்களுக்கு உணர்த்துவதும் அவசியமாகும். சமூகத்திற்குள்ள வாக்குரிமை, மனித உரிமைகள் முதலியவற்றை தற்காத்துக் கொள்வதிலுள்ள முக்கியத்துவம் குறித்தும் அவர்களுக்கு தெளிவுபடுத்துவது முக்கியமானதாகும்.

குற்றச் செயல்கள் இடம்பெறுவதற்கு துப்பாக்கிகள் அடங்கலாக ஆயுதங்கள் பெருமளவுக்குக் காரணமாக அமைகின்றன. தற்போது பலதரப்பட்ட பெரும் எண்ணிக்கையிலான சிறு ஆயுதங்கள் பொதுவாக எல்லா நாட்டிலும் பரம்பலடைந்துள்ளன. ஆகையால் அத்தகைய ஆயுதங்களின் பரம்பலைத் தடுத்தி நிறுத்த நடவடிக்கை மெற்கொள்வதற்கான மக்கள் அபிப்பிராயம் ஒன்றை உருவாக்குவதற்கும் ஆயுத கலாச்சாரத்திலுள்ள அச்சம் சூழ்ந்த ஆபத்தான நிலையை பொதுமக்களுக்குப் புரியவைப்பதற்கும் சிவில் அமைப்புக்கள் செயலாற்றுவது அவசியம்.

சமூகத்தில் குற்றச் செயல்களின் பரம்பலுக்கு தூண்டுகோளாக அமையும் போதைப்பொருள் பாவனையிலிருந்து மக்களை விடுவிப்பதற்காக நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும். போதைப் பொருள் எதிர்ப்பு இயக்கங்கள் இந்த விடயத்தில் தொழிற்பாடு பங்களிப்பொன்றை வழங்க முடியும். போதைப் பொருள்களின் தீங்கு குறித்து இளைஞர்கள் மத்தியில் விழிப்பூட்டலொன்றை ஏற்படுத்துவது முக்கியமாகும்.

சமூகத்தில் குற்றச் செயல்களின் பரம்பல் மீது வறுமை நிலையும், அறியாமை நிலையும் பெரும் பங்களிப்பாற்றுகின்றது என்பது பொதுவாக அறியப்பட்ட ஓர் உண்மை. மக்களின் பொருளாதார ஆற்றலை வளர்ப்பதற்கு உறுதுணையாக அமையும் சுய தொழில் வாய்ப்புக்களுக்கான பயிற்சிகளைப் பெற்றுக் கொடுத்தல் அதற்கு அவசியமான உபகரணங்களையும் மூலதனத்தினையும் உற்பத்திகளுக்கான சந்தைவாய்ப்பினையும் ஏற்படுத்திக் கொடுத்தல் முதலிய துறைகளில் செயலாற்றும் அமைப்புக்கள் மறைமுக பங்களிப்பாற்றுகின்றன.

குற்றச் செயல்கள் இன்றிய ஒரு சமூகம் என்பது நம் அனைவரினதும் கூட்டு முயற்சியின் பெறுபேறாகும். அந்த உயரிய பணிக்காக தொழிற்பாடு ரீதியில் பங்களிப்பு நல்குவது சமூகத் தலைவர்கள் என்ற வகையிலும். சிவில் சமூகத்தின் பிரஜைகள் என்ற வகையிலும் எங்கள் உங்கள் அனைவரினதும் கடமையாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சினிமாவும் சீரழியும் பண்பாடும்

சரணியா சுப்ரமணியம்,
விடுகை வருடம்,
தமிழ் விசேட துறை,
கலைப்பீடம்.

விரல் நுனியில் உலகத்தை வைத்துச் சுற்றிப் பார்த்துக் கொண்டிருக்கச் செய்யும் இன்றைய யுகத்தில் வாழும் எம்மை ஆட்கொண்டிருப்பது இன்றைய தொழில்நுட்பமே என்றால் அது மிகையாகாது. அதேவேளை இன்று மனித வாழ்வு மண்ணில் நல்ல வண்ணம் அமைவதற்கான முயற்சிகளின் வரலாறுதான் பண்பாட்டின் வரலாறாகவும் அமைகின்றது. பண்பாடு என்பது பொதுவாக ஒரு மக்கட் கூட்டத்தின் வாழ்க்கை முறையினைக் குறிப்பது எனலாம். பண்பாடு பற்றி நாம் பேசும்போது பழக்க வழக்கங்கள், நம்பிக்கைகள், சமூக நிறுவனங்கள், நடையுடை பாவனைகள், மொழி இலக்கியம், கலைகள் முதலானவற்றையெல்லாம் கருத்தில் கொண்டாலும் மனித உறவுகள் செம்மையாக அமைந்த ஒரு வாழ்க்கை ஒருங்கிணைவையே பிரதானமாகக் கருதுகிறோம். அதாவது அம்மக்கட் கூட்டத்தின் சிந்தனைகள் நம்பிக்கைகள் செயற்பாடுகள் அனைத்தும் அதனை நிர்ணயிப்பதாகும்.

அந்தவகையில் நம்மை ஆட்கொண்டு பண்பாட்டைச் சீரழிக்கும் தொழில்நுட்பக் காரணிகளுள் ஒன்றாக சினிமாவும் அமைகின்றது. ஆம் . இன்றைய மனித சமுதாயத்தையும் குறிப்பாக இளம் சமுதாயத்தினரையும் அவர்களது பண்பாட்டினையும் சீரழிப்பதில் சினிமாவின் பங்கு அளவுக்கு அதிகமாகவே உள்ளது எனலாம். அதாவது இன்று சமூகத்தில் குடும்பம் என்ற சமூக நிறுவனத்தை அதன் குடும்ப பண்பாட்டிலிருந்து சீரழித்துக் கொண்டிருக்கும் சினிமாக்கள் தொடர்ந்த வண்ணமே வந்துகொண்டிருக்கின்றன.

இன்று குடும்பப் பிணக்குகளைக் கோமாளித் தனமாகச் சித்தரிக்கும் திரைப்படங்களும் கதைகளும் படிப்படியாக பார்ப்பவர் மனதில் குடும்பம் என்கிற உன்னதமான அமைப்பு பற்றிய மாறுபாடான கருத்தை தோற்றுவித்து விடுகின்றன. கற்பொழுக்கம் பற்றி கண்டபடி கதை எழுதுகின்றனர். சில கதைகளில் குடும்பங்களில் சமூகத்தில் ஒருவருக்கொருவர் மன்னிக்கும் பண்பு என்ற வார்த்தைக்கு அர்த்தம் இன்றி பகை பழிவாங்கல்தான் சரியான பாதையாகச் சித்தரிக்கப்படுகின்றது. ஆனால் குடும்பப் பிணைப்பை கணவன், மனைவி உறவைப் பலமாக்கச் செய்ய புதிய தம்பதியினருக்கு நல்ல வரைபடத்தினை முன்வைக்க வேண்டுமல்லவா?

ஆனால் இன்றைய சினிமா எதனை முன்வைக்கின்றது? கணவனுக்கு மாத்திரம் காண்பிக்க வேண்டிய தனது உடற்பாகங்களை கலை என்ற போர்வையில் பணம் சம்பாதிப்பதற்காக முழு உலகத்திற்குமே வெளிச்சம் போட்டுக்காட்டுகின்ற கீழ்த்தரமான பண்பாட்டிற்கு அடித்தளம் இடுகின்ற ஒரு துறையாக சினிமா இன்று காண்பிக்கப்படுகின்றது.

ஒரு சமுதாயத்தின் கண்களாக கருதப்படுகிறவர்கள் அச்சமுதாயத்தின் இளம் தலைமுறையினரே. ஆனால் இந்த சினிமா மோகத்தினால் பல இளைஞர்கள் வன்முறையாளர்களாக மாறிவரும் துர்பாக்கிய நிலையுடன் இளம் ஆண்கள் பெண்கள் மத்தியில் தாங்களும் சினிமாவில் வரும் நடிகன் நடிகை போன்று நடை, உடை, பாவனை, சிகை அலங்காரம், ஆபரணம், குணப்பண்பு என நடிகர்களாகவே தம்மை மறந்து தமது பண்பாட்டை மறந்து பல்வேறு பிரச்சினைகளுக்கு மத்தியில் உலா வருபவர்களை எம் கண்கூடாகப்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பார்க்கின்றோம். அது மட்டுமா? இவ்வாறு நடக்க பெற்றோர் தடை விதித்தால் பெற்றோரை மதியாத தன்மை, புத்தி தடுமாறி சினிமாவைப் போன்றே இளம் பிஞ்சு மனதில் காதல் நஞ்சை அருந்தி பொலிஸ் நிலையத்தில் நிற்கும் இளம் தலைமுறையினருடன் சேர்ந்து அவர்களைப் பெற்ற பாவத்திற்காக காவல்துறையில் காத்துக் கிடக்கும் பெற்றோர்களினது நிலை என பல பிரச்சினைகளை இங்கு சுட்டிக்காட்டலாம்.

அதேவேளை பெற்றோர் என்ற உயர் ஸ்தானத்தில் உள்ள பெற்றோர்கள் சினிமாவைப் பார்த்து பெற்றோர்கள்-பிள்ளைகள் என்ற புனித உறவினையும் பாதிப்பதோடு குடும்ப பண்பாட்டை சீர்குலைக்கவும் செய்கின்ற நிகழ்வு இடம்பெறுவதும் குறிப்பிடத்தக்கது. மேலும் சினிமாக்களிலும தொடர் நாடகங்களிலும் ஆபாசங்களும் அருவருக்கத்தக்க காட்சிகளும் வன்முறையினைத் தூண்டி வாலிபர்களின் வாழ்க்கையினைக் குட்டிச்சுவராக்குகின்றது. அத்துடன் சிறுவர்கள் உட்பட சிறைச்சாலையில் தங்களின் இளமைப்பருவங்களைக் கழிக்கும் அவல நிலைக்குள்ளாகும் அதேவேளை இன்றைய இளம்தலைமுறையினை பண்பாட்டு ரீதியாகவும் மனோவியல் ரீதியாகவும் பாரிய பாதிப்பை எதிர்நோக்கியுள்ளனர் என்பது மறுக்க முடியாத உண்மையாகும்.

மேலும் முக்கியமாக இன்று குடும்பத்தோடு பிரயாணம் செய்வதற்குக் கூட முடியாத அளவிற்கு பேருந்துகளில் ஆபாச சினிமாக்கள் திரையிட்டுக்காட்டப்படுகின்ற நிலை உருவாகியுள்ளது. இங்கு காட்சிகளில், கதைகளில், வசனத்தில் லயித்துப் போகின்ற போது சாரதி நிலை தடுமாறுமிடத்து அங்கு ஏற்படும் மரணத்திற்கு/விபத்துக்கு எமனாக சினிமா அமைகின்றது. மேலும் இங்கு கலாசார சீர்கேடு என்பது அதிகளவில் இடம்பெற வாய்ப்பீட்டிக் கொடுக்கிறது. அதிகளவில் பெண்கள் போக்குவரத்து பிரச்சினைகளால் ஆண்களினால் சினிமா இல்லாத போதே பஸ்ஸில் எதிர்நோக்கும் பிரச்சினைகளை விட இன்று சினிமா காட்டப்படும் பஸ்ஸில் பயணம் செய்யும் போது பெண்களின் கதி என்ன? இது பற்றி சற்று சிந்திக்க நாம் அனைவரும் கடமைப்பட்டுள்ளோம். இவ்வாறு சினிமாவால் பெண்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளை அடுக்கிக் கொண்டே போகலாம்.

மேலும் இன்றைய சமுதாயத்தில் விருந்தினரைக்கூட சரியாக கவனியாத பண்பாட்டுச் சீர்குலைவு சினிமாவினால் ஏற்படுகிறது. அதாவது வீடுகளுக்கு வரும் விருந்தினர்களை மறந்து அவர்களுக்கு விருந்துபசாரம் செய்யாமல் சினிமாவுக்கு முக்கியத்துவம் கொடுத்து வந்த விருந்தினரை அவமதிக்கும் செயலும் இடம்பெறுகின்றது. அத்துடன் சில சினிமாக்களில் காட்டப்படும் சமயம் தொடர்பான/தெய்வங்கள் தொடர்பான கேலிகள், கிண்டல்கள் அதுபற்றிய பல விடயங்கள் குறிப்பிட்ட சமயப்பண்பாட்டை சீர்குலைப்பதுடன் குறித்த சமயம் சமுதாயத்தில் கட்டிக்காத்து வருகின்ற சமய விழுமியங்கள், பண்பாடுகள் போன்றவற்றையும் அழித்து விடுகின்றது.

தினம் தினம் புதுமைகள் நிகழும் உலகத்தில் விஞ்ஞானக் கண்டுபிடிப்புக்கள் மக்களுக்கு ஆச்சரியத்தையும் அற்புதத்தையும் பொழுதுபோக்குத் தன்மையும் விளைவித்தாலும் கூட சமுதாயம் உள்ளத்தால் உண்மையான ஆனந்தத்தை அடையும் வாழ்க்கைதான் சிறந்த வாழ்க்கைப்பண்பு. இதனோடு பண்பாடும் அமைவது சிறப்பானது. வாழ்க்கை வசதிகளையும் தொழில்நுட்பங்களையும் எவ்வளவுக்குத்தான் வளர்த்துக்கொண்டாலும் உலகத்தோடு ஒட்டி ஒழுகும் பண்பாடு மாறாமல் வாழ வேண்டும். இதுவே சிறந்த வாழ்க்கையின் அடையாளம்.

எனவே இது போன்ற சமுதாயப் பண்பாட்டை வீழ்ச்சிப் பாதைக்கு இட்டுச் செல்கின்ற இன்னும் அதிகமான விடயங்கள் சினிமாவில் மலிந்து காணப்படினும் ஆங்காங்கு ஓரிரு நற்கருத்துக்களும் புலப்பட்டு நிற்பதையும் மறுத்தலாகாது. அவற்றை தெரிந்து தெளிந்து வாழ்க்கைக்கு ஏற்ற பண்பை தேர்ந்து ஏனையவற்றை தவிர்த்து சமுதாயத்தையும் பண்பாட்டையும் சீரழிக்காத வகையில் சினிமாக் கலையை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வளர்த்து வருவது சினிமாத் துறையினர் உட்பட அதனை இன்றளவும் வளர்த்துக் கொண்டுவரும் நம் சமுதாயத்தினதும் கடமையாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிரேக்க கால பிரதான ஒழுக்கவியல் அம்சங்கள் பிற்பட்ட கால இமானுவேல் காண்டின் ஒழுக்கவியல் சிந்தனைக்கு ஏற்படுத்திய தாக்கம்.

*எம். ஜே. எம். ஜெப்ரான்.*
*விடுகை வருடம்,*
*உளவியல் மற்றும் மெய்யியல் விசேட துறை,*
*கலைப்பீடம்.*

மனித வாழ்க்கையின் இயல்புகளைப் பற்றியும் பிரச்சினைகளைப் பற்றியும் மனிதன் ஆழ்ந்து சிந்திக்க தொடங்கிய போதே ஒழுக்கவியல் சார்ந்த பிரச்சினைகளும் தோன்றின எனலாம். நான் எவ்வாறு வாழ்க்கை நடத்த வேண்டும்? நன்மையை அனுசரித்து செயற்பட வேண்டுமா? அல்லது எக்காரணத்துக்காக நன்மையை அனுசரித்து செயற்பட வேண்டும் என்ற கேள்வி மனதில் எழுந்தபோதே ஒழுக்கவியல் பிரச்சினைகளும் வளர்ச்சி பெற்றன. ஒழுக்கவியல் மெய்யியலோடு இணைந்த துறையாகவே காணப்படுகின்றது. பொதுவாக ஒழுக்கவியல் ஆரம்ப கிரேக்க காலத்தில் தோற்றம் பெற்றாலும் ஒழுக்கவியல் துறைக்கு ஆரம்ப கால மெய்யியலாளர்களே அதிகமான பங்களிப்பு வழங்கியவர்களாக காணப்படுகின்றனர். எனினும் அக்காலத்தில் உரிய முறையில் பல்வேறு வகையில் பங்களிப்பு வழங்கப்பட்டதாலேயே இன்று வரைக்கும் ஒழுக்கவியல் சிறந்து விளங்க காரணமாக அமையலாம் என்றும் கூற முடியும். ஒழுக்கவியல் எவ்வாறு கிரேக்க காலத்தில் சிறப்புற்று காணப்பட்டதோ அதே போன்றே இன்றைய கால கட்டத்திலும் சிறப்புற்று காணப்படுகின்றது. குறிப்பாக இன்றைய கால கட்டத்தில் பல்வேறு ஒழுக்கவியல் சார்ந்த கொள்கைகளோடும் சிறந்து விளங்குகின்றன என்று கூறுவதில் எவ்வித ஐயமும் இல்லை.

ஒழுக்கவியலை ஆங்கிலத்தில் 'Ethics' என அழைப்பர். இந்த (Ethics) என்ற சொல் கிரேக்க மொழியின் 'Ethos' அடிச்சொல்லிலிருந்து தோன்றியதாகும். இந்த சொல் வழக்கம் மற்றும் சம்பிரதாயம் எனும் பொருளை குறித்து நிற்கிறது. ஆங்கிலத்தில் 'Moral' எனும் பதமும் ஒழுக்கத்தையே குறித்து நிற்கும். 'Moral' எனும் இவ் ஆங்கில பதமானது 'Mores' எனும் இலத்தீன் சொல்லின் அடியிலிருந்து தோன்றியதாகும். முன்னர் குறிப்பிட்டது போலவே இப்பதமும் வழக்கம் அல்லது சம்பிரதாயம் எனும் பொருளையே குறித்து நிற்பதை காணலாம். எனவே நாம் பொதுவில் ஒழுக்கம் எனக் குறிப்பிட்டு நிற்பது இனத்துக்கு இனம் வேறுபட்டதாகவோ மதத்துக்கு மதம் வேறுபட்டதாகவோ அமையத்தக்கதென்பது தெளிவாகின்றது. எமக்கு ஒழுக்கம் என எடுத்தாளப்படுகின்ற செயல்களானது வேறொரு இனத்தினருக்கோ அல்லது மொழியினருக்கோ அல்லது நாட்டினருக்கோ அல்லது சமயத்தினருக்கோ அதேயளவு தாக்கத்தினையோ கொண்டல்லாது அல்லது ஒழுக்கச் செயலாக அமையாது இருத்தல் சாத்தியமாகும். மேற்குலகில் ஒழுக்கவியல் வளர்ந்த வரலாற்றை பொதுவாக 3 கால கட்டங்களாக பிரித்து நோக்குவர். அவற்றுள் ஒவ்வொரு கால கட்டங்களும் தனித்தனியான பண்புகளுடன் விளங்குகின்றன.

- கிரேக்க கால ஒழுக்கவியல் -(கி.மு 500 முதல் கி.பி 500 வரை)
- இடைக்கால ஒழுக்கவியல் -(கி.பி 500 முதல் கி.பி 1500 வரை)
- தற்கால ஒழுக்கவியல் -(கி.பி 1500 தொடக்கம் இன்று வரை)

இவற்றுள் ஒழுக்கவியல் தொடங்கிய காலத்தை கிரேக்க காலம் எனக் கூற முடியும். இந்த ஒவ்வொரு கால அளவிலும் குறிப்பிடத்தக்க பண்புகளுடன் கூடிய ஒழுக்க அமைப்புக்கள் விளங்கின. ஆரம்பகாலமான கிரேக்க காலத்தில் நகர அரசுகள் (City states) தான் ஒழுக்க வாழ்வின் பின்னணியாக


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விளங்கியது. குறிப்பாக கிரேக்க நாட்டின் ஏதென்ஸ் மற்றும் ஸ்பாட்டா போன்ற நகரங்கள் முக்கியமாக செல்வாக்கு பெற்று விளங்கியது எனலாம். கிரேக்க நகரில் 135 000 ற்கும் அதிகமான மக்கட் தொகை வாழ்ந்ததோடு இவர்கள் ஒரே இனமாகவும் இருந்தார்கள். தன்னை நாட்டின் குடிமகனாகக் கொண்டு அதற்கேற்ற கடமைகளைச் செய்பவனே நல்லவன் என்றும் அப்போது கருதி வந்தார்கள். ஆனால் இடைக்காலத்தில் கிறிஸ்தவ திருச்சபையின் ஆதிக்கம் மிகுந்து விளங்கியது. எனவே அப்போது மத சம்பந்தமான வாழ்வையே அல்லது தூய வாழ்வையே அவர்கள் நல்வாழ்வென கொண்டார்கள்.

ஆனால் தற்காலத்தில் ஒழுக்க வாழ்வைப் பொருத்தமட்டில் மதமும் நாடும் முக்கியம் என்பதற்கில்லை. இன்றைய ஒழுக்கவாழ்வு சுதந்திரமாக விளங்கும் மக்களையே குறிக்கும். உரிமைகளையும் கடமைகளையும் பொருத்தமட்டில் மற்றவர்களோடுள்ள தொடர்பையும் அது முக்கியமாக கருதுகின்றது. மேலே குறிப்பிட்ட 3 காலங்களையும் சுருக்கமாக நகர-அரசுக்காலம், மத சம்பிரதாயக்காலம் மற்றும் சுதந்திரம் பெற்ற மக்களின் காலம் என்று வகைப்படுத்திக் கொண்டாலும் அவற்றிட்கிடையே தென்படும் வேறுபாட்டை பொருட்படுத்தக் கூடாது.

தற்கால அறவழிச் சிந்தனைகள் பெரும்பாலும் இருவகைச் செல்வாக்கு காரணமாக உருவானவை. அவற்றுள் கிரேக்க நகர-அரசில் விளங்கிய சுதந்திரமான சிந்தனைப் போக்கு மற்றும் இடைக்காலத்தில் யூத மற்றும் கிறிஸ்தவர்கள் ஆகியோரின் மரபுநெறி காரணமாக கிறிஸ்தவ சம்பிரதாயம் அல்லது போதனையால் ஏற்பட்ட விளைவு எனலாம். நல்லொழுக்கம் என்பது சூழ்நிலையைப் பொருத்தது என்ற சார்புக் கொள்கையாளரின் கருத்தினை நோக்கினால் சூழலுக்கும் மனித ஒழுக்க வாழ்வுக்கும் இடையில் நெருங்கிய தொடர்பு காணப்படுகின்றது. இந்த வகையில் கிரேக்க காலத்தில் நிலவிய சூழ்நிலைகள் அக்கால மக்களின் ஒழுக்கச் செயற்பாடுகளிலும் அதிக செல்வாக்கு செலுத்தியதோடு ஒழுக்கவியலுக்கான கொள்கைகளின் தோற்றத்திற்கும் பங்களிப்புச் செய்தது. கிரேக்க கால அடிப்படை ஒழுக்கவாதிகளாக சோக்ரடீஸ், பிளேட்டோ மற்றும் அரிஸ்டோட்டில் போன்றோர் காணப்படுகின்றனர். கிரேக்கர்கள் 4 வகையான அடிப்படை எண்ணக்கருக்களான நீதி, அனுபவ அறிவு, மன உறுதி மற்றும் துணிவு, தன்னடக்கம் போன்றவற்றிற்கு முதன்மை அளித்தனர்.

ஒழுக்க ஆராய்ச்சிகள் ஒரே வேளையில் பல நாடுகளில் நடந்ததாகக் கொண்டாலும் கிறிஸ்து பிறப்பதற்கு ஐந்து நூற்றாண்டுகளுக்கு முன்னர் தான் பழங்கால கிரேக்க நாட்டில் ஐரோப்பிய ஒழுக்கவியல் தொடங்கியது. வாதம் செய்வதில் திறமை மிக்கவர்களாக விளங்கிய ஸோபிஸ்ட்டுக்கள் நாடெங்கும் திரிந்து கிரேக்க இளைஞர்களை தங்கள் அரசியலில் ஈடுபடுத்த வழிவகுத்தார்கள்.

இப்படி வாதம் புரிபவர்கள் வாழ்ந்த காலமும் நம் காலத்தைப் போன்றதே. அக்காலத்தில் காணப்பட்ட அதிகமான அமைப்புக்கள் பயனற்ற வகையில் இருந்தன. இதனாலேயே அப்போது காணப்பட்ட பல்வேறு அமைப்புக்கள் பற்றியெல்லாம் ஸோபிஸ்ட்டுக்கள் வாதம் புரிந்தார்கள். இவர்கள் வாதிடுவததற்கு இது தவிர்ந்த வேறு ஒரு காரணமும் உண்டு. மக்களின் சிந்தனையில் மகத்தானதொரு சுதந்திரம் இக்காலத்தில் விளங்கியது. இது போன்ற சிந்தனைச் சுதந்திரம் மனித இனத்தின் வரலாற்றில் சில சில காலங்களிலே தான் காணலாம்.

இது ஏன் என்று தான் தக்கபடி காரணம் காட்ட முடியவில்லை. இயற்கை வழி வாழும் நல்வாழ்வு எது? இது அல்லாமல் வேறான சமுதாய பழக்க வழக்கங்களை அடிப்படையாகக் கொண்ட வாழ்வு எது? என ஒழுக்கத்தைச் சார்ந்த பல வகைக்கேள்விகளை முதன் முதலில் கேட்டவர்கள் தான் இந்த ஸோபிஸ்ட்டுக்கள். ஸோபிஸ்ட்டுக்களில் பலர் கடுமையான வாதக்கருத்துக்களை கொண்டனர். அறவொழுக்கமே மனிதனுடைய சொந்த வசதியைப் பொருத்து அமைவது என்றும் நமக்கு அல்லது


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெரும்பான்மையான மக்களுக்கு அவர்களின் விருப்பத்திற்கு உகந்தவற்றை நன்மை தருவன என்கிறோம் என்றும் ஸோபிஸ்ட்டுக்கள் கருதினார்கள்.

இவர்களின் பிரதான கொள்கையாக "*மனிதனே உலகின் எல்லாப் பொருளையும் அளக்கும்கருவி*" (Man is the measure of all things) என்ற வாதம் காணப்படுகின்து. மனிதன் தானாகவே எது நல்லது? எது கெட்டது என்று வகுத்துக்கொள்கிறான். இவற்றை அறிய வேறு எவ்வழிகளும் இல்லை என்று இதிலிருந்து உணர்ந்து கொள்ளலாம். இவ்வாறான ஸோபிஸ்டுக்களின் ஒழுக்கவியல் தொடர்பான கருத்துக்கள் பிற்பட்ட காலங்களில் தோற்றம்பெற்ற அறிஞர்களால் விமர்சனத்திற்குற்படுத்தப்பட்டன.

சோக்ரடீஸ் மேலே நாட்டுத் தத்துவத்தை தோற்றுவித்தவர் என்று பொதுவாகக் கருதப்படுகின்றார். இவர் ஸோபிஸ்டுக்களைப் போலவே மனிதனின் நடத்தையைப் பற்றி பல்வேறுபட்ட வினாக்களை எழுப்பினார் என்றாலும் இத்தகைய வினாக்களுக்குத் தேவையான விடையளிப்பதற்கேற்ற ஆற்றல் தமக்கு உண்டு என்ற நம்பிக்கை அவ்வளவாக அவருக்கு இல்லை. நன்மையின் தன்மையைப் பற்றி நன்கு அறிவதைச் சிறந்த நல்வாழ்வின் இன்றியமையாத பண்பாகக் கொண்டது. உண்மையில் நம் துரதிஷ்டமென்றே கொள்ள வேண்டும். இக் கருத்தைத் தான் '*நற்பண்பே நற்பேரறிவு*' (Virtue is knowledge) என்ற அறமொழியாக சோக்ரடீஸ் எடுத்துக் கூறினார். ஒழுக்கம் என்பது அறிவு, அறிவு என்பது ஒழுக்கம் என்பதை "*நற்பண்பே நற்பேரறிவு*" (Virtue is knowledge) என்ற வாக்கியத்தின் மூலம் நிரூபித்தார். சோக்ரடீஸின் இக்கூற்று கிரேக்க கால மகா வாக்கியமாக (Moto) போற்றப்படுகின்றது. நீதி நீதியின் தன்மை உட்பட மெய்யியல் அறிவுடையவர்களே அறிவில் சிறந்தவர்கள் என்றும் ஒரு நாட்டை ஆட்சி செய்வதற்குரிய தகுதி ஒரு மெய்யியலாளருக்கே இருக்கின்றது எனக் கருத்துப்பட நீதி செலுத்த தகுதியானவர்கள் பற்றி இக் காலத்தில் பேசப்பட்டது.

சோக்ரடீஸின் காலத்தின் பின் அவருடைய சீடர்களான பிளேட்டோவும், அரிஸ்டோட்டிலும் ஒழுக்கத்துக்கு இன்றியமையாதது. அறம் பற்றிய அறிவு என்ற முறைமையையே கடைப்பிடித்து வந்தார்கள். பிளேட்டோவின் ஒழுக்கக் கருத்துக்கள் கிரேக்க காலத்தின் முதன்மை ஒழுக்கக் கருத்துக்களாக காணப்பட்டது. அறிவை ஒழுக்கக்கருத்துக்களாக காணும் பிளேட்டோ சோக்ரடீயத்தை முதன்மையாகப் பின்பற்றினார். புலன்கள் வழியாக அறியும் உலகம் உண்மையான உலகம் அல்லவென்பதும் அதற்கப்பால் விளங்கும் உலகே உண்மையான உலகென்பதும் இவ்வறிவினாலே தான் தெரியவரும். மேலும் இந்த உண்மையான உலகத்தை நிறைவு பெற்ற எண்ணங்களைக் கொண்ட உலகமெனக் கூறலாம். இவ்வுண்மையான உலகில் இருக்கும் நிறைவு பெற்ற எண்ணங்கள் காட்சிப் பொருளாய் விளங்கும் உலகத்தில் அரைகுறையான நிலையில் தென்படுகின்றன. இப்பிரபஞ்சத்தின் அடிப்படையே நன்மை தான் எனவே இந்த நன்மையை இயல்பான ஒன்றாகக் கொள்ள வேண்டும் என்பதைத் தான் பிளேட்டோ வலியுறுத்தினார். பிளேட்டோவின் அரசியல் நாடு பற்றி குறிப்பிடும் போது அங்கு நீதியும் ஒழுக்கமும் முக்கியம் என்கிறார். ஒவ்வொருவரும் தத்தமது கடமைகளைச் செய்ய வேண்டும் அவ்வாறு செய்வதே நீதியும் ஒழுக்கமும் ஆகும். இவ்விதியின் படி நடந்தால் ஆட்சியாளர்களிடம் அனுபவம் பெருகும், படைவீரர்களுக்கு துணிவு பெருகும். இதன்படி அவரது நாட்டில் மூன்று வகையான நபர்கள் முதன்மைபடுத்துகிறார். அவர்களுள் 1-ஆள்வோர். 2-படைவீரர். 3-குடிமக்கள். இவர்கள் ஒவ்வொருவரும் தத்தமது கடமைகளைச் செய்ய வேண்டுமே தவிர மற்றவர்களின் கடமையில் தலையிடக்கூடாது என்றும் குறிப்பிடுகின்றார்.

சோக்ரடீசும், பிளேட்டோவும் கொண்ட ஒழுக்க வழியை அரிஸ்டோட்டில் பொதுவாக ஒப்புக் கொண்டாலும் அவருடைய தத்துவ நிலை மற்றவர்களை விடவும் குறிப்பிடத்தக்க வகையில்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாறுபடுவதைக் காண முடியும். இவர் தம் இயல்புக்கேற்ப உருவற்ற கருத்துக்களை (Abstract ideas) அடிப்படையாகக் கொள்வதை விட ஒழுக்க வாழ்வில் உணரக்கூடிய உண்மைகளிலேயே பெரிதும் ஈடுபாடு கொண்டிருந்தார். இதனாலேயே தன் நிறைவுபெற்ற சமுதாயத்தைப் பிளேட்டோ தன் குடியரசில் (Republic) விளக்குவது போல் இலட்சியமாக அமையக்கூடிய கற்பனை சமுதாயத்தை அரிஸ்டோட்டில் தனது அறநூலில் குறிப்பிடவில்லையாயிருக்கும். தாம் வாழ்ந்த காலத்தில் அமைந்த கிரேக்க நகர-அரசுகளில் விளங்கிய ஒழுக்க வாழ்வைத்தாம் தம் ஆராய்ச்சிக்குரிய மூலப் பொருளாக எடுத்துக் கொண்டார் அரிஸ்டோட்டில்.

சோக்ரடீஸ் பிளேட்டோ மற்றும் அரிஸ்டோட்டில் போன்றவர்கள் எந்தக் குறிப்பிட்ட ஒழுக்க நிலைக் கொள்கைகளையும் தம்முடையது என்று கொள்ளவில்லை. இவர்களது காலத்திலேயே வேறு இரு வகைக் கொள்கைகளும் நிலவி வந்தன. சிரினிக்ஸ் (Cyrenaics) எனும் சிந்தனையாளர்கள் நமக்கு இன்பத்தைக் கொடுக்கும் செயலே நற்செயல் ஆகும் என்பார்கள். இக்கருத்தினை தன்னகத்துக் கொண்டதும் மகிழ்வுக் கொள்கை (Hedonism) இன்றுவரையிலும் நின்று நிலவுகின்றது.

ஒழுக்கவியலை சார்பற்ற ஒழுக்கவியல் (Absolute ethics) என்றும் சார்புள்ள ஒழுக்கவியல் (Relative ethics) என்றும் வேறுபடுத்தலாம். இவற்றுள் சார்பற்ற ஒழுக்கவியல் என்பது இப்பிரபஞ்சத்துக்கு ஏற்றது ஒரே ஒழுக்கவியல் தான் என்பதும்இ இது அழிவற்றது என்றும், எல்லா வயதுள்ள எல்லா மனிதர்களுக்கும் இது பொருந்தும் என்பதும், மேலும் இது மாறி வரும் சூழ்நிலைக்கும் மாறி வரும் கருத்துக்களுக்கும் அப்பாற்பட்டு தனித்து விளங்கும் தன்மையை உடையது என்பது இவ்வகையில் அடங்கும். ஆனால் ஒழுக்கநெறி முறைகள் சூழ்நிலைக்கேற்ற வகையில் மாறும் தன்மை வாய்ந்தன என்பதைத் தான் சார்புள்ள ஒழுக்கவியல் எடுத்துக்காட்டுகிறது.

ஒழுக்கவியலை புறநிலை ஒழுக்கவியல் (Objective ethics) என்றும், அகநிலை ஒழுக்கவியல் (Subjective ethics) என்றும் பிரிக்கலாம். எனினும் இவை ஏற்கனவே கூறியது போல சார்பான மற்றும் சார்பற்ற ஒழுக்கவியல் எனும் பாகுபாட்டுடன் நெருங்கிய தொடர்பு கொண்டதாக காணப்படுகின்றது. இவற்றில் அகநிலை ஒழுக்கவியல் சார்புள்ள ஒழுக்கவியலின் பால்படும். ஆனால் சார்பற்ற ஒழுக்க நெறி முறைகளைக் கொண்ட அறவியல் புறநிலை ஒழுக்கவியலாகத்தான் காணப்படும்.

கிரேக்க காலத்தில் வகுக்கப்பட்ட ஒழுக்கவியல் கோட்பாடுகளில் பல்வேறுபட்ட குறைகள் காணப்பட்டதாக உணரப்பட்டது. அவற்றிலிருந்து அந்தக் குறைகளை நிவர்த்தி செய்யும் பொருட்டு தற்காலத்தில் ஒழுக்கவியல் தொடர்பாக பல்வேறு வகையான கொள்கைகளும் கோட்பாடுகளும் மெய்யியல் அறிஞர்களால் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

அவற்றில் சார்புநிலைக் கொள்கை, இயற்கை நிலைக் கொள்கை. அறநுகர்வுக் கொள்கை, அறநிலைக் கொள்கை, மகிழ்வுக் கொள்கை, தற்கால பரிணாமக் கொள்கை,அறவழி மகிழ்வுக் கொள்கை போன்ற கருத்துக் கொள்கைகளும் மேலும் மெய்யியல் அறிஞர்கள் தானே வகுத்துக்கொண்ட பல்வேறுபட்ட கொள்கைகளும் கோட்பாடுளும் காணப்படுகின்றன. அவற்றில் குறிப்பிடத்தக்க கொள்கைகளுள் பட்லரின் கொள்கை, ஸ்டீவர்ட் மில்லின் கொள்கை சிட்ஜ்விக்கின் கொள்கை, ஸ்பென்சரின் கொள்கை, கிரீனின் கொள்கை, இம்மானுவேல் காண்டின் கொள்கை போன்ற கொள்கைகள் காணப்படுகின்றது. எனினும் இவர்களால் உருவாக்கப்பட்டுள்ள இக்கோட்பாடுகள் யாவும் ஏதோ ஒரு வகையில் மேற்கூறப்பட்ட கருத்துக் கொள்கைகளோடு தொடர்புடையதாகவே காணப்படுகின்றது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறவியலுக்கு உள்ளுணர்வு எவ்வகையில் உதவுகின்றது? பெரும்பான்மையாக தோன்றும் உள்ளுணர்வுகள் பொதுவாக அற அனுபவம் காரணமாகத் தாமாகவே ஏற்பட்டவை. அறவழியில் மனிதனும் தானாகவே நல்லதை அறிகிறான். அந்தந்த சூழ்நிலைக்கேற்ற கருத்தினை ஆழ்ந்து சிந்திக்காமலே கொள்கிறான். ஆனால் தனிப்பட்ட சில உணர்வுகள் எமது அறிவிற்கும் அனுபவத்திற்கும் அப்பாற்பட்டதாக காணப்படுகின்றன. குறிப்பிட்ட சில செயல்களைப் பொறுத்தமட்டில் அந்தந்த சூழ்நிலைக்கு ஏற்றவகையில் அறப்பொருத்தம் (Moral fittingness) அமைவதைக் காணலாம். இந்த அறப் பொருத்தத்தை எவ்வித அறிவினாலும் பகுத்துணர முடியாது. அல்லது குறிப்பிட்ட சிலவகை செயல்களை எடுத்துக்கொண்டால் அவற்றில் சிலவிதமான செயல்கள் இயற்கை விதிகளுடன் (laws of nature) பொருந்துவனவாகவும் சிலவிதச் செயல்கள் பொருத்தமற்றதாகவும் காணப்படுகின்றது. இதையும் உள்ளுணர்வினாலே தான் அறிய முடிகின்றது. அல்லது 'இப்படிச் செய்யவேண்டும்' 'இதைச் செய்ய கடமைப்பட்டிருக்கிறோம்' என்பன போன்ற ஒழுக்க கருத்துக்களை வெறும் புறநிலைக்காட்சியால் அறிய முடிகின்றது. 'இப்படித்தான் செய்ய வேண்டும்' போன்ற கூற்றுக்களை உள்ளுணர்வைக் கொண்டு மட்டுமே அறியமுடியும். அனுபவ மூலமான இந்த உணர்வின் தன்மையை அறிவதுடன் அப்படி அறிந்ததைத் தொடர்ந்து நம் அனுபவ நிலைகளுக்கு பயன்படுத்தவும் வேண்டும். இத்தகைய உண்மை மற்றும் உள்ளுணர்வால் அறியும் ஒழுக்கக் கருத்துக்களுக்கும் எண்ணங்களுக்கும் பொருந்தும் எனக் கொள்ளலாம். இதனையே அறநுகர்வுக் கொள்ளை குறிப்பிடுகின்றது.

ஒழுக்கவியல் தொடர்பாக மகிழ்வுக் கொள்கை பின்வருமாறு கூறுகின்றது. கிரேக்க சிந்தனையாளரான அரிஸ்டோட்டில் ஒழுக்கவியல் தொடர்பான தனது கோட்பாட்டில் 'eudemonia' என்ற சொல்லைப் பயன்படுத்தியதை அறிவோம். ஆங்கிலத்தில் இச் சொல்லுக்கு மகிழ்வு அல்லது ஆனந்தம் என்று பொருள் கொள்ளலாம். இந்த மகிழ்வு தான் ஒழுக்க வாழ்வின் இறுதி நோக்கம் என அரிஸ்டோட்டில் குறிப்பிடுகிறார்.

ஒழுக்கவியற் கொள்கைகளை பேராசிரியர் பிராட் நோக்கக் கொள்கை (Teleological theory) மற்றும் நோக்கமில்லாக் கொள்கை (Deontological theory) என்று இரு வகையாப் பிரித்து நோக்குகின்றார். நோக்கமில்லாத கொள்கை ஒன்றினால் ஒரு செயலைப் பற்றி நல்லது என்றும் தீயதென்றும் கூறுவது அச்செயலைக் பொருத்ததே. ஆனால் ஒரு செயல் எங்கு முடிவடைகிறது என்பதும் அதன் பயன் எங்கு ஆரம்பிக்கின்றது என்பதும் கூற இயலாததாகும். நோக்கமில்லாக் கொள்கையின் சாதாரண வகைதான் உள்ளுணர்வுக் கொள்கை (Intuitionism). இதன் படி நம் உள்ளுணர்வினால் தான் செய்கைகளை நல்லதென்றும் தீயதென்றும் கொள்கின்றோம். இதனால் எல்லா வகை உணர்வுக் கொள்கைகளையும் நோக்கமில்லாக் கொள்கைகளாகக் கொள்வதில்லை. சில கொள்கைகளின் படி செயல்களின் பயன்களைப் பற்றியும் நம் உள்ளுணர்வினால் அறிய முடிகிறது. 'பலருக்கும் அதிகமாக இன்பம் தரும் செயல்களே நற்செயல்கள்' என்பதை உள்ளுணர்வினால் அறிகிறோம். இத்தகைய கொள்கைகளை நோக்கக் கொள்கைகளாக சார்ந்தவை எனக் கொள்ளலாம். உள்ளுணர்வைக் கருத்தில் கொள்ளும் போதே அது எவ்வகையில் சார்பான ஒழுக்க மற்றும் சார்பற்ற ஒழுக்க நெறி முறைகளையும் தரக்கூடியது என்பது உண்மையிலே ஒழுக்கவியலில் ஆராய வேண்டியதொன்றாகும்.

ஒழுக்கவியல் கோட்பாடுகளில் இமானுவேல் காண்ட் (Immanuel Kant) தண்டனை பற்றி அதிகமாக குறிப்பிடுகிறார். காண்டின் தண்டனை பற்றிய கருத்துக்கள் பழிக்குப் பழியை வலியுறுத்துபவை. குற்றம் செய்தவனுக்கு அவன் செய்த குற்றத்தின் அளவு அல்லது சமமாக தண்டனை வழங்கப்பட வேண்டும் கொலை செய்தவன் சாக வேண்டும். என்று அவரது கூற்றைக் கொண்டு உதாரணம் தரலாம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவ்வாறு குற்றத்திற்கு சம அளவு தண்டனையை வழங்குவது கடமை என்றும் காண்ட் கூறுகிறார். காண்டின் தண்டனைக் கருத்து தண்டனையில் இருந்தன்றி சட்டம் மற்றும் சட்டத்துறை நீதி என்பனவற்றுடனும் மிக முக்கியமான சுதந்திரத்தோடும் உள்ள அடிப்படைக் கருத்தாக்கங்களிலிருந்து தோற்றம் பெறுகின்றன.

ஒரு மனிதனின் சுதந்திரமும், கௌரவமும் பாதுகாக்கப்பட தண்டனை என்ற பலாத்காரம் பயன்படுத்தப்பட வேண்டியது தான் என காண்ட் உறுதியாகக் கூறுகிறார். காண்டின் நோக்கில் சட்டம், நீதி மற்றும் உரிமைகள் என்பன பலாத்காரத்தைப் பயன்படுத்த அதிகாரத்தன்மை கொண்டவைகளாகவுள்ளன. ஒவ்வொருவரும் மற்றவர்களின் உரிமைகளுக்கு மதிப்பளிக்க வேண்டும். உரிமைகள் என்பது தனிநபர்களின் சட்டப்பூர்வமான சுதந்திரங்களாகும். மற்றவர்களுக்கும் தான் பெற்றிருப்பது போன்ற உரிமை மற்றும் சுதந்திரம் உள்ளது என்று ஒருவன் எண்ணுவதில் தான் இந்தப் பிரதான இருப்பு தங்கியுள்ளது. இவ்வாறு ஒவ்வொருவரும் ஏற்று நடந்து கொண்டால் பிரச்சினைகள் ஏற்பட சாத்தியமே இல்லை. சமுதாய வாழ்வின் சாத்தியமும் வெற்றியும் இந்த ஏற்புடைமையிலும் அங்கீகரிப்பிலும் தான் தங்கியுள்ளது. ஒழுங்கு மீறல்கள் கட்டுப்பாட்டிற்கு கொண்டுவரப்பட வேண்டும். இதைப் பலவந்தம் மூலமோ அல்லது சட்டத்தினாலோ ஒருங்கமைக்கலாம் எனக் காண்ட் கருதுகின்றார்.

காண்டின் தண்டனை பற்றிய இந்த உறுதியான நிலை பயன்வழிவாதிகளின் கொள்கைகளில் இருந்து அவரது நிலைப்பாட்டைப் பிரித்துக் காட்டிய போதும் சட்டத்தில் இயல்பாகவே தடுத்தல் நோக்கம் உள்ளதென்பதை அவர் ஏற்றுக் கொள்கிறார். பலாத்காரம் பிரயோகிக்கப்படுவதாலும் உரிமை மீறல்கள் நடைபெறாது பாதுகாக்கும் அல்லது தடுக்கும் தன்மை காணப்படுவதால் இதற்கு தடுத்தற் கோட்பாட்டுடன் உள்ள தொடர்பை ஏற்றுக் கொள்ள முடியும். எனது சுதந்திரம் உனக்காக கட்டுப்படுத்தப்பட்டுள்ளது. அதனால் கடப்பாடும் தங்கியிருத்தலும் கடன்பட்டிருத்தலும் பரஸ்பரம் இருவருக்குமுரியதாகும். அதாவது காண்டின் நோக்கில் ஒவ்வொரு நபரும் சட்டத்திற்கு அடிபணிய கடப்பாடு உடையவர்களாவர். உரிமைகள் என்றால் கூட அதுவும் இவ்வாறு தான் பலவந்தத்தைப் பயன்படுத்தும் அதிகாரத்தை சட்டம்,நீதி மற்றும் உரிமை என்பன தருகின்றன. ஆனால் இதில் ஒரு விஷேட தன்மை உள்ளது இப்பலவந்தத்துக்குரிய அதிகாரம் மற்றும் சுதந்திரம் பாதிக்கப்பட்ட மற்றும் உரிமை பாதிக்கப்பட்ட நபருக்குரியது அல்ல. தனிநபர் தனக்கு ஏற்பட்ட பாதிப்புக்களுக்கு தானே நீதி வழங்க முடியாது என்பது தான் இதன் பொருள். அவ்வாறு ஏற்படுமாயின் அது அராஜகத்திற்கு இட்டுச் செல்லும். உண்மையில் இப்பலவந்த அதிகாரம் சிவில் சமுதாயத்திற்குரியதாகும்.

சிவில் சமதாயத்தில் தான் சட்டப்பூர்வமான நீதி பகிர்வுக்கு இடம் இருக்கின்றது. இல்லாவிட்டால் ஒவ்வொரு நபரும் தனது பாதிப்பிற்கு தானே நீதி வழங்கும் நிலை ஏற்படும். ஆகவே காண்ட் கூறும் பலவந்த அதிகாரம் என்பது உண்மையில் Rule of Law என்பதையே குறிக்கின்றது. மேலும் தண்டனை நீதியானதாக அல்லது நீதியின் நிபந்தனை பூர்த்தியாக்கப்பட்டதாக இருக்க வேண்டும். தண்டனைக்காக தண்டனையல்ல. நீதியின் கோரிக்கையை தண்டனை பெற்றிருக்க வேண்டும் என காண்ட் கூறுவதாக இதனைக் கூற முடியும்.

நீதிமன்றம் ஒருவருக்கு தண்டனையை விதிக்கும் முன்னர் அவர் குற்றவாளியும் குற்றஞ்சாட்டப்பட வேண்டியதும் அவர் தான் என்பதை அவர் அறிந்திருத்தல் வேண்டும். அந்நபர் சட்டத்தை மீறியுள்ளான் என்பது மட்டுமல்ல அவனது குற்றச் செயல்களுக்கு அவனே பொறுப்பாளனாக உள்ளான் என்பதையும் நிரூபிக்கப்பட வேண்டும். அவன் தெரிந்து கொண்டே சட்டத்தை புறக்கணித்துள்ளான் என்பதுதான் அவன் ஒரு குற்றவாளி என்பதற்குரிய முக்கிய நிபந்தனையை பூர்த்தி செய்கின்றது. இவ்வாறு குற்றமிழைத்த ஒருவன் ஒழுக்கரீதியில் தவறு செய்தவனாவான். இதற்கான சட்டவிளைவு என்னவெனில் அத்தண்டனை.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேலும் குற்றங்களில் அளவு ரீதியான தராதரமும் உண்டு. ஒரு செயலுக்கு குற்றம் சாட்டப்படக் கூடிய பொறுப்பினைப் பொறுத்து குற்றத்தின் அளவு மற்றும் விகிதம் என்பன மாற்றமடையலாம். திட்டமிட்டே ஒரு குற்றச்செயலில் ஈடுபடுவதை விட மனவெழுச்சி அழுத்தங்களினால் அக்குற்றத்தைப் புரிவதில் குறைந்தளவு குற்றம் அல்லது குறைந்தளவு தவறு நடந்துள்ளதாகக் கொள்ள வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புனைவு -1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# துப்பாக்கிகள் எப்பொழுதும் நேர்மையானவை!

எம். எம். ஜெயசீலன்,
உதவி விரிவுரையாளர்,
தமிழ்த்துறை,
கலைப்பீடம்.

அறை முழுதும் கவிழ்ந்திருந்த இருள் அவனுக்குச் சற்று ஆறுதல் அளித்தது. பிணம் தின்ற முகத்தின் கோரத்தையும் சிங்கத்தின் மிடுக்கைத் தந்த சீருடை மீதான வெறுப்பையும் தணிப்பதற்கு அவ்விருள் துணைநின்றது. என்றாலும் மனம் முழுதும் நிரம்பி வழியும் கனத்த இருளானது மெல்ல மெல்ல அவனின் இருப்பை அச்சுறுத்தத் தொடங்கியது.

உடம்பினுள் பெருகும் சுமை வெம்மையாக வழிந்தொழுகுகிறது. கலவர உணர்ச்சி சிறுகச் சிறுக வளர்ந்து உடல் முழுதும் வியாபிக்கிறது. வாழ்வு மீதான வெறுப்பின் உச்சம் மரணத்தைக் கௌவிக்கொள்கிறது. துப்பாக்கியை நெற்றிப் பொட்டில் வைத்து அழுத்துகிறான். நா வரண்டு, தொண்டை அடைக்கிறது. இனம்புரியாத பயம் ஒன்று இரத்த நாளங்களுக்குள்ளே புகுந்துக்கொண்டது. கண்களை இறுக மூடிக்கொண்டு மேலும் அழுத்துகிறான். வலி ஒன்றும் உணரவில்லை. மரண வாயிலில் கடந்துவந்த வாழ்க்கைச் சுவடுகளில் ஊர்ந்து நெளிகிறது உள்ளுணர்வு.

யுத்த வெற்றியின் பின் ஊர் திரும்பிய அவனை வரவேற்க ஊரே அணி திரண்டிருந்தது. அவனது தாயும் தந்தையும் பிறவிப் பயனை எய்திவிட்டதைப் போல் மகிழ்ச்சியில் மூழ்கித் திளைத்தனர். அவனும் தான்!..

அப்போது வெடித்த விதவிமான பட்டாசுகள் ஒவ்வொன்றும் ஷெல்களாக உருமாறி தன்னைத் தாக்க வருவது போல உணர்ந்தவன், திடுக்கிட்டு விழித்தான்.

நீண்ட மௌனம்.

கண்களை அகலத் திறந்து இருளை கிழிக்கப் பார்க்கிறான். திடீரென சீருடை ஞாபகத்திற்கு வருகிறது. உடலெங்கும் புழுக்கள் ஊர்வது போன்ற அருவெறுப்பும் அச்சமும் சூழ்ந்துக்கொள்ள, சட்டென அவற்றைக் கழற்றி எறிந்தவன் தட்டுத்தடுமாறி மேசையில் கிடந்த தீப்பெட்டியை எடுத்தான். அருந்திய மதுவின் மீதியை சீருடையில் ஊற்றி தீக்குச்சியை வீசினான். பொங்கி எழுந்த தீச்சுவாளை இருளை எரிக்கத்தொடங்கியது. உடலின் வெம்மை: மரணத்தின் பயம் எல்லாம் மறந்து போனது.

சற்று நேரத்தின் பின் மறுபடியும் இருள் மண்டிக்கொண்டது

பொசுங்கும் இறப்பர் நாற்றம் இருளுடன் கலந்து அறையை ஆக்கிரமிக்கத் தொடங்கியது. ஆனால், அவனால் அதனை உணரமுடியவில்லை. கைகளினால் முகத்தினை மூடியவண்ணம் கதிரையில் இருந்தான். விலகிச் சென்ற மனம் மட்டும் தொலைதூரத்தில் எங்கோ ஒரு மூலையில் தனித்திருந்தது. அங்கு அவனுக்குரிய தண்டனை நிறைவேற்றப்படுகிறது. உயிருடனேயே எரிக்கப்படுகிறான். இதோ பாதி உடல் எரிகிறது. அம்மரண வேதனையிலும் பாய்ந்து எழும் தீச்சுவாலையில் வாழ்க்கைச் சம்பவங்களை எழுத நினைக்கிறது உள்மனம்.

பகை மறந்து தந்தையும் மாமாவும் திருமணப் பேச்சில் ஈடுபட்டனர். நாட்டுக்காக பெருநிலப்பரப்பை மீட்டு, தம் இன மானம் காத்த வீரனிடத்து சிறுநிலத்தை இழந்ததற்கு பகை வளர்க்க விரும்ப வில்லையாம் மாமா. காதல் கொண்ட இரு உள்ளங்களும் திருமணத்தில் ஒன்றிணைந்தன. இரு குடும்பங்களும் தான்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்று அவர்களுக்கு முதலிரவு! கட்டித் தழுவி முத்தமிட்டவன், அவளுக்குள் பரிச்சயமற்றிருந்த விரகத்தை உயிர்த்தெழச் செய்தான். அவள் காதோரம் ஏதோ கூறுகிறாள். அவன் இறுகத் தழுவிக் கொள்கிறான். அவள் ஏதோ பிதற்றுகிறாள். மெல்ல மெல்ல அதிகரித்த பிதற்றல்கள் அவனை விழித்துக் கொள்ளச் செய்தது. இயக்கம் தடைபட்டது. எங்கேயோ கேட்ட குரல், நன்றாக உற்றுக் கேட்கிறான் "என்ன விட்டுடுங்கள் அண்ணா கும்பிட்டு கேட்கிறேன் என்ன விட்டுடுங்கள்" என்ற கதறல் பிதற்றலாடே கிளர்ந்தெழுகிறது. கிண்ணத்தில் படைத்த பாலைக் குடிக்கும் நாகம் அரவம் கேட்டு நிமிர்வதைப் போல் இலேசாக தலையை தூக்கி அவள் முகத்தைப் பார்க்க முனைகிறான். அவளோ மார்போடு அணைத்துக் கொள்கிறாள். வழிந்தொழுகும் வியர்வை வழியே இரத்த வாடைக் கமழ்கிறது. அவளது பிடியிலிருந்து மெல்ல நழுவுகிறான். அவள் மீண்டும் இறுக அணைத்துக் கொள்கிறாள். தனது முகத்தில் குருதி படிவது போல உணர்ந்தவன் அவளது அணைப்பிலிருந்து விடுபட முயற்சிக்கிறான். அவளது முரட்டுத்தனமான அணைப்பு கழுத்தை நெறிப்பது போல இருந்தது. உடனே அவளைத் தள்ளிவிட்டு கீழே பாய்ந்து விழுந்தான். உடல் முழுதும் வியர்த்து வடிகிறது. மூச்சுத் திணறியது. மயக்க நிலையில் இருந்தவள், பதறி எழுந்து மின்விளக்கைப் போட்டாள். அவனருகில் வந்து நெற்றியில் முத்தமிட்டு, என்ன நடந்தது என்பதை கேட்பது போல பரிதாபமாகப் பார்த்தாள். சற்று நிதானமடைந்தவன் தன்னை சுதாகரித்துக் கொண்டு தான் கொஞ்சநேரம் தனிமையில் இருக்க வேண்டும் என்கிறான். அவள் கட்டியணைக்க முயற்சிக்கிறாள். நிமிர்ந்து பார்த்தவன் கையால் சைகைக் காட்டுகிறான். தயங்கி நின்றவளின் ஏங்கித் தவிக்கும் மர்மங்களை நிலக்கண்ணாடி காட்டுகிறது. உடனே ஆடைக்குள் ஓடி மறைத்தவள் தனக்கொரு போர்வை தேடுகிறாள்.

கைகள் இரண்டும் கண்ணீரால் நனைந்துவிட்டது. பாதங்களும் பிசுபிசுக்கிறது. பெருமூச்சிறைகிறான். சுவாசப்பை வெப்பம் கக்குகிறது. உடலெங்கும் ஊசி முனைகள் பதம் பார்ப்பது போன்ற உணர்வு. கண்களை திறக்கவே பயமாக இருந்தது. அப்போது இம்சிப்பது தான் துன்பத்திற்குக் காரணம் என்ற புத்தபெருமானின் போதனை நினைவிற்கு வர மீண்டும் அப்பெண்ணின் கதறல்கள் ஓங்கி ஒலிக்கத் தொடங்கியது. "என்ன விட்டுடுங்கள் அண்ணா கும்பிட்டு கேட்கிறன் என்ன விட்டுடுங்கள்!.. என்ன சுட்டுக் கொன்று போடு சுட்டுக் கொன்று போடு கொ! ன்! று!" என தாழ்ந்த குரலில் ஒலித்து மறைகிறது.

அந்தச் சம்பவம் நெஞ்சைப் பிளக்கிறது. அவளைக் கொன்று விடுவோம் என எண்ணி இவன் துப்பாக்கியை நீட்டியபோது மீண்டுமொரு முறை என பிரபாத் இவனை விலக்கிவிட்டு ஆடை கழற்றியது, அவள் இறந்து போனது கூட உணராமல் ! என்பதை நினைக்கும் போதே கண்கள் இருண்டன. தலைச் சுற்றியது. தீக்கொடுக்குகளைக் கொண்ட வண்டுகள் இதயவறைகளுக்குள்ளிருந்து வெளிக்கிளம்பின. கைகளால் முகத்தினை தேய்த்துக் கொண்டவன் எத்தனைப் பேர் என தன்னை மறந்து புலம்பியவாறே மேசையில் கிடந்த துப்பாக்கியை வாய்க்குள் திணித்துக் கொண்டான். துப்பாக்கி முனை தொண்டைக் குழியை உரசுகிறது. கண்களை மூடிக்கொண்டு துப்பாக்கியை கடையண்ணத்தில் வைத்து அழுத்துகிறான். விரல்கள் இயங்க மறுக்கிறது. காதடைக்கிறது. தலையின் பாரம் அதிகரிக்கிறது. சிந்தனை அச்சு மீண்டும் சுழல்கிறது கடந்த காலத்தை நோக்கி.

பிரபாத் நாளை ஊருக்குத் திரும்புகிறான் என்றதும் அவனது நினைவெல்லாம் தினுசிகாவில் ஒட்டிக்கொண்டது. திருமணமாகி இரண்டே நாளில் அவசரமாக பொய்க் கூறி கிளிநொச்சி வந்து இன்றோடு இரு வாரங்களாகிறது. தொலைபேசியிலேயே தமது விரகத்தை தணித்துக்கொள்ள முயன்று முயன்று ஒவ்வொரு நாளும் இருவரும் தோற்றுப்போயினர். ஆனாலும் அவனுக்கு அவளோடு கூடுவதை நினைக்கும் போதெல்லாம் அந்த பெயரறியாப் பெண்ணின் கதறல்களும் குருதி தோய்ந்த மார்புகளும் நினைவிற்கு வந்து வீட்டிற்கு செல்லும் எண்ணத்தையே அடியோடு அறுத்தது. தினுசிகாவை ஏமாற்றிவிட்டோமே என்ற உணர்வு மேலெழுந்து இதயத்தை அரிக்கத் தொடங்கியது. இன்று அவளுக்கு ஏதாவது வாங்கி அனுப்ப வேண்டும் என நினைத்தவன் ஒரு சேலையும் முந்திரிகை, மாம்பழம், பனங்கிழங்கு, பனங்கருப்பட்டி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போன்றவற்றை வாங்கி பிரபாத்திடம் கொடுக்கிறான், தமது வீட்டில் கொடுக்கும் படி. பெற்றுக் கொண்ட அவளும் மிகுந்த சந்தோசத்தில் தனது வருகைக்காக காத்திருப்பதாகக் கூறுகிறாள். அவனும் வெகுசீக்கிரம் வருவதாக வாக்குறுதி அளித்தான்.

வாக்குறுதியளித்து மூன்று வாரங்கள் ஓடிவிட்டன. ஊருக்குச் சென்று திரும்பி வந்த பிரபாத் ஏதோ வேலையாக மீண்டும் ஊருக்குச் செல்வதாக கூறுகிறான். தன்னால் ஒன்றும் அவளுக்கு கொடுத்தனுப்ப முடியாததை எண்ணி வருதப்பட்ட அவனிடம் தான் வாங்கிச் செல்லும் முந்திரிகை, பனங்குருப்பட்டி போன்றவற்றில் கொஞ்சத்தை நீ கொடுத்தனுப்பியதாகக் கொடுக்கிறேன் என்றான் பிரபாத், சந்தோசப்பட்ட அவனும் தலையசைத்தான்.

அன்று இரவு அவனுக்கு தூக்கம் வரவில்லை. பசித்த கண்களுடன் சிங்கம் ஒன்று அவனது நித்திரைக்காக காத்திருப்பது போல கனவு கண்டான். சொல்லொனா துயர் அடிவயிற்றில் ஒட்டிக் கொண்டது. பிரபாத் கூறிய வார்த்தைகள் மீண்டும் மீண்டும் ஞாபகத்திற்கு வந்தன. அவனது செயற்பாடுகளும் அடிக்கடி மின்னி மின்னி மறைந்தன. விடியும் வரை இருப்புக் கொள்ளாமல் தவித்தவன் அதிகாலையிலேயே விடுமுறைப் பெற்று வீடு திரும்புகிறான் வெறுங்கையுடன். வட துருவத்திலிருந்து தென்துருவம் நோக்கிய அன்றைய பயணம் அவனை அணுஅணுவாய் சிதைத்துக்கொண்டிருந்தது.

அச்சிதைவுகளின் வழியே வாழ்க்கைப் பற்றிய அவனது புரிதல்கள் யாவும் கரைந்தொழுகத் தொடங்கின. கண்களை மூடினால் கொன்றழித்த போராளிகள் சிலர் தலைகளற்றும் சிலர் கால்களற்றும் இன்னும் சிலர் கைகள் அற்றும் நீதி கேட்க வருகின்றனர், பெண்கள் சிலருடன். இதில் சிலருக்கு வஞ்சம் தீர்க்கும் எதிர்பார்ப்பும் உண்டு போலும். பெண்களின் மார்புக் காம்புகளில் குருதி வடிகிறது. சிலரது ஒற்றை முலைகளைக் காணவில்லை. எல்லோரது யோனிகளும் சிதைந்து போயுள்ளன. பிணநாற்றமும் இரத்த நெடியும் மூக்கை உறுத்துகிறது. கண்களைத் திறந்தாலோ வேட்டைப் பல்லுடன் பிரபாத்தின் விம்பம் எங்கும் சிரிக்கிறது. கண்கள் தன்னையறியாமல் மூடிக்கொள்ள மனம் தானே விசாரணைக் கூண்டுக்குள் அடைபட்டது.

வீட்டின் விறாந்தையில் அமர்ந்திருந்த தாய் அவனது கோலத்தைக் கண்டு பதறி எழுந்து என்ன மகன் சொல்லாம உடம்புக்கேதும் என இழுக்கும் போதே இல்லை அம்மா திஷசிகாவை பார்க்கணும் போல இருந்தது எனக் கூறியவாறு குனிந்து காலில் விழுந்தான். தோளைத் தொட்டு ஆசிர்வதித்தவள் மேலும் விசாரிக்கும் முன்பே வீட்டினுள் நுழைந்து அடுக்குமாடி அறைகளில் சந்தேக நபரைத் தேடுவது போல திஷசிகாவைத் தேடினான். வெளியே நின்ற தாயின் 'திஷசிகா பிரபாத் வீட்டுக்குச் சென்றுள்ளாள்' என்ற குரல் எறிகணையாய் நெஞ்சில் விழுந்தது. சட்டென தாயையும் கவனிக்காது பிரபாத்தின் வீட்டை நோக்கி விரைந்தான். உனக்கு ஏதோ கொடுத்தனுப்ப தான் போயுள்ளாள் என்ற தாயின் கூற்று இவன் காதில் விழவில்லை.

பல்வேறுப்பட்ட சிந்தனைகள் அவனைச் சுற்றி வட்டமிட்டன. அசுர வேகத்தில் பிரபாத்தின் இல்லமடைந்தான். இப்பொழுது தான் வருகிறாயா மகனே என்ற பிரபாத்தின் தந்தை குரல் கேட்டதும் தலைநிமிர்ந்தவன் மெல்ல தலையசைத்து வீட்டின் உள்ளே நோக்கியவாறே அவர் காலில் குனிந்து விழுந்தான். ஆசிர்வதித்த அவர் இப்பொழுதுதான் பிரபாத் திஷசிகாவை வீட்டில் விட்டு வருவதாக கூறிச் சென்றதாக கூறியபடி உள்ளே அழைக்கிறார். கலவரமடைந்த அவன் பிறகு வருவதாகக் கூறி விடைபெறுகிறான்.

முன்னேறிச் செல்லும் படையணியில் முதல்வரிசை வீரர்களிடம் காணப்படும் நடுக்கம் கலந்த பீதியுடன் தன்னை மறந்த வேகத்தில் ஒற்றையடிப் பாதையூடே விரைகிறான். மெல்லிய இருள் சூழ்ந்துக் கொள்கிறது. மனித நடமாட்டத்தைக் காணமுடியவில்லை. சிந்தனை தடுமாறுகிறது. வீட்டுக்குத் திரும்பி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விட்டார்களா? கண்ணில் படவில்லையே எங்கே போயிருப்பார்கள்? போன்ற கேள்விகள் அவனது வேகத்தில் தளர்ச்சியை ஏற்படுத்தியது. எங்கும் படர்ந்திருந்த மௌனத்தை குழைப்பதுவாய் ஏதோ ஓர் முணங்கல் ஒலி காற்றுவழி காதில் விழுகிறது. அதனை உற்றுக் கேட்டவாறு மூன்றடி பின்வாங்கியவன் அவ்வொலி கேட்கும் திசையை நோக்கி நகர்ந்தான். அதிகரித்துச் செல்லும் முணங்கல் ஒலி நீதி கேட்க வந்த போராளி ஒருத்தி சரமாரியாக தன்னைச் சுட்டுத் தள்ளுவதைப் போலிருந்தது. சற்றுத் தடுமாறியவன் அவ்வொலிவரும் இடத்தினை மெல்ல நெருங்கி, மூடிக்கிடக்கும் புதரினை விலக்கி உள்ளே நுழைந்தான். அங்கே தேக சுகந்தனில் ஆவிகலந்திருந்த இரு உடல்கள் திடுக்கிட்டு எழுந்தன. திஷசிகா தனது அரை நிர்வாணத்தை மறைக்கிறாள். பிரபாத்தோ வியர்த்து வடியும் தன் முழு நிர்வாணத்தை மறைக்க முடியாது தடுமாறுகிறான். அவனின் விழிகளை தீயின் நா தீண்டியது.



கண்களை இறுக்கமாக மூடிக்கொண்ட அவனுக்கு இரு சூட்டுச் சத்தங்கள் கேட்டன. மூன்றாவது சூட்டுச் சத்தத்தை அவனால் கேட்கமுடியவில்லை. கடையண்ணம் வழியே உள்நுழைந்த சன்னம் தலையின் பின்புறமாக வெளியேறி சுவரில் தொங்கிய திருமணப் படத்தில் பட்டுத் தெறித்தது.

நீண்ட இடைவெளிக்குப் பின்னர் மூன்றாவது சூட்டுச் சத்தம் ஊரில் கேட்டது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாலைவனத்தில் ஒரு தளிர் மரம்

வே. யாழினி
விடுகை வருடம்,
தமிழ் விசேட துறை
கலைப்பீடம்.

---

**க**ட்டுரை எழுதிக் கொண்டிருந்த கஸ்மிதாவின் கண்களில் பட்டாம் பூச்சிகளின் பால்வடியும் பூமுகங்கள் பட்டன. ஆஹா! எத்தனை ஆனந்தம் அந்தச் சின்னஞ் சிறுசுகளுக்கு. அவர்களின் முகங்கள் பூரித்துக் கிடக்கின்றன. வழமைபோல் அந்தச் சிறுவர் பூங்கா கலகலப்பாய்க் காட்சியளித்தது. அன்று ஞாயிற்றுக்கிழமை, மாலையாகி, கதிரவன் தன் ஆவேசத்தை அடக்கி அமைதி பெற்றுக் கொண்டிருந்தான். அந்த இதமான மாலை நேரத்தில் ஆனந்தமாய்ப் பறக்கும் பட்டாம் பூச்சிகள், அவற்றைக் கண்டுகளிக்கும் அன்னையர்கள் எல்லோரையுமே கஸ்மிதாவிற்குப் பிடித்திருந்தது.

கஸ்மிதா, பேராதனைப் பல்கலைக் கழகத்தில் இரண்டாம் வருடத்தில் படித்துக் கொண்டிருக்கிறாள். அவள் கல்வியில் மிகவும் அக்கறையுடையவள். கற்கும் நேரம் தவிர்ந்த ஏனைய நேரங்களில் இந்தச் சிறுவர் பூங்காவை ரசிப்பதும் உண்டு. அதற்குப் பல காரணங்களுண்டு. அவள் வசிக்கின்ற வாடகை வீட்டுக்கு அண்மையில் இப்பூங்கா இருப்பது முக்கிய காரணமாகும்.

அவளுக்குத் துணையாக அவளருகே ஒரு வானொலிப் பெட்டி. அது அடிக்கடி அவள் சிந்தனைகளைத் திசை திருப்பித் திக்குமுக்காடச் செய்யும். சிலவேளை ஆனந்தத்திலும் ஆழ்த்தும். அந்த நேரத்தில் சூழலுக்கேற்பத் தன்னை மாற்றிக் கொள்ளவும் கஸ்மிதா ஓரளவு கற்றுக் கொண்டிருக்கிறாள். இருந்தபோதும், அப்போது அந்த வானொலிப் பெட்டியிலே தவழ்ந்து வந்த "ஆலயங்கள் தேவையில்லை ஆகமங்கள் தேவையில்லை" என்ற பாடலானது அவளது கண்களைக் குளமாக்கியது; அவள் காதுகளில் தான் மறக்க நினைத்த இடியோசைகள் மீண்டும் இடிக்கத் தொடங்கின; அகதிகளின் அவலக் குரலோசைகள் ஆர்ப்பரித்தன. இனிய கற்பனைகளைச் சூறையாடி இதயத்தில் ரணத்தை ஏற்படுத்திய நினைவுகள், கவனிப்பாரற்று அழுகிப் போன உடல்கள், உடைந்துபோன கட்டடங்கள், சிதைந்து போன ஆண்டவன் சந்நிதிகள், அழிந்துபோன வாழ்க்கை, குருதியால் நனைந்த தேசம் எல்லாமே ரசிக்க முடியாத திரைப்படமாய் கஸ்மிதாவின் மனத்திரையில் ஓடியது.

யுத்தம் எனும் கோரப்பேய் செத்துச் சிலகாலம் கடந்தபோதும், அதன் கோரைப் பற்களால் குதறப்பட்ட எத்தனை ஆயிரமாயிரம் நெஞ்சங்களை விம்மி விம்மி அழச்செய்கிறது. அந்த நெஞ்சங்களில் அனாதையான கஸ்மிதாவும் ஒருத்தி.

கஸ்மிதா, நான்கு அண்ணன்களுக்கு ஒரே தங்கை, தாய் தந்தையருக்குக் கடைக்குட்டியான செல்(வ)லமகள். அப்பா கடல் தொழிலாளி; அம்மா வீட்டு நிருவாகம். வீட்டில் என்றுமே வறுமையில்லை. அதிலும் கஸ்மிதாவின் வாழ்வில் என்றுமே பூபாளந்தான். எல்லோருக்கும் இவள்மீது அத்தனை பாசம்.

"அஞ்சாங்கால் பொம்புளப்புள்ள பொறந்தா யோகந்தான்" எல்லாரும் சொல்லுவாங்க. உண்மைதான் போலும், அவள் தந்தையும் அடிக்கடிச் சொல்லிச் சந்தோசப்படுவார். கஸ்மிதா படிப்பிலும் படுசுட்டி. அழகிலும் அவளை யாருமே மிஞ்ச முடியாது. அவள் பெரியவளாக ஆனபின்னும் எல்லோருக்குமே சின்னப் பிள்ளைதான். கஸ்மிதாவின் உலகம் ஒரு சொர்க்கலோகமாகவே இருந்தது.

இவ்வாறாக இன்பத்தைத் தவிர துன்பம் என்பதையே அறியாத வகையில் கஸ்மிதா உயர்தரப் படிப்பை முடித்து நல்ல பெறுபேறுகளை எதிர்பார்த்துக் கொண்டிருந்த போதுதான், இயமதூதர்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆயிரமாயிரமாக அவர்கள் ஊருக்கு மேலுலகிலிருந்து வந்திறங்கினர். ஊரே சுடுகாடாய் மாறியது. யாருக்கு யார் காவல் என்ற கேள்விக்கு விடையில்லை. பட்டினிச் சாவுகளும், பரிதாப மரணங்களும் மலிந்து போகத் துடுப்பிழந்த படகுகளாய்ச் சுழன்று கொண்டிருந்த மனித குலத்தில் கஸ்மிதாவின் குடும்பம் மட்டுமென்ன விதிவிலக்கா? வீட்டை விட்டு, ஊரைவிட்டு, உறவுகளை விட்டு, உணர்வுகளைப் பறிகொடுத்து, உணவு, உடுபுடைவைகளை விட்டு வாழ வழிதெரியாது தடுமாறியவர்கள் மீது விழுந்த இரக்கமற்ற வெடிகுண்டுகள் விதைத்த கொடுமைதான் எத்தனை கோரமானது.

இரக்கமற்ற வெடிகுண்டிலே தந்தையோடு தாயும் தமையன்களும் சிதறிப் போனார்கள். கண்ணிமைகள் கருகிப் போய், காதுகள் அடைபட்ட நிலையில், அவளைத் தடவிய கரங்களைப் பிடித்தபோது அவள் தாயினுடைய முகம் சற்றுத் தெரிந்தது. கஸ்மிதாவால் சரியாக அடையாளம் கண்டுகொள்ள முடியவில்லை. எனினும் அனுங்கிய அந்தக் குரல் தாயினுடையதுதான் என்பதை உணரமுடிந்தது.

"என்ர கஸ்மிக்குட்டி நீ எங்கடா இருக்க! என்னால முடியலம்மா உனக்கு!. உனக்கு இனி யாரும்மா! கஸ்மி! அம்மாக்கு கடைசியா ஒரு சொட்டு தண்ணி தா!"

பற்றிப்பிடித்த தாயின் கைகள் வழுகிச் சென்ற உணர்வு! அவள் மறைவைக் கஸ்மிதாவிற்கு உணர்த்தியது. 'கும்' என்ற இருட்டு, எவரையும் அடையாளங் காணமுடியாத நிலை! எங்கும் அவல ஓலம், வெடியோசை. அவள் மனம் மரத்துப் போய்விட்டது. எதையும் சிந்திக்க முடியாதவளாய் கால் போன திசையில் ஓடி, உயிரைக் காப்பாற்ற ஓடிக்கொண்டிருந்த பெரும் அகதிக் கூட்டத்தில் சேர்ந்து கொண்டாள்.

கண்ணீரும், கம்பலையும், பட்டினிச் சாவுமாய்க் கிடந்த மக்களுக்குத் தண்ணீரும் சோறும் அன்றுதான் கிடைத்தது. யுத்தம் முடிந்து ஒரு மயான அமைதி நிலவியது. கருகிப் போன பயிர்களுக்கு வசந்தம் சில்லென்று வீசத்தொடங்கியது. விடுபட்ட உறவுகளையும், விடைபெற்ற சொந்தங்களையும் தேடுகின்ற அகழ்வாராய்ச்சிப் படலம் ஆரம்பித்தது. ஆனாலும் கஸ்மிதாவிற்கு உறவுகள் யாரென்று தெரியவில்லை. உடுத்த உடையோடும், கறை புரண்ட முகத்தோடும் பாலை வனத்தில் ஒரு தளிர் மரமாய்ச் சோர்ந்து கிடந்தாள்.

அவளது தாயின் இறுதிநேரப் புலம்பல் வார்த்தைகள் மட்டுமே அவளது நினைவில் அடிக்கடி வந்துகொண்டிருந்தன. "என்னைப் பத்து மாசம் சுமந்து பெற்று வளர்த்த தாய்க்கு, கடைசியாக ஒரு சொட்டுத் தண்ணீர் கூடக் குடுக்க முடியலியே!. எனக்காக கண்ணீர் விட்ட அம்மாவுக்கு, என் கண்ணீரைக் கூடத் தண்ணீராகக் குடுக்க முடியவில்லையே!. அம்மா!" என்று ஆற்றுவாரின்றிப் புலம்பினாள்.

தனக்குள்ளே கற்பனை செய்து கண்ணீர் விட்டுக் கரைந்து போகும் பனிக்கட்டியாய் அமர்ந்திருந்த கஸ்மிதாவின் தோள்களை ஒருகரம் மெல்லத் தட்டியது. "அம்மா! கஸ்மிக்குட்டி.." என்ற அக்குரலைத் தனது மூத்த அண்ணனின் குரல் என அடையாளம் கண்டுகொண்ட கஸ்மிதா ஓராயிரம் கோடிப் பிரகாசத்துடன் முகத்தைத் திருப்பி "அண்ணா!" என்றவளுக்கு, "அது நானம்மா.." என்றவாறு கண்கள் பனிக்கத் தாய்மாமன் சங்கர் நின்று கொண்டிருந்தார்.

"மாமா! மாமா! எல்லாமே போச்சு மாமா! நீங்க" என்றவளை, "அதப் பற்றிக் கேக்காதம்மா" நம்மட உறவில உன்ன மட்டுந்தான் நான் பாத்திருக்கிறன். வா! ஏதாவது சாப்பிடும்மா. எல்லாம் 'மனிசனுக்குத்தான' என்றவர் மருமகள் கஸ்மிதாவை அழைத்தபடி முகாமை நோக்கிப் புறப்பட்டார்.

இன்று கஸ்மிதா ஓரளவு தெளிவடைந்தாலும் அவள் வாழ்வில் விழுந்த பாரிய வடுக்கள் மறைந்து விடவில்லை. அவள் வாழ்வில் எல்லாமே அழிந்தாலும் அழியாச் செல்வமான கல்வி அழிந்துவிடவில்லை.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அக்கல்விதான் இன்று அவளைப் பேராதனைப் பல்கலைக்கழகத்தின் அறிவுக் காற்றைச் சுவாசிக்க வைத்திருக்கின்றது. மாமா சங்கரின் அரவணைப்பில் கற்றுக் கொண்டிருக்கிறாள்.

அவள் அடிக்கடி "இறைவா... இந்த நாட்டின் பிரிவினையால் ஏற்பட்ட அபாயம் என்னைப் போல் எத்தனை அனாதைகளை இந்த மண்ணுக்குப் பரிசளித்திருக்கிறது. இனி ஒருபோதும் இந்தநிலை எனக்கேற்பட்டது போல யாருக்கும் வரவிடாதே" என்று மனமுருகி இறைவனைப் பிரார்த்தனை செய்வாள். அதோ அங்கே விளையாடுகின்ற சின்னஞ்சிறுசுகளைப் போல என்றும் மகிழ்ச்சியோடு வாழவேண்டும் என நினைப்பாள். திடீரென பூங்காவில் ஏற்பட்ட அமைதி நன்றாக இருட்டி விட்டதை உணர்த்தவும் தன் சிந்தனைக்குத் தடைபோட்டு தன்னுடைய வாடகை விடுதியை நோக்கி நடந்தாள் கஸ்மிதா.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெண்

எஸ்.ஆர். திலகரத்னா.
மூன்றாம் வருடம்.
மருத்துவ பீடம்.

**ய**ன்னலின் ஊடாக ஆதவனின் காலைக்கிரணங்கள் ஒளி வெள்ளம் பாய்ச்சிக் கொண்டிருந்தன. எப்போதும் போலவே கூடத்தில் பக்திப் பாடல்களும் வெளியே பல்வேறு பறவைகளின் ஒலிகளும் அந்தக் காலை நேரத்தை மனோகரப் பொழுதாக்கிக் கொண்டிருந்தன. அந்த இன்பத்தில் திளைத்துக் கொண்டிருந்த அவ்வீட்டு வாழ் உள்ளங்கள் எல்லாம் தத்தமது வேலைகளைப் பரபரப்பாக நிறைவேற்றிக் கொண்டிருந்தன.

ஆனால் அவளது உள்ளம் மட்டும் தெளிந்த அந்தக் காலைப் பொழுதிலும் சலனமற்ற குழப்பங்களால் நிறைந்திருந்தது. நெஞ்சம் முழுவதும் இழப்பின் துயரம், ஏமாற்றத்தின் வடு, கோபத்தின் கனல், என நிரம்பி வழிந்து கண்களிலும் அதன் விளைவைக் காட்டியது.

சிவந்து வீங்கியிருந்த கண்களை மீண்டுமொரு முறை துடைத்தாள். கைத்தொலைபேசியிலிருந்த கணவனின் படத்தை எடுத்துப் பார்த்தாள்.

"என்னை ஏன் இவ்வளவு சீக்கிரமாக விட்டுப் போனீர்கள்!? அவ்வளவு அவசரமென்ன உங்களுக்கு..? என ஒருமுறை கடிந்துக் கொண்டாள். அவனைக் கடிந்தாலென்ன, முறைத்தாலென்ன? காற்றோடுக் காற்றாக கலந்து விட்டவன் இனி திரும்பப் போகிறானா?

நிதன்!.!

சுசியின் கணவன்..! வாழும் போது அவள் வாழ்வை எவ்வளவு இன்பகரமாக மாற்றினானோ அவ்வளவு இன்பத்தையும் திருமணமாகிய நான்கே மாதங்களில் தந்து, அவளை இருபத்து நான்கு வயதே ஆன இளம் கைம்பெண்ணாகவும் மாற்றினான்.

நான்கு வருடங்களின் முன்பு கல்லூரியில் சக மாணவனாக அறிமுகமாகினான். பட்டப்படிப்பின் முதல் வருடத்தில் நல்ல நண்பன் ஒருவனாக இருந்தவன், இரண்டாம் வருடத்தில் சுசியை விரும்ப ஆரம்பித்தது, தெரிந்ததும் சுசி அவனை வெறுக்கத் தலைப்பட்டாள்.

ஆனால் பெண்களின் விருப்பின் ஆரம்பமே வெறுப்புத் தானே? விருப்புக்கும் வெறுப்புக்கும் இடையே இருந்த மெல்லிய கோடு நிதனின் பிடிவாதத்தின் முன் கரைந்து போனது. தனது உள்ளத்திலும் நிதன் மீது ஒரு விருப்புச் சுனை சுரந்ததை சுசி உணர்ந்தாள்.

பிறகென்ன இருவரும் இஷ்டம் போல அன்பை பரிமாறிக் கொண்டனர். அன்பை வழங்கி சந்தோஷத்தைப் பெற்றுக் கொண்டனர்.

பட்டப்படிப்பின் இறுதி மூன்று வருடங்களும் வெகு வேகமாக ஓடி மறைந்தன. பரீட்சைகள் பட்டமளிப்பு விழா என்பன நிறைவுற்று இருவரும் நல்ல உத்தியோகங்களிலும் அமர்ந்தார்கள்.

பின்னர் தங்கள் வீடுகளில் விருப்பங்களைத் தெரிவித்து இரு வீட்டாரின் விருப்பத்தின் பேரில் சுசி - நிதன் திருமணம் நிறைவேறியது. திருமண வாழ்க்கை அவர்கள் இருவருக்குமே பொறுப்புமிக்கதாயும் அதேவேளை இன்பமிக்கதாயும் இருந்தது. தங்கள் வாழ்வைப் பற்றி ஆசைக்கனவுகள் பலக் கண்டார்கள்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுசி தாய்மை அடைந்தாள்!

இதை அறிந்து கொண்ட தினம் முதல் நிதனும் சந்தோஷக்கடலில் மூழ்கித் திளைத்தான்.

ஆனால் வாழ்க்கை என்பது இன்பமும் துன்பமும் இணைந்தது தானே? விதி என்னும் பெயரால் நம்மை ஆட்டுவிக்கும் காலச்சக்கரம் இவர்களையும் ஆட்டுவித்தது!

ஒரு நாள் பணியிலிருந்து வீடு வந்த சுசி இன்னமும் நிதனைக் காணவில்லையே எனப் பார்த்திருந்தாள். சரியாக மணி 5 அடிக்கும் போது வீட்டுக்கு வருபவன் அன்று மாலை 6 ஆகியும் வரவில்லை. மேலதிக வேலையோ என்று அவன் கைத்தொலைபேசியை அழைத்தாள். அது அணைக்கப்பட்டிருந்தது. அலுவலக இலக்கத்திற்கு அழைத்த போது அது பதிலளிக்கப்படவில்லை.

நேரம் ஆக ஆக சுசியால் பொறுமையாக இருக்க முடியவில்லை. வெளியில் எங்கேனும் சென்று வருவான் என்ற நினைப்புக்கும் அவளுக்கு நிம்மதி வரவில்லை. காரணமின்றி திடுக்கிட்டுப் பதைத்துக் கொண்டிருந்த நெஞ்சம், பொறுமையின்றி தொண்டைக்குழியையும் அடைத்து விட்டது.

அலுவலகத்தில் நிதனோடு பணி புரியும் பிறருக்காவது அழைத்துப் பார்க்கலாம் என எண்ணினாள். அதைவிட, போய்ப்பார்த்து வருவது உகந்தது என புத்தி கூறியது. உடனடியாக கைப்பையையும், வண்டிச்சாவியையும் எடுத்துக் கொண்டு வீட்டை விட்டு வெளியே வந்தாள்.

வரும்போதே சுசியின் கைத்தொலைபேசியில் ஒரு அழைப்பு வந்தது. மனதிற்குள் ஓரளவு நிம்மதி தோன்ற நிதனின் அழைப்பாகத்தானிருக்கும் என்ற நினைப்பில் எடுத்தாள்!! ஆனால் அது நிதனல்ல, வேறு ஒரு இலக்கம்.

"ஹலோ!"

"ஹலோ! திருமதி நிதன்!?"

ஆமாம்!. நீங்கள் யார்!.?"

"நான் மாவட்ட வைத்தியசாலையிலிருந்து கதைக்கிறேன். உங்கள் கணவர் விபத்தொன்றில் சிக்கி காலமாகி விட்டார்!.!

"என்ன!.? சரியான இலக்கத்திற்குத் தான் அழைக்கிறீர்களா..?

"ஆமாம்.." உடனடியாக மாவட்ட வைத்தியசாலைக்கு வாருங்கள் அம்மா.."

"!!!!"

சுசியின் உலகம் சுழன்றது..! வானம் கறுத்தது.! வெளியெங்கும் இருட்டியது.! இதயம் துடிப்பை நிறுத்தியது.! சப்த நாடிகள் ஒடுங்கின.! வயிறு கலங்கியது.! கண்கள் பார்க்க மறந்தன.! காதுகள் கேட்க மறந்தன.! நா தொண்டையை அடைத்தது.! கைகள் பாரத்தை தாங்காது பையையும், கைத்தொலைபேசியையும் தவறவிட்டன.! அதற்குமேல் தன்னையுமே தாங்க முடியாதவளாய் கீழே விழுந்தாள்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதற்குப்பிறகு ஒரே நிசப்தம்..! தான் எங்கோ தூரத்தில் இருப்பதாக நினைத்துக் கொண்டாள். கண்களால் பார்க்க முடியவில்லை! ஆனால் காதுகள் மந்தமாகச் செயல்பட்டுக்கொண்டன.

யாரோ அவளைத் தூக்கினார்கள்: யாரோ ஓ..வென்று கதறுவதுப் போல இருந்தது: யாரோ அருகில் பேசிக்கொண்டிருந்தார்கள்: மீண்டும் ஒரு கதறல்: மீண்டும் யாரோ தூக்கினார்கள்.

இவ்வளவுக்கும் செயல்பட்ட மூளை அவளை விழிக்க விடவில்லை. வெகு நேரம் கழித்துக் கண்களை மெல்லத் திறந்தாள்!!

அருகில் தாயார் இருந்தாள்!

"அம்மா!"

வெகு இலேசாக திரும்பி, அவளைப்பார்த்த தாயாரின் கோலம் ஓரளவு அவளது புத்தியை எட்டவே: மாலை நடந்தது மனக்கண்ணில் படமாக ஓடியது! இவ்வளவு நேரம் இருந்த சாந்தி எங்கோ ஓடி மறைந்தது.

"நிதன்..!! நிதன்..!! நிதன்..!!" என்று கதறியவாறு எழும்ப முயன்ற சுசியை அவ்வளவு நேரம் சேலைத்தலைப்பால் வாயை மூடிக்கொண்டிருந்த தாய் அவளை எழும்ப விடாது பிடித்து இருத்தினாள்..

"விடுங்கள் அம்மா.." என திமிறிக் கொண்டு எழுந்தவளைத் தாய் மீண்டும் பலமாக அமர்த்தினாள்! காரணம் புரியாது வினாவாக தாயை நோக்கினாள்..! தாய் மீண்டும் கதறினாள்.

அந்தக் கதறல்..!!

எங்கோ கேட்ட கதறல்..!! அப்போது யாரோ பேசினார்களே என்ன பேசினார்கள்!? புத்தியில் உரைத்ததும் நெஞ்சம் வெடிப்பது போன்ற ஒரு பிரமை! நெஞ்சிலிருந்து வடிந்த குருதி தன் உடலெல்லாம் ஈரமாகச் செய்வது போலத் தோன்றியது!! ஓரளவு சுதாகரித்துக் கொண்டு தான் இருந்த கோலத்தைப் பார்த்தாள்..! அவளது உடலிலிருந்து குருதித்திணிவு ஒன்று வெளியேறியது!!

"ஐயோ!" என கதறினாள், புலம்பினாள், புரண்டாள், வெந்தழலில் மீது விழுந்த புழுவாகத் துடித்தாள்.

கணவனின் இழப்பைத் தான் தாங்கிய வரையில் ஒன்பது வாரங்களே ஆன அச்சிசுவால் தகப்பனின் இழப்பைத் தாங்க முடியவில்லையே என எண்ணி எண்ணி வேதனைப்பட்டாள்.

கதறிக் கதறி, உடலெங்கும் உணர்விழந்து போனது. ஆனால் கண்ணீரும் வற்றவில்லை. துக்கமும் கரையவில்லை.

முதல் நாள் அவளோடு கொஞ்சிக் குலாவிக் கொண்டிருந்த அந்த அழகு முகம், இன்று பார்ப்பதற்கே பயங்கரமாய், துணி வலையினால் மூடப்பட்டிருந்தது.. முதல் நாள் அவள் கருவறையில் இருந்து வளர்ந்து கொண்டிருந்த அச்சிசு, இப்போது வீட்டுக்கு வெளியே தன் தகப்பனோடு புதைக்கப்படுவதற்காகப், பொலித்தீன் பையில் காத்துக் கொண்டிருக்கிறது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தன்னைப் பார்த்தாள்! கடைகளில் காட்சிக்காக வைக்கப்பட்டிருக்கும் துணி பொம்மை போல, அலங்காரமாக கதிரையொன்றில் அமர்த்தி வைக்கப்பட்டிருந்தாள். யார் யாரோ வந்தார்கள், அழுதார்கள், என்னென்னவோ புலம்பினார்கள், போனார்கள்..

சுசியால் ஒன்றும் செய்ய முடியவில்லை.

ஈமச்சடங்கு நிறைவுற்றது.

என்ன செய்கிறோம் என்ற சுயநினைவு இல்லாமலேயே மீண்டும் தன் தாய் வீட்டில் தஞ்சம் புகுந்தாள். சடங்கு சம்பிரதாயம் என ஏதேதோ செய்தார்கள். செய்யச் சொன்னார்கள்.

ஒரு நொடியில் சூனியமாகிவிட்ட வாழ்வை எண்ணித் துடித்தாலும், விதியை யாரால் நோக முடியும்.

நாட்கள் நகர்ந்தன. நடப்பு மாறவில்லை. தனிமை சுசியைக் கொல்ல முயன்றது. பிள்ளைப்பாசம் உருகி உருகி ஏங்க வைத்தது. ஏக்கத்தில் வீழ்ந்து இதயம் சிதைந்து போனாள்.

மாதங்கள் கடந்தன. துயரம் வாட்டும் போது கண்ணீர் விடுவதும், ஏக்கம் வரும் போது வெறி பிடிப்பதும் வழக்கமாகவே, சுசிக்கு வாழ்வே வெறுத்துப் போனது. அவள் வேண்டியதெல்லாம் ஒரு மாற்றம், வேறு வாழ்க்கையல்ல. எனவே, தான் இடைவிட்ட வேலையில் மீண்டும் இணைந்தாள். அந்நிறுவனமும் சுசியின் திறமையை உத்தேசித்து அவளை மீண்டும் பணியில் அமர்த்திக் கொண்டது.

வேலை செய்வதைத் தனது பற்றாக்கிக் கொண்டாள். அந்த பரபரப்பில் தனது துன்பமிக்க, அநாதரவான நிலையை ஓரளவு மறக்கவும் தலைப்பட்டாள். அதுவே நிதன் எப்போதும் தன் அருகிலேயே இருப்பதைப் போன்ற பிரமையை ஏற்படுத்தி, அதில் ஓரளவு நிம்மதியும் கண்டாள்.

இவ்வளவு நாட்கள் இன்பங்களின் கோர்வையிலிருந்து சுழன்று, கஷ்ட ஜீவனம் நடத்தியாயிற்று. இது போதாதென்ற எண்ணம் நம்மை ஆட்டுவிக்கும் மாயக்கரங்களுக்குத் தோன்றியது போலும்.

எனவேதான், நிதனின் தாய் களத்தில் குதித்தாள்..

திடீரென சுசியைத் தேடி வந்தவள்

"நீ எதற்காக வேலைக்குப் போகிறாய்?"

"வாருங்கள் அம்மா அமருங்கள்!! எப்படி இருக்கிறீர்கள்?"

என்றாள் சிரத்தையற்ற குரலில். அது அநாவசியமான வினா என்பது தெரியுமல்லவா?

"தெரியவில்லை.. ஆனால் இது ஒருவகையில் நிம்மதியைத் தருகிறது! எனது தனிமையிலிருந்து விடுதலை கிடைக்கிறது.!!!"

"ஓஹோ..தனிமையிலிருந்து விடுதலையா? இல்லை துணையா?"

"என்ன சொல்ல வருகிறீர்கள் அம்மா?"

"இதோ பார்.. என்னால் மூடிமறைத்துக் கதைக்க முடியாது. நீ வேலைக்குப் போவது எங்களுக்கு இஷ்டமில்லை. நிதனின் இடத்தை உரிமை கொண்டாட, இன்னொருவனை நீ அமைத்துக் கொள்வாய்!."


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"!.. நிறுத்துங்கள்.. என்ன வார்த்தைச் சொல்லுகிறீர்கள்! வேலைக்குப் போனால் கெட்டு விடுவேனா? இந்தப் பிறப்பில் நிதனை விட, எனக்கு வேறு வாழ்க்கை இல்லை! இது நிதனுக்கும் தெரியும்! ஒன்றை மனதில் வைத்துக் கொள்ளுங்கள். நான் இழந்தது நிதனை மட்டுமல்ல.. இதனை உங்களுக்காக கூறுவதாக எண்ண வேண்டாம். அப்படியே இருந்தாலும் உங்களுக்கு என் மீதான உரிமை அற்றுவிட்டது!"

"உரிமை அற்றுவிட்டதோ! நிதன் மட்டும் இருந்தால்!"

"!அவரும் இதையே தான் சொல்லியிருப்பார்..!!!

என்றுவிட்டு அறைக்கதவை மூடிக்கொண்டாள்..

அன்று மூடிய கதவு இரண்டு நாட்களாகிய பின்னும் திறக்கவில்லை. அவ்வப்போது தாயார் வந்து, எட்டிப்பார்த்துவிட்டுப் போகிறாள். சுசியின் மனஓட்டம் அவளுக்கு நன்றாக தெரிந்திருந்த படியால் அவள் ஒன்றும் பேசவில்லை.

சுசியின் மன ஓட்டமோ சொல்லும் படியாக இல்லை.

தன் கணவனையே நொந்தாள். அன்று அவன் சற்று சிரத்தையாய் இருந்திருந்தால் இந்நேரம்..

பெண் விடுதலை என்று வாய்கிழிய முழங்குகிறார்கள்.. ஆனால் அளிக்க மறுக்கிறார்கள்.. கைம்பெண் என்றால் வேலைக்குப் போகக்கூடாதா..? அது என் தனிப்பட்ட சுதந்திரம்.. நான் நிதன் மீது வைத்திருக்கும் அன்பு உண்மையானது.. அது நிதனுக்கு நேர்மையானது. வாழ்விழந்து நின்றால் தனிமையாக வாழ்வது தவறா..? எந்தவொரு ஆதாரமும் இன்றி ஒரு பெண்ணைப் பற்றி எவ்வாறு குறைகூற முடியும்? இதே என் மரணம் நிகழ்ந்து நிதன் மட்டும் தனியாக வாழ்ந்திருந்தால்!? இன்னும் என்னை அடிமையாக நடத்த காரணமென்ன?" என்றவாறு சிந்தித்துக் கொண்டிருந்தாள்.

மூன்றாவது நாள் சுசியின் தாயார் அறையின் உள்ளே வந்து சுசியின் தலையை இதமாகத் தடவியவாறு சொன்னாள்:

"சுசி அவர்கள் கூறியதை நீ தவறாக எண்ணிக்கொண்டாய். இது தான் உலகம்.. பெண்ணை பெண்ணே இழிவுபடுத்தும் நோக்கில் பேசினால், அவர்களின் வாழ்வும் அப்படித்தான் இருந்திருக்கும்.. அவர்கள் கேட்டது சகஜமாக எல்லோரும் எண்ணும் எண்ணம் தான். எப்போது ஒரு பெண்ணின் உணர்வுகளை இன்னொரு பெண் மதிக்கிறாளோ, அன்றுதான் இவ்வெண்ணம் நீங்கும்.. வருந்தாதே! இதற்கு நாமே காரணவாளி!"

"ஆனால் அம்மா!."

"!வேண்டாம் எழுந்திரு! வேலைக்குப் போகலாம்!"

"!!!"

சுசியின் வாழ்வு இன்னமும் துன்பமயமானதுதான். ஆனால் தெளிவானது, திட்டமானது!!!!


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தாய்மை

தி. கேதிஸ்வரன்,
விடுகை வருடம்,
இணைந்த சுகாதார விஞ்ஞான கற்கைகள் பீடம்.

மியாவ்!

பெட்டிக்குள் இருந்து வந்த குரல் மிகவும் மெலிந்திருந்தது. சிறிது நேரத்தின் பின்னரான ஒரு மரணத்தின் ஆரம்பக் குரலாய் அது இருந்தது. நான் பெட்டியை மெல்லத் திறந்து உள்ளே பார்த்தேன். பிறந்து நான்கு நாட்களேயாயிருந்த அந்த சின்னஞ் சிறிய பூனைக் குட்டிகள் முழுப் பட்டினியால் மேலும் வாடி வதங்கி தமது கடைசி நிமிடங்களுக்காய் காத்திருந்தன. பிறந்ததில் இருந்தே உணவெடுக்காத பசியின் கொடுமை அவற்றின் மெலிந்த குரலில் செறிந்திருந்தது. அவற்றிற்கு அருகே சிறிய கிண்ணியில் இருந்த பாலும் துணிச்சுருளும் என் ஜீவகாருண்யத்திற்குச் சாட்சி சொல்லின. ஆனால், என் முயற்சியின் தோல்வியை பூனைக்குட்டிகளின் நிலை எடுத்துக்காட்ட அவற்றின் தாய் மீது அளவுக்கதிகமான கோபம் ஏற்பட்டது.

சிறு வயதில் இருந்தே எனக்கு பூனைகள் என்றால் தனிப் பிரியம். எல்லாக் காலத்திலும் எங்கள் வீட்டில் ஒரு பூனை இருக்கும். நான் வளர்த்தது ஆண் பூனைகள் தான் என்பதால் ஒருகுறித்த வயதை அடைந்த பின்னர் எங்காவது சென்றுவிடும். சில வேளை பெண் பூனைகள் இருக்கும் வீடுகளுக்குச் சென்றுவிடும் போல. நானும் சலிக்காமல் இன்னொரு பூனையை வளர்க்கத் தொடங்குவேன். அப்படி சில பூனைகளை வளர்த்து மறுவீடு அனுப்பிய பின் கடைசியாக வளர்க்கத் தொடங்கியதுதான் இப்போதைய பெண் பூனை.

மாமா வீட்டில் இருந்து அந்தப் பூனையைக் கொண்டு வந்த எனக்கு, முதலில் அது ஒரு பெண்பூனை என்று தெரியாது. ஆனால், அம்மாவின் அனுபவம் அதைக் கண்டு கொள்ள உடனடியாக பூனையை வெளியேற்றும்படி எதிர்ப்புக்கள் தோன்றின. ஆனாலும் எனக்கு மனம் கேட்கவில்லை.

"பெட்டப் பூன தம்பி. ஒரே குட்டியாப் போட்டுக் கொண்டிருக்கும்."



அம்மா தன் எதிர்ப்புக்குக் காரணம் சொல்லிய போதும் எனது கெஞ்சல்களுக்குப் பின்னர் பூனை தொடர்ந்தும் வீட்டில் இருக்கும்படி அனுமதி கிடைத்தது.

ஆனால், எப்போதும் அம்மாவிற்கும் பூனைக்கும் எட்டாம் பொருத்தம் தான். அம்மாவின் கோபத்தைக் கிளறுவதுதான் தனது வேலை என்று எண்ணி நடந்து கொண்டது அந்தப் பூனை. எலியைப் பிடிக்கிறேன் என்று சமையலறைக்குள் பொருட்களைத் தள்ளி உருட்டும் போதும், மீன் பொரியலை களவாடி உண்ணும் போதும் பூனைக்கும் மட்டுமல்லாது எனக்கும் போதுமான அர்ச்சனை கிடைக்கும். அதற்குப் பழிவாங்குவது போல பூனையும் அடுக்கடுக்காக தனது சேட்டைகளைத் தொடரும். ஒரு முறை அம்மாவின் படுக்கையில் வாந்தி செய்த போது அம்மாவின் காளி அவதாரத்திற்குப் பயந்து நான் இரண்டு நாட்கள் மாமா வீட்டில் அடைக்கலமாக பூனையும் ஒருவாரம் தலைமறைவாகிவிட்டது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வயது ஆக ஆக பெண் பூனையான அதற்கு பொறுப்புக்கள் வந்ததோ என்னவோ தனது சேட்டைகளை அது மெல்லக் குறைத்துக் கொள்ள வீட்டில் அமைதி நிலவியது. ஆனால், கொஞ்சக் காலத்தில் பூனையின் வயிறு பெரிதாகிக் கொண்டிருக்க அம்மாவின் கோபப் பார்வை என்னைத் துளைத்தது.

"குட்டி போட்ட கொஞ்ச நாளில், அது வளர்ந்த பிறகு வேறு எங்கேயாவது கொண்டு போய் விட்டுடுறன்" என்று சத்தியங்களும் சமாதானங்களுமாய் அம்மாவின் கோபத்தை நான் தணிக்க, பூனையும் தனது முதற் பிரசவத்திற்கு தயாராகிக் கொண்டிருந்தது.

ஒரு நாள் இரவு முழுவதும் கத்தித் தொல்லை கொடுத்த பூனையை மறுநாள் காலையில் இருந்து காணவில்லை. ஆனால், பழைய பொருட்களைப் போட்டு வைக்கும் அறைக்குள் இருந்த ஒரு 'காட்போட்' பெட்டிக்குள் இருந்து வந்த சத்தம் பூனையின் பிரசவத்திற்கு சாட்சி சொன்னது.

ஆனால், என்ன நேர்ந்ததோ என்னவோ பூனை நெடுநேரம் திரும்பி வரவில்லை. பசியினால் போலும் அந்தக் குட்டிகள் அளவை மீறிய குரலில் கத்தத் தொடங்கின. அம்மாவிற்குக் கேட்டுவிடுமோ என்ற அச்சம் என்னைச் சூழ்ந்து விட சிறு கிண்ணியில் பசுப்பாலை நிரப்பி பூனைக்குட்டிகளின் முன்னால் வைத்தேன். கண்களைக் கூட திறந்திருக்காத அவற்றினால் பாலை சுயமாக குடிக்க முடியாது என்ற உண்மையை உணர்ந்து துணிச்சுருளினால் பாலை நனைத்து கொடுக்க முயன்றேன். அந்த முயற்சியும் வெற்றியளிக்கவில்லை.

நேரம் செல்லச் செல்ல பூனைக் குட்டிகளின் சத்தம் அதிகமாகிவிட நான் அஞ்சியது போல அம்மாவின் கவனத்தை அது கவர்ந்தது. பூனைக் குட்டிகளைப் பார்த்து விட்டு

"முதல் குட்டிதானே அதுதான் சள்ளையா இருக்கு. இதுகள் தப்பாது தம்பி" என்று அம்மா சொல்ல எனக்கு கவலையாக இருந்தது.

"இப்படிக் குட்டிகள் பிறந்தா தாயே அதைச் சாப்பிடிடும்."

அம்மா சொல்லி விட்டுச் செல்ல நான் அதிர்ந்தேன்.

"என்ன தாயே குட்டிகளைச் சாப்பிடுமா? இல்ல இல்ல அம்மா சும்மா சொல்லுறா"

என்னை நானே சமாதானப் படுத்திக் கொண்டேன்.

ஆனால் குட்டிகள் பிறந்து நான்கு நாட்கள் ஆகியும் அவை பசியில் கதறும் போதும் தேடிவந்து பால் கொடுக்காத என் பூனை மீது அளவிட முடியாத கோபம் ஏற்பட்டது. அந்தக் கோபம் வெறுப்பாக மாறியது.

"சீ ஐந்தறிவு மிருகம் தானே இதுகளுக்கு எங்கு தாய்மையைப் பற்றித் தெரியப் போகுது."

மிருகங்களின் மீது இருந்த அன்பெல்லாம் வெறுப்பாய் மாறிப்போனது. மெல்ல மெல்ல குறைந்து கொண்டே வந்த பூனைக்குட்டிகளின் குரல் மறுநாள் காலை சுத்தமாக நின்று விட்டிருந்தது. நான் பெட்டியைத் திறந்து பார்த்திருந்த போது இரண்டு பூனைக் குட்டிகளின் உடலையும் எறும்புகள் மொய்த்திருந்தன. என் கண்களில் கண்ணீர் நிரம்பியது.

அப்போது ஐந்து நாட்கள் வெளியே சுற்றிய சோர்வு போல மெதுவாக நடந்து வந்து மெல்லக் கத்தியாறே தன் உடலால் என் கால்களை வருடிய பூனையின் மீது கோபமும் ஆத்திரமும் பொங்க அதைக்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கால்களால் எட்டி உதைத்தேன். அந்த உதையின் வேகத்தில் சிறிது தூரம் அந்தரத்தில் பயணம் செய்து சுவரோடு மோதி விழுந்த பூனை வேகமாக அறையை விட்டு ஓடியது.

"சனியனே எண்ட கண்ணுக்கு முன்னால வராத"

நான் கோபமாக இரைந்தேன். அப்போது அறைக்குள் வந்த அம்மா என்னை ஒரு கணம் பார்த்து விட்டு பின்னர் எதுவும் சொல்லாமல் வெளியேறி விட, நான் அந்தப் பெட்டியைத் தூக்கிக் கொண்டு கொல்லைப்புறம் சென்றேன். அங்கே வாழைமரம் ஒன்றின் அடியில் குட்டிகளைப் புதைத்துவிட்டு நான் வீட்டுக்குள் வரும்போது கொல்லைப்புற வாயிலில் இருந்த பூனை என்னைப் பார்த்து "மியாவ்" என்றது.

என்னுள் கோபம் உக்கிரமாய் மாற அருகில் இருந்த விறகுக் கட்டையை கையில் எடுத்தேன் அப்போது அங்கே வந்த அம்மாவைக் கண்டுவிட்டு நான் அந்த கட்டையை கீழே போட அம்மா தன் கையில் இருந்த பால் நிரம்பிய கிண்ணியை பூனையின் முன்னர் வைத்தார். அந்தப் பூனையைக் கண்டாலே கொப்பளிக்கும் அம்மாவின் அந்தச் செய்கை என்னை வியப்பில் ஆழ்த்தியது.

வழமையாக ஒரு கிண்ணிப் பாலை ஒரு நிமிடத்தில் காலி செய்யும் பூனை அப்பாலைத் திரும்பியும் பார்க்கவில்லை. மெல்ல 'மியாவ்' என்றவாறே அம்மாவின் கால்களில் உடலைத் தேய்த்துவிட்டு நான் பூனைக்குட்டிகளைப் புதைத்த இடத்திற்குச் சென்று மெல்ல அந்த இடத்தை முகர்ந்து பார்த்தது. பிறகு மெல்ல நடந்து சென்று எங்கோ மறைந்தது. நான் அம்மாவைத் திரும்பிப் பார்த்தேன். அம்மாவின் கண்கள் கலங்கி இருந்தன. நான் நீண்ட நேரம் யோசனை செய்தவாறே நின்றிருந்தேன்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புனைவு -2

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யதார்த்தம் புரியுங்கள்

எம். ஜே. எப். நுஸ்லா,
விடுகை வருடம்,
புவியியல் விசேட துறை,
கலைப்பீடம்.

மனித நேயம் மறந்து போய்
மிருக குணத்தில் இறைவன் படைத்த
மனித உருவங்கள் வாழும்
இடம் - இதோ இங்கே!

குட்டக் குட்டக் குனிகின்ற
தலைகள் இங்கே இருக்கும் வரை
தவளைக் கூட்டணியும்
ஆர்வம் கொள்ளும் - அரசியல் பேச

திறமைக்கும் தகுதிக்கும் வேலை தேடாதே
எதற்கும்
ரேகைகளை பரீட்சித்துக் கொள்- பல வேளைகளில்
அதிஷ்டம் தான் கைகொடுக்கும்
மீண்டும் அதே அறிவீன உலகம்

சாலைகளில் மரங்கள் நட்டு
பூப்பறிக்கும் சமுதாயமல்ல இது
வேற்றுமைகளை மூட்டிவிட்டு
மூண்ட தீயில் குளிர்காயும்
இன்னதென்று இதுவரையில்
அடையாளம் காட்டப்படாத படைப்(பிணங்கள்)

எத்தனை காலம் காத்து நிற்பாய்!
இத்தனை தலைகள் முன்னிங்கும் வரை
உனது கழுத்து தெரிய வாய்ப்பேயில்லை
தலை(யெழுத்தே) மாறிப் போனது
தராமல் போன ஒற்றைக் கையெழுத்தால்.

பதவியிலிருப்போருக்கு பணிவிடையின்
பொருள் தெரிய வேண்டும்
அப்போது தான் காத்து நிற்பதற்கும்
ஓர் அர்த்தம் கிடைக்கும்

பணநோட்டுக்குள் தான் இன்று
படிப்பு இருக்கின்றது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காசுப் பொட்டலங்கள் கவனம் !
திருடர்களுக்குத் தான் வாய்ப்பு அதிகம்

உருவத்துக்கும் உரையாடலுக்கும்
மதிப்பெண்களென்றால்
நேர்காணலுக்கு வருவோர்க்கு
மூளையை
வாயில் தான் பொருத்த வேண்டும்

காலத்தைச் சுருக்கி
கல்வியைச் சுருக்கி
பட்டத்தைச் சுருட்டி
கையில் தராதீர்கள்

விரித்துப் பார்க்கையிலே
எல்லாம்
வெறுமையாய் தான் தெரிகின்றது

கடல் கடந்து
காடெல்லாம் திரிந்து
சொட்டச் சொட்ட சேமித்து வந்ததெல்லாம்
கடலோடு கலந்து
வந்த வழி போய் விட்டால் ???

காலத்தை ஓட்ட
கல்வியை விரட்டாதீர்
கல்வியைக் கொடுக்க
காலத்தைப் பிடியுங்கள்

உருவத்திலும் சரி உள்ளத்திலும் சரி
நானும் அவனும் ஒன்றல்ல
கடவுளின் கெட்டித்தனத்தை முரண்பாடுகளுக்கு
முதலீடாக்காதீர்கள்.

சந்தர்ப்பத்தை வழங்குங்கள்
யாருக்கென்று விற்காதீர்கள்
என்னையும், உங்களையும் மறந்து விடுங்கள்
மனிதர்களாய் மட்டும்
இணங்கண்டு கொள்வோம்
இணங்காட்டிக் கொள்வோம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மீண்டும் ஒரு முல்லைப் பாட்டு

*அன்பழகன் நித்யா,*
*விடுகை வருடம்,*
*தமிழ் விசேட துறை,*
*கலைப்பீடம்.*

---

**ப**ரந்த வானம்!
பார்வைக்கெட்டியவரை பசுமை!
கொஞ்சி கவிபேசி
கொட்டும் அருவிகள்
தலையசைத்து தாலாட்டும்
தண் தென்றல்!

தலைவனும் தலைவியும் அன்பாலே இணைந்து
இன்ப வாழ்வு வாழ்கின்றனர்.
இன்புற்று வாழ
இதயம் மட்டும் போதாதே
பொருளும் புகழும் வேண்டுமே
புறப்பட்டு விடுகிறான் தலைவன்
புலம்பித் தவிக்கிறாள் தலைவி!

காலம் கடக்கின்றது
கார்காலம் தொடங்குகின்றது
காத்திருக்கின்றாள் தலைவி!
கார்மேகம் சூழ்ந்த போதும்
காதலனைக் காணவில்லை
கலங்கித் தவிக்கிறாள் தலைவி

காலையும் வந்தது!
மாலையும் வந்தது!
காதலனை மட்டும் காணவில்லை
அழுது கலைக்கின்றாள் காதலி!

பிரிவாற்ற இயலாதவளை
ஆற்றியிரு எனக்கூறி
ஆறடி கடந்து சென்றவனின்
ஆலோசனையை காணவில்லை
ஆற்றாதவளாகின்றாள்
ஆருயிர் காதலி.

கொதிக்கின்ற மனம் குளிர்ந்திடவே
கொட்ட துவங்குகின்றது கார்மேகம்!
குளுமையை தாண்டி
கொதிக்கின்றது அவள் மனம்!
பொறுக்க முடியாதவளாய்
புலம்பித் தவிக்கிறாள் தலைவி!

அரற்றுகின்றாள்!
அழுகின்றாள்!
விழுகின்றாள்!
வேண்டுகின்றாள்!
புதினம் தெரியவில்லை!
பித்துப் பிடித்தவளாகின்றாள்.

தங்கள் பார்வைதானே எனக்கு சூர்யோதயம்!
தங்கள் வார்த்தைதானே எனக்கு கீதம்!
தங்கள் இதழ் பட்ட உணவே எனக்கு அமிர்தம்!
தங்கள் நிழலே எனக்கு சுவர்க்கம்!
தங்கள் சொல்லும் செயலும் பொழிலும்
காண்பதன்றி
இப்பாவி வேறொன்றும் அறியேன்
வேறெதிலும் இன்பம் காணேன்! என்றழுதாள்.

சதா நேரமும் தன்னை சார்ந்தோனையே
சேர்ந்திருந்தாள்
உண்ணாது உறங்காது உறைந்திருந்தாள்
தலைவி
தலைவனோவெனின் அவனும் அப்படித்தான்!
உண்ணாது உறங்காது வினை செய்தான்!
வஞ்சி மலைக்கு வணக்கம் செலுத்த
தர்க்கம் செய்தான்!
தலைவியை மறந்தான்!
நீத்தார் பெருமையை நினைத்து வருந்துகின்றான்!

வீரம் போந்து விரவி நின்ற
புண்பட்ட களிற்று யானைகளை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்டு வருந்துகின்றாள்- ஆயினும் ஓயவில்லை.
போர் முரசு கொட்டுகிறது
வெற்றிவேல்! வீரவேல்!

வினை முடித்தான் தலைவன்
வெற்றி முரசு கொட்டித் தீர்க்கின்றது
எங்கும் வெற்றி! எங்கும் வெற்றி!

வெற்றித் திருமகள் வீரன் கைகளை பற்றிப்
பாடுகிறாள்
வெற்றிப் பாடலை
எங்கும் வெற்றி! எங்கும் வெற்றி!

வினை முடிந்தாயிற்று
வீடு செல்ல வேண்டும்
விரைகின்றான்!
மனம் பறக்கும் அளவிற்கு இந்த மா
பறப்பதில்லையே
விரைவிக்கின்றான்!

வான் போன்ற பரந்த விழிகளில்
கடல் புகுந்துக் கொண்டு கலகம் செய்தது!
உள்ளம் கொந்தளிக்கிறது!
புயல் சூறாவளி சுனாமி நடுக்கம் சரிவு எரிமலை
இத்தனையும் ஒன்றாக வந்தால் பூமி தாங்குமா?

பூமிக்கே அந்நிலையென்றால்!
இப்பூவிழியாள் எங்ஙனம் தாங்குவாள்?
அயலோர் ஆறுதல் பயனற்றுப் போனது!

காற்று விசிறி அடிக்கிறது
கதவு யன்னல்கள் மேளம் அடிக்கின்றன.
காற்றை கடந்து கடுகி வந்ததோர் ஒலி
கதவிடுக்கிலே புகுந்து- அவள்
காதிலே பாய்கின்றது!

தன்னிலை உணர்கிறாள்!

தலைவன் வந்து விட்டதை அறிகிறாள்
தறிக்கெட்டு ஓடுகிறாள்! தலைகால் புரியவில்லை
தலைவனைக் கண்டதும்
தடுமாறி நின்றுவிட்டாள்!
தலைவனோ வீரநடை போடுகிறான்!

இனி
தயக்கம் என்ன? தடுமாற்றம் தான் என்ன?
தவம் கிடந்த பூமாலை
தலைவன் தோள் சேர்கிறது
தடையேதும் இல்லாமல்!


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என் தேசம் என் மக்கள்

உ. தர்ஷினி,
விடுகை வருடம்,
விவசாய பீடம்.

உலக வரைபடத் தாளின்
ஓர் ஓரத்தில்
பாதி முற்றுப் புள்ளியாய்
தன் முகவரியை இழந்து
விடுதலைக் கனவுகளை தொலைத்து
விம்மி நிற்கின்றது
என் தேசம்

பிறப்பு எடுத்த நாள் முதல்
இறந்து போகும் நாள் வரை
எம் மக்களின்
கனவுகளை சிதைத்து
உரிமைகளை மறுத்து
உயிர் வாழத் துடிக்கும்
ஓநாய் தலைமைகளிடம்
மண்டியிட்டு நிற்கின்றனர்
ஆட்டு மந்தைகளாய்
எம் மக்கள்

கறை படிந்த கைகளும்
காட்டிக் கொடுக்கும் நாய்களும்
என் தேசத்து விடுதலையை
மண்ணிற்குள் புதைத்திட
தம் சுயம் இழந்து நெறி புரண்டு
நிகழ்ந்திடும் பிழைகளை
நடைமுறை என்று கொண்டு
எப்படியும் வாழ்ந்திடும் கொள்கையில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வழி தவறி நிற்கின்றது என் மக்கள் கூட்டம்

என் மக்களின் இருப்பையே
சிதைத்திடும் நோக்கிலே
உலகத் தலைமைகளும்
உள்ளூர்த் தலைகளும்
நடாத்திடும் அரசியல் சூதாட்டத்தில்
பாஞ்சாலியாய் 'என் தேசம்'
பாண்டவர்களாய் 'என் மக்கள்'
வரவிருக்கும் வனவாசத்தையெண்ணி
கலங்கி நிற்கின்றது என் நெஞ்சம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிறவிப்பிழை

*நஸ்லுன் நஜீம்தீன்,*
*விடுகை வருடம்,*
*சட்டத் துறை,*
*கலைப் பீடம்.*

இரவு நேரம்
ஏகாந்த வேளை
மொட்டை மாடியில் நின்றேன்,
தென்பட்டது வட்டநிலவு!

வெண்மதியே! வெள்ளித்துண்டே!
பாற்கடல் பிரசவித்த பவளத்தட்டே!
வெள்ளி நிலவே! முல்லை மொட்டே!
ராத்திரியில் முகங்காட்டும் அல்லிச் செண்டே!
அறிய வேண்டும் உள் அகப்பொருள்!
வினவவேண்டும் சில வினாக்கள்!

பிரபஞ்சப்பந்தத்தில் பூத்த
பிரவாள மலரே!
பிறவொளியில் பிரசன்னம் தருவது- உன்
பிறவிப்பிழையன்றோ? -நீ
பிறக்கும் பிரகாசம், பிறபொருள் என்பது
தன்மானக் குறைச்சல் அன்றோ?
தற்பெருமை அணிந்த தங்க நிலாவே,
தற்குறிப்பேற்றம் தகுமோ?

அழகு மினிரே! ஆம்பல் மலரே!
ஆணவம் கொண்ட நீ
அடிக்கடி அழிக்கப்படுவது, -உன்
அகந்தை அதிகரிக்கும் பொழுதுகளிலா?

மயக்கும் மதியே! மோகன ரதியே!
எத்தனை குழிகள் உன் முகத்தில்?
அத்தனையும் மறைத்து முறுவல் அணிகிறாய்,
தற்காலப் பெண்களுக்கும் நீதான் இதைக்
கற்றுக்கொடுத்தாயோ?

மெழுகுப்பாவையே!
மிருதுவான மங்கையே!
மேக முந்தானைக்கு நாணயச் சாயலிட்டு உன்
மேனி மூடியால் என்ன?
மெய்காக்க மறந்த பெண்மகளா நீ?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பால் வீதியில் பவனிவரும்
பருவ நிலவே
ராத்திரியில் மட்டும் முகம் காட்டும் உன்னை
பத்தினியின் பட்டியலில்
சேர்த்துக்கொள்ள பெண்ணினம்
ஒத்துக்கொள்ளுமா?

நீண்ட இடைவெளிக்குப் பின்
நிலவு பதிலுரைத்து

மானிட மங்கையே! நானில நங்கையே!
மொத்தமாய் வசைபாடி விட்டாய்!
அத்தனையும் காரணம்,
பெண்ணினம் மட்டுமே தத்தெடுத்த குணம்-
உன் இனத்தின் சாயல் -
பொறாமை!

பாரிஜாதம் என்னைப்
பார்த்து சிரித்தது!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எங்களின் நோக்கில் உங்களின் பார்வைகள்


*ரசிதா புவனேந்திரன்,*
*விடுகை வருடம்,*
*தமிழ் விசேட துறை,*
*கலைப்பீடம்.*

**க**ட்டிய மனையாளைக்

கானகத்தே விட்ட

அயோத்தி ராமனும்

அயோக்கியன் தான்!...



கல்லாக்கிப் பெண்ணை

கண்மூடி மோனத்தில் திளைத்த

முக்காலமுணர்ந்த முனி சிரேஷ்டனும்

முறைகெட்டவன் தான்!...

பாஞ்சால தேசத்தின் மகளை

பந்தயத்தில் பணயம் வைத்த

பாண்டுவின் புதல்வனும்

பாரிலே பண்பற்றவன் தான்!...

சித்திரப்பாவை சிவகாமி மனதிலே

காதலை வளர்த்துக் கானலாய் மாற்றிய

மாமல்ல மன்னனும்

மாபாவி தான்!...

காத்த மனையாள் அகத்திலிருக்க

காதலி தேடி ஏதிலியான

கோவலன் என்பவன்

கேவலமானவன் தான்!...

கண்ணம்மாவைக் கருத்திலிருத்தி

செல்லம்மாவைச் சிறுமைப்படுத்திய

பாரதி கூடப் பெண்ணுக்குப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாதகம் செய்தவன் தான்!...

இதிகாசக் கதைகளைக் கூறி
இனியும் என்னை ஏய்க்காதே
இலக்கியங்களை எனக்காக
இனியொரு போதும் வம்புக்கிழுக்காதே


ஏனெனில்,
நான் சுயமானவள்
கட்டுக்களை அவிழ்த்தவள்
தடைக்கோடுகளை அழித்தவள்!


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வருணனும் மண்மகளும்

கு.பிரதீபா,
மூன்றாம் வருடம்,
தமிழ் விசேட துறை
கலைப்பீடம்.

எத்தனை வேகம் எத்தனை வேகம் உங்களுக்குள்
நீங்கள் இப்படி வேகம் காட்டினால்
எந்தன் பெண்மை தாங்குமா? என்னிடம்
ஏன் இந்த கோபம்? மேகத்துக்குள்
ஏன் இத்தனை வேகம்?
ஏன் ஆடைகளை ஏன் இப்படி உரித்தெடுக்கின்றீர்?
என்னவரே! எப்போது நீர் துட்சாதனன் ஆனீர்?
உம் குழந்தைகளை ஏன் இப்படிப் புரட்டி விடுகின்றீர்?
காயமாவது மேலும் என் தேகம்
ஏன் இத்தனை தாபம் உங்களுக்குள்
பதில் சொல்லுங்கள் என்னவரே?
தந்தை ஏன் எம்மைப் பந்தாடுகிறார்
என்று கேட்ட நம் நீர்க்குழந்தைகளுக்கும்
அழகாய் நாம் நெய்துதந்த பசுமை ஆடையினை
ஏன் இப்படி கிழித்தெறிகின்றார் தந்தை?
என்று கேட்கும் குழந்தைகளுக்கும்
பதில் சொல்லுங்கள் வருண தேவனே!
ஏன் இதயநிலங்களில் சிலவற்றை வெறுத்தோ
நீர்த்தடம் பதிப்பதில்லை!
சில இடங்களிலோ இருக்கும் தடங்களையே
கிளர்த்திவிட்டுச் செல்கிறீரே
பதில் சொல்லுங்கள் என்னவரே நீர்
மழையாய் வருடிய போதெல்லாம் மயங்கிய
என்தேகம் இன்று மடிந்துகொண்டு இருக்கிறது!



என்ன பதில் சொல்வது என்னவளே!
என்மகளே! நான் உனக்கு எப்படி சொல்வது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஊருக்காய் உழைக்க நம் குடும்பம்
மேலெழுந்து சேமித்து மழையாய் பனியாய் இறங்கி
உன்மேல் நீர் தூவி உனக்காய்
பசுமை ஆடை நெய்து உன்மேல் படர்வித்தால்
நம் மனித உறவுகள் நம்மை மறந்து
நான் வரும் வழியெல்லாம் அடைத்து
உஷ்ணமாக்கி உன் பசுமையைக் கிழித்தெறிந்து
உன்மேல் மாடிகளைக்கட்டி மகிழ்கின்றனர்
நானோ உனைத்தொட முடியாமல் தவிக்கிறேன்
உன் பாலைகளை அந்தப் பாவிகள்தான்
விளைவித்தனர், அதற்காய் விதைவிதைத்தனர்
ஆனால்! இன்று நான் உன்மேல் இப்படி
தாகமாய் பாய்ந்துவர காரணம் உண்டு
எப்படியும் உனை சந்திப்பேன் போகமாய் சில காலங்களில்
ஆனால் இன்னும் சில நூற்றாண்டுகளில் என்னாகும்?
உன் போர்வைகள் கிழிக்கப்பட கிழிக்கப்பட
என் பாதைகள் தடைப்படுகின்றது
உனை என்றாவது தொடுவேன் என்ற நம்பிக்கை
வற்றுகின்றது நம் குழந்தைகளைப் போல
என் தாபம் தீர உனை அணைக்க நினைக்கின்றேன்
இது சிலர் தாகம் தீர்க்கும் சிலர் யாகம் தடுக்கும்
இன்று உனைநான் தீவிரமாய் தழுவும் போது
ஏற்படும் வலியைவிட நான் உனை
நிரந்தரமாய் தீண்டாமல் நிற்கும் போது
எழும் உணர்வுகளை எண்ணத்தான் எனக்கு
பயமாய் இருக்கின்றது!!

என் தேவதையே மண்மகளே! உனக்குப்
புரிகிறதா? புரிந்தால் உன் மனித உறவுகளுக்கு
இதனை உணர்த்திவிடு வருகிறேன் சகியே
உன் வாசல்களை திறந்து வைத்துக்கொள்
உன் வருணதேவனுக்காக!


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விரக்தி

க.கஸ்தூரி,
இரண்டாம் வருடம்,
மெய்யியல் விசேட துறை
கலைப்பீடம்.

தனிமை என்னை உருக்குலைக்கிறது
இறப்பிற்கான வழிப்பாதை மாத்திரமே
என் விழிமுன் தோன்றுகிறது வாழ்க்கைப்பாதையில்
பயணித்துக் கொண்டேயிருக்கிறேன்
வாழ்க்கை எது என்று தெரியாமல்
பிடிமானம் இல்லாத மரம் போல் சாயப்போகிறேன் - நான்
யாருமேயில்லை என் அருகில்

வாழ்வில் பற்பல கற்பனைகளோடு காலடி
எடுத்து வைத்தவள் தான் நானும்
ஏதேதோ ஆசைகள், ஆவல்கள்
எதிர்பார்ப்புகள், ஏக்கங்கள் - என்னுள்
வெளியுலகிற்கு நானொரு பட்டாம் பூச்சி
எனக்கல்லவா தெரியும் கூண்டுக்கிளி தான் நான்
கூண்டுக்கிளி தான்
அனைத்தும் ஒடுக்கப்பட்ட நிலையிலும்
ரசிக்கப்படுவதற்காய் நடிக்கப்பழகிக் கொள்கிறேன்
பலரும் பலவிதமாய் என்னைத் தாண்டிச் செல்கின்றனர்
ஏன்? ஏன்? ஒருவர் கூட என்னை
விடுவிக்க முனையவேயில்லை காரணம்
வெளியுலகிற்கு நானொரு பட்டாம் பூச்சி
சுதந்திர பட்டாம் பூச்சி.
நான் நீங்கள் திருப்பவேண்டிய பக்கம் அல்ல உங்களால்
வாசிக்கப்பட வேண்டிய புத்தகம்
நானும் ஒரு மனிதன்
அதிலும் ஒரு பெண்...!!
இழப்புக்களைத் தாங்கமுடியாத


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இளகிய மனக்காரி நான்
ஏமாற்றங்களைக் கண்ட போது
தடுமாறியது நிஜம்
தத்தளித்தது நிஜம் - ஆனால்
இன்று ஏமாற்றம் தான் வாழ்வென்றான போது
இயல்பாய் நடிக்கக் கற்றுக் கொண்டதும் நிஜம்

என் இனிய உறவுகளே
நீங்கள் போன பாதையெல்லாம்
உங்கள் கண்ணீருக்கு விருந்தாய்
காயங்களுக்கு மருந்தாய் மாத்திரமே இருந்த என்மேல்
ஏன்? ஏன்? கல்லை எறிந்தீர்கள்?
கருவறையில் சுமந்தவளுக்காய்
காதலைக் கல்லறையில் பூட்டிய எனக்கு
உடன்பிறப்புக்களின் சுயகௌரவத்திற்காய் என்
சுயவிருப்பத்தை புதைத்த எனக்கு
பணம் தான் உலகென்றான பின் - எனக்கும்
உலகத்திலொரு இடம் தந்த தந்தைக்கு
என்ன சொல்லி புரிய வைப்பேன் - உங்களுக்கெல்லாம்
நான் வெறுத்து ஒதுக்கப்பட்டேனா - இல்லை
தனிமையில் கைவிடப்பட்டேனா??

சில சமயங்களில் உணர்கிறேன்
தனிமை என் கற்பனைக்குத் தீனி போடுகிறது
ஏதேதோ எண்ணங்கள் என் மனதில் எழுகிறது
கற்பனைத் திறமை மாத்திரம் தான் - என்
கண்ணீருக்கான காரணம் ஆகிவிடாது
அத்திவாரம் இன்றி இல்லமேது!?
ஏதோ என் நெஞ்சைத் துளைக்கின்றது
விடை தெரியாத கேள்விக்கான
தேடலாய் ஆனதென் வாழ்வு

உறவுகளே!!


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தவறு செய்வதற்கான சந்தர்ப்பத்தை மாத்திரம்
எனக்கு வழங்காதீர்கள் - என்னை
கட்டிவாழத் தெரிந்த எனக்குள்ளும் இன்னும்
உணர்வுகள் ஒன்றும் மரணித்து விடவில்லை
பாவி நானொரு பாவி
வார்த்தைகள் வழியாய் விதந்துரைத்தேன்
என்னை விளக்கியுரைத்தேன்
அதில் குற்றம் தேட முனைந்தனரே ஒழிய
ஏன் என் ஏக்கம் புரிய முனையவில்லை
இறுதியில் விளக்க முடியா புதிரானேனே நான்

இன்னும் குறை கூறாதீர்கள் - உங்களுக்கான
சந்தர்ப்பத்தை அளித்தும் விடை காணவில்லையே நீங்கள்
இல்லறம் வெறுத்தது எனக்கு
துறவறம் விரும்பும் நிலையிலில்லை நான்
இறைவா!
படைப்புக்களில் உனக்கான இழப்பு நான்
எனக்கான கண்ணீர் நீ!!

இந்த சமுதாயம் எதையெதையோ கற்றுத்தந்தது எனக்கு
கண்ணீரை மட்டும் தான் மிச்சம் வைத்தது எனக்காய்
விசித்திரமான உலகமிது
விந்தையாய் கேள்விகளைத் தொடுக்கின்றது
நடப்பட்ட விதை தான் நான்
கண்ணீரால் விருட்சமானேனே...!!

இதுவும் என் வாழ்வைப் போல்
போனா போன பாதையில்
வரையப்பட்ட கிறுக்கலே!!


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வைரமுத்துப் பாடும் பாவேந்தன்

சுகதா சத்தியேந்திரன்,
மூன்றாம் வருடம்,
விவசாய பீடம்.

"கம்பன் வீட்டு கட்டுத்தறியும்
கவிபாடும்" என்கிறார்கள் -வைரமுத்து நீயும்
வார்த்தைக்குப் பல முறைகள்- அவன்
வல்லமையைப் பாடியுள்ளாய்
போற்றுதற்கு ஒரு கவிஞன்
அவனே கம்பன் என்று
போட்டி போட்டு எழுதியுள்ளாய்
மாற்று வழி எதுவுமில்லை.

கற்றுத் தேர்ந்து வந்தானோ? இல்லை
கவிஞனாகவே பிறந்தானோ?
என்ன புலமை! அவன்
கவியில் என்ன புதமை!!

கற்பனையில் நினைப்பவற்றை
கண் முன்னே நிறுத்திவிட்டு
எம்மை கவிபாட சொல்லுகிறான்
முடியவில்லை: அவன் பாடா கவிபாட என்னால்
முடிந்தால் முயலுங்கள்
வைர வரி படைத்த வைரமுத்து நீயே
கை விரித்துவிட்டாய்

கம்பனவன் கவியில் எத்தனை
உவமைகள்! என்னே கவிநயங்கள்
உண்மைகளை உணரும் படி
செய்துவிட்டு அவன்
கல்லறைக்குள் துயின்றுவிட்டான்

மயிலிறகால் மைதொட்டு நீ
வடித்த கவியெல்லாம்
பொற்றகட்டில் பதிக்க புது மனிதன்
பிறக்கானோ?
புதையல்களாய் மாற்றானோ?

உன் கவியால் அகலிகைக்கு
தண்டனையை நீ கொடுத்தாய்
உண்மையை நீ அறிந்திருந்தும்
மதி கெட்டுப் பாடினாயோ?
தமிழுக்கு உரம் போட்ட
தமிழ் கவிஞன் நீயல்லவா?
உன் தந்திரத்தால்
தமிழுக்கு தவறிழைக்கலாமோ?
வைரமுத்து உருகுகிறான்
எம் முன்னே நீ வந்து
நீதி தன்னைக் கூறாயோ?

ராமனை அனுப்பிவிட்டு
ராமன் போல் வாழ்கவென்று
பாவேறு சொன்னாயாம்

பாவிமகன் துடிக்கின்றான்
பாரதத்தை மக்களுக்குள் புதைத்துவிட்டு
பாவிற்குள் சூத்திரத்தை
சூட்சுமமாய் மறைத்தாய் என்று
பழிவேறு சுமத்துகின்றான்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாமன்னன் சபைதனிலே
மைந்தனுக்காய் பொய் பாட
வட்டில் சுமந்து மருங்கிசைய வந்தாள்
வான் புகழும் சரஸ்வதி தேவியவள்

நீ சாதாரணக் கவிஞன் அல்லன்
தன்னிகரற்ற தெய்வீகக் கவிஞன்
என்று கூற!!!


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சபிக்கப்பட்ட சனங்கள் நாங்கள்


தயானி விஜயகுமார்,
அரசறிவியல் விசேட துறை,
மூன்றாம் வருடம்,
கலைப்பீடம்.

---

நாங்கள் வாழ்வது குறிஞ்சியில் தான்
ஏனோ எங்கள் வாழ்க்கை மட்டும்
இன்னும் பாலைநிலமாகவே
உயர பறக்க ஆசைதான் - ஆனால்
ஒடுக்கப்பட்டு போனது
எங்களின் வாழ்க்கை
ஒற்றையடிப் பாதைகளைப் போல!

நாங்களென்ன ஜனநாயகத்தின்
எதிரிகளா - இல்லை
மனித உரிமையின் எதிர்ப்பதமா?
மனிதனுக்கு மட்டும்
உரிமைகள் உண்டெனில்
நாங்கள் என்ன
விலங்கினமா?

எங்கள் உரிமைகளையும்
உழைப்பினையும்
தராசுக்குள் போட்டால்
உழைப்பு தாழ்ந்திருக்கும்
உரிமை உயர்ந்திருக்கும்
தாழ்த்தப்பட வேண்டிய
சிலவற்றில் நாங்கள்
உயர்ந்துள்ளோம்
சிசு மரணம், வறுமை, இறப்பு வீதம்
என்பவற்றில் மட்டும் நாங்கள்
இமயம் தான்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குருவிக் கூடு கேலி செய்யும் எங்கள்
குடில் நெருக்கடியைப் பார்த்து!
இயற்கைக்கு சீற்றம் வந்தால் எங்கள்
இல்லங்களுக்கு
இடுப்பு வலி வந்து விடும்!
கூரைத் தகடுகளெல்லாம்
கூடு விட்டு கூடு பாயும்!
சுவர்களுக்கு
ஜலதோசம் பிடித்து விடும்.

தலைமுறை தலைமுறையாய்
தாயகத்துக்கே உழைத்தும்
சொந்த வீடில்லை
காணியில்லை
உழைத்துழைத்தே கருகிப் போகிறோம்
தேயிலைகளைப் போல நாங்களும்.

பிரஜாவுரிமை பறிக்கப்பட்ட போது
பெற்றெடுத்தவள்
பிள்ளையை பெற முடியா
வேதனைப் போல
நாங்களும்
அனுபவித்தோம் - இப்போது
பிரஜைகளாய்
அங்கீகரித்த போதும் பிரித்தே
தள்ளுகின்றனர்
அன்னம் தண்ணீரை
வேறாக்குவதைப் போல.

உதிரத்தை உறிஞ்சுகின்றது அட்டை - எங்கள்
உழைப்பை உறிஞ்சுகின்றது தேசம்,
விருத்தியில் செல்கிறதாம் தேசம்,


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாங்கள் விரக்தியிலும்
வெறுமையிலும் மட்டுமே
விருத்தியடைகின்றோம்.

இயற்கையின் படைப்பில்
நாங்களென்ன
சபிக்கப்பட்ட சாத்தான்களா?
ஒடுக்கப்பட்டே வாழ வேண்டிய அடிமைகளா?

நாங்களும் மனிதர்கள் என்ற
குவலயத்துக்குள் வரவேண்டும்.
கால்மாக்சின் 'மூலதனத்தை'
கொஞ்சம் தூசி தட்டுவோமே!
எங்கள் தசைகளெல்லாம் சுரண்டப்பட்டு விட்டது
எலும்புகளையேனும்
காப்பாற்ற வேண்டும் - இல்லை
அதையும் ஆய்வு கூட பரிசோதனைக்காய்
அடுக்கிக் கொள்ளுங்கள் - இல்லை
எங்களைக் கொல்லுங்கள்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கனவு

மோகன்ராஜ்,
அரசறிவியல் விசேட துறை,
இரண்டாம் வருடம்,
கலைப்பீடம்.

மனித ஜந்து இந்த உலக பந்தை விட்டு
வீடுபேறு அடைந்தவேளை
ஓய்வு நிலையில் வரும் ஓராயிரம்
அணுத்துணிக்கைகள்- கனவு!
மூளைக்கும் ஆழ்மனதிற்கும்
இடையே இடம்பெறும்
பனிப்போரின் உச்சம்- கனவு!

நிம்மதியான நித்திரைக்கும்
இதமான இரவுக்கும் பிறக்கும்
செல்லக் குழந்தைகள்-கனவு !
சொல்ல முடியாத சோகங்களுக்கும்
மெல்ல முடியாத தாகங்களுக்கும்
திரையரங்குகளே இல்லாமல்
விழித்திரைக்குள் ஓடும்
திடீர் காட்சிகள்-கனவு !

பால் வேறுபாடு இன்றி
பருவ வேறுபாடு இன்றி
பலரின் உருவங்களுக்கும்
வந்து போகும் பறக்கும் தட்டுகள்-கனவு!
காசு இன்றி கடன் இன்றி
ஒத்திகைக்கு வரும்
குத்தகை வீடுகள்- கனவு!

எச்சரிக்கை இன்றி
நச்சரிப்பு இன்றி
மூளை நரம்பு தினம் தினம் வரையும்
பிகாசோவின் கிறுக்கல்கள்-கனவு!
இயல்பு நிலையை மறக்க செய்து
அலைபாயும் மனதில் எழும்
அற்புத அதிர்வலைகள்-கனவு!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிதைந்து போன சிந்தனை அடுக்குகளில்
புதைந்து கிடக்கும் பொக்கிசம் - கனவு!
மதியை மயக்கி மாய உலகிற்கு
அழைத்து செல்லும்
மர்ம பொம்மை-கனவு!
இயற்கை அமைத்து தந்த
செயற்கை கல்லறைக் - கனவு!


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நடப்பு - நிகழ்வு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சங்க நடவடிக்கைகள் - 2012/2013

ச.கோபிநாத்,
செயலாளர்,
தமிழ்ச்சங்கம்.

## வருடாந்த பொதுக்கூட்டம்

இடம் : WUS வளாகம்

காலம் : 21.12.2012

நேரம் : மாலை 05.00 மணி

தமிழ்ச்சங்கத்தின் பெருந்தலைவர், பெரும்பொருளாளர், கணக்காய்வாளர் முன்னிலையில் 2011/2012 செயற்குழுவின் ஆண்டறிக்கை வாசிக்கப்பட்ட பின்னர் புதிய செயற்குழு பொறுப்பேற்றுக் கொண்டது.

## குறிஞ்சிச்சாரல் –2013

இடம் : இராமகிருஷ்ண மிஷன் மண்டபம், வெள்ளவத்தை

காலம் : 05.12.2013

நேரம் : மாலை 04.00 மணி

புதிய செயற்குழுவின் முதலாவது செயற்பாடாக இந்நிகழ்வு அமைந்திருந்தது. மேற்படி நிகழ்வானது பேராதனைப் பல்கலைக்கழகத்தில் கல்வி பயிலும் வறிய தமிழ் மாணவர்களுக்கு புலமைப்பரிசில் வழங்குவதற்கான நிதியை சேகரிக்கும் முகமாக நடாத்தப்பட்டது. நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக பேராசிரியர் சி.தில்லைநாதன் மற்றும் சிறப்பு விருந்தினராக பேராசிரியர் மு.சின்னத்தம்பி, ஸ்ரீ ரங்கா போன்றோர் கலந்து சிறப்பித்தனர். மாணவர்களின் புஷ்பாஞ்சலி நடனம், நாட்டியாம்ருதம், கர்நாடக சங்கீதம், வரலாற்று, சமூக நாடகங்கள் போன்றன நிகழ்வை மேலும் சிறப்பு செய்தது.

## ஸ்ரீக்கர் விற்பனை

தமிழ்ச்சங்க செயற்பாடுகளுக்கான நிதி சேகரிக்கும் பொருட்டு ஸ்ரீக்கர் விற்பனை மேற்கொள்ளப்பட்டது. அவ்வகையில் தமிழ்ச்சங்கத்தின் இலட்சினை பொறிக்கப்பட்ட 5000 ஸ்ரீக்கர்கள் பீடப் பிரதிநிதிகள் மூலம் அனைத்துப் பீடங்களிலும் விற்பனை செய்யப்பட்டு நிதி சேகரிக்கப்பட்டது. புது வசந்த விழாவிற்கான நிதி இதன் மூலம் திரட்டப்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## புது வசந்தம்

இடம் : E.O.E பெரேரா மண்டபம்

காலம் : 12.06.2013

நேரம் : மாலை 06.00 மணி

பேராதனைப் பல்கலைக்கழகத் தமிழ் பேசும் புதுமுக மாணவர்களை வரவேற்கும் முகமாகவும் அவர்களின் ஆற்றல்களை வெளிக்கொணரும் முகமாகவும் தமிழ்ச்சங்கத்தின் புதுவசந்த நிகழ்வானது இம்முறையும் சிறப்பாக இடம்பெற்றது. பிரத அதிதியாக பேராசிரியர் M.N.S. அனஸ் அவர்களும், அனைத்துப் பீடங்களையும் சேர்ந்த பேராசிரியர்களும், விரிவுரையாளர்களும், உதவி விரிவுரையாளர்களும் கலந்து நிகழ்வை சிறப்பித்தனர்.

மங்கல விளக்கேற்றலுடன் விழா ஆரம்பிக்கப்பட்டு புதுமுக மாணவர்களின் வரவேற்பு நடனம், கீழைத்தேய இசை, நாடகம், கோலாட்டம், ஒயிலாட்டம், பரதநாட்டியம் போன்ற பல கலை நிகழ்வுகள் இடம்பெற்றன.

## பொங்கல் விழா

இடம் : குறிஞ்சிக்குமரன் ஆலயம்

காலம் : 15.01.2103

நேரம் : காலை 05.30 – 07.30 வரை

குறிஞ்சிக்குமரன் ஆலயத்தில் வருடாவருடம் நடைபெறும் பொங்கல் விழாவில் தமிழ்ச்சங்க செயற் குழுவினர் பொங்கல் பொங்கி விழாவைச் சிறப்பித்தனர். இவ்விழாவில் தமிழ்ச்சங்கத்தின் பெருந்தலைவர் உட்பட பலரும் கலந்து சிறப்பித்தனர்.

## பேராசிரியர் அமீர் அலியின் சொற்பொழிவு

இடம் : புவியியல் மண்டபம்

காலம் :

நேரம் : மாலை 04.00 மணி

பேராதனைப் பல்கலைக்கழகத்தின் முன்னாள் பொருளியல் துறையைச் சேர்ந்த பேராசிரியர் அமீர் அலி (அவுஸ்திரேலியா) அவர்களது விசேட சொற்பொழிவு இடம்பெற்றது. இந்நிகழ்வில் பேராசிரியர்கள்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விரிவுரையாளர்கள், உதவி விரிவுரையாளர்கள், பல்கலைக்கழக மாணவர்கள் உட்பட பலர் கலந்துக்கொண்டனர்.

## இளங்கதிர் இதழ் வெளியீட்டின் பொருட்டு விளம்பரங்கள் சேகரித்தல்

இளங்கதிர் இதழ் வெளியீட்டிற்கான நிதியினைத் திரட்டும் பொருட்டு விளம்பரதாரரிடமிருந்து விளம்பரங்கள் பெறப்பட்டன. கண்டி, வவுனியா, யாழ்ப்பாணம், நுவரெலியா, ஹட்டன், திருகோணமலை, மட்டக்களப்பு, குருநாகல் ஆகிய பிரதேசங்களிலிருந்து நிதி சேகரிக்கப்பட்டது.

## நாடக கருத்தரங்கு

இடம் : கலைப்பீட ஒலி-ஒளியியல் அரங்கு

காலம் : 12.08.2013

நேரம் : மாலை 05.00 மணி

தமிழ்ச்சங்கத்தின் ஏற்பாட்டில் இந் நாடக கருத்தரங்கானது ஒழுங்கமைக்கப்பட்டது. இதில் பிரபல நாடக கலைஞரும் கதையாசிரியருமான பொறியியலாளர் கலாநிதி பாலேந்திரா அவர்களால் நடாத்தப்பட்டது. இதில் பங்குபற்றிய மாணவர்களுக்கு சான்றிதழ்களும் வழங்கப்பட்டன.

## குறுந்திரைப்படம் தயாரிப்பு

தமிழ்ச்சங்கத்தினால் இம்முறை "வம்சம்" எனும் குறுந்திரைப்படம் தயாரிக்கப்பட்டது. மலையக மக்களின் இன்னலான வாழ்க்கை முறையை சித்தரிப்பதாக திரைப்படத்தின் கதைக்கரு அமைந்துள்ளது. இதில் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த மாணவர்கள் நடித்துள்ளனர், அத்தோடு இம்முயற்சி அவர்களின் ஆளுமைக்குரிய களமாக அமைந்தது. இத்திரைப்படம் எதிர்வரும் 03.12.2013 அன்று நடைபெறவிருக்கும் கலைவிழாவில் திரையிடப்படவுள்ளது.

## தமிழ்ச்சங்க விருதுகளுக்கான போட்டிகள்

பேராதனைப் பல்கலைக்கழகத் தமிழ்ச்சங்கத்தினால் நடாத்தப்பட்ட இப்போட்டி மாணவர்களின் பல்வேறுப்பட்ட ஆளுமைகளை வெளிக்கொணரும் அம்சமாக அமைந்தது. கவிதை, சிறுகதை மற்றும் கட்டுரை போன்ற எழுத்தாக்கப் போட்டிகளும் பாடல், நடனம் போன்ற போட்டிகளும் நடாத்தப்பட்டது. இதில் பல்கலைக்கழகத்தின் அனைத்து பீடங்களையும் சேர்ந்த மாணவர்கள் பங்குபற்றினர். போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கான விருதுகள் எதிர்வரும் 03.12.2013 அன்று நடைபெறவிருக்கும் கலைவிழாவில் வழங்கப்படவுள்ளது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**கலைவிழாவும் இளங்கதிர் இதழ் வெளியீட்டு விழாவும்.**

இடம் : E.O.E. பெரேரா மண்டபம்

காலம் : 03.12.2013

நேரம் : மாலை 06.00 மணி

தமிழ்ச்சங்கத்தினால் நடாத்தப்படும் மாபெரும் கலைவிழா இம்முறை 03.12.2013 அன்று நடைபெறவுள்ளது. இவ்விழாவில் பேராதனைப் பல்கலைக்கழக தமிழ் பேசும் மாணவர்களின் பல்வேறு வகையான கலை நிகழ்வுகள் அரங்கேற்றம் செய்யவுள்ளதோடு இளங்கதிர் இதழ் வெளியீட்டு விழாவும் நடைபெறவிருக்கின்றது. தமிழ்ச்சங்கத்தின் 2012/2013 ஆண்டிற்கான எழுத்தாளருக்கான கௌரவம் சாரல் நாடன், திக்குவல்லை கமால் ஆகியோருக்கு வழங்கப்படவுள்ளது. அத்தோடு ஓய்வு நிலை பேராசிரியர்களுக்கான கௌரவமும் இடம்பெறும். இதில் பேராசிரியர்களான எம்.எல்.ஏ காதர், துரை மனோகரன், N.P.M. சையுதீன், வை. நந்தகுமார் ஆகியோர் சிறப்பு கௌரவம் பெறுகின்றனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பேராதனைப் பல்கலைக்கழகத் தமிழ்ச் சங்கத்தின் கௌரவம்

**2013**

*எழுத்தாளர் கௌரவம்*



மாத்தறை மாவட்டத்தில் திக்குவல்லை எனும் இடத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட எழுத்தாளரான திக்குவல்லை கமால் தன்னுடைய எழுத்துலகப் பெயரில் தன்னுடைய ஊர்ப்பெயரை இணைத்தே இலக்கிய உலகத்தினரால் அறியப்படுகின்றார். திக்குவல்லை கமால் அவர்கள் 1968களில் குறிப்பாக தனது பதினெட்டாவது வயதில் இலக்கிய உலகிற்கு பிரவேசித்தார். சுமார் 38 ஆண்டுகளுக்கும் மேலாக ஆசிரியராக, ஆசிரிய ஆலோசகராக, பிரதிக் கல்விப் பணிப்பாளராக தொழில் புரிந்தார். எல்லாவற்றுக்கும் மேலாக தென்னிலங்கையின் சிறந்தவொரு இலக்கியவாதியாகவும் பரிணமித்தவர்.

தென்னிலங்கையின் தமிழை மேடைகளில் அரங்கேற்றம் செய்தவர் என்ற வகையில் இவர் திக்குவல்லைப் பிரதேச இஸ்லாமிய மக்களின் தமிழுக்கும் வாழ்வுக்கும் இலக்கிய அந்தஸ்த்தினைப் பெற்றுக் கொடுத்தவராக அறியப்படுகின்றார். இவர் நாற்பத்திரண்டுக்கும் மேற்பட்ட நூல்களைப் படைத்துள்ளார். குறிப்பாக அவை, சிறுகதைத் தொகுதி, நாவல், கவிதை, சிறுவர் இலக்கியம், சரிதம், நாடகம் (ஒலி) மற்றும் மொழிப்பெயர்ப்பு என பல்துறை சார்ந்த நூல்களாகவுள்ளன. தன்னுடைய படைப்புகளுக்காக அரச சாகித்திய மண்டல விருது, எழுத்தாளர் ஊக்குவிப்பு மைய தமிழியல் விருது, புதிய சிறகுகள் இலக்கிய விருது, கொடகே இலக்கிய விருது மற்றும் துரைவி விருது போன்றவற்றை பெற்றுள்ளார்.

இந்து கலாசாரத் திணைக்களத்தால் கலாபூஷணம் விருது வழங்கிக் கௌரவிக்கப்பட்டார். எழுத்தாளர் திக்குவல்லை கமால் இலங்கை முற்போக்கு எழுத்தாளர் சங்கம், சிங்கள தமிழ் எழுத்தாளர் சங்கம் மற்றும் திக்குவல்லை எழுத்தாளர் சங்கம் போன்ற இலக்கிய அமைப்புகளோடு தொடர்புபட்டவர். ஆரம்ப காலங்களில் அவரது படைப்புகளுக்கு களம் அமைத்துக் கொடுத்த சஞ்சிகையாக மல்லிகை அறியப்படுகின்றது. இவர் சிறுகதைகள் தவிர இலக்கியக் கட்டுரைகள், நாவல்கள், கவிதைகள், வானொலி நாடகங்கள் மற்றும் சிறுவர் இலக்கியம் எனப் பல்வேறு துறைகளிலும் தனது படைப்பாக்கத் திறமையை பறைசாற்றியதன் மூலம் ஈழத்து இலக்கியக் களத்தில் தனக்கென ஒரு நிலையான இடத்தை பெற்றுக் கொண்டுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

தென்னிலங்கையின் வாழ்வை மண் மணங்கமழ, கவிதையின்
வசீகரத்தோடும் மானிடப் பரிவோடும், முற்போக்குக் களத்தில் நின்று
இலக்கியமாக்கி வரும் கமாலுக்கு ஈழத்துப் படைப்பிலக்கியத்தில்
முன்னணி இடம் எப்போதோ உறுதியாகிவிட்டது.

செ. யோகநாதன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பேராதனைப் பல்கலைக்கழகத் தமிழ்ச் சங்கத்தின் கௌரவம்

**2013**

### எழுத்தாளர் கௌரவம்



மலையகத்தின் ஆக்க இலக்கியத்துறையிலும், ஆய்வுத்துறையிலும் முக்கிய இடம்பெறுபவர் எழுத்தாளர் சாரல்நாடன். குறிப்பாக பிறந்து வளர்ந்து வாழும் மலையக மண்ணின் மீது கொண்ட பற்றுதலில் குறுந்தொகையில் குறிஞ்சித்திணை பாடல்களில் வரும் சாரல்நாடன் என்ற விளிப்புத் தொடரை சுயத்துவமாக சுவீகரித்துக் கொண்டார். சாரல்நாடன் என்ற பெயரில் தனது அனைத்து படைப்புக்களையும் எழுதினார். அறுபதுகளில் ஏற்பட்ட எழுச்சியில் மலர்ந்த எழுத்தாளர்களில் முக்கியமான ஒருவராக காணப்படுகின்றார்.

ஆரம்பகாலங்களில் கண்டியில் வெளிவந்த மலைமுரசு சஞ்சிகையில் இவரது இலக்கியப் பணி மலர்ந்து தேசிய ஏடுகளான வீரகேசரி, தினகரன், சிந்தாமணி ஆகிய ஏடுகளில் இவரது படைப்புகள் வெளிவரத்தொடங்கின.

இவர் சிறுகதை, கட்டுரை, விமர்சனம், மொழி ஆராய்ச்சி என்று தன் இலக்கியப் பணியை விசாலப்படுத்திக் கொண்டவர். மலையக மண்ணில் வாழும் மக்களின் வரலாற்றை ஆய்வு முறையில் தனது படைப்புக்களில் கொண்டு வந்தார். மலையகம் தொடர்பாக இவர் எழுதியுள்ள பல கட்டுரைகளும், நூல்களும் மனங்கொள்ளத்தக்கவை. இவரது ஆய்வுகளில் சி.வி. சில சிந்தனைகள், தேசபக்தன் கோ.நடேசய்யர், மலையக வாய்மொழி இலக்கியம் என்பன சிறப்பித்துக் கூறக்கூடியவை.

எழுத்தாளர் சாரல்நாடன் அவர்களின் எழுத்துக்கள் மலையக இலக்கியத்திற்கு வலிமை சேர்ப்பன. இவரது ஆய்வுகள் காத்திரமான ஆய்வுகளாகவுள்ளன.

"மலையக மாருதம் வீசிடும் சாரல்நாடன்
மரகதத் தேயிலை மலைகளில் உதித்திடும்
செஞ்சுடர் போன்ற தோழன் ஒருவன்"

-வ.ஐ.ச. ஜெயபாலன்-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பேராதனைப் பல்கலைக்கழகத் தமிழ்ச் சங்கத்தின் கௌரவம் 2013

### ஓய்வு நிலைப் பேராசிரியர் கௌரவம்

## பேராசிரியர் எம்.எஸ்.எ.காதர்

பேராதனைப் பல்கலைக்கழகத்தில் 1968ம் ஆண்டு தனது இளங்கலைமாணிப் பட்டத்தை அரசியல் விஞ்ஞானப் பாடப்பரப்பை விஷேட துறையாகக் கற்றார் பேராசிரியர் எம்.எஸ்.ஏ.காதர். இவர் தனது முதுகலைமாணிப் பட்டத்தை அவுஸ்திரேலியாவிலுள்ள பல்கலைக்கழகத்திலும், அதன் பின்னர் கவீடன் பல்கலைக்கழகத்திலும் பெற்றுக்கொண்டார். இவரது பத்தாவது பொதுத்தேர்தலும் முஸ்லிம்களின் அரசியலும், அஸ்ரப் எனும் அரசியல் விவேகி மற்றும் அம்பாறை மாவட்ட முஸ்லிம்களின் வரலாற்றுப் பார்வை போன்ற நூல்கள் பாராட்டுகளையும், விருதுகளையும் பெற்ற நூல்களாகும்.

1995ம் ஆண்டு தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தின் முதலாவது துணைவேந்தராகக் கடமையேற்றார். அதன் பின்னர் மீண்டும் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் 2004ம் ஆண்டு தொடக்கம் 2009ம் ஆண்டு வரை விரிவுரையாளராக கடமையாற்றி, பல்கலைக்கழக வாழ்விலிருந்து ஓய்வுபெற்றார்.

பேராசிரியர் சி. தில்லைநாதன் அவர்கள் பேராதனைப் பல்கலைக்கழகத் தமிழ்ச்சங்கத்தின் பெருந்தலைவராக இருந்த காலகட்டத்தில் தமிழ்ச்சங்க பெரும் பொருளாளராகப் பதவி வகித்தார். அக்காலத்தில் சங்கத்தின் நடவடிக்கைகளிலும் அதன் முன்னேற்றத்திற்கும் அளப்பரிய சேவையை மேற்கொண்டதோடு தமிழ்ச்சங்கத்தை உயிர்த்தெழச் செய்தவர்.

## பேராசிரியர் துரை மனோகரன்

பேராதனைப் பல்கலைக்கழகத்தில் தமிழில் சிறப்புக்கலைப் பயின்று தனது இளங்கலைமாணிப் பட்டத்தை பூர்த்திசெய்த பேராசிரியர் துரை மனோகரன் அவர்கள் பின்னர் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் முதலாவது முதுமாணிப்பட்டத்தையும் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் கலாநிதிப் பட்டத்தையும் பெற்றார். தமிழ்நாட்டின் தஞ்சாவூர் பல்கலைக்கழகத்தில் சில ஆண்டுகள் ஆய்வுப் பணியாற்றும் வாய்ப்பினைப் பெற்றிருந்தார்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்திலும் சில ஆண்டுகள் விரிவுரையாளராகப் பணிபுரிந்த இவர் பேராதனைப் பல்கலைக்கழகத்திலும் பின்னர் தமிழ்த்துறைத் தலைவராகப் பணியாற்றி தற்போது ஓய்வுப் பெற்றுள்ளார்.

கலை, இலக்கியங்களில் மிகுந்த ஈடுபாடு கொண்ட பேராசிரியர் துரை மனோகரன், ஈழத்தின் தேசிய கலை இலக்கிய முயற்சிகளில் மிக விருப்புடன் உழைத்து வருபவர். ஆக்க இலக்கியங்களிலும் இயல்பாகவே ஆர்வம் கொண்ட இவர், யாழ்ப்பாணம் உரும்பிராய் இந்துக்கல்லூரி உயர்வகுப்பு மாணவனாகப் பயின்றபோது "பாவையின் பரிசு" என்ற நாவலை எழுதி, நூலாக வெளியிட்டார். கவிதைகள், சிறுகதைகள், நாடகங்கள் ஆகியவற்றையும் எழுதியுள்ளார். பழந்தமிழ் இலக்கியத்திலும், நவீன இலக்கியத்திலும் ஒருங்கே பரிச்சயம் கொண்ட துரை மனோகரன் திறனாய்வுத் துறைகளிலும் அதிக ஆர்வத்தைச் செலுத்தி வருகின்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கைத் தமிழிலக்கிய வரலாறு பற்றிய இவரது கருத்தாடல்கள் விசாலமானது. கலை இலக்கியங்களைச் சமுதாய அம்சங்களோடு தொடர்புபடுத்தி நோக்குவதிலும் மிகுந்த அக்கறை காட்டி வருபவராகத் திகழ்கிறார்.

சிறுகதைகளையும் ஞானம் சஞ்சிகையில் "எழுத்தூண்டும் எண்ணங்கள்" எனும் தலைப்பில் பத்தியெழுத்து மற்றும் மல்லிகை சஞ்சிகையிலும் எழுதி வருகிறார். இலங்கை வானொலியில் பல நிகழ்ச்சிகளையும் வழங்கியுள்ளார்.

இலங்கை, இந்தியா, மலேஷியா, லண்டன் ஆகிய இடங்களில் சர்வதேச ஆய்வு அரங்குகளில் பங்குபற்றி பல கட்டுரைகளை சமர்ப்பித்துள்ளார். பேராதனைப் பல்கலைக்கழகத் தமிழ்ச்சங்கத்தின் பெருந்தலைவராக இருந்த போது கலைவிழாக்களில் முதன்முறையாக ஈழத்து இலக்கியவாதிகளுக்கு விருது வழங்கிக் கௌரவிக்கும் முயற்சியைத் தொடங்கி வைத்தவர் பேராசிரியர் துரை மனோகரன் அவர்களே.

## பேராசிரியர் வைத்திலிங்கம் நந்தகுமார்

புவியின் இயல்பை ஆராயும் ஆர்வத்தை தாம் கற்ற யாழ்நகர் பருத்தித்துறை ஹெட்லிக் கல்லூரியின் பாடசாலைக் கல்வி வாழ்வில் இருந்தே இலட்சியமாகக் கொண்டு செயற்பட்டு வந்த பேராசிரியர் வைத்திலிங்கம் நந்தகுமார் அவர்கள் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் புவியியற் துறையில் சிறப்புக்கலை பட்டம் பெற்றார். பின்னர் விரிவுரையாளராக கால் பதித்து உயர் பட்டப் படிப்பை ஜப்பான் - துசுகுபா பல்கலைக்கழகத்திலும் நிறைவு செய்தார். பேராசிரியர் அவர்கள் தம் பன்மொழி அறிவின் திறத்தால் புவியியற் துறையின் தலைவராக நிலையுயர்ந்து (2008 2010) இன்று அத்துறையில் தமக்கெனத் தனித்தளமொன்றை அமைத்துக்கொண்டவராக காணப்படுகின்றார்.

பல்கலைக்கழகங்களில் பட்டப்படிப்பை மேற்கொள்ளும் மாணவர்களுக்கும், பட்டப்பின் படிப்பை மேற்கொள்ளும் மாணவர்களும் தமது துறையில் சரியான விளக்கமும், தெளிவும் பெறவேண்டும் என்ற நோக்கில் பல நூல்களை படைத்துள்ளார். தன்னுடைய நூல்களுக்காக 2001 ஆம் ஆண்டு ரத்ன தீபம் விருதையும், 2009, 2011 ஆம் ஆண்டுகளில் மத்திய மாகாண சாகித்திய மண்டல விருதையும் பெற்றுக் கொண்டார்.

தேசிய கல்வி நிறுவனத்தின் வள அலுனராகச் செயற்பட்டு, பாடசாலைக் கல்வியின் புவியியல் பாட விதானத்தில் மாற்றங்களை ஏற்படுத்துவதற்கு ஆக்கபூர்வமான பங்களிப்பை வழங்கியவர். பாடசாலை முதல் பல்கலைக்கழகம் வரை, அனைவரும் நூலின் பயன் பெறவேண்டும் என்ற நோக்கில் தமது நூலினை ஆக்கும் பேராசிரியரின் எண்ணம் தனிச் சிறப்பாகும்.

நீண்டதொரு தொன்மையான வரலாற்றைக் கொண்ட பேராதனைப் பல்கலைக்கழகத் தமிழ்ச்சங்கத்தின் பெரும் பொருளாளராகவும் பதவி வகித்துள்ளார். இவருடைய பணிகள் தமிழச்சங்கத்தையும் மாணவர்களின் கலை, கலாசார, பண்பாட்டு அம்சங்களை வளர்ச்சியடைய செய்யவும் பெரிதும் பங்காற்றின.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முதுநிலை விரிவுரையாளர் என்.பி.எம். சைபுதீன்

அல்காஜ் நாவூர் பிச்சை மொஹமட் சைபுதீன் அவர்கள் 1974ஆம் ஆண்டு பேராதனைப் பல்கலைக்கழகத்தில் அரசறிவியற் துறையில் இளங் கலைமாணிப் பட்டத்தைப் பெற்றார். 1998 ஆம் ஆண்டு தனது முதுக்கலைமாணிப் பட்டத்தையும் நிறைவு செய்தார். அதன் பின்னர் 1974 இல் தற்காலிக உதவி விரிவுரையாளராக தனது கல்விச் சேவைப் பயணத்தைத் தொடங்கிய என்.பி.எம். சைபுதீன் அவர்கள் 1977 ஆம் ஆண்டு உதவி விரிவுரையாளராகவும், 1998, 2011 காலப்பகுதியில் பேராதனைப் பல்கலைக்கழக அரசறிவியல் துறையில், சிரேஷ்ட விரிவுரையாளராக கடமையாற்றினார். முப்பத்தேழு வருட ஆசிரியப் பணியை நிறைவு செய்துள்ள அவர்கள் தேசிய ரீதியில் பாடசாலைக் கல்வி திட்டம், பல்கலைக்கழக கல்வி என்பவற்றுக்கு தனது பங்களிப்பினை நல்கியுள்ளார்.


அரசறிவியல் கட்டுரைகள், இலங்கையின் நடைமுறை அரசியல் பிரச்சினைகள், முஸ்லிம்களின் அரசியல் பங்குபற்றுதல் போன்ற விடயங்களோடு சம்பந்தப்பட்ட பல ஆய்வுக் கட்டுரைகளை எழுதியுள்ளார். மொழிபெயர்ப்புக்களிலும் குறிப்பாக சிங்கள மொழி நூல்களை தமிழுக்கு மொழிபெயர்த்து அதனிலும் தனது தடத்தை பதித்துள்ளார். பேராதனைப் பல்கலைக்கழகத்தில் மனித உரிமைகள் கற்கை நிலையத்தின் ஒருங்கிணைப்பாளராகவும் கடமையாற்றியுள்ளார். தற்போது பல்கலைக்கழக விரிவுரையாளர் சேவையிலிருந்து ஓய்வுப் பெற்றுள்ள இவர் தனது சேவைகளை அரசியல்த் துறை, மனித உரிமைகள் கற்கை முதலியவற்றினூடாக மாணவர்களுக்கு பெற்றுக் கொடுத்ததில் மிகப்பெரிய பங்களிப்பினை வகித்தவர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குறிஞ்சிச்சாரல் விழாவின் நிகழ்வுகள்



புதுவசந்த விழாவின் நிகழ்வுகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*With Best Complements From*

**VALAMPURI JEYAM TRADES**

*No 88, pansala Road,*
*Batticaloa.*

*Tel: 065 2224957*

*With Best Complements From*

**GUIDE NOTION**

Higher tech campus



**29A, Boundry Road,**
**Thandavanely,**
**Batticaloa.**

*AS.guidenotion@yahoomail.com*
*AS.guidenotion@gmail.com*
www.guidenotion.com

Tel: 065 5688700
077 4595807

*With Best Complements From*

MF

Manamagal Fancy

Wholesale Dealers in All Kinds of Immitatation Jewellery

No. 18, Dunbar Road, Hatton.

Tel: 051 4921798
077 3202956

*With Best Complements From*

AJ

ARU JUNA

Jewellers & Pawning (Pvt) Ltd.

"Citadel of Gold City"

*94A, Main Street,*
*Hatton.*

*Tel :051 2222666*
*Fax :051 2224495*
*Email : arjuna_jewl.pvt_ltd@yahoo.com*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*With Best Complements From*

# CHANDRA STORES

Importers, Exporters and Wholesale Dealers

207, Colombo Streer, Kandy.
Tel: 081 2234332/ 2232756/ 2229175
Fax: 081 2229174
Email: Chandraimports@yahoo.com

Branch:
60, New Moor StreetColombo 12.
Tel: 011 2448420/ 2343959/ 2343960
Fax: 011 2436108

*With Best Complements From*

BAJAJ

M.ANSAR


## AR AUTO SERVICE

Service dealer for David Pieris Motor Company Ltd.

Dambulla Road, Pannala, Ibbagamuwa.
Tel: 037 4993404
mob: 077 0792449/ 0722146726

*With Best Complements From*

## BAWA STORES



No. 83, Main Street,
Puthur,
Batticaloa.
Tel: 065 2244234
mob: 077 4728002

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*With Best Complements From*

# SINGER Plus

**SINGER (SRI LANKA) PLC.**

SINGER PLUS SHOWROOM
*374, Main Street,*
*Point Pedro.*

*Tel: 0212 263 411*
*Mobile: 0777 755 204*
*E-mail: pointpedro@singersl.com*

---

*With Best Complements From*

# GAYATHRI

*FOR QUALITY OFF-SET & SILK SCREEN PRINTING*

## PRINTERS



*No, 50, Dunbar Road, Hatton.*

*t :051 2223848*
*f :051 2222977*
*m :077 5323874*
*e :gayathri2print@yahoo.com*

---

*With Best Complements From*

# ஸ்ரீ சுசிலா
# ஆபரண மாளிகை

916 (KDM) தங்க நகைகள்
மொத்தமாக கிடைக்கும்.



*No, 239. Main Street, Paruthithurai*

*Tel :021 3207437*
*Mobile :077 7210206*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*With Best Complements From*

Commercial Bank

COMMERCIAL BANK

*Our Interest is in You*

**HEAD OFFICE**

Commercial House,
No 21, Sir Razik Fareed Mawatha,
P.O.Box 856
Colombo 1,
Sri Lanka.

Phone : +94 11 2486000
+94 11 4486000

Email : info@combank.net
Fax : +94 11 2449889

Telebanking: +94 11 2336633

**JAFFNA BRANCH**

No, 474, Hospital Road,
Jaffna.

Tel: 201 2222176
021 2228149
021 2223807
Fax: 021 2223148




Open weekdays 9.00am to 3.00pm.

Weekend & Holidays 9.00am to 1.30pm.

*With Best Complements From*

# Ranjitha Traders


Importers, General Merchants & Commission Agents

**180, Colombo Street,**
**Kandy**
**Tel: 081 2232350, 2229 155**
**Fax: 081 2229 156**

*With Best Complements From*

# TOPTEX

Latest Seuts Fashion Creators



mobile: 072 8170715
037 4228131

No. 69A, Dambulla Road, Ibbagamuwa.

*With Best Complements From*

MRM

# M.R.M. TRADERS

Polythine, Gift Items & Stationery Items



No. 95, Dehalgamuwa, Ibbagamuwa.
mob: 072 2446060/072 5972755

*With Best Complements From*

VJ

# VASANTHA JEWELLERS


*Since 1967*




*No 56, D.S. Senanayake Road, kandy,*

*Tel: 081 2233151*
*081 2224300*
*Fax: 081 2223627*
*Email: Vasanthas.kandy@gmail.com*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*With Best Complements From*

# ROJON CYCLE WORKS

பேராதனை தமிழ்ச்சங்க இளங்கதிர்
சஞ்சிகைக்கு எமது
நல்வாழ்த்துக்கள்.

**Main Street,**
**Point Pedro.**

*With Best Complements From*

# THASAN VIDEO CENTRE

Our Service



Digital Photocopy
Colour Printing
Lazer Printing
Scaning
Book Binding
CD, DVD writing
All type of Phone Locking
VHS to DVD
Fax

Main Street,
Point Pedro
*Tel: 077 6701212*
*Fax: 021 2260111*

*With Best Complements From*

# JEYAGANESHA STORES



பேராதனை தமிழ்ச்சங்க இளங்கதிர்
சஞ்சிகைக்கு எமது
நல்வாழ்த்துக்கள்.

**Bus Stand,**
**Point Pedro.**

*Tel :021 226 3284*

*With Best Complements From*


# ANNAI MEDICALS


பேராதனை தமிழ்ச்சங்க இளங்கதிர்
சஞ்சிகைக்கு எமது நல்வாழ்த்துக்கள்.


**No,163**
**Main Street,**
**Point Pedro.**


*Tel: 077 6466326*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

With Best Complements From

AMK

M.R.M. Rashad
Proprietor

**ALUTH MAHA KADE**

Whole Sales - Retail & General Merchant

No. 9A, Dambulla Road, Dehalgamuwa,
Ibbagamuwa.
Tel: 037 2250500
mob: 077 2586983/ 0727070048
Email: aluthmahakade@gmail.com

With Best Complements From

**Carsons Mega**
Ceramics

Importers & Distributors of Wall Tiles, Floor tiles, High Quality Sanitary Wares, Bathroom Accessories, Kitchen Sink, P.V.C. and Hot Water Pipe Fttings

*A-74, Colombo Street, kandy,*
*Sri Lanka.*
*Tel :081 4476760*
*Fax :081 2200052*

With Best Complements From

**Sri Ganeshananda Brahmins**
**Hotel**
*Sweets & Catering*

Tel: 081 2233231 / 081 4950667
42, Peradeniya Road,
Kandy.

With Best Complements From

**Multy Traders**
All Grosary items

Dambulla Road,
Ibbagamuwa.
Tel: 037 2259252

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நூல் வெளியீட்டுக்கு உதவிய அனைத்து நெஞ்சங்களுக்கும் எமது நன்றிகள்...

# நன்றிகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ்ச் சங்க செயற்குழு~2012/13



இடமிருந்து வலம் (இருப்பவர்கள்): ச.கோபிநாத் (செயலாளர்), கலாநிதி ம. அல்பிரட் (கணக்காய்வாளர்), பேராசிரியர் வ. மகேஸ்வரன் (பெருந்தலைவர்), பேராசிரியர் அதுல சேனாரட்ண (உப வேந்தர்), பேராசிரியர் இ. சிவகணேசன் (பெரும் பொருளாளர்), கலாநிதி ரொஷான் ராகல் (ஆலோசகர்), ப. விஸ்வலிங்கம் (தலைவர்).
இடமிருந்து வலம் (நிற்பவர்கள்) ச. சுகதா, கு. ரோபிதா, பு. ரசிதா, சு. சரண்யா (இதழாசிரியர்), செ. குகப்பிரியா, வே. யாழினி, ப. நிராஜ், மு. சுதர்ஷன், புவிதரன், சிவப்பிரியன், இரா. அன்பரசன் (இதழாசிரியர்), சஞ்சீவன், மு. துவாரகேஷ் (இளம் பொருளாளர்), க. லெ. மஹுன் அஹமது, ச. யசிந்தன் (உப செயலாளர்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org